# தமிழரசு

ஜூன் - 2003





# தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2034
வைகாசி - ஆனி
ஜூன் 2003
மலர் : 34 இதழ் : 23 & 24
விலை ரூ.10

- காமராஜர்-அண்ணா-சென்னை பல்கலைக்கழகங்கள் நாட்டிலேயே உயிரி தொழில்நுட்ப ஆராய்ச்சியில் முன்னணியில் உள்ளன ........ 2
- மக்களின் கனவை நனவாக்க முடியும் ........ 6
- பெரம்பலூர் மாவட்ட அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா ........ 11
- தமிழக அமைச்சர்கள் பொறுப்பேற்றுள்ள துறைகள் ........ 18
- கரூர் மாவட்ட அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா ........ 21
- சென்னை மாநகருக்குத் தடையில்லா குடிநீர் ........ 27
- வாழ்க்கைத் தரம் உயர சுற்றுலாவுடன் கூடிய காளான் வளர்ப்புப் பயிற்சி ........ 28
- திருவாரூர் மாவட்ட அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா ........ 29
- தருமபுரி மாவட்டத்தில் பெண் சிசுக் கொலைக்கு முற்றுப்புள்ளி ........ 35
- தேசத்தின் தலைவிதியை பெண்களால்தான் நிர்மாணிக்க முடியும் ........ 37
- படமும் செய்தியும் ........ 42
- திண்டுக்கல் மாவட்ட அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா ........ 45
- குழந்தைத் தொழிலாளர் முறை எதிர்ப்பு நாள் -ஜூன்12 ........ 51
- தருமபுரி மாவட்ட அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா ........ 52
- மதநல்லிணக்கத்தின் மறுபெயர் ஏர்வாடி தர்கா ........ 58
- தூத்துக்குடி மாவட்ட அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா ........ 59
- பெரம்பலூர் மாவட்ட மகளிரின் புரட்சி ........ 67
- திருநெல்வேலி மாவட்ட அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா ........ 68
- கன்னியாகுமரி மாவட்ட அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா ........ 75

ஆசிரியரும் வெளியிடுபவரும்: **ச. நடராஜன்**, இ.ஆ.ப., இயக்குநர், செய்தி–மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு அரசு
சென்னை–தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
தமிழரசு அலுவலகம், ஓமந்தூரார் அரசினர் தோட்டம், அண்ணா சாலை, சென்னை–600 002.
தொலைபேசி : 25368926/25364906 தொலையச்சு : 25368926
மின் அஞ்சல் : tamilarasu2@yahoo.com

# காமராஜர் - அண்ணா- சென்னை பல்கலைக்கழகங்கள் நாட்டிலேயே உயிரி தொழில்நுட்ப ஆராய்ச்சியில் முன்னணியில் உள்ளன

**22.4.2003 அன்று நடைபெற்ற டைசல் உயிரி தொழில் நுட்பப் பூங்கா அமைப்பதற்கான அடிக்கல் நாட்டு விழாவில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஆற்றிய உரை**

இயற்கைச் சூழ்நிலையை சமன் செய்ய இரண்டு உயிரினங்கள் ஒன்றுக்கொன்று இணைந்து இணக்கத்துடன் வாழ்வது இன்றியமையாத ஒன்று. இது தொன்றுதொட்டு நடைமுறையில் உள்ள நம்முடைய கலாச்சாரம் மற்றும் நாகரிகமாகும். கட்டுக்கடங்காத மக்கள் தொகை பெருக்கத்தினால் இயற்கை உயிரி வளங்களுக்கு அச்சுறுத்தல் உள்ளது. உயிரி தொழில்நுட்ப வளர்ச்சிக்கு ஏற்பட்டுள்ள அச்சுறுத்தல் சட்டப்பூர்வமான வளர்ச்சிக்கு ஆபத்தாக உள்ளது. கட்டுக்கடங்காத மக்கள் தொகை உருவாகி வளர்ச்சியினாலும், அதனால் அதிகப்படியான இயற்கை வளங்களை கணக்கிலடங்காத வகையில் பயன்படுத்துவதால் இயற்கை வளங்கள் அளவுக்கு அதிகமாக அழிக்கப்படுகிறது. இந்நிலை மனித குலம் தன்னைத் தானே அழித்துக் கொள்வதற்கு ஒப்பாகும்.

இயற்கை அழிவுகள் ஏற்பட காரணமாக தொடர்ந்து பல ஆண்டு காலமாக நம்முடைய வனப்பகுதிகளை அழித்து வரும் நிலையை நீண்ட நாட்கள் நாம் பார்த்துக் கொண்டு இருக்க முடியாது. தற்போது வளங்களைப் பாதுகாப்பது குறித்து உலக சமுதாயம் தனது கவனத்தை செலுத்த வேண்டிய கட்டாயத்தில் உள்ளது.




சட்டப்பூர்வமான வளர்ச்சி என்பது தற்போதைய தாரக மந்திரமாக உள்ளது. தற்போது சட்டப்பூர்வமாக பாரபட்சமின்றி இயற்கை வளங்களை நாம் வாழ்கின்ற சூழ்நிலையில் பயன்படுத்துவதற்கு அதிக வாய்ப்புகள் உள்ள துறையாக உயிரி தொழில்நுட்பத் துறை

விளங்குகிறது. மேலும் இத்துறை இயற்கையில் கிடைக்கின்ற வளங்களை சட்டப்பூர்வமாக பயன்படுத்துவதற்கு உகந்ததாக உள்ளது.

தற்போது உயிரி தொழில்நுட்பத் துறையில் பல்வேறு கண்டுபிடிப்புகள் மற்றும் ஆராய்ச்சிகளை நம்முடைய பல்கலைக்கழகங்களும், உயிரி தொழில்நுட்பம் சார்ந்த நிறுவனங்களும் மேற்கொண்டு வருகின்றன. இதற்கு காரணம் கடந்த 25 ஆண்டுகளில் உயிரி அறிவியல் துறையில் ஏற்பட்டுள்ள அபரிமிதமான வளர்ச்சியே ஆகும்.

உயிரி தொழில்நுட்பம் குளோனிங் மனித ஆராய்ச்சியில் தொடங்கி பல்வேறு ஆராய்ச்சிகளுக்கு உகந்த துறையாக உள்ளது. பல நூற்றாண்டுகளுக்கு முன்பே உணவு தொழில்நுட்ப பயன்பாட்டில் உயிரி தொழில்நுட்பம் இருந்து வந்துள்ளது. காடுகளினால் உண்டாகும் மாறுதல் அல்லது புளித்துப் பொங்குதல் என்ற முறை எகிப்தியர்களால் சோதனை மற்றும் பழக்கவழக்கத்தில் கண்டுபிடிக்கப்பட்டது.

உதாரணத்திற்கு மூச்சுத்திணறல் நோயைக் குணப்படுத்துவதற்காக ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே சீனாவில் உள்ள ஒரு தாவரத்தில் இருந்து எஃபிடெரின் பிரித்தெடுக்கப்பட்டு பயன்படுத்தப்பட்டது. கிறிஸ்து பிறப்பதற்கு மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே சீனப் பேரரசர் ஃபியூ–ஹசி என்பவர் உணவு மற்றும் மருத்துவ பொருட்களை தாவரங்களில் இருந்து பிரித்தெடுக்கும் முறைக்கு மிகுந்த முக்கியத்துவம் கொடுத்து வந்தார். இந்திய மருத்துவ முறைகளான ஆயுர்வேதா மற்றும் சித்தா ஆகியவை மருத்துவ குணநலன் கொண்ட தாவரங்களைப் பயன்படுத்தி வந்துள்ளது மிகச் சரியான உதாரணமாகும்.

தற்போது உயிரி தொழில்நுட்ப நிறுவனங்கள் பல்வேறு சாதனைகளை நிகழ்த்தியுள்ளன. உயிரி தொழில்நுட்பத் துறையில் மனித வாழ்க்கைக்குப் பயன்படும் பல்வேறு பொருட்கள் கண்டுபிடிக்கப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகிறது. மரபணு மேம்படுத்தப்பட்ட பயிர்கள், மருந்துகள், நோய்த் தடுப்பு உயிர்க் கொல்லிகள், உயிரி நுண்ணுயிரிகள், தடுப்பூசிகள், செரிமானப் பொருட்கள், உரங்கள், பயோ பாலிமர் ஆகியவை அவற்றுள் அடங்கும்.

### தரமான வாழ்க்கைத்தரம்

அணு கண்டுபிடிப்பு மற்றும் அதனைத் தொடர்ந்து குண்டு தயாரிக்கும் தொழில்நுட்பம் ஒரு காலத்தில் தலைசிறந்து விளங்கியது. எலக்ட்ரானிக் மற்றும் கணினி புரட்சி இருபதாம் நூற்றாண்டில் கோலோச்சியது. ஆனால் அறிவு வளர்ச்சியின் காரணமாக இருபத்தொன்றாம் நூற்றாண்டில் உயிரி அறிவியல் துறை தலைசிறந்து விளங்குவதோடு தரமான வாழ்க்கைத் தரத்தை உருவாக்கித் தரக்கூடிய நிலையில் உள்ளது. மருத்துவம், இயற்கைப் பாதுகாப்பு, உணவு மற்றும் அழகு சாதன நிறுவனங்களின் வளர்ச்சிக்கு டி.என்.ஏ. பரிமாற்றம், ஜீன் வரிசை, மரபணு ஆராய்ச்சி அதிக வாய்ப்புகளை

## மாறட்டும் மனித மனங்கள்



*மாறட்டும் மனித மனங்கள் – ஒழியட்டும்*
*பெண் சிசுக் கொலைகள்*
*ஓசோன் படலத்தில் ஓட்டை – அடைக்க*
*வழி தெரியவில்லை*
*மனித மனங்களிலும் ஓட்டை – ஆனால்*
*அடைக்க வழி உண்டு*
*கம்சனை அழிக்க வந்த கர்மாவே – என்று*
*வரப் போகிறாய் – இந்த*
*கலியுக கம்சன்களை அழிப்பதற்கு*
*எடுத்துக் காட்டாய் வந்த – கருத்தம்மாவே*
*என்று காட்டப் போகிறாய் உன் சுயரூபத்தை*
*தொட்டில் குழந்தை திட்டமதைத்*
*தொட்டுப் பார்த்தாவது*
*மாறட்டும், மனித மனங்கள்!*

– என்.அங்குலட்சுமி

### அகமும் முகமும்



முகத்தில் புன்னகையும், அகத்தில்
நம்பிக்கையும், செய்கையில் சுத்தமும்,
சிந்தனையில் தன்னலம் கருதாத்
தன்மையுமிருந்தால் போதுமானது.

- அறிஞர் அண்ணா

உருவாக்கித் தருகிறது.

உயிரி தொழில்நுட்ப வளர்ச்சி தகவல் தொழில்நுட்ப வளர்ச்சியைப் போன்று இருக்காது. ஆனால், தொழில்நுட்பப் பொருட்களின் வளர்ச்சியானது நீண்ட காலத்தையும் அதிகப் பொருட்செலவையும் உள்ளடக்கியது. தற்போது உயிரி தொழில்நுட்பத் துறையில் ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி என்பது உண்மையிலேயே கடுமையான சவாலை எதிர்கொண்டுள்ளது.

சோதனைக் கூடங்களில் பெற்ற அறிவை பொருட்களாக மாற்றி அதனைப் பயன்பாட்டிற்கு கொண்டு செல்ல வேண்டிய நிலையில் உயிரி தொழில்நுட்பம் சம்பந்தப்பட்ட தொழில் முனைவோருக்கு பல்வேறு வகையில் உதவும் அமைப்புகள் தேவைப்படுகிறது. இவ்வாறு உற்பத்தி செய்யப்படும் பொருட்கள் சந்தைக்கு கொண்டு வரப்படுவதற்கு முன்பு கடுமையான சோதனைகளுக்கும், தரக்கட்டுப்பாடுகளுக்கும் உட்படுத்தப்பட வேண்டும். இதையெல்லாம் செய்வதற்கு தேவையான உள்கட்டமைப்பை உருவாக்குவதற்கு அதிக செலவு பிடிக்கும்.

## தமிழகத்தில் அதிக உயிரி தாவரங்கள்

தமிழ்நாட்டில் அதிக அளவில் உயிரி வளங்கள் உள்ளன. அதேபோன்று உயிரி தொழில்நுட்ப நிறுவனங்களையும் ஆராய்ச்சிகளையும் மேம்படுத்துவது என்ற குறிக்கோளுடன் ஏராளமான தகுதியும் திறமையும் வாய்ந்த விஞ்ஞானிகளும் பயிற்சி நிறுவனங்களும் பணியாற்றி வருகின்றனர். 22,500 சதுர கி.மீ. பரப்பளவு கொண்ட நமது காடுகளிலும் சுமார் 1000 கி.மீ. நீளம் கொண்ட கடற்கரைப் பகுதிகளிலும் சுமார் 5 ஆயிரத்திற்கும் மேற்பட்ட உயிரி தொழில்நுட்பத்திற்கு தேவையான தாவரங்கள் உள்ளன. இவற்றிலிருந்து ஆராய்ச்சிக்குத் தேவையான தாவரங்களை அதிக அளவில் பயன்படுத்திக் கொள்ளலாம்.

அண்ணா பல்கலைக்கழகம், மதுரை காமராசர் பல்கலைக்கழகம் மற்றும் சென்னைப் பல்கலைக்கழகம் ஆகியவை உயிரி தொழில்நுட்ப ஆராய்ச்சியில் இந்தியாவில் முன்னணியில் விளங்குகின்றன. உயிரி தொழில்நுட்பம் தொடர்பான சவால்களைச் சந்திக்கவும் எதிர்கொள்ளவும் தமிழக அரசு மிகுந்த ஆர்வத்துடன் உள்ளது.

தமிழகத்தில் உள்ள உயிரி வளங்களைப் பயன்படுத்த முன்வரும் உயிரி தொழில்நுட்ப தொழில் முனைவோருக்குத் தேவையான அனைத்து வசதிகளையும், வாய்ப்புக்களையும், தொழில்நுட்ப பயிற்சிகளையும் மற்றும் மூலதனங்களையும் செய்துதர அரசு தயாராக உள்ளது. அதற்காகத்தான் மிகவும் பிரபலமான அறிவியல் விஞ்ஞானி டாக்டர் எம்.எஸ். சுவாமிநாதன் தலைமையில் தமிழ்நாடு உயிரி தொழில்நுட்ப வாரியம் ஒன்றை என்னுடைய தலைமையிலான அரசு உருவாக்கியுள்ளது. இந்த வாரியம் மக்களுக்குப் பயன்படும் வகையில் அவர்களுக்குத் தேவையானவற்றைத் தயாரிக்க போதுமான அறிவுரைகளையும், ஆலோசனைகளையும், கொள்கைகளையும் வரையறுத்து கண்காணிக்கும்.

## பெண்கள் உயிரி தொழில்நுட்ப பூங்கா

உயிரி தொழில்நுட்ப வளர்ச்சிக்குத் தேவையான இடங்களைக் கண்டுணர்ந்து அந்த இடங்களில் உயிரி தொழில்நுட்ப பூங்காக்களை அமைக்க என்னுடைய அரசு முடிவு செய்துள்ளது. அதன் முதல்கட்டமாக உயிரி தொழில்நுட்பத் துறையில் பெண் தொழில்முனைவோர்களை ஊக்குவிக்கும் வகையில் பெண்களுக்காகவே தனிப்பட்ட வகையில் பெண்கள் உயிரி தொழில்நுட்ப பூங்கா ஒன்றை கேளம்பாக்கத்தில் உருவாக்கி பெண் தொழில் முனைவோர்களுக்கு ஊக்கம் அளித்துள்ளோம். இந்த உயிரி தொழில்நுட்ப பூங்கா டாக்டர் எம்.எஸ். சுவாமிநாதன் பவுண்டேஷன் தலைமை மற்றும் வழிகாட்டுதலின்கீழ் இயங்கும்.

மருந்து உற்பத்தி, உணவு சார்ந்த பொருட்கள் மற்றும் அழகு சாதனங்கள் ஆகிய துறைகளில் பயன்படுத்தப்படும் உயிர் வேதிப் பொருட்கள் அபரிமிதமான அளவில் கடலில் இருந்து கிடைக்கிறது. ஆகவே, மகாபலிபுரம் அருகே சகல வசதிகளுடன் கூடிய கடல் உயிரி தொழில்நுட்ப பூங்கா ஒன்றை ரூ.50 கோடி செலவில் என்னுடைய தலைமையிலான அரசு அமைக்க உள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். மருந்து உற்பத்தி, உணவு சார்ந்த பொருட்கள் மற்றும் அழகு சாதனங்கள் ஆகிய துறைகளில் வர்த்தக ரீதியாக இந்த கடல் உயிரி தொழில்நுட்ப பூங்கா மிகப் பெரிய உந்துசக்தியாக விளங்கும்.

## நிலக்கோட்டையில் மருத்துவப் பூங்கா

நம்முடைய பழங்கால பாரம்பரியம் மிக்க மருத்துவ முறைகளை அடிப்படையாகக் கொண்ட இந்திய மருத்துவ முறைகளான ஆயுர்வேதா, சித்தா மற்றும் யுனானி ஆகியவற்றின் பலனையும், புகழையும் மேம்படுத்தும் வகையில் அவற்றைப் பற்றிய தகவல்களை ஒருங்கிணைத்துப் பாதுகாக்க வேண்டிய அவசியமாகிறது. எனவே மருத்துவப் பூங்கா ஒன்றை திண்டுக்கல் மாவட்டம் நிலக்கோட்டையில் அமைக்க உள்ளோம். இந்தத் திட்டம் வர்த்தக ரீதியான திட்டமாக செயல்படுத்தப்படும். இந்த திட்டத்திற்கு தேவையான மூலப்பொருட்கள் அருகிலேயே அதிக அளவில் பயிரிடப்படுகிறது. அங்கிருந்து மூலிகைகள் மற்றும் மருத்துவ குணநலன் கொண்ட தாவரங்கள் சேகரிக்கப்படும்.

உயிரி தொழில்நுட்பத் துறை நிச்சயமாக வளர்ச்சியடையும் என்ற நம்பிக்கை எனக்கு உள்ளது. அதனால் என்னுடைய அரசு அதற்காக ஒரு நிதி ஆதாரத்தை உருவாக்கி உள்ளது. தமிழ்நாடு தொழில்

வளர்ச்சிக் கழகத்தின் கீழ் இயங்கும் அடிப்படை கட்டுமான கடன் மற்றும் நிதிப் பணிகள் என்ற அமைப்பின் மூலம் உயிரி தொழில்நுட்ப தொழில்முனைவோருக்கு ஆரம்ப கட்ட முதலீடு வழங்குவதற்காக ரூ.90 கோடி ஒதுக்கி உள்ளோம். இதில் உயிரி தொழில்நுட்ப நிறுவனங்களுக்கு மட்டும் ரூ.14 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

உயிரி தொழில்நுட்ப தொழில் முனைவோர் எந்தவித சிரமமுமின்றி எளிதாக தங்களுடைய திட்டங்களுக்கு நிதியைக் கோரலாம். அதே நேரத்தில் உங்களின் முயற்சி வெற்றி பெற என்னுடைய வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

## 1,20,000 ச.அடி பரப்பளவில் தொழில் பூங்கா

இங்கு அடிக்கல் நாட்டப்பட்டுள்ள டைசல் உயிரி பூங்காவுக்கான தொழில்நுட்பத்தை, உயிரி தொழில்நுட்பத்தில் உலகிலேயே தலைசிறந்து விளங்கும் அமெரிக்காவின் கார்னெல் பல்கலைக்கழகம் அமைத்து தரவுள்ளது. இந்த மையத்தில் சோதனைக்கூடங்கள் மற்றும் நவீன அறிவியல் உபகரணங்கள் தொழில்முனைவோர் பயன்படுத்தும் வகையில் அமைக்கப்படும். இந்தப் பூங்கா 1,20,000 சதுர அடி பரப்பளவில் அமைக்கப்படும். இங்கு சர்வதேசப் பாதுகாப்பு அளவான உயிரி பாதுகாப்பு அளவு – 2 மற்றும் உயிரி பாதுகாப்பு அளவு – 3 ஆகியவை கடைப்பிடிக்கப்படும்.

தொழில்முனைவோர் எளிதில் பயன்படுத்தும் வகையில் இங்குள்ள வளங்கள் அமைக்கப்படும். சர்வதேச தரத்தில் ரூ.62.50 கோடி செலவில் அமைக்கப்படும் இந்தப் பூங்கா ஜனவரி 2004க்குள் முழுமையாக செயல்படத் துவங்கும். உயிரி தொழில்நுட்ப தொழில்முனைவோருக்குத் தேவையான அனைத்துவசதிகளையும் சர்வதேசத் தரத்தில் அமைத்துக் கொடுக்க வேண்டும் என்பதில் என்னுடைய தலைமையிலான அரசு உறுதியாக உள்ளது.

## எதிர்காலப்பிரச்சினைகளுக்கு தீர்வு காண வேண்டும்

மனிதகுலம் ஒருகாலத்தில் சுதந்திரத்தை நோக்கி நடைபோட்டது. பசி, பட்டினி, நோய் மற்றும் மரணம் ஆகியவற்றிலிருந்து மீள நடைபோட்டுக் கொண்டிருக்கிறது. இந்தப் பயணத்தில் விஞ்ஞானிகள் சமுதாயம் மற்றும் அறிவியலாளர்கள், நிறுவனங்களைச் சேர்ந்தவர்கள் சுயநலப் போக்கிலிருந்து விடுபட்டு அவர்களுடைய எண்ணங்களை பரந்து விரிந்த இந்த உலகில் முழுவதுமாகச் செயல்படுத்த வாய்ப்புகள் ஏராளமாக உள்ளது. நம்முடைய ஆராய்ச்சிகள் மூலம் தரமான பயிர்களை நம்முடைய விவசாயிகளுக்கு உருவாக்கித் தருவது, பசியால் வாடுபவர்களுக்கு உணவு அளிப்பது, நோயால் வாடுபவர்களுக்கு தலைசிறந்த மருந்துகளை உருவாக்கித் தருவது, நுண்ணுயிரி மூலம் ஏற்படும் நோய் மற்றும் உடல்கூறுகளில் ஏற்படும் குறைபாடுகளை நீக்குவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள உயிரி தொழில்நுட்பத் துறையில் உள்ள நம்முடைய விஞ்ஞானிகளும், தொழில் முனைவோரும் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். நாளைய பிரச்சினைகளுக்கு இன்றே தீர்வுகாண முயற்சிக்க வேண்டும்.

டைசல் புதிய தொடக்கமே இந்தப் புதிய பயணத்தில் அறிவுசார் உலகில் உள்ள தடைகளைத் தாண்டி நம்மை



வெற்றி கொள்ள முடியும். மிக வேகமாக மாறிவரும் உலகில் பல்வேறு துறைகளில் ஏழை மக்களுக்கு நமது நீண்ட முயற்சி உதவும்.

அறிவியல் அறிஞர்களுக்கும், தொழில் முனைவோருக்கும் வாய்ப்புகள் அதிகம் உள்ள பகுதியாக தமிழ்நாட்டை உருவாக்க வேண்டும் என்ற இலட்சியத்தை நான் கொண்டுள்ளேன். அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தில் உங்களுடைய முயற்சி வெற்றி பெற உங்களை வாழ்த்துகிறேன். மீண்டும் ஒருமுறை உங்களுக்கு வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். •

**கல்வி**



வயிற்றுக்கும் பட்டத்திற்கும் படிப்பது கல்வியாகாது. உடல் வாழ்க்கைக்கும் உயிர் வாழ்க்கைக்கும் உறுதுணை செய்யுங் கல்வியே வேண்டற்பாலது.

*– திரு.வி.க.*

# மக்களின் கனவை நனவாக்க முடியும்

## மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நம்பிக்கை!

உலக வங்கியுடன் மிகவும் நெருக்கமாக உள்ள தமிழகத்திற்கு நீண்ட கால இடைவெளிக்குப் பின்னர் வந்துள்ள உலக வங்கி இயக்குநர் மைக்கேல் கார்ட்டர் தலைமையிலான பிராந்தியக் குழுவை வரவேற்பதில் மிகுந்த மகிழ்ச்சியடைகின்றேன்.

### மாற்றத்தின் விளிம்பில்

வறுமை ஒழிப்பிலும், வளமான பாதுகாப்பான வளர்ச்சியை நோக்கிய வாழ்க்கைத் தரத்தை அமைத்துக் கொடுப்பதில் உலக வங்கியும், தமிழக அரசும் ஒரே பாதையைக் கொண்டுள்ளது. தமிழகத்திற்கு கார்ட்டர் அவர்களுடைய வருகையானது உங்களுடைய வாக்குறுதி களை மீண்டும் உறுதிப்படுத்திக் கொள்வதற்கும் மற்றும் புதிய வளர்ச்சிப் பாதைகளில் இணைந்து பணியாற்றவும், நம்முடைய இலட்சியத்தை எட்டுவதற்கும் உதவிகரமாக அமையும் என்று நான் நம்புகிறேன்.



கடந்த என்னுடைய ஆட்சிக் காலத்தில் தமிழகத்திற்கு வந்த உலக வங்கி முன்னாள் நிர்வாக இயக்குநர் ஏர்னஸ்ட் ஸ்டெர்ன் மற்றும் ஹெயின்ஸ் வெர்ஜின் ஆகியோர் என்னைச் சந்தித்து ஆலோசனை செய்ததை இந்த நேரத்தில் நினைவுபடுத்த விழைகின்றேன்.

அதுசமயம் பல்வேறு புதிய வளர்ச்சித் திட்டங்களை தமிழகத்தில் செயல்படுத்துவது குறித்து ஆலோசனை செய்தோம். அவைகளில் சில தமிழ்நாடு கிராமப்புற வளர்ச்சி நிதி, நீர் ஆதாரங்கள் மேம்படுத்துதல் திட்டம்–I மற்றும் இரண்டாவது சென்னைப் பெருநகர குடிநீர் வழங்கல் மேம்பாட்டுத் திட்டம் உட்பட வேறு சில திட்டங்களும் அடங்கும்.

தமிழ்நாடு தற்போது மாற்றத்தின் விளிம்பில் உள்ளது. மாநிலம் தற்போது பல்வேறு சந்தேகங்களுக்கு இடையிலும், எதிர்கால வளர்ச்சி நிலை குறித்து ஒரு தெளிவான சூழ்நிலை புலப்படாத நிலையிலும், கடுமையான நிதிப் பற்றாக்குறையிலும் ஒரு புதிய நூற்றாண்டில் அடியெடுத்து வைத்துள்ளது.

**“ தற்போது தமிழகம் நிதி மற்றும் பொருளாதார வளர்ச்சியில் வரலாற்றில் இடம்பெறக் கூடிய வகையில் ஒரு புதிய வளர்ச்சிக்கான நிலையில் நுழைந்துள்ளது என்று நான் உறுதியாக நம்புகின்றேன். ”**

2001–லிருந்து துவங்கும் ஐந்தாண்டு காலகட்டத்தில் மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சி போதுமான அளவில் இல்லை. இதற்குக் காரணம் அடிப்படை மற்றும் இரண்டாம் கட்ட துறைகளின் உற்பத்தி தேக்க நிலையிலும், மனித வளர்ச்சி பாதிக்கப்பட்டுள்ள நிலையில், பொதுத்துறை மூலதனமும் பற்றாக் குறையாக உள்ள சூழ்நிலையில் சமூக நலத்துறைக்கு ஒதுக்க வேண்டிய நிதி பற்றாக்குறை ஏற்படும் சூழ்நிலை உள்ளது.

வாய்ப்புகளைத் தேர்ந்தெடுப்பதில் எங்களுக்கு பலவித இடர்பாடுகள் உள்ளது. நீண்ட நாட்களாக ஆகும் எளிமையான திட்டங்களைத் தேர்ந்தெடுக்க வேண்டிய சூழ்நிலை உருவாகியுள்ளது.

நிதி நிலைமையைச் சீரமைக்க கடுமையான நடவடிக்கைகளை எடுத்து புதிய வளர்ச்சிக்கான கொள்கையை உருவாக்கியுள்ளேன். தற்போது தமிழகம் நிதி மற்றும் பொருளாதார வளர்ச்சியில் வரலாற்றில் இடம்பெறக் கூடிய வகையில் ஒரு புதிய வளர்ச்சிக்கான நிலையில் நுழைந்துள்ளது என்று நான் உறுதியாக நம்புகின்றேன்.

தமிழ்நாடு தற்போது சந்திக்கும் இந்தக் கடுமையான நிதிப் பற்றாக்குறைக்கு காரணம் கடந்த 90களின் துவக்கத்திலிருந்து வருவாய் செலவினங்கள் அதிகமானதும் அதே நேரத்தில் வருவாய் வரவுகள் அதிகமில்லாமல் போனதும் ஒரு காரணம்.

இந்த வருவாய் இழப்பை ஈடுகட்டுவதற்கு அரசு கடந்த காலங்களில் அதிக அளவு கடன்களை வாங்கியதன் விளைவு தற்போது கடுமையான பொருளாதார நெருக்கடியைச் சந்திக்க வேண்டியுள்ளது.

இந்த நிதிப் பற்றாக்குறை ஏற்றத்தாழ்வுகள் மாநிலத்தின் தற்போதைய செலவினங்களுக்கு ஒதுக்கும் நிதி அளவுகளை மாற்றியமைக்கும் சூழ்நிலையை உருவாக்கியுள்ளது.

**வேகமான வளர்ச்சிக்கு உறுதியளிக்கும்**

மேலும், அடிப்படைக் கட்டுமான வளர்ச்சிப் பணிகளுக்கும், சமூக நலத் திட்டங்களுக்கும் ஒதுக்கும் நிதிக்கு இடையூறாக உள்ளது. இப்பிரச்சினைகளுக்குக் காரணம் மாநில அரசு சார்ந்த நிறுவனங்கள், மாநில அரசின் வளம் மற்றும் கூட்டுறவுத் துறையிலுள்ள நிறுவனங்கள் ஆகியவற்றின் செயல்பாடுகள் மாநில நிதி நிலைமையை சீர்குலைத்ததில் முக்கியப் பங்கு வகித்தன.

மாநிலத்தில் கடுமையான நிதிப் பற்றாக்குறையை சீரமைக்கும் விஷயத்தில் மிகுந்த கவனத்துடனும், முன்னெச்சரிக்கையுடனும் செயல்பட்டு வருகின்றோம். ஒருங்கிணைந்த குறுகிய கால நிதிச் சீர்திருத்தத் திட்டத்தை எல்லாத் துறைகளையும் இணைத்து எல்லாப் பிரச்சினைகளுக்கும் தீர்வு காணும் வகையில் தயாரித்துள்ளோம்.

தமிழ்நாட்டில் தற்போது காலந்தாழ்த்தாமல் செயல்படுத்தப்பட்டு வரும் நிதிச் சீர்திருத்தத் திட்டம் விரைவான மற்றும் வேகமான வளர்ச்சிக்கு

***தனிப்படிப்பு மூலம் மாணவர்கள் சேர்க்கை அரசின் அறிவிப்பு***

*2003–2004 ஆம் கல்வியாண்டில் மாணாக்கர்களை இரண்டாம் வகுப்பு முதல் எட்டாம் வகுப்பு வரை தனிப்படிப்பு மூலமாக பள்ளிகளில் சேர்க்கலாம் என்று தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது. 23.5.2003 அன்று பிறப்பிக்கப்பட்ட தமிழக அரசு ஆணை எண்.(1டி) 74–ன்படி அரசு அங்கீகாரம் பெறாத பள்ளிகளில் பயின்ற மாணவர்களை தனிப்படிப்பு மூலம் சேர்க்கைத் தகுதி பெற்றவர்களாகக் கருதி அங்கீகரிக்கப்பட்ட பள்ளிகளில் சேர்த்துக்கொள்ள இது வகை செய்கிறது.*

*அங்கீகாரம் பெறாத மெட்ரிக்குலேஷன் பள்ளிகளில் பயின்ற மாணாக்கர்கள் தம் படிப்பைத் தொடர, 8–ஆம் வகுப்புவரை பள்ளித் தலைமை ஆசிரியர்களே சேர்க்கலாமென அரசு உத்தரவிட்டுள்ளது.*

*இதே போன்று அங்கீகாரம் பெறாத் பள்ளிகள் மற்றும் பல்வேறு முறைகேடுகளில் ஈடுபட்டு அங்கீகாரம் ரத்து செய்யப்பட்ட பள்ளிகளில் 8 மற்றும் 9 ஆம் வகுப்பு பயிலும் மாணாக்கர்கள் அங்கீகாரம் பெற்ற பள்ளிகளில் சிறப்பு ஆணை பெற்றும் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.*

*மேலும் அங்கீகாரம் பெறாத மற்றும் அங்கீகாரம் திரும்ப மறுக்கப்பட்ட பள்ளிகளில் 8, 9–ஆம் வகுப்புகளில் படித்த மாணாக்கர்களை சில ஆவணங்களைச் சரிபார்த்து முறையே, 9, 10–ஆம் வகுப்புகளில் சேர்த்துக் கொள்ளவும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.*

*இந்தச் சலுகைகள் மாணாக்கர்களின் நலன் கருதி 2003–2004 ஆம் கல்வி ஆண்டுக்கு மட்டும் வழங்கப்பட்டுள்ளது என்றும், அடுத்த ஆண்டு இதுபோன்று சலுகை வழங்கப்படமாட்டாது என்றும் அரசாணை கூறுகிறது. பெற்றோர்கள் அங்கீகாரம் பெற்ற பள்ளிகளிலேயே தங்கள் குழந்தைகளை சேர்க்க வேண்டும் என்றும் அரசு கேட்டுக் கொண்டுள்ளது. இதுபற்றிய மேல்விவரங்களுக்கு அனைத்துக் கல்வி அலுவலகங்களையும் அணுகலாம்.*

உறுதியளிக்கும் வகையில் உள்ளது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த நிதிச் சீர்திருத்தத்தை அமல்படுத்துவது குறித்து பொதுமக்கள் மத்தியில் விரிவான வகையில் பேசப்பட்டு வருகிறது. தற்போது உள்ள சூழ்நிலையில் நிதிச் சீர்திருத்தத்தை அமல்படுத்தவேண்டியதன் அவசியத்தை பொதுமக்கள் ஏற்றுக்கொண்டுள்ளார்கள்.

மேலும், நிதிச் சீர்திருத்தத்தை அமல்படுத்துவதற்கு இதுதான் சரியான நேரம் என்பதையும், அவ்வாறு செய்யாத பட்சத்தில் தமிழகம் கடுமையான விளைவுகளைச் சந்திக்க நேரிடும் என்பதையும் பொதுமக்கள் தெளிவாகப் புரிந்துகொண்டுள்ளனர்.

தமிழகத்தின் பொதுநிதியின் ஆரோக்கியத்தை சீரமைக்கும் வகையில் வளம் தராத வருவாய் செலவினங்கள் மற்றும் வருவாய் இனங்களைக் கண்டறிய அரசு தீவிரமான முயற்சி மேற்கொண்டு வருகிறது.

இதன் தொடர்ச்சியாக எனது அரசு ஊழியர் மற்றும் செலவினங்கள் மறு ஆய்வுக்குழு மற்றும் வரி மற்றும் வருவாய் இனங்கள் மேம்படுத்துதல் ஆகியவற்றை நியமித்துள்ளது.

அக்குழுக்களின் பரிந்துரைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு அவை 2003–2004 நிதி ஆண்டிலேயே செயல்படுத்த மாநில அரசு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. நிதிச் சீர்திருத்தம் என்பது விரைவான, வேகமான வளர்ச்சிக்கு இன்றியமையாத ஒன்றாகும்.

அதற்கென்று சமூக நலத்துறையிலான உடல்நலம், அடிப்படைக் கல்வி, உணவு ஆகிய துறைகளுக்கான ஒதுக்கீட்டை குறைப்பது என்பதல்ல. ஆனால், அதேநேரத்தில் செலவினங்கள் தேவையான துறைக்கு சரியான அளவில் ஒதுக்கப்பட வேண்டும் என்பதுதான் அதன் நோக்கம்.

உற்பத்திக்கு உத்தரவாதம் அளிக்கும் துறைகளுக்கும் அதேநேரத்தில் மனித வளர்ச்சிக்கு பயன்படும் துறைகளுக்கும் அரசிடம் உள்ள நிதி ஆதாரங்களை ஒதுக்கீடு செய்வதற்கு தேவையான வழிவகைகள் மேற்கொள்ளப்படும்.

**உலக வங்கி உதவ வேண்டும்**

**2003–2004** ஆம் நிதியாண்டில் உடனடியாக செயல்படுத்தப்பட்டு வரும் நிதிச் சீர்திருத்தத் திட்டத்தால் சமூகத்தில் வறுமையில் உள்ள ஏழை எளியவர்கள் மற்றும் அரசின் உதவியை எதிர்நோக்கியுள்ளவர்கள் பாதிக்கப்படாத வகையில் அரசு ஒரு சமூகப் பாதுகாப்பு வளையத்தை உருவாக்கி, எந்த ஒரு சூழ்நிலையிலும் ஏழை எளியவர்கள் பாதிக்கப்படாத வண்ணம் அவர்களைப் பாதுகாப்பது என்ற உறுதியை நாங்கள் கொண்டுள்ளோம்.

இன்றைக்குள்ள பிரச்சினைகளுக்கான காரணம் மற்றும் நிர்ப்பந்தம் ஆகியவை குறைந்த காலகட்டத்தில் வருவாய் செலவினங்களைக் குறைப்பதுதான். பல்வேறு இனங்களில் வருவாய் செலவினங்கள் தன்னிச்சையான வளர்ச்சியைக் கொண்டுள்ளது. நிதிச் சீர்திருத்தத் திட்டத்தின் கீழ் வருவாய் வளர்ச்சியில்லாத துறைகளில் செய்யப்படும் மூலதனம் குறித்து சிறப்பான கவனம் செலுத்த வேண்டும்.

இந்த மாபெரும் நிதிச் சீர்திருத்தத் திட்டத்தால் ஏற்படும் வருவாய்ப் பற்றாக்குறையைச் சமாளிப்பதற்கு மத்திய அரசும், உலக வங்கியும் உதவ வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கின்றேன்.

தமிழகத்தின் பொருளாதாரச் சூழ்நிலை சம்பந்தப்பட்ட சில பிரச்சினைகள் குறித்து தற்போது கூற விழைகின்றேன். 1996–2001ஆம் ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்தில் வேளாண்மைத் துறையின் வளர்ச்சி முக்கியமாக கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய ஒரு அம்சமாகும். துரதிருஷ்டவசமாக 2001ஆம் ஆண்டு துவக்கத்திலிருந்து காலநிலை மாறுபாட்டாலும் அதனைத் தொடர்ந்து 2002–2003இல் மாநிலம் சந்தித்த கடுமையான வறட்சியும் நிதி நிலையை மோசமாக்கியது. இது வேளாண்மைத் துறையை வளர்ச்சியடையச் செய்வதற்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளுக்கும் முன்னுரிமை வழங்குவதற்கான முக்கியமான காரணமாகும்.

ஆகவே, நான் இதனை செயல்படுத்துவதற்காக ஒருங்கிணைந்த தரிசு நில மேம்பாட்டுத் திட்டம் மற்றும் நீர் வடிபகுதி மேலாண்மைத் திட்டம் ஆகியவற்றைச் செயல்படுத்துவதன் மூலம் வறட்சியின் பிடியில் சிக்கி அழிந்துபோகும் நிலையிலுள்ள நிலங்களைப் பாதுகாக்க நடவடிக்கை மேற்கொண்டேன்.

**கிராமத் தொழில்களுக்கு ஊக்கம்**

இத்திட்டத்தின் இரண்டாவது கட்டமாக, அரசிடம் உள்ள மானாவாரி நிலங்களை வணிகக் குழுமங்களுக்கும் மற்றும் சுயஉதவிக் குழுக்களின் கூட்டமைப்புகளுக்கும், வேளாண் வணிகம் சார்ந்த தொழில்களைச் செய்வதற்காக குத்தகைக்குவிட திட்டமிட்டுள்ளோம்.

மூன்றாவது கட்டமாக, ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனிலும் கிராமப்புறத் தொழில்களை மேம்படுத்த ஊக்கப்படுத்துவது என்பதும் ஆகும்.

உலக வங்கி இத்திட்டங்களுக்கு நிதியுதவி செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

வேளாண்மைக்குத் தேவையான தண்ணீர் வசதி பற்றாக்குறையாக உள்ளது. வேளாண்மைத் துறையின் தேக்க நிலைக்கு இது அடிப்படைக் காரணமாக அமைந்துள்ளது. நதிநீர் பங்கீட்டுப் பிரச்சினைகளின் காரணமாக நீர் கிடைக்கும் என்று உறுதி செய்யப்பட்டுள்ள நிலங்களுக்குக்கூட நீர் கிடைக்காமல் போன சூழ்நிலை உருவானது. மாநிலத்தின் விவசாயத்துக்குத் தேவையான நீரோட்டம் இருக்கும்பட்சத்திலும் அவற்றைத் தேக்கி வைத்து பயன்படுத்தும் வகையில் புதிய நீர் ஆதார வசதிகளை மேம்படுத்த இயலாத நிலையில் உள்ளது.

ஆகவே, நீர் ஆதார மேம்பாட்டுத் திட்டம் II–ஐ செயல்படுத்துவதற்கு உலக வங்கியின் உதவி தேவைப்படுகின்றது. முதல் திட்டத்திற்கு நிதி உதவிகளை அதிகபடுத்தியதற்கு கார்ட்டர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்வதோடு, 2ஆவது திட்டத்திற்கு ஒப்புதல் வழங்க வேண்டும். அப்போதுதான் பற்றாக்குறையுள்ள நீர் தட்டுப்பாட்டை சீர்செய்து வேளாண்மைக்குத் தேவையான நீர் ஆதாரங்களை சிறந்த முறையில் செயல்படுத்த உதவும்.

**வறுமை ஒழிப்புத் திட்டம்**

எங்களுடைய வறுமை ஒழிப்புத் திட்டங்கள் குறித்து உங்களுடைய கவனத்திற்கு கொண்டு வர விழைகின்றேன். வறுமை ஒழிப்புத் திட்டங்களுக்கு உலக வங்கி உதவியுடன் நிதி ஒதுக்குவது குறித்து ஆலோசித்து வருகிறோம். இந்த வறுமை ஒழிப்புத் திட்டத்தை விவசாயம் சார்ந்த துறைகளில் செயல்படுத்த திட்டமிட்டுள்ளோம்.

ஏனெனில் மாநிலத்தின் 62 விழுக்காட்டு மக்கள் இத்துறையை நம்பித்தான் உள்ளனர். சமீபத்திய வறட்சியால் அவர்கள் கடுமையான அளவில் பாதிக்கப்பட்டுள்ளனர். ஆகவே, இந்த விரிவான வறுமை ஒழிப்புத் திட்டம் செயல்படுத்தப்பட வேண்டியது அவசியமாகிறது.

தமிழ்நாட்டில் பெண்களின் வாழ்க்கைத் தரம் மகளிர் சுய உதவிக்குழுக்களின் மூலமாக உயர்ந்துள்ளது.

மேலும், தொடர்ந்து மகளிர் சுய உதவிக்குழுக்களை பலப்படுத்துவதன் மூலம் எதிர்காலத்தில் வறுமை ஒழிப்புத் திட்டங்களை அவர்கள் மூலமாக செயல்படுத்தவும் உதவும். தமிழ்நாடு விவசாயம் அல்லது அடிப்படை துறைத் திட்டம் என்ற ஒன்றை தமிழகத்துக்கென்றே உருவாக்கி. அதன் மூலம் வறுமை ஒழிப்புத் திட்டங்களை தமிழ்நாட்டில் செயல்படுத்தலாம் என்று நான் நினைக்கிறேன்.

**ரூ.2116 கோடியில் சாலைத் திட்டம்**

இதன்மூலம் வறுமை ஒழிப்புத் திட்டத்தைச் செயல்படுத்தி உயர்ந்தபட்ச வருமான வேறுபாட்டுச் சூழ்நிலையை மாற்ற முடியும்.

1996–2001க்கு இடைப்பட்ட ஒன்பதாவது திட்டக் காலத்தில் உற்பத்தித் துறையின் வளர்ச்சி சொல்லிக் கொள்ளும் வகையில் இல்லாமல் மிகவும் மோசமான நிலையில்தான் இருந்தது. இரண்டாம் கட்ட சீர்திருத்தத்தில் உற்பத்தித் துறையின் வளர்ச்சிக்குத் தேவையான ஒரு சரியான சூழ்நிலையை உருவாக்கிக் கொடுக்க வேண்டும் என்று நாங்கள் உறுதிபூண்டுள்ளோம்.

அதேநேரத்தில் தமிழ்நாட்டில் ஏற்றுமதி சார்ந்த ஒரு வளர்ச்சிக்கான கொள்கையை வகுத்துள்ளோம். அதிலும் குறிப்பாக சென்னை பிராந்தியத்தை உலகத்திலேயே தகவல் தொழில்நுட்பம் மட்டுமல்லாது மற்ற அனைத்து உற்பத்தித் துறைகளுக்கும் ஏற்ற இடமாக மாற்ற தேவையான அனைத்து அடிப்படைக் கட்டுமான வசதிகளையும் உருவாக்கித் தர உறுதிகொண்டுள்ளோம்.

சர்வதேச அளவிலான தரக்கட்டுப்பாட்டை அடிப்படைக் கட்டுமான வசதிகளின் துறைகளில் செயல்படுத்துவதற்கு அதிக அளவில் மூலதனம் தேவைப்படுகின்றது. பொது மூலதனத்தை அடிப்படைக் கட்டுமானப் பணிகள் துறைக்கு செலவிடுவதில் முன்னுரிமை வழங்கப்படும்.

என்னுடைய கடந்த ஆட்சிக் காலத்தில் (1991–1996) சாலைத் துறைகள் திட்டத்திற்கு 441 மில்லியன் அல்லது ரூ.2116 கோடி செலவிலான திட்டம் அறிமுகப் படுத்தப்பட்டது.

**தென்னிந்தியாவின் ஏற்றுமதி பகுதியாக சென்னை**

இத்திட்டம் மாநிலத்தின் சாலைக் கட்டுமானத் துறையின் வளர்ச்சிக்கு மிகப்பெரிய காரணியாக அமைந்தது. இவற்றிற்குக் காரணமாக அமைந்த உங்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சென்னை மாநகரை உள்ளடக்கிய பகுதிகளை இணைத்து ஒருங்கிணைந்த அடிப்படைக் கட்டுமான வசதிகள் கொண்ட ஒன்றாக மாற்றும் திட்டத்தை உருவாக்கி வருகிறோம். இத்திட்டத்தின் கீழ் போக்குவரத்து மற்றும் சாலை மேம்பாட்டுப் பணிகளுக்கு உலக வங்கியின் நிதி ஒதுக்கீடு எந்த அளவு அவசியமாகின்றது ?

தென்னிந்தியாவிலே ஏற்றுமதியை அடிப்படையாக கொண்ட வளர்ச்சிப் பகுதியாக சென்னையை மாற்றத் திட்டமிட்டுள்ளோம். அதிக நகர்ப்புறங்களைக் கொண்ட மாநிலமாக தமிழ்நாடு உள்ளதால் தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி மேம்பாட்டுத் திட்டம் III–ஐ செயல்படுத்துவதற்கு உலக வங்கி உதவ வேண்டும்.

அடிப்படைக் கட்டுமான வசதிகளை மேம்படுத்துவதற்காக பொதுத்துறை மற்றும் தனியார் இணைந்து செயல்படுத்துவதற்கேற்ற வகையில் தேவையான சட்ட வரைவுகளை அறிமுகப்படுத்த உள்ளோம்.

உங்களுடைய ஒத்துழைப்புடன் விரைவில் தரமான அடிப்படைக் கட்டுமான வசதிகளை உருவாக்குவோம் என்று நான் உறுதியாக நம்புகின்றேன்.

சமூக நலத்துறையில் முதலீடுகளை செய்வதில் தமிழ்நாடு முன்னோடி மாநிலமாக இருந்து வந்துள்ளது. சமூகப் பாதுகாப்புக்கு முக்கியத்துவம் அளிக்கும் வகையில் சமூகப் பாதுகாப்பு வளையம் ஒன்றை உருவாக்கியுள்ளேன். மருத்துவ அடிப்படை வசதிகளை மேம்படுத்துவதன் மூலம் ஏழை எளியவர்களுக்கு உறுதியான, தரமான சுகாதார வசதிகளையும் மற்றும் உடல்நலத்தைப் பேணுவதற்கும் உண்டான வாய்ப்புகளை மற்றும் வழிவகைகளை உருவாக்கித் தர இயலும். அதற்கு உங்களுடைய ஒத்துழைப்பு அவசியம்.

**குடிநீர் திட்டப் பணிகளுக்கு நிதி ஒதுக்க வேண்டும்**

அதேபோன்று தரமான பாதுகாக்கப்பட்ட குடிநீரை வழங்குவதற்கு அதிகமான நிதியை ஒதுக்கியுள்ளோம். இதன்மூலம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் திட்டங்களைச் செயல்படுத்த உள்ளது. சென்னைப் பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்றும் திட்டத்தை உலக வங்கி ஆய்ந்து நிதி ஒதுக்குவதன் மூலம் குடிநீர் ஆதாரங்களை மேம்படுத்துவதற்கு இத்திட்டத்தைச் செயல்படுத்த உள்ளோம்.

இத்திட்டத்தை வடசென்னையில் செயல்படுத்துவதன் மூலம் ஏற்கெனவே உள்ள குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்றுதல் நிலையங்கள் சிறப்பான முறையில் செயல்பட இது வழிவகை செய்யும். சிறந்த நிர்வாகத்தின் மூலம் விரைவான வேகமான வளர்ச்சியை அடைய முடியும் என்பதை நான் அறிந்துள்ளேன்.

அரசின் நடைமுறைகளில் ஏற்படும் காலதாமதத்தையும், பண விரயத்தையும் தடுப்பதற்காக அனைத்துத் துறைகளையும் கணினிமயமாக்கி வருகிறோம். தமிழ்நாடு பொதுக் கொள்முதலில் விரிவான சட்ட நெறிமுறைகளுக்குட்பட்டு வெளிப்படையான வகையில் செயல்பட்டு வருகிறது. கொள்முதல் நடவடிக்கைகளில் இன்னும் பல்வேறு திருத்தங்களை அறிமுகப்படுத்த உள்ளோம். இதன் மூலம் அரசு மற்றும் அரசு சார்ந்த நிறுவனங்களில் செயல்பாடுகள் அணுகும்போது விரைவான குறைந்த செலவில் குறித்த காலத்தில் நடைபெறுவதற்கு உதவும்.

**தன்னிறைவு**

அரசின் பெரும்பான்மையான பணிகளையும் உள்ளாட்சி அமைப்புகள் செயல்படுத்துவதால் அவற்றை பலப்படுத்தி தன்னிறைவு அடையச் செய்ய வேண்டும்.

திரு. கார்ட்டர் அவர்களே, தமிழ்நாட்டின் பத்தாவது திட்டக் காலத்தில் 2003–2004ஆம் ஆண்டுக்கான செயல்பாடுகள் குறித்து தெளிவான கொள்கையை நாங்கள் வகுத்துள்ளோம். கடந்த ஆண்டுகளில் ஏற்பட்ட இழப்புகளை ஈடுகட்டி ஒருங்கிணைந்த அனைத்துத் துறைகளிலும் வளர்ச்சியை அடையச் செய்ய வேண்டும் என்கின்ற வேகத்தில் நான் இருப்பதை நீங்கள் அறிவீர்கள்.

இதே பாதையில் தொடர்ந்து, வேகமாக வீறுநடைப் போடுவதன் மூலம் எதிர்காலக் கனவுகளில் வாழும் மக்களின் கனவுகளை நனவாக்க முடியும். தமிழ்நாட்டில் தங்கியுள்ள உங்களுக்கு எனது வாழ்த்துக்களையும், மகிழ்ச்சியையும் தெரிவித்துக் கொள்கிறேன். தமிழகத்தின் வளர்ச்சிப் பணிகளுக்கு தேவையான பகுதிகளை நீங்கள் நேரில் சென்று ஆய்வு செய்து நல்ல வளர்ச்சித் திட்டங்களைச் செயல்படுத்த வேண்டும். புதிய வளர்ச்சித் திட்டங்களைச் செயல்படுத்துவதில் தமிழ்நாட்டுக்கும் உலக வங்கிக்கும் இடையேயான கூட்டு முயற்சிக்கு தங்களுடைய வருகை உதவும்.

***மாண்புமிகு தமிழக முதலமைச்சர்** அவர்கள்*
***2–5–2003** அன்று*
*தலைமைச் செயலகத்தில்*
*நடைபெற்ற உலக வங்கிக் குழுக்கூட்டத்தில்*
*ஆற்றிய உரை.*

# பொருளாதார நிலையை உயர்த்துவது தான் அரசு நலத்திட்ட உதவிகளை வழங்குவதன் குறிக்கோள்

– மாண்புமிகு தமிழக முதலமைச்சர்

செல்வி **ஜெ ஜெயலலிதா**

அவர்கள்

“இந்தப் பந்தலுக்குள் எத்தனை பேர் அமர்ந்திருக்கிறார்களோ, இதற்கு நான்கு மடங்கு கூட்டம் வெளியே கொளுத்தும் வெய்யிலில் நிற்கிறது. சுட்டெரிக்கும் வெயிலையும் பொருட்படுத்தாது என்னைக் காண வேண்டும்; என் உரையைக் கேட்க வேண்டும் என்று இங்கே வந்து காத்திருக்கின்ற அன்பு உள்ளங்களுக்கு எனது வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். இதுவரை எந்த மாநில அரசும் செய்யாத சாதனைகள், எந்த மாநில முதலமைச்சரும் செய்யாத பல சாதனைகளை நான் செய்திருப்பதாக நான் எண்ணிக் கொண்டிருக்கிறேன். அவற்றில் முக்கியமான சாதனைகள் பலவற்றை நீங்கள் அறிவீர்கள். இந்தியாவிலேயே முதன் முதலாக காவல் துறையில் பெண் கமாண்டோ படையை அமைத்தது நம்முடைய அரசு தான். இந்தியாவிலேயே முதன் முதலாக அனைத்து மகளிர் காவல் நிலையங்களை அமைத்தது நான் தான். இந்தியாவிலேயே முதன் முதலாக வக்பு வாரியத்திற்கு ஒரு பெண்ணைத் தலைவராக பதவி ஏற்கச் செய்தது இந்த அரசு தான். அதைப் போலவே, தமிழ்நாடு பப்ளிக் சர்வீஸ் கமிஷனுக்கு முதன் முதலாக ஒரு பெண்ணைத் தலைவராக நியமித்தது நான் தான். தமிழ் நாட்டின் வரலாற்றிலேயே அரசு தலைமைச் செயலாளராக ஒரு பெண்ணை முதன் முதலாக நியமித்த முதலமைச்சரும் நான் தான். இப்படி, இதுவரை எந்த முதலமைச்சரும் செய்யாத பல காரியங்களை நான் செய்திருப்பதை நானே அறிவேன். ஆனால், இன்றைக்குத் தான் ஒரு புதிய சாதனை எனக்குத் தெரிய வந்துள்ளது. இது வரை பெரம்பலூருக்கு இந்த மாநிலத்தின் எந்த








*வேலைவாய்ப்பு, கல்வி வாய்ப்பு, ஆராய்ச்சி, உதவித்தொகை பெறுவது உள்ளிட்ட தகவல்கள் அடங்கிய இணைய தளத்தை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள் 6–6–2003 அன்று தலைமைச் செயலகத்தில் தொடங்கி வைத்தார்கள்.*

முதலமைச்சரும் வந்ததில்லை. இது தான் முதல் முறை என்ற இனிய செய்தியை இன்று நான் தெரிந்து கொண்டேன். அதனால் இங்கே வருகை புரிந்ததில் நான் இரட்டிப்பு மகிழ்ச்சி அடைகிறேன்.

தமிழகத்தின் மத்திய பகுதியில் அமைந்திருக்கும் மாவட்டமாகிய பெரம்பலூர் மாவட்டத்தில் சீரோடும் சிறப்போடும் நடைபெறும் இந்த அரசு விழாவில் கலந்து கொண்டு, உங்களை எல்லாம் சந்தித்து உங்களோடு எனது எண்ணங்களைப் பகிர்ந்து கொண்டு, நிறைவேற்றப்பட்ட திட்டங்களைத் திறந்து வைத்து, புதிய பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, அரசு நலத்திட்ட உதவிகளை வழங்குகின்ற வாய்ப்பு கிடைத்தமைக்காக நான் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.

**பழமைச் சிறப்பு**

மகத்தான சோழப் பேரரசின் தலைநகரமாக விளங்கிய கங்கைகொண்ட சோழபுரத்தைத் தன்னிடத்தே கொண்டு விளங்கும் சிறப்பைப் பெற்றது இன்றைய பெரம்பலூர் மாவட்டம். வட புலத்தை வென்று வாகை சூடிய வரலாற்றுப் பேரரசனாகிய ராஜேந்திர சோழனால் உருவாக்கப்பட்ட ஊர் இன்று உருக்குலைந்து போயிருந்தாலும் தமிழர்களின் கலைச் சிறப்பை, குறிப்பாக, சோழர்களின் கலைப் பணியை எடுத்துக் காட்டுகின்ற வகையில் கங்கைகொண்ட சோழபுரத்தின் பிரகதீஸ்வரர் ஆலயம் 54.86 மீட்டர் உயரம் கொண்டதாக, இன்றைக்கும் விண்முட்ட உயர்ந்து கம்பீரமாகக் காட்சி அளிக்கிறது. அது மட்டுமல்லாமல், சிறுவாச்சூர் அருள்மிகு மதுரகாளியம்மன் கோயில், செட்டிக்குளம் பாலதண்டாயுதபாணி கோயில், அரியலூர் அருகே கல்லங்குறிச்சி கலியபெருமாள் கோயில், திருமழப்பாடியில் மும்மூர்த்திகளால் பாடப்பெற்ற வைத்தியநாத சுவாமி கோயில் ஆகிய ஆலயங்கள் இந்த மண்ணின் மகிமையை விளக்கும் வகையில் ஆன்மீக மணம் கமழ அமைந்திருக்கின்றன. அவை மட்டுமல்லாமல், ஏலாக்குறிச்சியில் அமைந்திருக்கும் மாதா கோயில் பழம்பெருமை உடையது. இத்தாலியிலிருந்து தமிழகத்திற்கு வந்து தமிழ் கற்று, தேம்பாவணி என்னும் தீந்தமிழ்க் காவியத்தை நமக்கு வழங்கிய வீரமா முனிவரால் அமைக்கப்பட்ட தேவாலயம் என்னும் சிறப்புக்குரியது ஏலாக்குறிச்சி மாதா கோயில் என்பது பெருமைக்குரிய செய்தி ஆகும்.

ஆன்மீகச் சிறப்பு மிக்க திருக்கோயில்களோடு காண வேண்டிய சுற்றுலாத் தலங்கள் பலவற்றையும்

**கவிதை**

தாம் கண்டு உள்ளம் நெகிழ்ந்தவற்றை
மற்றவர்கள் கண்டு நெகிழும் வண்ணம்
அள்ளித்தருவதுதான் கவிதை.

*– அறிஞர் அண்ணா*

கொண்டது பெரம்பலூர் மாவட்டம். பெரம்பலூரிலிருந்து 18 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள ரஞ்சன்குடிக் கோட்டை, சாத்தனூர் கிராமத்தில் உள்ள கல் மரம், தமிழ்நாடு சிமெண்ட் தொழிற்சாலையின் அருங்காட்சியகத்தில் உள்ள டைனோசார் முட்டை, சிப்பிகள், நட்சத்திர மீன் ஆகியவற்றின் கற்படிவங்கள், பச்சைமலை அடிவாரத்தில் லாடபுரத்தில் அமைந்த மயிலூற்று அருவி, அரியலூர் வட்டத்தில் உள்ள கரைவெட்டி பறவைகள் சரணாலயம் ஆகிய சுற்றுலா முக்கியத்துவம் வாய்ந்த இடங்களையும் கொண்டு விளங்கும் பெரம்பலூர், பழமைச் சிறப்பில் மற்ற மாவட்டங்களுக்கு எந்த வகையிலும் குறைந்தது அல்ல என்பதை நமக்கு உணர்த்துகின்றன.

இருப்பினும், வறட்சியால் அதிகம் பாதிக்கக் கூடிய மாவட்டமாகவும், பொருளாதாரத்தில் மிகவும் பின்தங்கிய மாவட்டமாகவும் உள்ள இந்த மாவட்டத்தை பல்வேறு துறைகளிலும் வளர்ச்சி அடையச் செய்ய உங்கள் அன்புச் சகோதரியின் தலைமையில் அமைந்த அரசு உரிய நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது. அந்த முயற்சியின் ஒரு முக்கிய பகுதி தான், இன்று நடைபெறுகின்ற இந்த விழா.

1995 ஆம் ஆண்டு நவம்பர் 1 ஆம் தேதி திருச்சி மாவட்டத்திலிருந்து பிரிக்கப்பட்டு, இந்த பெரம்பலூர் மாவட்டம் தொடங்கப்பட்டது என்பதை நீங்கள் அறிவீர்கள். அது உங்கள் அன்புச் சகோதரியாகிய என்னால் தொடங்கப்பட்டது என்ற ஒரே காரணத்திற்காக, அடுத்து வந்த தி.மு.க. அரசு பெரம்பலூர் மாவட்டத்தில் எந்தவித அடிப்படைப் பணிகளையும் மேற்கொள்ளாமல், முற்றிலுமாகப் புறக்கணித்தது.

அந்தக் குறைகளை எல்லாம் போக்குகின்ற வகையில், நான் மீண்டும் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு, பல்வேறு திட்டங்களை நிறைவேற்ற உத்தரவிட்டேன். அவற்றில் ஒன்று தான், பெரம்பலூர் மக்கள் மிக ஆவலுடன் எதிர்பார்த்த கொள்ளிடம் கூட்டுக் குடிநீர்த் திட்டம். இந்தத் திட்டம் துரிதமாகச் செயல்படுத்தப்பட்டு, இன்று முதல் தூய்மையான குடிநீர் உங்கள் இல்லந்தோறும் வழங்கப்பட உள்ளது என்பதையும், உங்களின் மற்றொரு நீண்ட நாள் கோரிக்கையான மாவட்ட ஆட்சியர் அலுவலக பெருந்திட்ட வளாகம் கட்டுவதற்கான துரித நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, இவ்விழாவில் அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது என்பதையும் மிகவும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். அது மட்டுமல்லாமல், பெரம்பலூர் மாவட்டத்துடன் அரியலூர் மாவட்டம் மீண்டும் இணைக்கப் பட்டதனால், அப்பகுதிகளுக்கு அதிக அளவு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு, வளர்ச்சிப் பணிகள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. அரியலூரில் மிகப் பெரிய அளவில் மாவட்ட விளையாட்டு அரங்கம் 68 இலட்சம் ரூபாய் மதிப்பில் கட்டுவதற்கு அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது. அது போல், மீன்சுருட்டி பகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கையினை ஏற்று, மீன்சுருட்டி ஆரம்ப சுகாதார நிலையம், 30 படுக்கை வசதிகள் கொண்ட நவீன மருத்துவமனையாக 40 இலட்சம் ரூபாய் மதிப்பில் தரம் உயர்த்தப்பட உள்ளது. இதனால் சுமார் 36 கிராமங்களைச் சேர்ந்த ஏழை



மக்கள் இலவச நவீன மருத்துவ வசதிகளைப் பெறுவார்கள் என்பதையும் மிகவும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

உங்கள் அன்புச் சகோதரியாகிய என் மீது பெரும் நம்பிக்கை வைத்திருக்கும் மக்கள் நீங்கள்! அந்த நம்பிக்கையின் வெளிப்பாடாக அரியலூர் பகுதியை உள்ளடக்கிய இன்றைய பெரம்பலூர் மாவட்டத்தில் உள்ள 5 சட்டமன்றத் தொகுதிகளில், 4 தொகுதிகளில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக வேட்பாளர்களை வெற்றி பெறச் செய்து, எஞ்சியுள்ள ஒரு தொகுதியில் கழகத்தின் ஆதரவு பெற்ற வேட்பாளரையே வெற்றி பெறச் செய்தவர்கள் நீங்கள்! உங்கள் அன்புச் சகோதரியின் மீது யார் நம்பிக்கை வைத்தாலும் அந்த நம்பிக்கை வீண் போவதில்லை.

இந்த நேரத்தில் எனக்கு ஒரு புராணச் சம்பவம் நினைவுக்கு வருகிறது.

தேவர்களுக்கும், அசுரர்களுக்கும் அடிக்கடி போர் வரும் என்று நாம் புராணங்களில் கேள்விப் பட்டிருக்கிறோம். அந்தப் போர்களில் வெற்றி தோல்வி மாறி மாறி வந்து கொண்டிருந்தது. தங்களுக்கு நிரந்தர வெற்றி வேண்டும் என்றும், மரணத்தைத் தவிர்க்கின்ற அமிர்தத்தைத் தராமல் படைப்புக் கடவுளாகிய பிரம்மா ஒர வஞ்சனையாக நடந்து கொள்கிறார் என்றும், அசுரர்கள் பிரம்மாவிடம் அங்கலாய்த்துக் கொண்டார்கள்.

பிரம்மா சொன்னார், "அவ்வளவு தானே பிரச்சனை? வாருங்கள், உட்காருங்கள். உங்களுக்கு அமிர்தம் தருகிறேன். வரிசையாக உட்காருங்கள்" என்றார். அப்படியே உட்கார வைத்து அவர்களுக்கு நடுவில் அமிர்தக் கிண்ணங்களை வரிசையாக வைத்தார். அசுரர்கள் மிகவும் சந்தோஷத்தோடு அமிர்தத்தை சாப்பிடத் தயாரானார்கள்.

அப்போது பிரம்மா, "நிறுத்துங்கள்! நீங்கள் அமிர்தத்தை தாராளமாக சாப்பிடலாம். ஆனால், ஒரு நிபந்தனை! நீங்கள் முழங்கையை மடக்காமல் சாப்பிட வேண்டும்" என்றார் பிரம்மா.

அசுரர்கள் முயன்று பார்த்தார்கள். முழங்கையை மடக்காமல் அவர்களால் அமிர்தத்தை உண்ண முடியவில்லை. அவர்களுக்கு கோபம் வந்தது. கூச்சலிட்டார்கள். "பிரம்மா, நீங்கள் சூழ்ச்சி செய்கிறீர்கள். உங்களை சும்மா விட மாட்டோம்", என்று ஆக்ரோஷமாகக் கத்தினார்கள்.

அப்போது பிரம்மா, "பதற்றப்படாதீர்கள். இப்போது பாருங்கள்" என்று கூறிக் கொண்டே தேவர்களை அழைத்தார். தேவர்கள் வந்தார்கள். அவர்களுக்கும் அதே நிபந்தனை! முழங்கையை மடக்காமல் சாப்பிட வேண்டும் என்றார் பிரம்மா. தேவர்கள் அமிர்தம் சாப்பிட உட்கார்ந்தார்கள். அவர்கள் கோபப் படவில்லை. கூச்சலிடவில்லை. எதிர் எதிரே உட்கார்ந்து கொண்டார்கள். அமிர்தத்தைக் கையில் எடுத்தார்கள். கையை மடக்காமல், எதிரே இருப்பவரின் வாயில் ஊற்றினார்கள். ஒருவருக்கு ஒருவர் கையை மடக்காமல் ஊட்டிக் கொண்டே இருந்தார்கள். இப்படியாக, எல்லோரும் அமிர்தம் உண்டார்கள். உங்களுக்குப் புரிகிறதல்லவா? நாமே சாப்பிட வேண்டும் என்றால் கிண்ணத்தை ஏந்தி கையை மடக்கித்தான் சாப்பிட முடியும். ஆனால், முழங்கையை மடக்காமல் உண்ண வேண்டும் என்றால் கையை இப்படியே நீட்டிக் கொண்டு கிண்ணத்தை ஏந்தி எதிரே உள்ளவர் வாயில் ஊட்டினால் அவரும் சாப்பிடுகிறார். அதைப் போலவே உண்பவரும் நம் வாயில் ஊட்டினால், நாமும் சாப்பிடுகிறோம் அல்லவா?.

இது கதையாக இருக்கலாம். ஆனால் உலகம் அறிந்து கொள்ள வேண்டிய ஒப்பற்ற நீதி இதிலே அடங்கியிருக்கிறது.

அடுத்தவருக்குக் கொடுக்க நினைத்தால் நமக்குக் கட்டாயம் கிடைக்கும். ஒருவருக்கொருவர் உதவினால், இந்த பூலோகமே தேவ லோகமாக மாறும்.

எனவே, பிறர்க்குக் கொடுக்க நினைத்தால் நமக்கும் கிடைக்கும். இது தான் உண்மையான சோஷலிசம்.

இதைத் தானே இத்தகைய அரசு விழாக்களில் பல்வேறு திட்டங்களை மக்களுக்குக் கொண்டு செல்வதன் வாயிலாக இந்த அரசு தொடர்ந்து செய்து கொண்டிருக்கிறது.

நீங்கள் அனைவரும் என் மீது வைத்திருக்கும் அளவற்ற நம்பிக்கை நிச்சயம் வீண் போகாது என்பதை நிரூபிக்கின்ற வகையில் இன்றைய தினம், இந்த இனிய விழாவிலே 198 கோடியே 15 இலட்சம் ரூபாய் மதிப்புடைய பல்வேறு திட்டப் பணிகளை எனது அன்புக்குரிய உங்கள் அனைவரின் பயன்பாட்டிற்காகவும் கொண்டு வந்திருக்கிறேன் என்பதை மட்டற்ற மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

**கொள்ளிடம் கூட்டுக் குடிநீர்த் திட்டம்**

இன்றைய தினம் இந்த பெரம்பலூர் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் அமைக்கப்பட்டு இருக்கும் மொத்தம் 100 கோடியே 56 இலட்சம் ரூபாய் மதிப்பிலான 5742 முடிவுற்ற பணிகளை திறந்து வைத்ததில் மிகவும் மகிழ்ச்சி அடைகின்றேன்.

அவற்றில் ஒரு சில முக்கிய பணிகளைப் பற்றி உங்களுக்கு எடுத்துக் கூற வேண்டியது என்னுடைய கடமையாகும். மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை மூலமாக 34 கோடியே 23 இலட்சம் ரூபாய் செலவில் முடிக்கப்பட்டுள்ள, சாலைகள் அமைத்தல், குளங்கள் தூர் வாருதல், தொகுப்பு வீடுகள் கட்டுதல், மகளிர் சுகாதார வளாகக் கட்டடங்கள் அமைத்தல், கிராம நிர்வாக அலுவலர்களுக்கான கட்டடங்கள் கட்டுதல், கதிர் அடிக்கும் களங்கள் அமைத்தல், அங்கன் வாடிகளிலும், பள்ளிகளிலும் கழிப்பறைகள் கட்டுதல் முதலான 4850 பணிகளை இன்று திறந்து வைத்ததில் நான் மன நிறைவு அடைகிறேன்.

பெரம்பலூர் நகருக்கான கொள்ளிடம் கூட்டுக் குடிநீர் திட்டம் இந்தப் பகுதி மக்களின் நீண்ட கால கோரிக்கையாகும். இந்தத் திட்டம் 17 கோடி ரூபாய் செலவில் முடிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் முதல் கட்டமாக பெரம்பலூர் நகரப் பேரூராட்சியில் 46,480 பேர் பயன்பெற உள்ளனர். இத்திட்டத்தின் இரண்டாம் கட்டமாக குரும்பலூர் கிராமப் பேரூராட்சியில் 23,210 பேர்களும், வழியோரக் குடியிருப்புகளில் 1,15,282 பேர்களும் பயனடைவர்.

மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் சார்பாக, கான்கிரீட் சாலைகள், தார் சாலைகள் மற்றும் மெட்டல் சாலைகள் ஆகியவை உள்ளிட்ட மொத்தம் 1,101 பணிகள் 26 கோடியே 28 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டு என்னால் திறந்து வைக்கப்பட்டுள்ளன. மேலும், 11 கோடியே 30 இலட்சம் ரூபாய் மதிப்பில் கட்டி முடிக்கப்பட்டுள்ள தொகுப்பு வீடுகள், மகளிர் சுகாதார கட்டடங்கள், கிராம நிர்வாக அலுவலகங்களுக்கான கட்டடங்கள், கதிர் அடிக்கும் களங்கள், பள்ளிகளில் கழிப்பறைகள், பெரம்பலூரில் வணிக வளாகம் ஆகியவற்றை இந்த இனிய விழாவில் நான் திறந்து வைத்துள்ளேன்.

மேலும், நெடுஞ்சாலைத் துறையின் சார்பாக அமைக்கப்பட்டுள்ள 12 கோடியே 54 இலட்சம் ரூபாய் மதிப்புடைய 24 சாலைப் பணிகளையும் பொதுப்பணித் துறையின் வாயிலாக கட்டி முடிக்கப்பட்டுள்ள 3 கோடியே 18 இலட்சம் ரூபாய் மதிப்புடைய 42 கட்டடங்களையும் இன்றைய தினம் நான் திறந்து வைத்துள்ளேன். குடிநீர் வழங்கல் பணிகளைப் பொறுத்தவரையில் இந்த மாவட்டத்தில் மொத்தம் 45 கோடியே 48 இலட்சம் ரூபாய் மதிப்பில் 446 பணிகள் என்னால் திறந்து வைக்கப்பட்டுள்ளன. அவற்றில், குறிப்பாக, இந்த மாவட்டத்தின் 10 ஊராட்சி ஒன்றியங்களில் ஏறத்தாழ இரண்டரை இலட்சம் மக்கள் பயனடையும் வகையில் மொத்தம் 9 கோடியே 58 இலட்சம் ரூபாய் செலவில் 446 குடிநீர் வழங்கல் பணிகளை திறந்து வைத்ததில் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றேன்.

இந்த மாவட்டத்தில், 9 பேரூராட்சிகளில், 2 கோடியே 76 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்டுள்ள 241 கட்டடங்கள், தார் சாலைகள், சிமெண்ட் மற்றும் கான்கிரீட் சாலைகள், வடிகால்கள், குடிநீர் விநியோகப் பணிகள் ஆகியவற்றை இந்த இனிய விழாவிலே திறந்து வைத்ததில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.



## முழு வறுமை ஒழிப்புத் திட்டம்

மக்களுடைய வாழ்க்கை மென்மேலும் வளமடைய வேண்டும் என்பதிலும், அவர்கள் தம்முடைய அன்றாட வாழ்க்கையை ஆரோக்கியமாகவும், ஆக்க பூர்வமாகவும் நடத்திச் செல்ல அடிப்படை வசதிகள் உட்பட அனைத்து வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்பதிலும் நான் மிகுந்த அக்கறை கொண்டிருக்கின்றேன்; எங்கள் அரசு மிகுந்த அக்கறை கொண்டிருக்கின்றது.

அந்த வகையில், புதிய திட்டங்களுக்கு அடிக்கற்கள் நாட்டுகின்ற வாயிலாக இன்றைய தினம் என்னால் மொத்தம் 85 கோடி ரூபாய் மதிப்பில் பெரம்பலூர் மாவட்டத்தின் பல பகுதிகளில் அமைக்கப்பட உள்ள பல்வேறு திட்டப் பணிகளுக்காக அடிக்கற்கள் நாட்டப்பட்டுள்ளன.

மகளிர் சுய உதவிக் குழுக்கள் மூலமாக “முழு வறுமை ஒழிப்புத் திட்டம்” என்ற 25 கோடி ரூபாய் மதிப்பிலான திட்டத்தை நான் இங்கு துவக்கி வைத்துள்ளேன். மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையினால் செயல்படுத்தப்பட உள்ள இந்தத் திட்டம் வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ள மக்களுக்கு பெரிதும் உதவிடும் என்று நான் நம்புகின்றேன். 10 கோடி ரூபாய் மதிப்பீட்டில் குறும்பலூர் பேரூராட்சி மற்றும் 55 வழியோர குடியிருப்புகளுக்கு குடிநீர் அளிக்கும் திட்டம் – 7 கோடியே 16 இலட்சம் ரூபாய் செலவில் பெரம்பலூர் மாவட்ட ஆட்சித் தலைவரின் அலுவலக வளாக பணித் திட்டம் – 1 கோடியே 84 இலட்சம் ரூபாய் செலவில் 38 குடியிருப்புகள் கொண்ட காவலர்களுக்கான கட்டடங்கள் – 1 கோடியே 78 இலட்சம் ரூபாய் மதிப்பில் பெரம்பலூர் மாவட்ட ஆட்சியர் குடியிருப்பு – வருவாய் அலுவலர் குடியிருப்புகள் – வேப்பந்தட்டை வட்டாட்சியர் அலுவலகக் கட்டடம் ஆகியவற்றிற்கு நான் அடிக்கற்கள் நாட்டியுள்ளேன். இவை மட்டுமன்றி, 9 கோடியே 69 இலட்சம் ரூபாய் செலவில் இந்த மாவட்டத்தின் பல்வேறு இடங்களில் 10 சாலைகள் மற்றும் ஒரு பாலம் ஆகியவற்றிற்கான மேம்பாட்டுப் பணிகள் – 9 கோடியே 38 இலட்சம் ரூபாய் செலவில் பெரம்பலூர் மாவட்டத்திற்கான ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டத்தின் கீழ் பல்வேறு பணிகள் – 1 கோடியே 13 இலட்சம் ரூபாய் செலவில் கங்கை கொண்ட சோழபுரத்தில் உள்ள பிரகதீஸ்வரர் ஆலயத்தின் சுற்றுலா வளர்ச்சிப் பணிகள் ஆகியவற்றிற்கு இன்று நான் அடிக்கற்கள் நாட்டியுள்ளேன்.

மேலும், சிறுவாச்சூர் அருள்மிகு மதுர காளியம்மன் திருக்கோயிலுக்கு புதிய தங்க ரதம் அமைக்கும் பணி – மீன்சுருட்டி ஆரம்ப சுகாதார நிலையத்தை 30 படுக்கைகளுடன் தரம் உயர்த்தும் பணி – அரியலூர் மாவட்ட விளையாட்டு அரங்கம் அமைக்கும் பணி – தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகளுக்கு நவீன கட்டடங்கள் அமைக்கும் பணி ஆகியவற்றிற்கெல்லாம் அடிக்கற்கள் நாட்டியதில் நான் பெரு மகிழ்ச்சி அடைகின்றேன்.

## நலத் திட்ட உதவிகள்

பல்லாயிரக்கணக்கான மக்கள் எழுச்சியோடு குழுமியிருக்கின்ற பெரம்பலூர் மாவட்ட அரசு விழாவில் மொத்தம் 19,845 பேர் பயன் பெறுகின்ற வகையில், ஏறத்தாழ 13 கோடி ரூபாய் மதிப்புடைய பல்வேறு நலத் திட்ட உதவிகள் இன்று இந்த விழாவில் வழங்கப்பட உள்ளன. நலிந்தோருக்கும், ஆதரவற்றோருக்கும், மகளிருக்கும் என சமுதாயத்தின் அடித்தளத்து பிரிவினர் அனைவரும் தமது வாழ்க்கையில் முன்னேற உரிய உதவிகளை வழங்குவதில் எங்கள் அரசு என்றைக்குமே முன்னணியில் இருக்கிறது என்பதை பெருமையோடு தெரிவித்துக் கொள்கிறேன். அந்த வகையில், இந்த விழாவிலே 18 அரசுத் துறைகள் மூலம் 19,845 பயனாளிகளுக்கு மொத்தம் 12 கோடியே 59 இலட்சம் ரூபாய் மதிப்புடைய பல்வேறு நலத் திட்ட உதவிகள் வழங்கப்படுகின்றன. அவை அனைத்தையும் உங்களுக்கு எடுத்துச் சொல்ல நேரம் இல்லாத காரணத்தினாலே, வழங்கப்படுகின்ற உதவிகளில் முக்கியமான ஒரு சிலவற்றை மட்டும் இங்கே எடுத்துக் கூற விரும்புகிறேன்.

முதலில், ஊரக வளர்ச்சி முகமையின் சார்பாக 5036 பயனாளிகளுக்கு 4 கோடியே 41 இலட்சம் ரூபாய் அளவிற்கு கடன் உதவிகள் வழங்கப்படுகின்றன – கூட்டுறவுத் துறையின் சார்பாக 629 பயனாளிகளுக்கு 2 கோடியே 70 இலட்சம் ரூபாய் அளவில் வேளாண் சார்ந்த தொழில் அபிவிருத்திக்காக உதவி வழங்கப் படுகின்றது – 8252 பெண்களுக்கு மொத்தம் 1 கோடியே 82 இலட்சம் ரூபாய் கடன் உதவி மகளிர் திட்டத்தின் கீழும் – 3297 பேருக்கு வருவாய்த் துறையின் கீழ் வீட்டுமனைப் பட்டா, நிலப் பட்டா மற்றும் முதியோர் உதவித் தொகை, ஊனமுற்றோர் உதவித் தொகை போன்ற உதவிகளும் – ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் சார்பாக 1226 பேருக்கு 2 கோடியே 49 இலட்சம் ரூபாய் மதிப்பில் வீட்டு மனைப் பட்டாக்களும், தையல் இயந்திரங்களும் வழங்கப்பட உள்ளன. இவை மட்டுமன்றி, சமூக நலத்துறை, வனத்துறை, வேளாண்மைத் துறை, தொழில் துறை மற்றும் ஊனமுற்றோர் மறுவாழ்வுத் துறை ஆகிய பல்வேறு துறைகளின் சார்பாகவும், இந்த இனிய விழாவிலே பல ஆயிரக்கணக்கான பயனாளிகளுக்கு, நலத் திட்ட உதவிகள் வழங்கப்படுகின்றன என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த நலத்திட்ட உதவிகள் அனைத்தையும் பயனாளிகள் அனைவருக்கும் நானே எனது கரங்களாலேயே வழங்கிட வேண்டும் என்று எனக்கு விருப்பம் தான். ஆனால் அதற்கு போதுமான நேரம் இல்லை என்பது உங்கள் அனைவருக்கும் தெரியும். ஆகவே, இந்த மேடையில் 15 பயனாளிகளுக்கு மட்டும் நலத்திட்ட உதவிகளை நானே வழங்க உள்ளேன். எஞ்சியுள்ள அனைவருக்கும் மாண்புமிகு அமைச்சர் பெருமக்களும், நாடாளுமன்ற சட்டமன்ற உறுப்பினர்களும் அரசு அலுவலர்களும், இங்கேயே, இந்த விழாவிலேயே, இப்போதே வழங்கி சிறப்பிப்பார்கள் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அரசு உதவிகள் பலவும் பெற உள்ள பயனாளிகள் தாம் செய்து வருகின்ற தொழில்களில் மென்மேலும் வளர்ச்சி பெற வேண்டும் என்று வாழ்த்தி மகிழ்கிறேன்.

"எங்கு தர்மம் இருக்கிறதோ
அங்கே கிருஷ்ணன் இருப்பார்
எங்கே கிருஷ்ணன் இருப்பாரோ
அங்கே வெற்றி இருக்கும்"

என்று சொல்வார்கள்.

எனவே வெற்றி வேண்டும் என்றால், அங்கே கிருஷ்ணன் வேண்டும்.கிருஷ்ணன் வேண்டும் என்றால், அங்கே தர்மம் வேண்டும். சுருங்கச் சொன்னால், வெற்றி வேண்டும் என்றால், தர்மம் வேண்டும்.நம்மிடம் இருப்பது தர்மம். அதனால் நமக்குக் கிடைப்பது வெற்றி. சிலரிடம் அதர்மம் தான் இருக்கிறது. அவர்களுக்குக் கிடைப்பது தோல்வி.

அரசு விழாவிலே ஏழை எளிய மக்களுக்கு நலத் திட்ட உதவிகளை நான் வழங்குகிறேன். இதைக் கூட சில அரசியல்வாதிகளால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை.

எந்த நல்ல காரியத்தை செய்ய நினைத்தாலும் அதனை உடனே செய்து விட வேண்டும் என்பார்கள். எனவே தான் உங்கள் அன்புச் சகோதரியாகிய நான், சிரமங்களை பொருட்படுத்தாமல், இந்த அரசு விழாவிலே கலந்துகொண்டு, திட்டப் பணிகளைத் தொடங்கி வைத்து, புதிய பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, நலத்திட்ட உதவிகளை வழங்கியதில், உள்ளபடியே மிகுந்த மன நிறைவை அடைகின்றேன்.

அரசு வழங்கும் உதவிகளை முழுமையாகப் பயன்படுத்திக் கொண்டு பயனாளிகள் அனைவரும் தங்களது பொருளாதார நிலையை மேலும் மேலும் உயர்த்திக் கொள்ள வேண்டும். அவ்வாறு பொருளாதார நிலையை உயர்த்துவது தான் அரசு நலத்திட்ட உதவிகளை வழங்குவதன் குறிக்கோள் ஆகும். அதற்காக தங்களது தொழில் முயற்சிகளில் முழுமையாகத் தங்களை ஈடுபடுத்திக் கொண்டு பயனாளிகள் வாழ்க்கையில் வெற்றி பெற வேண்டும் என்பதே எனது விருப்பமாகும். எந்தத் தொழிலை நாம் செய்தாலும் அதைச் செம்மையாக செய்ய வேண்டும் என்றும், அப்படிச் செய்தால் உங்கள் வாழ்க்கையில் வெற்றி நிச்சயமாக உங்களுக்கு வந்து சேரும் என்றும் கூறி, உங்கள் அனைவரையும் வாழ்த்தி மகிழ்கின்றேன்.

இந்த விழா சீரோடும் சிறப்போடும் நடைபெறக் காரணமாக இருந்த அனைவருக்கும், குறிப்பாக மாவட்ட ஆட்சித் தலைவருக்கும், அரசு அலுவலர்களுக்கும், காவல் துறையினருக்கும், எனது மனமார்ந்த பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொண்டு விடைபெறுகிறேன்.

*(6.3.2003 அன்று நடைபெற்ற பெரம்பலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் பெருந்திட்ட வளாக அடிக்கல் நாட்டு விழா, புதிய திட்டப் பணிகள் அடிக்கல் நாட்டு விழா மற்றும் அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள் ஆற்றிய உரையிலிருந்து.)*

* * *

**தர்காக்களில் அன்னதானம்!**
**தமிழக முதல்வருக்கு**
**த.மா.மு.லீக் பாராட்டு**

தமிழக மாநில முஸ்லிம் பொதுக்குழு கூட்டம் லீக் கடந்த 8-6-2003 அன்று நடைபெற்றது. இந்தக்கூட்டத்தில் கோயில்களில் அன்னதானம் வழங்குவது போல தர்காக்களில் அன்னதானத் திட்டம் தொடங்கியும், கண்ணியத்தென்றல் காயிதேமில்லத் அவர்களுக்கு மணிமண்டபமும், அமைத்து கொடுத்த மாண்புமிகு தமிழக முதல்வர் செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்களுக்கு இஸ்லாமிய சமுதாயம் சார்பாக நன்றியையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொண்டார்கள்.

# தமிழக அமைச்சர்கள் பொறுப்பேற்றுள்ள துறைகள்



**செல்வி ஜெ ஜெயலலிதா** : பொது நிர்வாகம், இந்திய ஆட்சிப் பணி (IAS), இந்திய காவல் பணி (IPS), அனைத்து இந்திய சேவைப் பணிகள், மாவட்ட வருவாய் அதிகாரிகள், உள்துறை, காவல் துறை மற்றும் சிறுபான்மையினர் நலம்.
முதலமைச்சர்

2. **திரு. ஓ. பன்னீர் செல்வம்**
பொதுப்பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை & வருவாய்த்துறை அமைச்சர் : பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைகள், சிறுநீர்ப் பாசனம் உட்பட்ட நீர்ப் பாசனம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை, மொலாசஸ், ஊழல் தடுப்பு மற்றும் சிறைத்துறை, வருவாய், மாவட்ட வருவாய் நிர்வாகம், துணை மாவட்ட ஆட்சியர்கள், பதிவு, முத்திரைத்தாள் சட்டம், எழுதுபொருள் மற்றும் அச்சு, அரசு அச்சகம், பூதானம், கிராமதானம் மற்றும் பாஸ்போர்ட்கள்.



3. **திரு. சி. பொன்னையன்**
நிதித்துறை அமைச்சர் : நிதி, திட்டம், தேர்தல்கள் மற்றும் சட்டமன்றம், சட்டம் இயற்றல், எடைகள் மற்றும் அளவுகள், கடன் வழங்கும் சட்டம் உட்பட்ட கடன் நிவாரணம், சீட்டுகள் மற்றும் கம்பெனிகள் பதிவு.



4. **திரு. டி. ஜெயக்குமார்**
சட்டம், தகவல் தொழில்நுட்பம் மற்றும் மின்துறை அமைச்சர் : சட்டம், நீதிமன்றங்கள், தகவல் தொழில்நுட்பம், மின்சாரம், மரபுசாரா எரிசக்தி வளர்ச்சி.



5. **திரு. பி.சி. ராமசாமி**
இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் : இந்து சமயம் மற்றும் அறநிலையம்



6. **திரு. எஸ். செம்மலை**
கல்வி அமைச்சர் : கல்வி, தொழில்நுட்பக் கல்வி, அறிவியல் மற்றும் தொழில்நுட்பம், தொல் பொருள், தமிழ் வளர்ச்சி மற்றும் தமிழ்ப் பண்பாடு, வெளிநாடுகளில் வாழும் இந்தியர்கள், அகதிகள் மற்றும் வெளியேற்றப்பட்டவர்கள்.



7. **திரு. என். தளவாய் சுந்தரம்**
மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் : மக்கள் நல்வாழ்வு, மருத்துவக்கல்வி மற்றும் குடும்ப நலம்.



8. **திரு. அ. அன்வர் ராஜா**
தொழிலாளர் நலத்துறை அமைச்சர் : தொழிலாளர் நலம், வேலைவாய்ப்புப் பயிற்சி, நகர்ப்புற மற்றும் ஊரக வேலைவாய்ப்பு, கணக்கெடுப்பு மற்றும் வக்ஃபு.



9. **திரு. இரா. ஜீவானந்தம்**
வேளாண்மைத்துறை அமைச்சர் : வேளாண்மைத்துறை, வேளாண் பொறியியல், வேளாண் சேவை கூட்டுறவுகள், தோட்டக்கலை, கரும்பு மேல்வரி, கரும்பு சாகுபடி.



10. **திரு. பா. வளர்மதி**
சமூகநலத்துறை அமைச்சர் : பெண்கள் நலம் மற்றும் குழந்தைகள் நலம் உள்ளிட்ட சமூக நலத்துறை, சத்துணவு, உடல் ஊனமுற்றோர் நல வாழ்வு, பிச்சைக்காரர் விடுதிகள், அனாதை இல்லங்கள், சீரமைப்பு நிர்வாகம்.



11. **திரு. சொ. கருப்பசாமி**
ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் : ஆதிதிராவிடர் நலம், மலைவாழ் மக்கள், கொத்தடிமைகள் மற்றும் முன்னாள் படைவீரர்கள் நல்வாழ்வு.



12. **திரு. இரா. விஸ்வநாதன்**
போக்குவரத்துத்துறை அமைச்சர் : போக்குவரத்து, தேசிய மயமாக்கப்பட்ட போக்குவரத்து, மோட்டார் வாகனங்கள் சட்டம் மற்றும் துறைமுகங்கள்.



13. **திரு. நயினார் நாகேந்திரன்**
தொழில்துறை அமைச்சர் : தொழில்கள், இரும்பு மற்றும் உருக்கு கட்டுபாடு, சுரங்கம் மற்றும் தாதுப்பொருட்கள், மின்னணுவியல்.



14. **திரு. கே. பாண்டுரங்கன்**
ஊரகத் தொழில் துறை அமைச்சர் : குடிசைத் தொழில்கள் உட்பட்ட ஊரகத் தொழில்கள், சிறுதொழில்கள், காதி மற்றும் கிராமத் தொழில் வாரியம்.



15. **திரு. செ.மா. வேலுசாமி**
வணிகவரித்துறை அமைச்சர் : வணிகவரிகள்



16. **திரு. ப. மோகன்**
கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை அமைச்சர் : கூட்டுறவு, உணவு, குடிமைப் பொருள் வழங்கல், விலைக் கட்டுப்பாடு மற்றும் புள்ளியியல்.



17. **திரு. எம்.சி. சம்பத்**
உள்ளாட்சித்துறை அமைச்சர் : நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி, ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள், வறுமை ஒழிப்புத் திட்டங்கள், ஊரகக் கடன், நகர்ப்புற மற்றும் ஊரக குடிநீர் விநியோகம்.



18. **திரு. பி.வி. தாமோதிரன்**
கால்நடைப் பராமரிப்புத்துறை அமைச்சர் : கால்நடைப் பராமரிப்பு.



19. **திரு. ஆர். வைத்திலிங்கம்**
வனம் மற்றும் சுற்றுப்புறச் சூழல் அமைச்சர் : வனங்கள் மற்றும் சுற்றுப்புறச்சூழல் மற்றும் மாசுக் கட்டுப்பாடு.



20. **திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்**
வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் : வீட்டுவசதி, வீட்டு வசதி மேம்பாடு, நகரத் திட்டம், குடிசை மாற்று, இடவசதிக் கட்டுப்பாடு, நகர்ப்புற மேம்பாடு, சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமம்.



21. **திரு. எஸ். இராமச்சந்திரன்**
பால்வளத்துறை அமைச்சர் : பால் மற்றும் பால் பொருள் மேம்பாடு.



22. **திரு. வி. சோமசுந்தரம்**
கைத்தறி மற்றும் ஜவுளித்துறை அமைச்சர் : கைத்தறி மற்றும் ஜவுளி.



23. திரு. எம். ராதாகிருஷ்ணன் : மீன்வளம்.
மீன்வளத்துறை அமைச்சர்



24. திரு. ஏ. மில்லர் : சுற்றுலா மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் கழகம்.
சுற்றுலாத்துறை அமைச்சர்



25. திரு. பி. அண்ணாவி : பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர்.
பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர்



26. திரு. கே.பி. அன்பழகன் : செய்தி விளம்பரம், திரைப்படத் தொழில்நுட்பம், ஒளிப்பதிவுச் சட்டம், செய்தித்தாள் காகிதக் கட்டுப்பாடு.
செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர்



27. திரு. இரா.த. இன்பத்தமிழன் : இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாடு.
இளைஞர் நலன் மற்றும்
விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர்





மேதகு ஆளுநர் மற்றும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் ஆகியோருடன்
3-6-2003 அன்று பதவியேற்றுக் கொண்ட புதிய அமைச்சர்கள்

# அடித்தளத்து மக்களை உயர்த்தவேண்டும் என்பதே என் விருப்பம்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
**செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்கள்

தமிழகத்தின் பழம்பெருமை மிக்க நகரங்களில் ஒன்றாக விளங்கும் கரூர் நகரத்தில் நடைபெறும் கரூர் மாவட்ட அரசு விழாவில் கலந்து கொண்டு முடிவுற்ற திட்டப் பணிகளை திறந்து வைத்து புதிய பணிகளுக்கு அடிக்கல் நாட்டி பல்லாயிரக்கணக்கான மக்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்குகின்ற இந்த நல்ல விழாவில் எனது அன்பிற்குரிய மக்களாகிய உங்களை எல்லாம் சந்திக்கின்ற இனிய வாய்ப்பு கிடைத்துள்ளது குறித்து நான் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.

இன்றைய கரூர் முற்காலத்தில் வஞ்சி என்று அழைக்கப்பட்டது. சேர மன்னர்களின் தலைநகராக வஞ்சி நகரம் இருந்தது என்பதும் சங்க காலத்தில் உலக நாடுகளோடு தொடர்பு கொண்ட நகரமாக இந்த வஞ்சி மாநகரம் இருந்தது என்பதும் கரூர் நகரத்தின் புகழுக்கு இன்றும் கட்டியம் கூறுகின்றன.

சங்க காலத்தில் புழக்கத்தில் இருந்த ரோமானியக் காசுகளும் கிரேக்க நாட்டுக் காசுகளும் கரூரில் மட்டும் தான் மிகுதியாகக் கிடைத்திருக்கின்றன. கரூரின் அருகே உள்ள பள்ளிப்பாளையத்தில் வெனீஸ் (VENICE) நகரக் காசுகள் கிடைத்துள்ளன என்றும் நாம் அறிகிறோம்.

ஒரு காலத்தில் ஒரு வகையில் சிறப்புற்று இருக்கும் நகரம் அதே வகையில் இக்காலத்திலும் சிறப்பு பெற்றிருக்கும் என்று சொல்ல இயலாது. ஆனால் கரூர் நகரம் அன்றைக்கும் உலகளாவிய அளவில் வணிகத்தில் சிறப்பு பெற்றிருந்தது; இன்றைக்கும் உலகளாவிய வணிகத்தில் சிறப்பு பெற்றிருக்கிறது. இது சாதாரணமாக கிடைத்து விடுகின்ற சிறப்பல்ல. உலகளாவிய அளவில் வணிகத்தில் அன்றைக்கே சிறப்பு பெற்றிருந்ததைப் போலவே இன்றைக்கும் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்து வெளிநாட்டு வர்த்தகத்தில் கரூர் மாவட்டம் சிறந்து விளங்குகின்றது.



## தாய் மொழி

தாய் மொழியைத் திறமையாகப் பயன்படுத்தத் தெரியாத எவனும் பிற மொழியைத் திறமையாகப் பயன்படுத்த கற்றுக் கொள்ளுதல் மிகவும் கடினம்.

- பெர்னாட்ஷா

கைத்தறித் துணிகள் உற்பத்தி மற்றும் கொசுவலைத் தொழில் இங்கு சிறப்பாக நடைபெறுவதும்; அமெரிக்கா, ஐரோப்பா, ஜப்பான், கானடா, ஆஸ்திரேலியா, சிங்கப்பூர், தென்கொரியா, தென் ஆப்பிரிக்கா ஆகிய நாடுகளுக்கு இவை ஏற்றுமதி செய்யப்படுவதும்; ஆண்டுதோறும் 1,000 கோடி ரூபாய் மதிப்பில், வெளிநாட்டு வர்த்தகம் நடைபெறுவதும்; கரூரில் உள்ள ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட ஆண்களும், பெண்களும் இத்தொழில்களில் ஈடுபட்டு இருப்பதும்; தமிழகத்திற்குத் தனிப்பெருமை அளிக்கும் செய்திகளாகும். ஆசிய கண்டத்திலேயே, மிகப் பெரிய காகித ஆலையாகத் திகழும் "புகளூர்" TNPL காகித ஆலை, கரூர் மாவட்டத்தில் தான் உள்ளது என்பது மற்றொரு மகிழ்ச்சி தரக்கூடிய செய்தி ஆகும்.

### கரூரின் சிறப்பு

வெள்ளையர் ஆட்சிக் காலத்தில், விடுதலைக்காகப் போராடிய வீரர்கள் பலரைத் தந்த ஊர் கரூர் என்பதும், இந்த நேரத்தில் குறிப்பிடத்தக்கது. அதைப் போல நீதிக் கட்சிக் காலத்தில், சான்றோர் பலரைத் தந்ததும், இதே கரூர் தான் என்பதை நான் பெருமையோடு தெரிவித்துக் கொள்கிறேன். இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில், முதன்மையான இடத்தை வகித்த நகரங்களில், கரூர் நகரமும் ஒன்று என்பது மொழிப் போர் வரலாற்றில் கரூர் பெற்ற சிறப்பிடத்தைப் பறை சாற்றுகிறது.

தொழில் சிறப்பு பெற்ற ஈரோடு நகரோடும், தமிழகத்தின் மைய நகரமான திருச்சி சந்திப்போடும், இணைக்கப்பட்ட நகரமாகக் கரூர் இருப்பதால் இன்று மிகச் சிறந்த துணி உற்பத்தி நகரமாக வளர்ந்து, நூற்றுக்கணக்கான துணி உற்பத்தியாளர்களைக் கொண்டு ஏற்றுமதி மூலம் ஆண்டுக்கு 500 கோடி ரூபாய்க்கும் மேலாக அந்நியச் செலாவணி திரட்டும் நகரமாகவும் கரூர் வளர்ந்துள்ளது. இத்தகைய சிறப்புக்கள் வாய்ந்த கரூர் மாவட்டம் 1995 ஆம் ஆண்டிலிருந்து, தனி மாவட்டமாக உங்கள் அன்புச் சகோதரியாகிய என்னால் அறிவிக்கப்பட்டது என்பதையும் மகிழ்வுடன் குறிப்பிட விரும்புகிறேன்.

இத்தனை சிறப்புகளையும் பெற்றிருக்கும் கரூர் மாவட்டத்துக்கு நான் ஆர்வமுடன் இன்று வந்திருக்கிறேன். "ஆர்வமுடன்" என்று நான் சொன்னதன் காரணம் உங்கள் அன்புச் சகோதரியாகிய என்னிடம் நீங்கள் வைத்துள்ள அசைக்க முடியாத நம்பிக்கை தான் காரணம் !

இந்த மாவட்டத்திலே உள்ள ஒரே ஒரு நாடாளுமன்றத் தொகுதியிலும் நான்கு சட்டமன்றத் தொகுதிகளில் மூன்று சட்டமன்றத் தொகுதிகளிலும், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு பெரும்பான்மையான ஆதரவினைத் தந்து வெற்றி அளித்து உங்களுக்காக உழைக்கின்ற வாய்ப்பினை அளித்துள்ள அன்புள்ளம் கொண்ட மக்கள் நீங்கள்! உங்கள் அனைவரையும் சந்திப்பதில் நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

ஏற்கெனவே உள்ள இந்தச் சிறப்புகளுக்கு எல்லாம் சிகரம் வைத்தாற்போல் மேலும் பல சிறப்புகளை கரூர் மாவட்ட மக்களுக்கு வழங்குகின்ற வகையில், 308 கோடி ரூபாய் மதிப்புள்ள திட்டங்களையும், நலத் திட்ட உதவிகளையும் வழங்க இன்று நான் கரூர் நகருக்கு வந்திருக்கிறேன். கடந்த தி.மு.க. ஆட்சிக் காலத்தில், நிதிநிலை சீர்குலைக்கப்பட்டு மிக நெருக்கடியான நிலையில் நாங்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றோம் என்பது உங்கள் அனைவருக்கும் தெரியும். இன்றும் நமது நிதிநிலை திருப்திகரமாக இல்லை. இருப்பினும், அதனைச் சரி செய்கின்ற முயற்சியில், தீவிரமாகக் கடந்த ஒன்றே முக்கால் ஆண்டு காலமாக, ஈடுபட்டு வருகிறது எங்கள் அரசு. இதைச் சொல்லுகின்ற போது ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் நடந்த ஒரு சம்பவம் தான் எனக்கு நினைவிற்கு வருகிறது.

இந்தியாவில் இருந்த சமஸ்தான மன்னர்களெல்லாம் டெல்லியில் ஒரு மாநாட்டில் கலந்து கொண்டார்களாம். அந்த மாநாட்டில் ஒவ்வொரு சமஸ்தான மன்னரும், "என்னிடம் இத்தனை கோடி பணம் இருக்கிறது" என்று பெருமையடித்துக் கொண்டிருந்தார்களாம். அந்த இடத்தில் இராமநாதபுரம் சமஸ்தான மன்னரான பாஸ்கர சேதுபதியும் இருந்தாராம். எல்லோரும் இத்தனை கோடி பணம் வைத்திருக்கிறேன் என்று சொல்லிக் கொண்டிருந்த போது, இராமநாதபுரம் அரசர் சொன்னாராம் "என்னுடைய சமஸ்தானத்தில் ஒரே ஒரு கோடி மட்டும் தான் உள்ளது. அது தான் தனுஷ்கோடி!" என்றாராம்.

அப்போது தமிழகத்தில் தனுஷ்கோடியாவது இருந்தது. இப்போதைய தமிழகத்தில் அந்த தனுஷ்கோடியும் இல்லை. தமிழகத்தின் நிதி நிலை முந்தைய தி.மு.க. ஆட்சியில் வரலாறு காணாத அளவிற்கு சீர்குலைவு அடைந்தது. அதன் பின்னர் நான் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற பிறகு கடந்த ஒன்றேமுக்கால் ஆண்டு காலமாக நிதி நிலைமையை சரி செய்ய போர்க்கால அடிப்படையில் நடவடிக்கைகளை எடுத்து வருகிறேன். இத்தகைய கடுமையான நிதி நெருக்கடி இருந்த போதிலும், கரூர் மாவட்ட மக்களுக்கு மகிழ்வு தரும் வகையில், இன்று 308 கோடி ரூபாய் மதிப்பில் திறப்பு விழாவிற்கு தயார் நிலையில் உள்ள திட்டங்கள்

அடிக்கல் நாட்டப்படும் நிலையில் உள்ள திட்டங்கள் துவக்கி வைக்கப்பட வேண்டிய புதிய திட்டங்கள் மற்றும் நலத்திட்ட உதவிகள் என்று வகைப்படுத்தப்பட்டு, மொத்தம் 25,779 பணிகள் இங்கு இந்த மாவட்டத்து மக்கள் நலனுக்காக என்னால் அர்ப்பணிக்கப்படுகின்றன. இந்தப் பணிகளை இங்கு கூடியுள்ள அன்புள்ளம் கொண்ட மக்கள் அனைவரின் பயன்பாட்டிற்கும் வழங்கியதில் நான் மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன்.

**மக்கள் நல்வாழ்வுப் பணிகள்**

கரூர் மாவட்டத்தின் தொழில் வளர்ச்சிக்கு மகுடம் வைத்தாற்போல் விளங்குவது, TNPL என்று அழைக்கப்படும், புகளூரில் உள்ள தமிழ்நாடு காகித ஆலை ஆகும். 1986–ஆம் ஆண்டு, இதயதெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களால், புகளூர் தொழிற்சாலை ஆரம்பிக்கப்பட்ட போது, இதன் காகித உற்பத்தித் திறன், ஆண்டு ஒன்றுக்கு, 90 ஆயிரம் மெட்ரிக் டன் என்று இருந்தது. பின்னர், 1994–ஆம் ஆண்டு நான் முதலமைச்சராக இருந்த போது, இதன் உற்பத்தித் திறன் ஆண்டு ஒன்றுக்கு 1 லட்சத்து 80 ஆயிரம் மெட்ரிக் டன்னாக உயர்த்தப்பட்டது. இன்றைய தினம், இந்த சீரிய விழாவிலே புகளூர் காகித தொழிற்சாலையின் உற்பத்தித் திறன் 150 கோடி ரூபாய் மதிப்பீட்டில், ஆண்டு ஒன்றுக்கு 2 லட்சத்து 30 ஆயிரம் மெட்ரிக் டன்னாக உயர்த்தும் பணி நிறைவு பெற்றுள்ளதை அடுத்து, இந்த விரிவாக்கத் திட்டத்தை இந்த இனிய விழாவில் திறந்து வைத்ததில் நான் மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன்.

மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை சார்பில், 3 கோடியே 61 லட்சம் ரூபாய் மதிப்பில், 30 துணை சுகாதார நிலையங்களும் – வேலாயுதம் பாளையத்தில் 32 படுக்கைகள் கொண்ட மருத்துவமனை மற்றும் அறுவை சிகிச்சை அரங்கமும் – 12 படுக்கைகள் கொண்ட வளர்ச்சியடையாத சிசுக்களுக்கான பாதுகாப்புக் கட்டடம் – X-ray மற்றும் E.C.G. பிரிவு கட்டடம் – கரூர் அரசு மருத்துவமனையில் பால்வினை நோய் ஆலோசனை மற்றும் சோதனைக் கூடம் – பள்ளப்பட்டி அரசு மருத்துவமனையில் பிரசவ அறை – மைலம்பட்டி ஆரம்ப சுகாதார நிலையத்தில் 30 படுக்கைகள் கொண்ட புதிய வார்டு – அறுவை சிகிச்சை அரங்கு மற்றும் X-ray பிரிவுக் கட்டடம் – ஆகியவையும், இன்று என்னால் திறந்து வைக்கப்பட்டுள்ளன.

பொதுப் பணித்துறை நீர்வள ஆதார அமைப்பின் சார்பில், 63 லட்சம் ரூபாய் மதிப்பில் குளித்தலை ஆற்றுப் பாதுகாப்புக் கோட்டப் பிரிவு அலுவலகக் கட்டடம் – கரூர் திட்ட இல்லம் – மாயனூர் சுற்றுலா மேம்பாட்டுத் தலம் – செட்டிபாளையம் சுற்றுலாத் தலம் ஆகியவைகளும் கரூர் மக்கள் நலனுக்காக இன்றைய தினம் என்னால் திறந்து வைக்கப்பட்டுள்ளன.

'நீரின்றி அமையாது உலகு' என்பது ஆன்றோர் வாக்கு. அந்த வகையில், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் சார்பில், 4 கோடியே 25 லட்சம் ரூபாய் மதிப்பில் 119 மின் விசைத் திட்டங்களையும் – 1 கோடியே 20 லட்சம் ரூபாய் மதிப்பில், 200 சிறு மின்விசைத் திட்டங்களையும் – 17 கோடியே 21 லட்சம் ரூபாய் மதிப்பில், கரூர், பரமத்தி மற்றும் அரவக்குறிச்சி ஒன்றியங்களைச் சார்ந்த, 564 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் முதல்கட்டப் பணிகளையும் – 2 கோடியே 18 லட்சம் ரூபாய் மதிப்பில், குளித்தலை நகராட்சி குடிநீர் அபிவிருத்தித் திட்டப் பணியையும் – 5 கோடி ரூபாய் மதிப்பில், பள்ளப்பட்டி பேரூராட்சி குடிநீர் அபிவிருத்தி திட்டப் பணியையும் – 1 கோடியே 94 லட்சம் ரூபாய் மதிப்பில், அரவக்குறிச்சி பேரூராட்சி குடிநீர் அபிவிருத்தித் திட்டப் பணியையும் – 1 கோடியே 87 லட்சம் ரூபாய் மதிப்பில், புஞ்சைபுகளூர் பேரூராட்சி குடிநீர் அபிவிருத்தித் திட்டப் பணியையும் – இங்கே துவக்கி வைப்பதில் பூரிப்படைகிறேன். ஆக, கரூர் மாவட்ட மக்களின் குடிநீர்த் தேவைக்காக மட்டும், 33 கோடியே 65 லட்சம் ரூபாய் மதிப்பில், 324 பணிகள் இன்றைய தினம் என்னால் திறந்து வைக்கப்பட்டுள்ளன. மக்களின் அடிப்படைத் தேவைக்கு, இந்த அரசு, எந்த அளவு முன்னுரிமை கொடுத்து செயல்படுகிறது என்பதற்கு இது ஓர் எடுத்துக்காட்டாகும்.

நெடுஞ்சாலைகள் மற்றும் கிராமப் பணிகள் துறை சார்பில், 2 கோடியே 79 லட்சம் ரூபாய் மதிப்பில் கடவூரில் NABARD திட்டத்தின் கீழ், உயர்மட்டப் பாலம் – கோட்டமேடு மற்றும் சூரியனூரில், இரண்டு உயர்மட்டப் பாலங்கள் – NABARD திட்டப்பணிகள் ஆகியவை இங்கே திறந்து வைக்கப்பட்டுள்ளன.

கிராமப்புற மக்களின் அடிப்படைத் தேவைகளையும், பொருளாதார வளர்ச்சியையும், முக்கிய நோக்கமாகக் கொண்டு பல்வேறு நலத்திட்டப் பணிகளைச் செயல்படுத்தி வருவது ஊரக வளர்ச்சித் துறையாகும். கரூர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை மூலம், 11 கோடியே 69 லட்சம் ரூபாய் மதிப்பில் முடிக்கப்பட்டுள்ள 1,389 கட்டடங்கள் இன்று என்னால் திறந்து வைக்கப்பட்டுள்ளன. இப்பணிகள், கரூர் மாவட்ட கிராமப்புற மக்களின் கட்டுமான வசதி தேவைகளைப் பெருமளவிற்கு நிறைவு செய்யும் என்று நான் உறுதியாக நம்புகிறேன்.

இவை மட்டுமின்றி, தமிழ்நாடு மின்சார வாரியத்தின் சார்பில் 3 கோடியே 3 லட்சம் ரூபாய் மதிப்பில்

**ஒழுக்கம்**

மற்றவர்களிடமிருந்து நாம் எதை எதிர்பார்க்கிறோமோ, மற்றவர் நமக்கு என்ன செய்யவேண்டும் என்று கருதுகிறோமோ, மற்றவர் நம்மிடம் எப்படி நடந்து கொள்ளவேண்டும் என்று நினைக்கிறோமோ அப்படியே நாம் மற்றவர்களிடத்தில் நடந்துகொள்ள வேண்டும். அதுதான் ஒழுக்கம்.

- தந்தை பெரியார்



## நன்றி

**ந**ன்றி அறிவித்தல் ஒரு கடமையே. அதைச் செலுத்தியே ஆகவேண்டும். ஆனால் கேட்கப்பட வேண்டிய உரிமையல்ல.

– *ரூசோ*

முடிக்கப்பட்டுள்ள காவல்காரன்பட்டி துணை மின் நிலையத்தையும், 83 லட்சம் ரூபாய் செலவில் முடிக்கப்பட்டுள்ள லாலாபேட்டை துணை மின் நிலையத்தையும் – திறந்து வைப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

இப்போது, என் அன்புக்குரிய மக்களாகிய உங்களுக்கு ஒரு நிகழ்ச்சியை நான் நினைவூட்ட விரும்புகிறேன்.

**மக்களுக்குக் காணிக்கை**

பேரறிஞர் அண்ணா அவர்கள், 1967–ஆம் ஆண்டில் தமிழகத்தின் முதலமைச்சராக பதவியேற்ற போது நடந்த நிகழ்ச்சி இது.

பேரறிஞர் அண்ணா அவர்கள் பதவி ஏற்றவுடன், சுயமரியாதைத் திருமணங்கள் சட்டப்படி செல்லுபடியாகும் என்ற தீர்மானத்தைக் கொண்டு வந்து சட்டமாக்கினார். இனிமேல் நடைபெறப் போகும் சுயமரியாதைத் திருமணங்கள் மட்டுமல்லாமல், ஏற்கெனவே நடைபெற்றிருக்கிற சுயமரியாதைத் திருமணங்கள் அனைத்தும், சட்டப்படி செல்லுபடியாகும் என்று அண்ணா அறிவித்தார். அப்போது, சட்டசபையில், காங்கிரஸ் எதிர்க்கட்சித் தலைவர் ஒரு கேள்வி கேட்டார். "இந்தத் தீர்மானம், நீங்கள் பெரியாருக்குத் தருகின்ற காணிக்கையோ" என்று கேட்டார்.

பேரறிஞர் அண்ணா அவர்கள், "இந்த சட்டம் மாத்திரமல்ல, இந்த அமைச்சரவையே பெரியாருக்காக தரப்படுகின்ற காணிக்கை தான்" என்று சொன்னார்.

அதைப் போலவே, நாங்கள் பெறுகின்ற ஒவ்வொரு வெற்றியும், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுக்குக் காணிக்கை ஆக்கப்படுகின்ற வெற்றி.

பேரறிஞர் அண்ணா அவர்களுக்குக் காணிக்கை ஆக்கப்படுகின்ற வெற்றி.

இருவரும் தமது வாழ்நாள் முழுவதும் நேசித்த தமிழகப் பெருமக்களுக்குக் காணிக்கை ஆக்கப் படுகின்ற வெற்றி.

அவர்களின் அடியொற்றி உங்கள் அனைவரையும் நேசிக்கின்ற நான், நிறைவேற்றப்பட்ட திட்டங்களைத் திறந்து வைப்பதோடு மட்டும் நின்றுவிடாமல், மொத்தம் 33 கோடியே 69 லட்சம் ரூபாய் மதிப்பில், 1629 பணிகளுக்கு இன்றைய தினம் அடிக்கற்கள் நாட்டியுள்ளதிலும் மிக்க மன நிறைவு அடைகின்றேன்.

**அடிக்கற்கள் நாட்டுதல்**

தமிழ்நாடு மின்சார வாரியத்தின் சார்பில், 5 கோடியே 77 லட்சம் ரூபாய் மதிப்பில் அமைக்கப்படவுள்ள பஞ்சப்பட்டி துணை மின் நிலையத்திற்கும் – பொதுப்பணித் துறை சார்பில் 1 கோடியே 5 லட்சம் ரூபாய் மதிப்பில் கட்டப்படவுள்ள, சுற்றுலா மாளிகைக்கும் – 30 லட்சம் ரூபாய் மதிப்பில் கட்டப்படவுள்ள, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் குடியிருப்பு, மற்றும் முகாம் அலுவலகத்திற்கும் – போக்குவரத்துத் துறை சார்பில், 77 லட்சம் ரூபாய் மதிப்பில், கட்டப்படவுள்ள வட்டாரப் போக்குவரத்து அலுவலக கட்டடத்திற்கும் அடிக்கற்களை இன்று நான் நாட்டியுள்ளேன்.

2 கோடியே 29 லட்சம் ரூபாய் மதிப்பில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைத் திட்ட அலுவலர் அலுவலக கட்டடம் – 12 கிராம நிர்வாக அலுவலகக் கட்டடங்கள் – 25 சுயஉதவிக் குழுக்கள் கட்டடங்கள் – 40 ஒருங்கிணைந்த பெண்கள் சுகாதார வளாகக் கட்டடங்கள் – 215 அங்கன்வாடி கழிப்பறைகள் – 281 பள்ளிக் கழிப்பிடங்கள் – கட்டட மையம் மூலம் பள்ளிகளுக்கு, குடிநீர் வசதி செய்து தரும் பணிகள் ஆகியவற்றிற்கு இந்த சீரிய விழாவில் இன்று அடிக்கற்கள் நாட்டப்பட்டுள்ளன. இவை மட்டுமின்றி, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை சார்பில், 40 லட்சம் ரூபாய் மதிப்பில் தோகைமலை ஆரம்ப சுகாதார நிலையத்தில் 30 படுக்கைகள் கொண்ட கட்டடம் – அறுவை அரங்கம் X-ray பிரிவு கட்டடம் – 1 கோடியே 36 லட்சம் ரூபாய் மதிப்பில் 17 துணை சுகாதார மையங்கள் ஆகியவற்றிற்கான அடிக்கற்களும், இன்று என்னால் நாட்டப்பட்டுள்ளன.

வருவாய்த்துறை சார்பில், 6 கோடியே 46 லட்சம் ரூபாய் மதிப்பில் கரூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் பல்துறை அடுக்கு மாடிக் கட்டடம் – மாவட்ட ஆட்சித் தலைவர் குடியிருப்பு மற்றும் முகாம் அலுவலகம் உள்ளிட்ட, பல்வேறு அலுவலகங்களுக்கான கட்டடங்களுக்கும் – பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை சார்பில், 1 கோடியே 26 லட்சம் ரூபாய் மதிப்பில், 4 மாணவர் விடுதிகள் கட்டவும் இன்று என்னால் அடிக்கற்கள் நாட்டப்பட்டுள்ளன.

கரூர் மக்களின், எதிர்காலக் குடிநீர்த் தேவையை கருத்தில் கொண்டு கரூர், க.பரமத்தி மற்றும் அரவக்குறிச்சி ஒன்றியங்களைச் சார்ந்த, 564 குடியிருப்புகளுக்கு, 4 கோடியே 69 லட்சம் ரூபாய் மதிப்பில்,

குடிநீர் வழங்கும் பணிகளுக்கும் இன்று அடிக்கற்கள் நாட்டப்பட்டுள்ளன. இதனால் கரூர் மற்றும் க.பரமத்தி ஒன்றியங்களைச் சார்ந்த, 101 குடியிருப்புகளுக்கு உட்கட்டமைப்புகள் அமைத்து குடிநீர் வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

கல்வி வளர்ச்சியில், கரூர் மாவட்டம் தொடர்ந்து முன்னேற வேண்டுமென்ற உணர்வுடன், 2 கோடியே 52 லட்சம் ரூபாய் மதிப்பில் பல்வேறு பள்ளிக் கட்டடங்களுக்கும் – காவல்துறை சார்பில், 1 கோடியே 94 லட்சம் ரூபாய் மதிப்பில், 58 காவலர் குடியிருப்புகளுக்கும் – 6 பெண் காவலர் ஓய்வு அறைகள் கட்டுவதற்கும் இந்த இனிய விழாவில் அடிக்கற்கள் நாட்டப்பட்டுள்ளன.

பொதுப்பணித்துறை சார்பில், 2 கோடியே 38 லட்சம் ரூபாய் மதிப்பில், நபார்டு திட்டத்தின் கீழ், 7 உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் கூடுதல் கட்டட வசதிகளுக்கும் இங்கே அடிக்கற்கள் நாட்டப்பட்டுள்ளன.

இவை மட்டுமன்றி, கரூர் மாவட்டத்தின் அனைத்துப் பகுதிகளுக்கும் பயன் தருகின்ற வகையில், 57 கோடியே 26 லட்சம் ரூபாய் மதிப்பில், தேசிய மானாவாரி நீர்வடி மேம்பாட்டுத் திட்டம் – ஒட்டு மொத்த சுகாதார திட்டப்பணிகள் – தேசிய பாதாள சாக்கடைத் திட்டப்பணிகள் ஆகியவற்றை இந்த சீரிய விழாவில் துவக்கி வைத்துள்ளதிலும் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

**நலத்திட்ட உதவிகள்**

இன்று கரூர் மாவட்ட மக்களின் ஏற்றமிகு வாழ்விற்கு உதவிடும் வகையில், 7 கோடியே 37 லட்சம் ரூபாய் மதிப்பில், 18 ஆயிரத்து 10 பயனாளிகளுக்கு, பல்வேறு துறைகளின் சார்பில் நலத் திட்ட உதவிகளை வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன். அவற்றில் ஒரு சில நலத்திட்ட உதவிகளைப் பற்றி உங்களுக்கு எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு மகளிர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் நபார்டு வங்கி மூலம், 50 லட்சம் ரூபாய் மதிப்பில் 1,650 பயனாளிகள் பயன் அடையும் வகையில் கடன் உதவிகளையும் – மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைச் சார்பில், 1 கோடியே 6 லட்சம் ரூபாய் மதிப்பில், 83 பயனாளிகளுக்கு பொருளாதார மற்றும் ரொக்கக் கடன்களும் இன்று வழங்கப்படுகின்றன.

தாட்கோ சார்பில், 7 லட்சம் ரூபாய் மதிப்பில், தனி நபர் தொழில் தொடங்க 50 பயனாளிகளுக்குக் கடனுதவியும் – ஆதி திராவிடர் நலத் துறை சார்பில், 16 லட்சம் ரூபாய் மதிப்பில், 2,618 பயனாளிகளுக்கு, பெண் குழந்தைகள் கல்வி ஊக்கத் தொகை – வருவாய்த் துறை சார்பில், 41 லட்சம் ரூபாய் மதிப்பில், 831 பயனாளிகளுக்கு இலவச வீட்டு மனைப்பட்டாக்கள் – 1 கோடியே 42 லட்சம் ரூபாய் மதிப்பில், 456 பயனாளிகளுக்கு முதியோர் ஓய்வூதியம் ஆகியவை இன்று இந்த இனிய விழாவில் வழங்கப்படுகின்றன.

சிறுதொழில் துறை சார்பில் ''சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின்'' கீழ், 1 கோடியே 9 லட்சம் ரூபாய் மதிப்பில், 281 பயனாளிகளுக்கு கடனுதவியும் – சமூக நலத்துறை சார்பில், 237 பயனாளிகளுக்கு, 29 லட்சம் ரூபாய் மதிப்பில் பல்வேறு நலத் திட்ட உதவிகளும் இங்கு வழங்கப்படுகின்றன. மேலும், 201 வளர்கல்வி மையங்களுக்கு, 28 லட்சம் ரூபாய் மதிப்பில் மேஜை, பீரோ, நூல்கள், சைக்கிள்கள் போன்ற உபகரணங்களும் இந்த விழாவில் வழங்கப்படுகின்றன.

இந்த நலத்திட்ட உதவிகள் அனைத்தையும் பயனாளிகள் அனைவருக்கும் நானே வழங்கிட வேண்டும் என்பது தான் எனது விருப்பம். ஆனால், அதற்கு போதுமான நேரமில்லாத காரணத்தால் இந்த மேடையில் 15 பயனாளிகளுக்கு மட்டும் நலத்திட்ட உதவிகளை நானே என் கரங்களால் இப்போது வழங்க உள்ளேன். எஞ்சியுள்ள அனைவருக்கும், அமைச்சர் பெருமக்களும், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களும், அரசு அலுவலர்களும், இங்கேயே, இப்போதே வழங்கிச் சிறப்பிப்பார்கள் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அரசு உதவிகளைப் பெற்றுக் கொள்கின்ற பயனாளிகள் அனைவருக்கும், ஒன்றை நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன். எந்தத் தொழிலை நீங்கள் செய்தாலும் அதை நீங்கள் செம்மையாகச் செய்யவேண்டும் என்றும் அப்படிச் செய்தால் வாழ்க்கையில் வெற்றி நிச்சயமாக உங்களை வந்து அடையும் என்றும் கூறி உங்கள் அனைவரையும் வாழ்த்தி மகிழ்கிறேன்.

அமெரிக்க அதிபராக இருந்த ஆப்ரகாம் லிங்கன் அமெரிக்க நாட்டின் அடிமை முறையை ஒழிப்பதற்கு கடுமையாகப் போராடி வந்தார்.

பல போராட்டங்களுக்குப் பிறகு, நீக்ரோக்களை அடிமை முறையிலிருந்து விடுவிக்கும் பிரகடனத்தில், அவர் கையெழுத்துப் போடும் நேரம் வந்தது. அப்போது ஆப்ரகாம் லிங்கனின் செயலாளர் பிரகடனத்தின் கோப்பினையும், பேனாவையும் அவர் கையில் கொடுத்தார். லிங்கன் வாங்கினார். ஆனால் கையெழுத்துப் போடாமல் பேனாவை மேஜை மீது வைத்துவிட்டார்.

இவ்வாறு இரண்டு மூன்று முறை பேனாவைச் செயலாளர் திரும்ப திரும்பக் கொடுத்த போதும், லிங்கன் அதனை வாங்கி மேஜை மீது வைத்துவிட்டார்.

ஆபிரகாம் லிங்கனின் செயலாளருக்குச் சந்தேகம்! அடிமை முறையை ஒழிப்பதற்கு இவ்வளவு காலம் போராடியவர் கடைசி நேரத்தில் தயங்குகிறாரே, ஏன்? கையெழுத்துப் போட விருப்பமில்லையா? அல்லது எதையாவது நினைத்துப் பயப்படுகிறாரா? இவ்வாறு

பலவாறாக அந்தச் செயலாளர் சிந்தித்துக் கொண்டிருந்த போது ஆப்ரகாம் லிங்கன் சொன்னாராம்.

"இன்று காலை நூற்றுக்கணக்கானோர் என்னைப் பாராட்ட வந்தார்கள். அவ்வாறு வந்தவர்களோடு தொடர்ந்து க்கைகுலுக்கியதால் என் கை வலியெடுக்கிறது. அப்படி வலிப்பது மட்டுமல்லாமல், தொடர்ந்து கை குலுக்கிய காரணத்தால் எனது வலது கை, நடுங்கிக் கொண்டு இருக்கிறது.

"இப்படி நடுங்கும் கையால், நான் கையெழுத்து போட்டால் என் கையெழுத்து தடுமாறிப் போய்விடலாம். அதைப் பார்ப்பவர்கள், அரைகுறை மனதோடு நான் கையெழுத்து போட்டதாக நினைத்துவிடலாம் அல்லவா! நான் போடும் கையெழுத்து, உறுதியாக இருக்க வேண்டும். அதற்காகத் தான், கை நடுக்கம் தீரும் வரை காத்திருக்கிறேன்'' என்று ஆப்ரகாம் லிங்கன் சொன்னாராம்.

ஆட்சிப் பொறுப்பில், உயர்ந்த பதவியில் இருப்பவர்களுக்கு இப்படிப்பட்ட சிக்கலான சந்தர்ப்பங்கள் வரத் தான் செய்யும். அப்போது உறுதியாகச் செயல்பட வேண்டும். கையெழுத்தில் கூட அவர்களது தயக்கம் வெளிப்பட்டு விடக் கூடாது. அவர்களுடைய உள்ளத்தின் உறுதிப்பாடு கையெழுத்திலும் தெரிய வேண்டும்.

உங்கள் அன்புச் சகோதரியாகிய நான், மக்களுக்கு நன்மை தரும் திட்டங்களைப் பற்றி தீர்க்கமாகச் சிந்திக்கிறேன்.

"ஏற்றது ஒரு கருத்தை எனது உள்ளம் என்றால்
எவர் வரினும் நில்லேன் அஞ்சேன்"

– இது தான் உங்கள் அன்புச் சகோதரியின் கொள்கை.

அவ்வாறு சிந்தித்து முடிவெடுத்துவிட்ட பின்பு, எதற்காகவும் நான் தயங்குவதில்லை; யாருக்காகவும் நான் அஞ்சுவதில்லை என்பதை, எனது அன்புக்குரிய கரூர் மாவட்டத்து மக்களின் வாயிலாக, தமிழக மக்கள் அனைவருக்கும் நான் கூறிக் கொள்கிறேன்.

இந்த விழா சீரோடும் சிறப்போடும் நடைபெறக், காரணமாக இருந்த அனைவருக்கும், குறிப்பாக, மாவட்ட ஆட்சித் தலைவருக்கும், அரசு அலுவலர்களுக்கும், காவல் துறையினருக்கும், எனது மனமார்ந்த பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

*– 7.3.2003 அன்று கரூரில் நடைபெற்ற*
*மாவட்ட அரசு விழாவில்*
*மாண்புமிகு தமிழக முதலமைச்சர்*
*செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள் ஆற்றிய உரை.*

## பட்டுப் பூமாலை!

*சேலம் மகளிர் சுயஉதவிக்குழுக்களின் சாதனை*

அகில இந்திய அளவிலான கைவினைப் பொருட்களின் கண்காட்சி அண்மையில் ஹரியானாவில் நடந்தது. இதில் அனைவரையும் ஆச்சரியப்படுத்தியது, ஒரு வண்ணமிகு மாலை. கண்காட்சியில் அந்த மாலையைப் பாராட்டாதவர் யாருமில்லை. அது சாதாரண பூமாலை அல்ல. குப்பைக்குப் போயிருக்க வேண்டிய பட்டுப் பூச்சி கூடுகளிலிருந்து உருவான மாலை அது!

'பெவிசோ' என்ற தொண்டு நிறுவனத்தின் அங்காடியில் இருந்த இம் மாலையைப் பெண்கள் சுய உதவிக் குழுக்களுக்குப் பயிற்சியளித்து, உருவாக்கினார்களாம். இப்படிப்பட்ட மாலைகள் மட்டுமில்லாமல் மலர் கொத்து, பொக்கே வாழ்த்து அட்டைகள், சுவர் அலங்காரங்கள் என்று பலவிதமான பொருட்கள் இங்கு உருவாக்கப்படுகின்றன. (விலை மூன்று ரூபாயில் தொடங்கி ஐந்நூறு ரூபாய் வரை)

பெவிசோ அமைப்பைச் சேர்ந்த மதிவாணன் சொல்கிறார்: "தருமபுரி, கிருஷ்ணகிரி, சேலம் பகுதிகளில் பட்டு வளர்ப்பு மிகப் பிரபலம். பட்டு வளர்ப்பில் ஈடுபடுகிறவர்கள், பட்டுப் பூச்சிகள், கூடு நிலையில் இருக்கிறபோது விற்பனைக்குக் கொண்டு வருகிறார்கள். அந்த மூட்டைகளிலிருந்து சரக்கை தரம் பார்த்து; விலை நிர்ணயம் செய்வதற்காக, ஒரு கையளவு பட்டுப் பூச்சிக் கூடுகள் எடுக்கப்படும். அவற்றின் முனைவெட்டப்பட்டு, தரம் பரிசோதிக்கப்படும். இவற்றிலிருந்து பட்டு எடுக்க முடியாது என்பதால், குப்பைக்குத்தான் போகும்.

ஆனால், நாங்கள் பட்டு வளர்ப்புத் துறையிலிருந்து அத்தகைய வீணான கூடுகளை வாங்கி வந்து சுத்தப்படுத்தி, கைவினைப் பொருட்கள் செய்ய பயன்படுத்துகிறோம். இதற்காகப் பெண்கள் சுய உதவிக் குழுக்களுக்குப் சிறப்புப் பயிற்சி அளித்திருக்கிறோம். அதன் பயனாக இன்று சுமார் நூறு பெண்கள், மாதம் இரண்டாயிரம் ரூபாய் வரை வருமானம் ஈட்டுகிறார்கள்'' என்கிறார்.



# சென்னை மாநகருக்கு தடையில்லா குடிநீர்!

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் அறிக்கை
(4–6–2003)

2002–ஆம் ஆண்டில் வடகிழக்கு பருவ மழை பொய்த்ததால் சென்னை மாநகரில் முக்கியமான நீர்ப்பிடிப்பு பகுதிகளில் நீர்வரத்து குறைந்ததாலும், ஆந்திர பிரதேசத்தில் பருவ மழை பொய்த்ததால் கிருஷ்ணா நதி நீர் சிறிதும் நமக்குக் கிடைக்காததாலும், சென்னை மாநகருக்கு குடிநீர் வழங்கும் ரெட் ஹில்ஸ், சோழவரம், பூண்டி ஆகிய மூன்று ஏரிகளிலும் கடந்த வடகிழக்குப் பருவ மழைக் காலம் முடிந்துவிட்ட நிலையிலும் போதுமான அளவு நீர் கிடைக்கவே இல்லை. இதன் விளைவாக 1.7.2003–ஆம் நாள் முதற்கொண்டு ஒரு நாள் விட்டு ஒரு நாள் 225 மில்லியன் லிட்டர் குடிநீர் வழங்கப்படும். நீர் வழங்கப்படாத நாட்களில், லாரிகள் மூலம் நாள் ஒன்றுக்கு 25 மில்லியன் லிட்டர் குடிநீர் 31.10.2003 வரை வழங்கப்படும்.

கடைக்கோடி பகுதிகளுக்கு குடிநீர் வழங்கப்படுவதை உறுதி செய்ய, லாரிகள் மூலம் குடிநீர் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. 2003 ஜனவரி மாதத்தில் நாள் ஒன்றுக்கு 1200 நடைகள் வரைக்கும் லாரிகள் மூலம் குடிநீர் வழங்கப்பட்டது. இது இப்போது நாள் ஒன்றுக்கு 3000 நடைகளாக அதிகரிக்கப்பட்டுள்ளது. 1.7.2003 முதல் இது நாள் ஒன்றுக்கு 5000 நடைகளாக அதிகரிக்கப்படும்.

சென்னை மாநகருக்கு, பாதுகாப்பான அளவு, நீரை எடுத்து வழங்கும் அளவுக்கு சென்னையைச் சுற்றியுள்ள கிணறுகளில் போதுமான நிலத்தடி நீர் உள்ளது. எனவே, சென்னையைச் சுற்றி உள்ள கிணறுகளிலிருந்து எடுக்கப்படும் நீரின் அளவை அதிகப்படுத்தி, 15.7.2003–லிருந்து நாள் ஒன்றுக்கு 100 மில்லியன்லிட்டர் நீர் வழங்க நான் முடிவு செய்துள்ளேன். இந்த அளவு நீரை, அதாவது, நாள் ஒன்றுக்கு 100 மில்லியன் லிட்டர் நீர் தொடர்ந்து வழங்கப்படுவதை உறுதி செய்யும் பொருட்டு, கூடுதலாக மேலும் 75 தனியார் வேளாண்மைக் கிணறுகள் வாடகைக்கு எடுத்துக் கொள்ளப் படும். ரூ.12.60 கோடி செலவில் கிணறுகளுக்கு குழாய் வசதிகளும், அடிப்படை வசதிகளில் மேம்பாடும் செய்து கொடுக்கப்படும்.

அத்துடன் 1.7.2003 முதற் கொண்டு நாள் ஒன்றுக்கு சுமார் ரூ.6.30 இலட்சம் செலவில் (2003 அக்டோபர் வரை ரூ.9.7 கோடி) பூவிருந்தவல்லி – போரூர் பகுதியிலிருந்து நாள் ஒன்றுக்கு 2.5 மில்லியன் லிட்டர் தண்ணீரும், செங்கற் பட்டிற்கு அருகிலுள்ள மாமண்டூர் மற்றும் பாலூர், ஆத்தூரிலிருந்து நாள் ஒன்றுக்கு 2.5 மில்லியன் தண்ணீரும் ஆக மொத்தம் நாள் ஒன்றுக்கு 5 மில்லியன் லிட்டர் தண்ணீர் சுமார் 500 நடைகள் லாரிகள் மூலமாகக் கொண்டு வரப்படும். இதற்கான ஆயத்தப் பணிகள் நடைபெற்று வருகின்றன.



15.7.2003–ஆம் நாளுக்குள்ளாக 600 புதிய உருக்காலான / HDPE தண்ணீர்த் தொட்டிகள் வாங்கப்பட்டு, கடைக்கோடிப் பகுதிகளில் நிறுவப்படும். இதனால், அதற்குப் பின்னரும் கூட அப்பகுதிகளுக்குத் தொடர்ந்து தண்ணீர் வழங்க இயலும். (ஏற்கெனவே தண்ணீர்த் தொட்டிகள் இல்லாத பகுதிகளில் 300 தொட்டிகள் புதியதாக அமைக்கப்படும். ஏற்கெனவே அமைக்கப்பட்டு கசிவு ஏற்பட்டுள்ள 300 தொட்டிகளுக்குப் பதிலாக புதிதாக 300 தொட்டிகள் அமைக்கப்படும்)

15.7.2003–ஆம் நாளுக்குள் தேவையான பகுதிகளில், சுமார் 500 புதிய இந்தியா மார்க் II குழாய்கள் நிறுவப்படும். குடிநீர்த் தேவை மற்றும் நிலத்தடி நீர் இருப்பு நிலையைப் பொறுத்து அவசியமான இடங்களில், கூடுதலாக இந்தியா மார்க் II குழாய்கள் நிறுவப்படும்.

சென்னை மாநகருக்கு, தொடர்ந்து போதுமான அளவில் குடிநீர் வழங்குவதை உறுதி செய்யும் பொருட்டு, 2003–ஆம் ஆண்டு அக்டோபர் வரை எடுக்கப்பட வேண்டிய அவசரப் பணிகளுக்காக என்னுடைய அரசு ரூ.40 கோடி ஒதுக்கியுள்ளது.

மிகவும் மோசமான பருவ நிலை நிலவி வரும் போதும் கூட, 2003 அக்டோபரில் வடகிழக்குப் பருவ மழை தொடங்கும் வரை, சென்னை மாநகருக்குத் தேவைப்படும் குறைந்தபட்சக் குடிநீர் தொடர்ந்து வழங்கப்படுவதை இந்த நடவடிக்கைகள் உறுதி செய்யும். •

திருவண்ணாமலை மாவட்டம்

# வாழ்க்கை தரம் உயர சுற்றுலாவுடன் கூடிய காளான் வளர்ப்பு பயிற்சி



மலைகள் சூழ்ந்த மாவட்டம் – கிரிவலத்திற்கு பெயர் பெற்ற மாவட்டம் – சிவனே மலையாக அவதரித்துள்ளார் என்று அனைத்து மக்களாலும் நினைக்கப்பெற்ற – நினைத்தாலே முக்தி என்று அனைத்து உன்னாமலை அம்மா என்றும் அபீதா குஜாம்பாள் என்றும் அழைக்கப்படுபவரின் அடியார்களாலும் புகழும் மாவட்டம் திருவண்ணாமலை மாவட்டம். வறண்ட மாவட்டத்தை பசுமை மாவட்டமாக்க – தோட்டக்கலை மூலமாக காளான் வளர்ப்பு பயிற்சி, பெண் விவசாயிகளுக்கு சுய தொழில் ஆரம்பிக்க அளிக்கப்படுகிறது.

இம்மாவட்டத்தில் வளர்ச்சிப் பணிகள் தங்குதடையின்றி மிகவும் சிறப்பாக நிறைவேற்றப்பட்டு வருகின்றது. குறிப்பாக வறுமையை போக்க வேண்டும் என்றும், விவசாயத்தை பெருக்க வேண்டும் என்றும், செயல்படுகின்ற திட்டங்கள் அனைத்தும் பாமர மக்களை சென்று அடைய வேண்டும் என்று மிகவும் கவனமாக திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

மத்திய சார்புத் திட்டத்தின் கீழ் காளான் வளர்ப்பு பயிற்சி விவசாயிகளுக்கு அளிக்கப்பட வேண்டும் என்று 2002–2003ஆம் ஆண்டின் திட்ட செயலாக்கத்தினை தோட்டக்கலை செய்து வருகிறது. இம்மாவட்டத்தில் பெண் விவசாயிகளுக்கு பயிற்சி அளித்து அவர்கள் வாழ்க்கை தரம் உயர்த்துவதற்கு 20 பெண் விவசாயிகளுக்கு சுற்றுலாவுடன் கூடிய பயிற்சி அளிக்கும் பொருட்டு தேர்ந்தெடுக்கப்பட்ட பெண்களுக்கு ஒருவார காலம் சுற்றுலாவுடன் கூடிய பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

ஒரு வார காலம் திருவண்ணாமலை – வேலூர் – ஈரோடு – கோவை – உதகை – கிருஷ்ணகிரி – ஓசூர் ஆகிய மாவட்டங்களுக்கு நேரடியாக சென்று அங்குள்ள வேளாண்மை அலுவலர் டான்வா மற்றும் மேம்பாடு திட்ட அலுவலர் – திருவண்ணாமலையில் தொழில்முனைவோர் பயிற்சி. வேலூரில் – தனியார் காளான் உற்பத்தி நிலையத்தில் பயிற்சி. கோவையில் – தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தில் காளான் உற்பத்தி கூடத்தில் பயிற்சி, உதகையில் – பால் காளான், சிப்பிக் காளான் மற்றும் முத்துக் காளான்கள் உற்பத்தியை நேரில் பார்வையிட்டு அதன்படி பயிற்சியை செவ்வன செய்தல். பையூரி மண்டல ஆராய்ச்சி நிலையத்தில் காளான் உற்பத்தியை கண்டறிதல், ஒசூரில் தனியார் உற்பத்தி நிலையங்களை பார்வையிட்டு வருதல் போன்ற சுற்றுலாவுடன் கூடிய பயிற்சி வழங்கப்பட்டது.

இந்த மாவட்டத்தில் காளான் வளர்ப்புத் திட்டத்தை விவசாய மக்களிடம் அறிமுகப்படுத்தி அவற்றை எப்படி செயல்படுத்த வேண்டும், இத்திட்டத்தை தோட்டக்கலை அறிமுகப்படுத்தி மிகவும் சிறப்பாக இத்திட்டம் அமைய வேண்டும் என்பதற்காக, பெண் விவசாயிகளுக்கு பயிற்சியுடன் கூடிய சுற்றுலாவினை தேர்ந்தெடுக்கப்பட்ட விவசாயி களுக்கு செயல்முறையிலும், நடைமுறையிலும் எப்படி செயல்பட வேண்டும் என்ற மிகவும் உபயோகமான பயிற்சியை வழங்கியுள்ளார்கள். புதிய தொழில் முனையவும் பெண்களுக்கு ஊக்கம் அளிக்கப்படுகிறது.

**– எம். கலைமணி**,
*செய்தி–மக்கள் தொடர்பு அலுவலர்,*
*திருவண்ணாமலை.*



மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள் 400 திருக்குறள்களை மனப்பாடமாக ஒப்பிக்கும் கடலூர் மாவட்டத்தைச் சேர்ந்த மூன்று வயது சிறுமி செல்வி அட்சயாவின் கல்விச் செலவுக்காக, முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து ரூ.5 இலட்சத்திற்கான நிதியுதவியை தலைமைச் செயலகத்தில் 4–6–2003 அன்று நேரில் வழங்கினார்கள்.



# அன்று நான் இட்ட சிறிய விதை, இன்று ஆலமரமாய் வளர்ந்துள்ளது

மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
**செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்கள்
8–3–2003 அன்று, திருவாரூர் மாவட்ட அரசு விழாவில் ஆற்றிய உரை.

"தமிழகத்தின் பன்னிரண்டு கடலோர மாவட்டங்களில் ஒன்றாகிய திருவாரூர் மாவட்டத்திற்கு வந்து தெய்வத் திருநகராம் திருவாரூரில் என் அன்பிற்கும் பாசத்திற்கும் உரிய உங்களை எல்லாம் கண்டு உங்களிடம் என்னுடைய எண்ணங்கள் சிலவற்றைப் பகிர்ந்து கொள்வதற்கு இன்று அருமையான வாய்ப்பு கிடைத்தது குறித்து, நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

ஒவ்வொரு மாவட்டத்திற்கும் நான் செல்லுகின்ற போது, பல கோடி ரூபாய் மதிப்புள்ள திட்டங்களை, நலத் திட்ட உதவிகளை அந்தந்த மாவட்டத்து மக்களுக்கு வழங்குவதற்காகக் கொண்டு செல்கிறேன். அந்த வகையில் இன்று, 84 கோடியே 30 இலட்சம் ரூபாய் மதிப்பில் திட்டங்களையும், நலத்திட்ட உதவிகளையும் உங்களுக்காகக் கொண்டு வந்திருக்கிறேன்.

திருவாரூர் ஒரு தெய்வத் திருநகரம். இறைவன் தியாகராஜனாக எழுந்தருளிய திருத்தலம்.

செந்நெல்லும், செங்கரும்பும், கனியும், கிழங்கும், தானியங்களும், கணக்கின்றி விளையும் வளம் நிறைந்த ஊர் திருவாரூர்.

இயற்கைச் சிறப்பு மட்டுமல்ல, நீதிச் சிறப்பும் மிக்க ஊர் திருவாரூர். தவறு செய்தவன் தன் மகனே ஆனாலும் தண்டனையை அனுபவித்தே தீர வேண்டும் என்று நீதியை நிலை நாட்டிய மனு நீதிச் சோழனின்



தலைநகரமாக விளங்கிய நகரம் திருவாரூர் என்பதை அறியும் போது, நாம் பெருமிதம் கொள்கிறோம்.

"தன் அரும் பெறல் புதல்வனை ஆழியின் மடித்தோன்" என்று சேர நாட்டு இளங்கோ அடிகளாலே பாடப்பட்ட சோழ நாட்டு மன்னனின் சொந்த ஊர் இந்த ஊர் என்பது, எவ்வளவு சிறப்புக்குரியது!

இந்த மாவட்டம் பூகோள ரீதியாக அனைத்து வட்டாரத் தலைமை இடங்களுடன் உடனுக்குடன் தொடர்பு கொள்ளக் கூடிய வாய்ப்புள்ள மாவட்டம் என்றும், 2,293 சதுர கிலோமீட்டர் பரப்பளவில் சுமார் 12 இலட்சம் மக்கள் வாழ்கின்ற மாவட்டம் என்றும் அறிகிறேன்.

சைவ சமயத்தின் பெரிய கோயில் என்று அழைக்கப்படுவதும் சைவ சமயத்தின் தலைமைப் பீடமாகப் போற்றப்படுவதும் ஆகிய திருவாரூர் பஞ்சபூத தலங்களுள், 'பிருத்வி', அதாவது 'மண்' தத்துவமாகும். திருவாரூர், சர்வதோஷ பரிகாரத் தலம்! பிறந்தாலும், பெயர் சொன்னாலும் முக்தி தரும் தலம்! மூலாதாரத் தலம்! இது சப்த விடங்கத் தலங்களுள் முதன்மையானது!

**ஆழித்தேர்**

திருவாரூர் கோயில் மட்டுமல்ல திருவாரூர்த் தேரும் சிறப்புடையது.

தமிழகத்துத் தேர்களில் மிகப் பெரிய தேர் திருவாரூர்த் தேர். அலங்கரிக்கப்படுவதற்கு முன், 30 அடி உயரமும், அலங்கரிக்கப்பட்ட பின் 96 அடி உயரமும், 300 டன் எடையும் கொண்ட திருவாரூர்த் தேர், 6000 ஆட்கள், இரண்டு டிராக்டர்கள் மற்றும் புல்டோசர்கள் கொண்டு இயக்கப்படுகிறது. 'திருவாரூர் தேரழகு' என்பது பழமொழி! இந்தத் தேர் திரும்பும் அழகைக் காண்பதே அழகு என்பது குறிப்பிடத்தக்கது.

'ஆழித் தேர் வித்தகனை யான் கண்டது ஆரூரே'

என அப்பர் பெருமானே வியந்து பாடியுள்ளார்.

இதைப் போலவே மன்னார்குடியில் 11 ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்ட சிறப்புடைய கோயில் அருள்மிகு ராஜகோபால சுவாமி திருக்கோயில் ஆகும்.

நீடாமங்கலம் வட்டம், திருராமேஸ்வரம் என்ற ஊரில் உள்ள அருள்மிகு ராமநாதசுவாமி திருக்கோவிலும் 11 ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்டது என்று வரலாறு கூறுகிறது.

இம் மாவட்டத்தில் கூத்தனூரில், கலைவாணி மகா சரஸ்வதியாக, தனிக்கோயில் கொண்டு இருக்கிறாள். இந்தக் கோயில் கி.பி. 13 ஆம் நூற்றாண்டில் ஒட்டக்கூத்தரால் கட்டப்பட்டதாக அறிகிறோம்.

இதைப் போலவே முத்துப்பேட்டை தர்கா என்று அழைக்கப்படும், ஜாம்பவான் ஓடை தர்கா புகழ் பெற்ற தர்காவாக திருவாரூர் மாவட்டத்தில் ஒளி வீசித் திகழ்கிறது, என்பதும் குறிப்பிடத் தக்கது.

புண்ணியத் தலங்களைப் போலவே சுற்றுலாத் தலங்களும் இங்கு சிறப்புடன் விளங்குகின்றன. அலையாத்திக் காடுகள், உதயமார்த்தாண்டபுரம் சரணாலயம் ஆகியவை சுற்றுலாப் பயணிகளுக்கு மட்டுமல்லாமல் ஆராய்ச்சி மாணவர்களுக்கும் பயன் அளிக்கக் கூடிய இடங்களாக விளங்குகின்றன.

ஒரு நாட்டின் சிறப்பு அதன் இயற்கைச் சிறப்பில் மட்டுமில்லை. அங்கு வாழ்ந்த சான்றோர் சிறப்பிலும் அது அடங்கி இருக்கிறது.

கர்நாடக சங்கீதத்தை உலகளவில் பெருமையடையச் செய்த தியாகராஜர், முத்துஸ்வாமி தீட்சிதர் மற்றும் சியாமா சாஸ்திரிகள் ஆகிய மும்மூர்த்திகள் இம் மாவட்டத்தில் வாழ்ந்தவர்கள்.

தங்கத் தமிழ் வளர்த்த தமிழ் முனிவராகிய தமிழ்த் தென்றல் திரு.வி.க. பிறந்த திருத்தலமும் திருவாரூர் தான். திரு.வி.க. என்பதில் உள்ள திரு, திருவாரூரைக் குறிக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

இப்படி பல துறைச் சிறப்புகளைப் பெற்ற திருவாரூர் தற்போது உங்கள் அன்புச் சகோதரியின் ஆட்சியிலும் புதிய வளர்ச்சியைப் பெற்று வருகின்றது.

இந்த மாவட்டம் பொதுவாக வேளாண்மை மாவட்டமாக விளங்கி வருகிறது. விவசாயத் தொழிலை நம்பியே இம்மாவட்டம் செயல்பட்டு வருகிறது. இம்மாவட்ட விளைநிலங்களின் பரப்பு 1,55,385 எக்டேர் ஆகும். அதாவது, சுமார் 3,77,586 ஏக்கர் ஆகும். இம் மாவட்டத்தின் மொத்தப் பரப்பளவில், அது 74 சதவிகிதம் ஆகும் என்னும் செய்தி எந்த அளவுக்கு இந்த மாவட்டம் விவசாயத்தையே நம்பி இருக்கிறது என்பதை நமக்கு விளக்குகிறது. மேலும், இம்மாவட்டத்தில் தொழில் வளர்ச்சிக்கு நல்ல வாய்ப்புக்கள் உள்ளன. கயிறு தொழிற்சாலை, நவீன அரிசி ஆலைகள், பெட்ரோலியம் மற்றும் ரசாயனத்தை அடிப்படையாகக் கொண்ட தொழில்கள், உப்புத் தொழிற் சாலைகள், இறால் பண்ணைகள் ஆகியன இம்மாவட்டத்தில் ஏற்படுத்த நல்ல வாய்ப்புகள் உள்ளன.

***"எனது இல்லத்தில், நானே மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பை ஏற்படுத்தி இருக்கிறேன். அது போல, நீங்கள் அனைவரும் உங்கள் இல்லங்களிலும், பணிபுரியும் இடங்களிலும், மழை நீர் சேகரிப்பை மேற்கொள்ள வேண்டும்"***

ஆகவே, திருவாரூர் மாவட்டம் இது போன்ற அனைத்து அம்சங்களிலும் சிறந்த வளர்ச்சியைப் பெற வேண்டும் என்று எங்களது அரசு கருதி உள்ளது. அந்த வகையில் இந்த மாவட்டத்தில் ஒட்டு மொத்த வளர்ச்சியை விரைந்து ஏற்படுத்த வேண்டும் என்ற குறிக்கோளை அடிப்படையாகக் கொண்டு இன்றைய தினம் மொத்தம் 84 கோடியே 30 இலட்சம் ரூபாய் மதிப்புடைய திட்டங்களோடு திருவாரூர் மாவட்டத்துக்கு வந்திருக்கின்றேன் என்பதைப் பெருமையோடு கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

**மக்கள் முன்னேற்றம்**

இன்று, மார்ச் 8ஆம் தேதி. உலகம் முழுவதும் இந்த நாள் 'மகளிர் தினமாக' கொண்டாடப்படுகிறது. இந்த நன்னாளில் மகளிர் மேம்பாடு, மகளிர் நலன் மற்றும் சமுதாய முன்னேற்றத்தில் மகளிர் பங்கு ஆகியவற்றைப் பற்றி உங்களுடன் ஒரு சில கருத்துக்களை நான் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

"மகளிர் சுய உதவிக் குழுக்கள்" என்ற மாபெரும் சமூகப் பொருளாதார இயக்கத்தை தமிழ்நாட்டில், 1992 – ஆம் ஆண்டு முதலமைச்சராக இருந்த போது, நான் தான் ஆரம்பித்து வைத்தேன். இதற்கு முன், பெண்கள் முன்னேற்றத்திற்கான அமைப்புகள் பல இருந்து இருக்கலாம். அமைப்புகள் என்கின்ற போதே நிர்வாக தாமதம், போதிய அளவு விரைவாகச் செயல்படாமை, ஆகிய குறைகள் இருக்கும். இதனால், மகளிர் மத்தியில் மறுமலர்ச்சியையோ, புதிய எழுச்சியையோ, அவற்றால் உண்டாக்க முடியவில்லை. ஆகவே, எங்கோ ஒரு இடத்தில் என்றோ ஒரு நாள் என்றில்லாமல் மாநிலம் தழுவிய இயக்கமாக மகளிரின் செயல்பாடுகள், அவற்றின் மூலமாக மகளிர் முன்னேற்றம் பெருமளவில் ஏற்பட வேண்டுமென்று நான் ஆசைப்பட்டேன். அதே போல், எந்தவொரு புரட்சித் திட்டமும் யாரோ ஒருவர் மூளையில் ஒரு சிந்தனையாக உதித்தது தான்! அன்று நான் இட்ட சிறிய விதை, இன்று ஆலமரமாய் வளர்ந்துள்ளது. தற்போது, தமிழ்நாட்டில், 1 இலட்சத்து 18 ஆயிரத்து 413 மகளிர் சுய உதவிக் குழுக்கள் உருவாக்கப்பட்டுள்ளன. அவற்றில் மொத்தம், 20 லட்சத்து 25 ஆயிரத்து 795 மகளிர் இணைந்து செயல்பட்டு வருகின்றனர். இவர்கள் அனைவரும் சேமித்து வைத்துள்ள தொகை மொத்தம் 266 கோடியே 22 இலட்சம் ரூபாய் ஆகும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

**25-4-2003 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சட்டமன்றப் பேரவையில் சமூகநலத் துறையின் மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்தின் இடையில் கீழ்க்கண்ட அறிவிப்பினை வெளியிட்டார்கள் :**

*"தமிழ் மொழியில், அரசமைப்புச் சட்டத்திலேயே பெண்களுக்கு ஒரு பெரிய அநீதி இழைக்கப்பட்டுள்ளது. முதல்வராக பதவிப் பிரமாணம் எடுக்கும்போது, இந்தியக் குடிமகன் ஆகிய நான் இப்பதவியை ஏற்கிறேன் என்றுதான் கூறுகிறோம். குடிமகள் ஆகிய நான் என்று கூறி பதவி ஏற்கக் கூடாதா என்று போராடி இருக்கிறேன். குடிமகன் என்று கூறித்தான் பதவி ஏற்க வேண்டும் என்பதே பெண் குலத்துக்கே இழைக்கப்பட்ட அநீதி. குடிமகள் என்ற சொல் புழக்கத்துக்கு வருவதற்காகப் பெரிய இயக்கமே நடத்தத் தீர்மானித்திருக்கிறேன்"*

மேற்கண்ட அறிவிப்பின் தொடர்பாக தமிழ் வளர்ச்சி இயக்குநரின் பரிந்துரையை அரசு கவனத்துடன் பரிசீலித்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சட்டமன்றப் பேரவையில் அறிவித்த அறிவிப்பினைச் செயல்படுத்தும் முகமாக **அரசாணை நிலை எண்.62 நாள் : 28-4-2003**இன்படி கீழ்க்கண்ட ஆணை வெளியிடப்பட்டது.

*"உறுதிமொழி ஏற்றல், அரசு ஆணைகள், கடிதங்கள், அறிக்கைகள், அரசு அலுவலகங்களின் செயல்பாடுகள், பள்ளி, கல்லூரி பாடநூல்கள், தமிழ்நாடு அரசின் வெளியீடுகள், அகராதிகள், படிவங்கள் ஆகிய அனைத்து நேர்வுகளிலும் 'Citizen' என்ற ஆங்கிலச் சொல்லுக்கு இணையாக, தமிழில் "குடிமகன்/குடிமகள்" என்றே இனி பயன்படுத்த வேண்டும். அரசு அலுவலகங்களில் ஆட்சிமொழிச் சட்டத்தைத் தீவிரமாக நிறைவேற்றுவதற்கு ஏதுவாக ஆங்கிலத்திற்கு இணையான புதிய தமிழ்ச் சொற்களை அவ்வப்போது உருவாக்கித் தருவதற்காக இந்த அரசு அமைத்துள்ள "சொல்வங்கி" அமைப்புவழி வெளிவரும் சொற்களையும் அரசு அலுவலகங்கள் தவறாமல் பயன்படுத்த வேண்டும் என்றும், மேற்கூறியவாறு பின்பற்றத் தவறுகிறவர்கள் அரசாணையை மீறிய குற்றத்திற்கான நடவடிக்கைகளுக்கு ஆளாகநேரும்."*

மகளிர் சுயஉதவிக் குழுக்களில் உள்ள பெண்களுக்கெல்லாம் நான் ஒன்றைக் கூறிக் கொள்ள விரும்புகிறேன். கடனுதவி ஏதும் கிடைக்காதா என்று பெண்கள் வங்கிகளைத் தேடிச் சென்றது அந்தக் காலம். மகளிர் சுயஉதவிக் குழுக்களில் உள்ள பெண்களைத் தேடி வந்து உங்களுடைய சேமிப்புத் தொகையை எங்கள் வங்கிகளுக்கு கொடுங்கள் என்று வங்கிகள் மகளிரைத் தேடி வருவது இந்தக் காலம். அந்த வகையில் திருவாரூர் மாவட்டத்தில் மொத்தம் 4,412 மகளிர் சுயஉதவிக் குழுக்கள், மொத்தம் 78,190 பெண்களை உறுப்பினர்களாகக் கொண்டு மொத்தம் 9 கோடியே 74 இலட்சம் ரூபாய் சேமிப்புத் தொகையுடன் வலிவோடும், பொலிவோடும் இயங்கி வருவதை நான் பாராட்டுகிறேன். இதுவரை மகளிர் சுயஉதவிக் குழுக்களில் சேராத பெண்கள் அனைவரும் அவற்றில் சேர்ந்து பயன் பெற வேண்டும் என்று இங்குள்ள மகளிரை மட்டுமல்லாமல், தமிழகத்தில் உள்ள அனைத்து மகளிரையும் நான் கேட்டுக் கொள்கிறேன். இதனையே மகளிர் தினமான இன்று மகளிர் தினச் செய்தியாக தெரிவித்துக் கொள்வதில் பெருமகிழ்ச்சி கொள்கிறேன்.

**மழை நீர் சேகரிப்பு**

தற்போது நாடெங்கும் வரலாறு காணாத வறட்சி நிலவி வருகிறது. இதற்கு தமிழ்நாடும் விதி விலக்கல்ல. குறிப்பாக நதி நீர் பங்கீட்டு பிரச்சினை, பருவ மழை பொய்த்தல், நிலத்தடி நீர் குறைந்து போதல் ஆகிய காரணங்களினால் மக்களுடைய அன்றாடப் பயன்பாட்டிற்கும், விவசாயப் பணிகளுக்கும், தண்ணீர் கிடைப்பது, நாளுக்கு நாள் குறைந்து கொண்டே போகிறது. ஒருபுறம் மரங்களை வெட்டுவதால் காடுகளின் பரப்பளவு குறைந்து வருகிறது. மறுபுறம், நிலத்தடி நீரை அதிகமாகப் பயன்படுத்துவதால் நீரும் குறைந்து கொண்டே வருகிறது. இந்நிலையில், நமது பெருகி வரும் தண்ணீர்த் தேவையைப் பூர்த்தி செய்யும் ஒரே வழி மழை நீரை சேகரிப்பது தான்! மழை நீர் சேகரிப்புக்கு எனது அரசு, மிகுந்த முன்னுரிமை அளித்து வருகின்றது. அரசு கட்டடங்கள் உட்பட அனைத்து கட்டடங்களிலும் மழை நீர் சேகரிப்பு கட்டமைப்பு ஏற்படுத்துவதை எங்கள் அரசு கட்டாயமாக்கி இருக்கின்றது. எனது இல்லத்தில், நானே மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பை ஏற்படுத்தி இருக்கிறேன். அது போல, நீங்கள் அனைவரும் உங்கள் இல்லங்களிலும், பணிபுரியும் இடங்களிலும், மழை நீர் சேகரிப்பை மேற்கொள்ள வேண்டும் என்று உங்களை அன்புடன் இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

**மன்னார்குடி குடிநீர் அபிவிருத்தி திட்டம்**

இந்த இனிய விழாவிலே திருவாரூர் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் மொத்தம் 55 கோடியே 68 இலட்சம்

ரூபாய் மதிப்புடைய பல்வேறு துறைகளைச் சார்ந்த முடிவுற்ற பணிகளைத் திறந்து வைத்துள்ளேன்.

நான் திறந்து வைத்துள்ள அனைத்துப் பணிகளையும் பற்றி எடுத்துச் சொல்ல வேண்டும் என்றால் அதற்கு நிறைய நேரம் தேவை. ஆகையால், அவற்றில் முக்கியமான சில திட்டப் பணிகளைப் பற்றி மட்டும் உங்களுக்கு எடுத்துக் கூற விரும்புகிறேன்.

இன்றைய தினம், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலமாக பல்வேறு குடிநீர் திட்டங்களின் கீழ் மொத்தம், 1,248 குடியிருப்புகளில் வசிக்கின்ற ஏறத்தாழ ஒரு இலட்சத்து 28 ஆயிரம் பேர் பயன் அடைகின்ற வகையில் மொத்தம் 12 கோடியே 18 இலட்சம் ரூபாய் செலவில் முடிக்கப்பட்டுள்ள குடிநீர் திட்டப் பணிகளை தொடங்கி வைத்து உள்ளேன். இதில் குறிப்பாக, 3 கோடியே 54 இலட்சம் ரூபாய் செலவில் 15 ஆயிரம் பேருக்கு, குடிநீர் வசதி செய்து கொடுக்கின்ற மன்னார்குடி குடிநீர் அபிவிருத்தி திட்டத்தையும் இந்த விழாவிலே திறந்து வைத்துள்ளேன்.

இந்த நேரத்தில், இன்றைய தினம் 2 கோடியே 70 இலட்சம் ரூபாய் மதிப்பில் வறட்சி நிவாரணத் திட்டத்தின் கீழ் திருவாரூர் மாவட்டத்தில், 900 பண்ணைக் குட்டைகள் அமைக்கும் பணிகளையும் துவக்கி வைத்துள்ளேன். இதன் மூலமாக, 5 இலட்சத்து 4 ஆயிரம் மனித வேலை நாட்கள் உருவாக்கப்பட்டு விவசாய தொழிலாளர்களுக்கு கூலியாக 3,600 டன் அரிசியும், 72 இலட்சம் ரூபாய் ரொக்கமாகவும் வழங்கப்பட உள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த பண்ணைக் குட்டைகளில் விவசாயிகள் மீன்களை வளர்த்து, தமது பொருளாதாரத்தை வளர்த்துக் கொள்வதோடு நீர் சேமிக்கப்படுவதன் வாயிலாக நிலத்தடி நீரின் மட்டமும் உயர வழி ஏற்படுகிறது என்பதை சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

நெடுஞ்சாலைத் துறையின் மூலமாக நபார்டு திட்டம், பகுதி II திட்டம், ஹட்கோ திட்டம் ஆகியவற்றின் கீழ் திருவாரூர் மாவட்டத்தில் 14 கோடியே 60 இலட்சம் ரூபாய் மதிப்பில் அமைக்கப்பட்டுள்ள 18 பாலங்களைத் திறந்து வைத்ததில் நான் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன். குறிப்பாக, மயிலாடுதுறை – திருத்துறைப்பூண்டி சாலையில் வாழவாய்க்கால் மீதான பாலம்; அம்மாபேட்டை– வடுவூர் சாலையின் மீதான பாலம்; மன்னார்குடி – பட்டுக்கோட்டை சாலையில், வடவாறு பிரிவு வாய்க்காலின் மீதான பாலம்; மயிலாடுதுறை –முத்துப்பேட்டை சாலையில், அடப்பாற்றின் மீதான பாலம்; திருத்துறைப்பூண்டி – பரவாக்கோட்டை சாலையில், மறக்கா கோரையாற்றின் மீதான பாலம்; வேளாங்கண்ணி – திருத்துறைப்பூண்டி சாலையில், முள்ளி ஆற்றின் மீதான பாலம்; திருவாரூர் – குடவாசல் – வலங்கைமான் சாலையின் மீதான பாலம் ஆகியவை இந்த மாவட்டத்து மக்களின் போக்குவரத்து வசதியை மேம்படுத்த பெரிதும் உதவிடும் என்பதை நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

**தொகுப்பு வீடுகள்**

திருவாரூர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் சார்பில் இன்றைய தினம் 19 கோடியே 27 இலட்சம் ரூபாய் மதிப்பில் அமைக்கப்பட்டுள்ள தொகுப்பு வீடுகள், பள்ளிக் கட்டடங்கள், கான்கிரீட் சாலைகள், சிமெண்ட் சாலைகள், மெட்டல் சாலைகள், கிராம நிர்வாக அலுவலர்களுக்கான அலுவலகக் கட்டடங்கள், தடுப்பு சுவர்கள், மகளிருக்கான ஒருங்கிணைந்த சுகாதார வளாகங்கள் மற்றும் நியாய விலைக் கடைகளுக்கான கட்டடங்கள் ஆகியவை உள்ளிட்ட மொத்தம் 1,540 பணிகளை இந்த இனிய விழாவிலே திறந்து வைத்ததில் நான் மிக்க மனநிறைவு அடைகிறேன். கிராமப் பகுதிகளில் கட்டி முடிக்கப்பட்டுள்ள இந்த கட்டமைப்பு வசதிகள் எல்லாம் இந்த மாவட்டத்து மக்களின் வாழ்க்கை உயர பெரிதும் துணை செய்யும் என்று நான் உறுதியாக நம்புகிறேன்.

கால்நடைப் பராமரிப்புத் துறையைப் பொறுத்தவரையில், திருவாரூர் மாவட்டத்தில், 13 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள இரண்டு கால்நடை மருத்துவமனைகளையும் – ஒரு கால்நடை கிளை மையத்தையும் – மக்கள் நல்வாழ்வுத் துறையின் சார்பாக, 41 இலட்சம் ரூபாய் மதிப்பில் கட்டி முடிக்கப்பட்டுள்ள, 9 ஆரம்ப சுகாதார நிலையங்களையும் – பேரூராட்சிகளில் 21 இலட்சம் ரூபாய் மதிப்பில் கட்டி முடிக்கப்பட்டுள்ள 8 ஒருங்கிணைந்த மகளிர் சுகாதார வளாகங்களையும் இன்றைய தினம் நான் திறந்து வைத்துள்ளேன். மேலும், நகராட்சிகளைப் பொறுத்த வரையில், கூத்தாநல்லூரில், ஒரு கோடியே 12 இலட்சம் ரூபாய் மதிப்பில் 23,020 பேருக்கு பயன்படக் கூடிய குடிநீர் வழங்கல் விரிவாக்கப் பணியையும் 20 இலட்சம் ரூபாய் மதிப்பில், திருவாரூரில் அமைக்கப்பட்டுள்ள இரண்டு சுகாதார மையங்களையும் இன்று நான் திறந்து வைத்துள்ளேன். மேலும் தமிழ்நாடு மின்சார வாரியம் நிறுவியுள்ள, 2 கோடியே 25 இலட்சம் ரூபாய் மதிப்புடைய கொரடாச்சேரி துணை மின் நிலையத்தையும், 1 கோடியே 26 இலட்சம் ரூபாய் மதிப்புடைய உள்ளிக்கோட்டை துணை மின் நிலையத்தையும், தமிழ்நாடு காவலர் வீட்டு வசதி கழகத்தின் மூலம் மொத்தம் 22 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள கட்டுமானப் பணிகளையும் திறந்து வைத்ததில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

**மாவட்ட ஆட்சியர் அலுவலகம்**

இன்றைய தினம் எழுச்சிமிகு இந்த விழாவிலே மொத்தம் 26 கோடியே 62 இலட்சம் ரூபாய் மதிப்பில் இந்த மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் அமைய உள்ள 1,524 திட்டப் பணிகளுக்கு அடிக்கற்களை நாட்டியதில் நான் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன். குறிப்பாக, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் சார்பாக 7 கோடியே 67 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைய உள்ள 402 பணிகளுக்கும் – மாவட்ட ஊரக மற்றும் நகர்ப்புற பகுதிகளில் மொத்தம் 6

கோடியே 8 இலட்சம் ரூபாய் மதிப்பில் அமைக்கப்படவுள்ள 197 குடிநீர் வழங்கல் பணிகளுக்கு உரிய அடிக்கற்களையும் நாட்டியுள்ளேன்.

இவை மட்டுமன்றி, திருவாரூர் மாவட்டத்திற்கான மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலக பெருந்திட்ட வளாகம், 8 கோடியே 54 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்படுவதற்கான அடிக்கற்களை நான் இந்த விழாவிலே நாட்டி உள்ளேன் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த பெருந்திட்ட வளாகத்தில், மாவட்ட ஆட்சித் தலைவருடைய குடியிருப்பு மற்றும் அலுவலகம், இதர வருவாய் அலுவலர்களுக்கான குடியிருப்புகள் மற்றும் அலுவலகங்கள்– இவை மட்டுமன்றி, 5 கோடி ரூபாய் செலவில் அமைய உள்ள பல்வேறு துறைகளை உள்ளடக்கிய அடுக்கு மாடி அலுவலகக் கட்டடம் – மற்றும் ஒரு கோடியே 69 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்படவுள்ள மாவட்ட விளையாட்டு அரங்கம், ஆகியவை அனைத்தும் இந்த பெருந்திட்ட வளாகத்தில் அமைக்கப்படும் என்பதை மகிழ்வோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் சார்பில், திருவாரூர் மற்றும் அத்தனூர், ஆகிய இரண்டு இடங்களில் 46 இலட்சம் ரூபாய் மதிப்பில் அமைய உள்ள கிடங்குகளுக்கும் – இந்த மாவட்டத்தின் 5 இடங்களில் அமைக்கப்பட இருக்கும் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகளுக்கான அலுவலக கட்டடங்களுக்கும் – எடமேலையூரில் 32 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட உள்ள ஆதிதிராவிட மாணவர்களுக்கான தங்கும் விடுதிக்கும் – மற்றும் பொது பணித்துறை கட்டடப் பிரிவு சார்பாக இந்த மாவட்டத்தின் பல்வேறு இடங்களில் 51 இலட்சம் ரூபாய் செலவில் அமையவுள்ள 8 கட்டடங்களுக்கும் அடிக்கற்களை இன்று நான் நாட்டி உள்ளேன் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

**மகளிருக்கு உதவிகள்**

இந்த இனிய விழாவிலே, ஆயிரக்கணக்கானோருக்கு பயனளிக்கும் வகையில் பல்வேறு துறைகளின் சார்பாக, நலத் திட்ட உதவிகளை நான் வழங்க இருக்கின்றேன். மொத்தம் 5,878 பயனாளிகளுக்கு 2 கோடி ரூபாய் செலவில் பல்வேறு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்குவதில் நான் உண்மையிலேயே மிக்க மகிழ்ச்சி அடைகிறேன். ஏனென்றால், இந்த உதவிகள் அனைத்தும் சமுதாயத்தின் அடித்தளத்து மக்கள், பொருளாதார ரீதியாக வாழ்வில் உயர்ந்திட வழங்கப்படுகின்ற உதவிகள் ஆகும். இவை ஏழை எளியோரின் வாழ்வில் ஏற்றத்தையும், வறுமையில் வாடுவோர் அனைவரின் வாழ்விலும் வசந்தத்தையும் கொண்டு வர பெரிதும் துணை நிற்கும் என்று நான் நம்புகிறேன். அந்த வகையில் மகளிர் சுயஉதவிக் குழுக்களில் உள்ள மொத்தம் 1,050 பெண்களுக்கு, அவர்கள் பொருளாதார நடவடிக்கைகள் மேற்கொள்ள, 63 இலட்சம் ரூபாய் நிதியுதவியும், அவர்களுக்கு வங்கிக் கடனாக 32 இலட்சம் ரூபாயும், இந்த விழாவிலே வழங்கப்படுகின்றது. உலகெங்கும் மகளிர் தினம் கொண்டாடப்படும் இந்த நன்னாளில் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு இந்த உதவிகளை வழங்குவதில் நான் மிகவும் பெருமைப்படுகிறேன்.

இந்த மாவட்ட சமூக நலத் துறையின் சார்பில், பல்வேறு திட்டங்களின் கீழ் 222 பேருக்கு, 8 இலட்சம் ரூபாய் செலவில் நலத் திட்ட உதவிகளும் – தாட்கோ நிறுவனத்தின் மூலம் 37 பேருக்கு 6 இலட்சம் ரூபாய் மதிப்பில் நலத் திட்ட உதவிகளும் – பேறுகால மகளிருக்கான உதவி திட்டத்தின் கீழ் 1,035 தாய்மார்களுக்கும் – 412 ஊனமுற்றோருக்கு 7 இலட்சம் ரூபாய் செலவில், நலத் திட்ட உதவிகளையும் – ஆக மொத்தம் 5 ஆயிரத்திற்கு மேற்பட்ட பயனாளிகளுக்கு இந்த விழாவிலே பல்வேறு நலத் திட்ட உதவிகளை வழங்குவதில் நான் மிக்க மன நிறைவு அடைகிறேன்.

இந்த உதவிகள் அனைத்தையும், நானே எனது கரங்களாலே, அனைவருக்கும் வழங்க வேண்டும் என்று விரும்பினாலும் கூட அதற்குரிய நேரம் போதாது என்று நீங்கள் அனைவரும் அறிவீர்கள். இந்த விழா மேடையிலே 15 பேருக்கு மட்டும் நானே எனது கரங்களால் நலத்திட்ட உதவிகளை வழங்க உள்ளேன். மற்ற அனைவருக்கும் இங்கேயே இந்த விழாவிலேயே, இப்போதே, அமைச்சர் பெருமக்களும், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களும், அரசு உயர் அதிகாரிகளும் இந்த நலத் திட்ட உதவிகளை வழங்கிச் சிறப்பிப்பார்கள் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த உதவிகளை எல்லாம் பெற்றுக் கொள்ள இருக்கின்ற பயனாளிகள் அனைவரும், தம்முடைய வாழ்க்கையின் உயர்விற்கு தேவையான முதல் படிக்கட்டாக இவற்றைக் கருதி, தமது உழைப்பின் மூலம் உயர்ந்து, வெற்றியை எட்ட வேண்டும் என்று உங்கள் அனைவரையும் வாழ்த்தி மகிழ்கிறேன்.

எத்தனையோ சோதனைகளின் கீழ், எங்களுடைய அரசு பல்வேறு வளர்ச்சிப் பணிகளை செயல்படுத்தி வருகிறது. இதற்கு சில இடர்பாடுகளை, சில நேரங்களில் இயற்கையும் ஏற்படுத்துகிறது; சில நேரங்களில் மனிதர்களும் ஏற்படுத்தி வருகின்றனர்! ஆனால், எத்தனை இன்னல்கள் வந்தாலும், தடைகள் ஏற்படுத்தினாலும், எதற்காகவும் நாங்கள் தயங்குவதில்லை; யாருக்காகவும் நாங்கள் அஞ்சுவதில்லை என்பதை எனது அன்புக்குரிய தமிழக மக்கள் அனைவருக்கும் கூறிக் கொண்டு இந்த விழா சீரோடும் சிறப்போடும் நடைபெறக் காரணமாக இருந்த அனைவருக்கும், குறிப்பாக மாவட்ட ஆட்சித் தலைவருக்கும், அரசு அலுவலர்களுக்கும், காவல் துறையினருக்கும், எனது மனமார்ந்த பாராட்டு தல்களைத் தெரிவித்துக் கொண்டு விடை பெறுகிறேன்.

• • •

தருமபுரி மாவட்டத்தில்

# பெண் சிசுக் கொலைக்கு முற்றுப்புள்ளி

"மங்கையராகப் பிறப்பதற்கே நல்ல
மாதவம் செய்திடல் வேண்டுமம்மா"

என்று மகளிர் புகழ்பாடிய தமிழகத்தில், இன்று பெண்களே பெண்களை அழிக்கும் கொடூர சம்பவங்கள் நடைபெறுவதை அறிந்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 1992ஆம் ஆண்டில் சமூக நலத்துறை மூலம் பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டத்தையும், தொட்டில் குழந்தை திட்டத்தையும் அறிவித்து செயல்படுத்தினார்கள்.

வரதட்சணை போன்ற சமூக, பொருளாதார காரணங்களுக்காக பெண் சிசுக்கள் அழிக்கப்பட்டாலும், தருமபுரி மாவட்டத்தில் ஏழ்மை, அறியாமை, மூடப்பழக்க வழக்கம் ஆகியவற்றால்தான் பெண் சிசுக்கள் அதிகமாக அழிக்கப்படுகிறது என்பது கணக்கெடுப்பில் தெரிய வருகிறது. மனித நேயத்திற்கு சவால்விடும் இத்தகைய குற்றச் செயலில் ஈடுபடுவோர் மீது குற்றவியல் சட்டங்களைக் கொண்டு தண்டிப்பது ஒரு புறமும், கல்வியறிவில் தமிழகத்திலேயே பின்தங்கிய மாவட்டமாக உள்ள இம்மாவட்டத்தில் பெண் கல்வியை அதிகரிக்கவும், மூடப்பழக்க வழக்கத்தை ஒழித்து விழிப்புணர்வை ஏற்படுத்தவும் அரசும், மாவட்ட நிர்வாகமும் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

நாடகங்கள், கலைநிகழ்ச்சிகள், கருத்தரங்குகள், விழிப்புணர்வுப் பேரணிகள், திரைப்படங்கள், கண்காட்சிகள் ஆகியவற்றை கிராமப் பகுதிகளில் குறிப்பாக பெண் சிசுக் கொலை அதிகமாக நடைபெறும் பென்னாகரம் நல்லம்பள்ளி, காவேரிப்பட்டினம், தருமபுரி ஆகிய பகுதிகளில் நடத்தியதன் விளைவாகவும், மகளிர் சுய உதவிக் குழுக்கள், சுகாதாரத் துறை செவிலியர்கள், தொண்டு நிறுவனத்தினர், கிராம களப் பணியாளர்கள், சத்துணவு ஊட்டச்சத்துப் பணியாளர்கள் ஆகியோரின் கூட்டு முயற்சியாலும், கண்காணிப்பாலும், தற்சமயம் பெண்சிசுக் கொலைகள் வெகுவாகக் குறைந்துள்ளது.



கர்ப்பிணித் தாய்மார்களை கணக்கெடுத்து அவர்களுக்கு அறிவுரை வழங்குதல், கண்காணித்தல், மருத்துவ வசதிகள் செய்தல் போன்ற தொடர்பணிகளும், பெண்களின் மனமாற்றத்திற்குக் காரணமாக அமைந்தது. மேலும் அரசின் பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டத்தின் மூலம் இரு பெண் குழந்தைகள் பெற்று குடும்ப நல அறுவை சிகிச்சை செய்துகொண்ட பெற்றோரின் பிள்ளைகள் பெயரில் தலா ரூ.15,200/– வங்கியில் வைப்புநிதி செய்யப்பட்டு பத்திரம் வழங்கப்படுகிறது. அக்குழந்தைக்கு 5 வயது முடிந்து பள்ளியில் சேரும் போது

**தா. மனோகரன்**
*செய்தி–மக்கள் தொடர்பு அலுவலர்*
*தருமபுரி*

மாதம் ரூ.150 படிப்பிற்கும், 23–ஆவது வயதில் திருமணத்திற்கோ, உயர்படிப்பிற்கோ பயன்படும் வகையில் முழுத்தொகையும் வட்டியுடனும் வழங்கப்படும். ஒரு பெண் குழந்தையோடு நிறுத்திவிட்டு குடும்ப நல அறுவை சிகிச்சை செய்துகொள்ளும் பெற்றோரின் பிள்ளை பெயருக்கு ரூ.22,200–/ வைப்புநிதி செய்யப்படுகிறது.

இத்திட்டத்தின்படி இம்மாவட்டத்தில் இதுவரை இரு பெண் குழந்தைகளுக்கு உரிய திட்டத்தில் 222 பெண் குழந்தைகளும், ஒரு பெண் குழந்தை திட்டத்தில் 1 பெண் குழந்தையும் மொத்தம் 223 குழந்தைகள் பயன்பெற்றுள்ளனர். 403 பெண் குழந்தைகளுக்கு இத்திட்டத்தில் பயன்பெற இம்மாவட்டத்தில் விண்ணப்பித்து பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

தொட்டில் குழந்தைகள் வரவேற்பு மையம் இம்மாவட்டத்தில் ஏப்ரல் 2001–இல் துவக்கப்பட்டு இதுவரை 300 நாட்களில் 200 குழந்தைகள் பெறப்பட்டு மரணத்தின் விளிம்பிலிருந்து அக்குழந்தைகளின் உயிர்கள் காப்பாற்றப்பட்டுள்ளது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சீரிய திட்டமான பெண் குழந்தைகள் பாதுகாப்பு திட்டம் மூலம் 223 குழந்தைகளும், தொட்டில் குழந்தைகள் திட்டம் மூலம் 201 குழந்தைகளும் காப்பாற்றப்பட்டுள்ளது. இது, இத்திட்டத்திற்கு கிடைத்த பெரிய வெற்றியாகும்.

இம்மாவட்டத்தில் இத்திட்டங்களினாலும், சிறந்த மருத்துவ சேவைகள் மற்றும் ஆலோசனைகள் மூலமும் 2000ஆம் ஆண்டில் 1,497 ஆக இருந்த சிசு மரணங்கள் 2001ஆம் ஆண்டில் 1,175 ஆகவும், 2002ஆம் ஆண்டில் 990 ஆகவும் குறைந்துள்ளது. 1999ஆம் ஆண்டில் 657 ஆக இருந்த பெண் சிசுக் கொலைகள் 2000ஆம் ஆண்டில் 439 ஆகவும், 2001ஆம் ஆண்டில் 178 ஆகவும் 2002ஆம் ஆண்டில் 39 ஆகவும் குறைந்துள்ளது. பிறப்பு விகிதம் 1999ஆம் ஆண்டில் 25.4 ஆகவும், 2000 ஆம் ஆண்டில் 23.9 ஆகவும், 2001ஆம் ஆண்டில் 21.4 ஆகவும் 2002 ஆம் ஆண்டில் 20.3 ஆகவும் குறைந்துள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

தருமபுரி மாவட்டத்தில் பெண் சிசுக் கொலைக்கு இந்த ஆண்டு முற்றுப்புள்ளி வைத்து நூறு சதவிகிதம் பெண் சிசுக் கொலையில்லா மாவட்டமாக ஆக்கிட மாவட்ட நிர்வாகம் தொடர்ந்து சிறப்பான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

★ ★ ★



*மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் தலைமைச் செயலகத்தில் 6–6–2003 அன்று மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் டாக்டர் கா.காளிமுத்து அவர்கள் எழுதிய "தொல்காப்பிய இலக்கியக் கொள்கைகளும் குறுந்தொகையும்" என்னும் நூலின் திருத்திய பதிப்பினை வெளியிட்டார்கள்.*



# தேசத்தின் தலைவிதியை பெண்களால் தான் நிர்மாணிக்க முடியும்

## மாண்புமிகு முதலமைச்சர் பெருமிதம்

இந்த நாள், பெண் குலத்தின் பெருமைக்குரிய வரலாற்றில், ஒரு திருநாள்.

27.1.2003 அன்று ஆரம்பிக்கப்பட்ட பெண் போலீஸ் கமாண்டோக்களுக்கான 12 வாரப் பயிற்சியின் நிறைவு விழா இன்று! இந்தியாவிலேயே முதல் பெண் போலீஸ் கமாண்டோ குழுமத்தின் தொடக்க விழா இன்று! இத்தகைய விழாவில் கலந்து கொள்வதில், நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன். தமிழ்நாடு ஒவ்வொரு துறையிலும் முனைப்பாக முன்னேற்றம் அடைய வேண்டும்; இந்தியாவுக்கே வழிகாட்டியாக அமைய வேண்டும்; முன்னணியில் இருக்க வேண்டும் என்று நான் எடுத்து வரும் முயற்சி ஒவ்வொரு துறையிலும் பலன் அளித்துக் கொண்டிருக்கிறது என்பதை நீங்கள் அறிவீர்கள்.

தமிழகக் காவல் துறை என்னுடைய வழிகாட்டுதலின் பேரில் இன்று இந்தியாவிலேயே முதன்மையாகத் திகழ்கிறது என்று சொன்னால், அது மிகையாகாது. காவல் துறையில் எத்தனையோ பிரிவுகளில் தமிழகம் முதன்மையாகத் திகழும் இந்த நேரத்தில் இந்தியாவிலேயே முதன் முதலாக "பெண் போலீஸ் கமாண்டோ படையை" உருவாக்கியிருப்பது என்னுடைய தலைமையில் இயங்கும் தமிழகத்தில்தான் என்பது, உண்மையாகவே பெருமைக்குரிய செய்திதான்.

### சாதனை நிகழ்த்தக் கூடியவர்கள்

பெண்களால் என்ன சாதிக்க முடியும்? என்று கேட்பவர்களைப் பார்த்து நான் கேட்க விரும்பும் ஒரே கேள்வி - பெண்களால் என்ன சாதிக்க முடியாது? என்பதுதான். சாதாரணப் பணி மட்டுமல்ல, மிகவும் கடினமான சவால்களைக் கூட சந்தித்து சோதனைகளைக் கடந்து சாதனைகளை நிகழ்த்தக் கூடியவர்கள் தமிழகப் பெண்கள்!



இந்தியத் திருநாட்டிற்கே வழிகாட்ட முடியும் என்ற உண்மையினை நமது காவல்துறையின் அதிரடிப்படை வீராங்கனைகள் இப்போது நிரூபித்துக் காட்டி இருக்கிறார்கள்.

இந்தப் பெண் கமாண்டோ பயிற்சியின் தொடக்கத்தின் போது, ஆண்களுக்கு அளிக்கப்படும் பயிற்சியில் எள்ளளவும் குறையக் கூடாது என்ற என்னுடைய ஆலோசனையை உத்தரவை முழுமையாகச் செயல்படுத்த, என்னென்ன வசதிகள் செய்ய வேண்டுமோ அவற்றை எல்லாம் செய்து தருகிறேன் என்று நான் சொல்லியிருந்தேன்.

இந்தப் பெண் போலீஸ் கமாண்டோ வீராங்கனைகளுக்கு, ஹரியானா மாநிலம் மானேசரில் உள்ள தலைசிறந்த தேசிய பாதுகாப்புப் படையில் NSG-யில் பயிற்சி பெற்ற பயிற்சியாளர்கள், பயிற்சி அளித்துள்ளார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## 10 இலட்சத்தில் குழு காப்பீட்டுத் திட்டம்

மேலும், வீராங்கனைகளுக்கு ஆண் கமாண்டோக்களுக்கு இணையாக இடர்ப்படி மாதம் ஒன்றுக்கு 1500 ரூபாய் வீதமும், Special Uniform Allowance- அதாவது சிறப்பு சீருடைப் படி ஆண்டு ஒன்றுக்கு 500 ரூபாய் வீதம் வழங்கவும், தினப்படி வழக்கமான படியைப் போல, ஒன்றரை மடங்காக வழங்கவும், சீருடை அல்லாத பிற உடைகள் வழங்கவும், 10 இலட்சம் ரூபாய் பெறுமானமுள்ள குழு காப்பீட்டுத் திட்டத்தில் பயன் அடையவும் நான் உத்தரவிட்டுள்ளேன்.

மேலும், பயிற்சிக் காலத்தில் பெண் கமாண்டோக்களுக்கு இடர்ப்பாடு இருக்கக் கூடாது என்பதற்காக அவர்களுக்கு உதவியாக 5 சமையல்காரர்களையும், 5 மகளிர் சலவையாளர் களையும், 5 மகளிர் துப்புரவுப் பணியாளர்களையும், 5 மகளிர் உதவியாளர்களையும், நியமிக்க உத்தரவிட்டேன் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

## பெண் கமாண்டோக்களுக்கு பல்வேறு சிறப்புப் பயிற்சி

இந்திய வரலாற்றில் சீருடைப் படையினர் பயிற்சியின் போது இந்தப் பெண் கமாண்டோக்களுக்கு அளிக்கப்பட்ட வசதிகளுக்கு ஈடாக வேறு யாருக்கும் வழங்கப்பட்டதில்லை என்பதை என்னால் உறுதியாகக் கூற முடியும். பயிற்சியின் போது அவர்களுக்கு கொடுக்கப்பட்ட அந்த வசதிகளுக்கு, இன்று பலன் கிடைத்துள்ளது என்பது நம் அனைவருக்கும் மகிழ்ச்சி அளிக்கக் கூடியதாகும்.

இந்தப் பயிற்சியில் பெண் கமாண்டோக்களுக்கு யோகாசனம் முதல் வெடிகுண்டு கண்டுபிடிப்புப் பயிற்சி வரை பல்வேறு சிறப்புப் பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன. ஆண் கமாண்டோக்களுக்கு கொடுக்கும் பயிற்சியை விட கூடுதலாக பாரா மிதத்தல், - அதாவது, PARA Sailing குதிரையேற்றம், படகு ஓட்டுதல், கடற்கரை மணலில் ஓடுதல், செங்குத்தான குன்றுகளில் கயிற்றின் உதவியுடன் இறங்குதல், போன்ற பயிற்சிகள் சிறப்பாக அளிக்கப்பட்டு இருக்கின்றன என்பதை நான் பெருமிதத்தோடு சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

பயிற்சியின்போது, கடைசி 3 வாரங்களில் ஒவ்வொரு நாளும், 20 கி.மீ. ஓடி இருப்பது உண்மையிலேயே பாராட்டப்பட வேண்டிய ஒன்றாகும். அதேபோன்று, பயிற்சியின் ஒரு பகுதியாக 3ஆவது மாதத்தில் 3 முழு நாட்களும், தொடர் ஓட்டமாக எங்கேயும் நிற்காமல், ஓய்வு எடுக்காமல், இரவு பகல், மழை வெயில் எனப் பாராமல், கன்னியாகுமரியிலிருந்து சென்னை வரை சுமார் 700 கி.மீ. தூரத்தை 72 மணி நேரத்தில் கடந்து வந்தது, ஒரு மிகப் பெரிய சாதனை என்பதை யாரும் மறுக்க முடியாது.

## பெண்கள் எதையும் செய்து முடிப்பார்கள்

இந்த 3 நாட்களில், சற்று ஏறக்குறைய 1 இலட்சம் வாகனங்கள் இவர்களைக் கடந்து சென்ற போதும், ஓட்டம் எந்த

நேரத்திலும் நிறுத்தப்படாமலும், வாகனப் போக்குவரத்துக்குத் தடை ஏற்படாமலும், இந்த ஓட்டம் ஓடி முடிக்கப்பட்டது, இன்னும் ஒரு சாதனையாகும். இந்தியாவிலேயே இதுவரை இராணுவம், காவல்துறை அல்லது விளையாட்டுத் துறை சார்ந்த பெண்களோ, பெண் அமைப்புகளோ, 700 கி.மீ. தூரத்தை 72 மணி நேரத்தில் தொடர் ஓட்டமாக ஓடி முடித்ததில்லை என்பது மட்டுமல்ல அவ்வாறு ஓடுவதற்காக முயற்சி கூட இதுவரை எடுக்கப்பட்டது இல்லை என்பதையும் நான் பெருமையுடன் குறிப்பிட விரும்புகிறேன். இந்த அரும் சாதனையை நிகழ்த்திய தமிழக பெண் போலீஸ் கமாண்டோக்களை நான் மனதாரப் பாராட்டுகிறேன். பெண்களுக்கு வாய்ப்பு அளித்தால் எதையும் செய்து முடிப்பார்கள் என்று இதிலிருந்து தெள்ளத் தெளிவாகத் தெரிகின்றது.

என்னுடைய தலைமையில் இயங்கும் அரசு பெண்களுக்காக பெண்களின் முன்னேற்றத்திற்காக என்னென்ன செய்யலாம் என்று சிந்தித்துச் செயல்பட்டு வருகிறது. பெண்களுக்கு சுயஉதவிக் குழுக்கள் மூலம் வேலைவாய்ப்பு ஏற்படுத்தியது; அதிக அளவில் காவல்துறையில் பெண்களைப் பணியமர்த்தியது; பெண் சிசுக்கொலைத் தடுப்புச் சட்டம்; தொட்டில் குழந்தைத் திட்டம்; குழந்தைகள் பெயருக்கு முன்னால், தாயின் பெயரின் முதல் எழுத்தை அதாவது 'Initial' - போட்டுக் கொள்ளும் அரசாணை; Citizen என்று குறிப்பிட வேண்டிய இடங்களில், "குடிமகள்" என்ற சொல்லைப் பயன்படுத்த பெண்களுக்கு உரிமை என்று 100 ஆண்டுகளில் நடந்தேறாத மாற்றங்களை, உயர்வுகளை, நான் பெண் இனத்திற்கு அளித்திருக்கிறேன் என்பதில் பெருமகிழ்ச்சி கொள்கிறேன்.

## காவல்துறை வரலாற்றில் புதிய தொடக்கம்

காவல் துறையின் வரலாற்றில் ஒரு புதிய தொடக்கமாகவும், பெண்களுக்கு நியாயம் கிடைக்கச் செய்வதில், ஒரு முன்னோடித் திட்டமாகவும், அனைத்து மகளிர் காவல் நிலையத்தை முதன்முதலாக நான் 1992ஆம் ஆண்டில் தொடங்கி வைத்தேன். இந்த அனைத்து மகளிர் காவல் நிலையத்திற்கு கிடைத்த வெற்றி, பாராட்டு ஆகியவை உண்டாக்கிய ஊக்கத்தினால் 1996ஆம் ஆண்டுக்குள் 58 அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் உருவாக்கப்பட்டன. அடுத்து வந்த தி.மு.க. ஆட்சியில், 1996-லிருந்து 2001 வரை 5 ஆண்டுகளில் புதியதாக மகளிர் காவல் நிலையம் ஒன்று கூட தொடங்கப்படவில்லை என்பதோடு ஏற்கெனவே இருந்த எல்லா அனைத்து மகளிர் காவல் நிலையங்களும் சீர்கேட்டுக்கு ஆளாக்கப்பட்டு எந்த நோக்கங்களுக்காக அவை தொடங்கப்பட்டனவோ அந்தச் சீரிய நோக்கங்களை செயல்படுத்த இயலாத நிலையில் அவை இருந்தன. மீண்டும் ஆட்சிப் பொறுப்பை 2001 மே மாதத்தில் நான் ஏற்றுக் கொண்ட பிறகு தமிழகத்தில் உள்ள 188 காவல் உட்கோட்டங்களில் அனைத்து மகளிர் காவல் நிலையங்களை ஏற்படுத்த நான் ஆணையிட்டேன்.

## இந்தியா முழுமைக்குமான சாதனை

இன்று தமிழகம் முழுவதும் மொத்தம் 148 அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றன. மீதமுள்ள 40 அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் இந்த ஆண்டு சுமார் 7 கோடியே 94 இலட்சம் ரூபாய் செலவில், ஏற்படுத்தப்பட உள்ளன என்பதையும் காவல் துறை வரலாற்றில், இந்தியா முழுமைக்குமான ஒரு சாதனையாக இந்த முயற்சி அமைகிறது என்பதையும் பெருமகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.



காவல்துறையினரின் குறை தீர்க்கும் நிகழ்ச்சியை நான் கடந்த 2002இல், ஜூலை மற்றும் ஆகஸ்ட் மாதங்களில், 5 நாட்கள் நடத்தினேன். இவ்வாறு, காவலர் குறைதீர்க்கும் நிகழ்ச்சியை, முதலமைச்சரே நடத்தி, பல்லாயிரக்கணக்கான ஆண் மற்றும் பெண் காவலர்களுடைய குறைகளைக் கேட்டறிந்து அவற்றைக் களைந்திருப்பது, இந்திய வரலாற்றிலேயே இது தான் முதல் தடவை என்பதையும் நான் பெருமிதத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

அவ்வாறு குறை கேட்ட போது, மகளிர் காவலர்கள், சிறிய குழந்தைகளை வீட்டிலேயே விட்டுவிட்டு, பணிக்குச் செல்வதால் ஏற்படும் துன்பங்களைப் பற்றிச் சொன்னார்கள்.

மகளிர் காவலர்கள் துன்பப்படக் கூடாது என்பதற்காக அவர்களுடைய குழந்தைகளைப் பேணுவதற்காக "காவலர் குழந்தைகள் நலக் காப்பகம்" என்னும் சிறந்த திட்டத்தை நான் தொடங்கி வைத்திருக்கிறேன்.

## பெண் காவலர்களுக்கு விருந்தினர் இல்லம்

மேலும், மாநிலம் முழுவதும் பெண் காவல் பணியாளர்களுக்கு 114 அலுவலகங்களில் அடிப்படை வசதிகளுடன் கூடிய ஓய்வறைகள் அமைக்கப்பட உள்ளன என்பதையும்; வெளி மாவட்டங்களிலிருந்து சென்னைக்கு வரும், பெண் காவல் பணியாளர்கள் தங்குவதற்காக ஒரு விருந்தினர் இல்லம் கட்டவும் நான் ஆணையிட்டு இருக்கிறேன் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

அது மட்டுமல்லாமல், பெண் தலைமைக் காவலர்கள், உதவி ஆய்வாளர் தேர்வுக்காக குறைந்தபட்சம் 8 ஆண்டுகள் தலைமைக் காவலராகப் பணியாற்றி இருத்தல் வேண்டும் என்பதனை மாற்றி, 4 ஆண்டுகளுக்கு அவ்வாறு பணியாற்றி இருந்தால் போதுமானது என்று கொள்கை முடிவு எடுத்து, ஆணை பிறப்பித்திருக்கிறேன்.

ஆண் காவலர்களுக்கு வழங்கப்படுவதைப் போலவே பெண் காவலர்களுக்கும், ஆயுதங்களையும் பிற கருவிகளையும் வழங்குவதற்கு நான் ஆணையிட்டிருக்கிறேன்.

இவ்வாறு, காவல் துறையில் பெண்களுக்கு சிறப்பு அளிக்கும் முயற்சிகளுக்கு முன்னுரிமை அளித்த நான் இப்போது அந்த முயற்சிகளுக்கு முத்திரை பதிக்கும் விதமாக பெண் கமாண்டோ படையை உருவாக்க நடவடிக்கை எடுத்திருக்கிறேன்.

## முத்திரை பதிக்கும் பெண் கமாண்டோக்கள்

இன்று பெண் கமாண்டோக்கள் செய்து காட்ட உள்ள பல்வேறு சாகசச் செயல்கள் உங்களை மெய்சிலிர்க்க வைக்கும் என்பது உறுதி. இந்திய வரலாற்றிலே தலைவர்களின் சிறப்பு வாகன அணிவகுப்பில், 9 பெண் கமாண்டோக்கள், மோட்டார் சைக்கிளில் முன்னே செல்ல, 9 பெண் கமாண்டோ, குதிரைப் படை வீராங்கனைகள் புடைசூழ அணிவகுத்து வந்தது, முதன் முதலாக, இன்று தான் நடந்திருக்கிறது என்பதை அறிவதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

குதிரையின் அருகிலே செல்லக் கூட அஞ்சுபவர்கள் மத்தியில், இன்று குதிரை அணி வகுப்பில் கலந்து கொண்டது மட்டுமல்ல குதிரை மேல் பல சாகசங்களை வீராங்கனைகள் செய்து காட்ட இருப்பது பெருமைக்குரியது.

"அஞ்சுவது யாதொன்றுமில்லை, அஞ்ச வருவதும் இல்லை" என்பது தான் என்னுடைய தனிப்பட்ட motto என்னைப் பற்றி நானே சொல்ல வேண்டும் என்றால் இதைத்தான் சொல்வேன். "அஞ்சுவது யாதொன்றுமில்லை, அஞ்ச வருவதும் இல்லை" என்னும் தேவாரத் திருப்பாடலுக்கு ஏற்ப இன்று அச்சத்தைத் தவிர்த்து திறமையை வெளிக்காட்டும் பெண் போலீஸ் கமாண்டோக்கள் எனது பாராட்டுக்குரியவர்கள். ஒரு முழு அளவிலான அணிவகுப்பு மரியாதையை அதுவும், ஏ.கே.47 போன்ற அதிநவீன ஆயுதங்களைக் கையில் ஏந்தி அணிவகுப்பு மரியாதை செய்து காட்டியது, இந்தியாவிலேயே முதன் முதலாக, இந்தப் பெண் கமாண்டோக்கள்தான்!

இந்த சிறப்பான பயிற்சிக்கும், அவர்களுடைய செயல்திறனுக்கும் காரணம் பெண்களின் முன்னேற்றத்தில் நானும் எனது தலைமையின் கீழ் செயல்படும் அரசும் கொண்டுள்ள தெளிவான சிந்தனை, தீர்க்கமான முடிவு, உறுதியான கொள்கை, குறுக்கீடு இல்லாத செயல்பாடு ஆகியவையே என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.





## பெண்கள் என்றாலே புரட்சித் தோற்றம் நினைவுக்கு வரும்

ஏட்டிலும், எழுத்திலும் மட்டும் பாராட்டப்பட்ட பெண்ணினம் இன்று உண்மையிலேயே புத்துயிர் பெற்று, புதுத் தகுதி பெற்றுள்ளது.

"மின்னல் ஒளியே... விலை மதியா ரத்தினமே...
கன்னல் பிழிந்து கலந்த கனிச்சாறே...
மூடப்பழக்கத்தின் முடை நாற்றம் வீசுகின்ற
காடு மணக்க வந்த கற்பூரப் பெட்டகமே...."

- என்று பாட்டிலே பாடிவைத்த காலம் போய், உண்மையிலேயே இந்த நாடே போற்றும் வண்ணம் இன்று பெண்கள், கமாண்டோக்களாக தங்கள் திறமையைப் பறைசாற்றிக் கொண்டிருக்கிறார்கள்; அத்தோடு வீரத்தை வெளிப்படுத்திக் கொண்டு இருக்கிறார்கள்.

ஒரு காலத்தில் பெண்கள் என்றதும் அவர்களது அழகு மட்டுமே நினைவுக்கு வந்தது! பின்பு பெண்கள் என்றதும், அவர்களது புதுமைப் பண்பு மட்டுமே நினைவுக்கு வந்தது! இன்று பெண்கள் என்றதும், அவர்களது புரட்சித் தோற்றமே நினைவுக்கு வருகிறது! எத்தகைய பாராட்டத்தக்க பரிணாம வளர்ச்சி!

## பாரதி கண்ட புதுமைப் பெண்கள்

பெண்கள், பாரதி கண்ட புதுமைப் பெண்களாக மட்டும் இருந்தால் போதாது. அந்தப் புதுமைப் பெண்கள், புரட்சிப் பெண்களாகவும் ஆக வேண்டும் என்ற என்னுடைய அவாவை, இன்று அதிரடிப் படை வீராங்கனைகள் ஈடேற்றியிருக்கிறார்கள் என்று சொன்னால், அது மிகையாகாது.

தமிழகத்தில் ஒரு முழு அளவிலான பெண் கமாண்டோ குழுமம்; இன்று ஆரம்பிக்கப்பட்டு இருக்கிறது. இந்தியாவிலேயே முதன் முதலாக பெண் போலீஸ் கமாண்டோ குழுமத்தைத் தொடங்கி வைப்பதில் நான் பெருமிதம் கொள்கிறேன். இப்போது பயிற்சி முடித்த 130 பேருடன் ஏற்கெனவே சோதனை முறையாகப் பயிற்சி பெற்று, இவர்களுக்கு உறுதுணையாக இருந்த 21 பெண் கமாண்டோக்களையும் நான் பாராட்டுகிறேன்.

## பெண் கமாண்டோ வீராங்கனைக்குப் பரிசு



இந்தப் பயிற்சியில் அனைத்துப் போட்டிகளிலும் முதன்மையாக வந்த, கலைச் செல்வி என்ற பெண் கமாண்டோ வீராங்கனையை நான் மனதாரப் பாராட்டுகிறேன். பரிசு பெற்ற அனைத்துப் பெண் கமாண்டோ வீராங்கனைகளையும், வெற்றிகரமாகப் பயிற்சி முடித்த மற்ற பெண் கமாண்டோ வீராங்கனைகள் அனைவரையும் அவர்களுக்கு மிகச்சிறப்பான பயிற்சி அளித்த பயிற்சிக் குழுவினரையும், இந்தப் பயிற்சியைச் சிறந்த முறையில் நடத்தி முடித்த, காவல் துறை தலைமை இயக்குநரையும் நான் மனதாரப் பாராட்டுகிறேன்.

பெண் கமாண்டோ வீராங்கனைகள், தங்களது பணிகள் அனைத்திலும் வெற்றி பெற எனது இதயம் கனிந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## தேசத்தின் தலைவிதியை நிர்மாணிக்க முடியும்

பெண்களின் தலை விதியைப் பெண்களே மிகச் சிறந்த முறையில், தீர்மானிக்க முடியும். "women will out do their own destinies much better too, than men can ever do for them" என்று சுவாமி விவேகானந்தர் கூறி இருக்கிறார்.

தங்கள் தலைவிதியை மட்டுமல்ல; தங்கள் தேசத்தின் தலைவிதியையும் பெண்களே நிர்மாணிக்க முடியும் என்பது நிரூபணம் ஆகிவிட்ட காலம் இது.

அந்தச் சாதனை மகுடத்தில், இன்னும் ஒரு மாணிக்கம் தான், இந்தப் பெண் கமாண்டோக்களின் வெற்றி! இந்த வெற்றியை நாளை சரித்திரம் சொல்லும்.



- மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் 2.6.2003 அன்று நடைபெற்ற பெண் போலீஸ் கமாண்டோக்களுக்கான பயிற்சியின் நிறைவு விழா மற்றும் இந்தியாவிலேயே முதல் பெண் போலீஸ் கமாண்டோ குழுமத்தின் தொடக்க விழாவில் ஆற்றிய உரை.

# படமும் செய்தியும்



பசுமைத் திட்டத்தைச் சிறப்பாக
செயல்படுத்தி வரும்
மாவட்ட ஆட்சியர்களுக்கு
மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
அவர்கள்
5–6–2003 அன்று
தலைமைச் செயலகத்தில்
பசுமை விருதுகளை வழங்கி
பாராட்டுத் தெரிவித்தார்கள்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள்
9–6–2003 அன்று சென்னை முகப்பேர் மேற்கு ஜெ. ஜெ. நகரில்
இராகமாலிகா என்னும் பெயரில் அமைந்துள்ள கடலோரக்காவல்
படையினருக்கான குடியிருப்பை திறந்து வைத்தார்கள்.






பத்தாம் வகுப்பு மற்றும் பன்னிரெண்டாம்
வகுப்புத் தேர்வுகளில் அதிக மதிப்பெண்கள்
பெற்ற மாணவ மாணவிகளுக்கு
மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள்
9–6–2003 அன்று
தலைமைச் செயலகத்தில்
ரொக்கப்பரிசும், பாராட்டுச் சான்றிதழும்
வழங்கினார்கள்.





மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள்
5–6–2003 அன்று
தலைமைச் செயலகத்தில்
'வனத்துறையில் தகவல்
தொழில்நுட்பத்தின் முயற்சி'
என்ற நூலினை வெளியிட்டார்கள்.
இதன் முதல் பிரதியை
மாண்புமிகு வனத்துறை அமைச்சர்
திரு.வைத்திலிங்கம் அவர்கள்
பெற்றுக் கொண்டார்.



கோவை வனப் பகுதியில் பணியில்
இருந்தபோது மரணமடைந்த வனப்
பாதுகாவலர் சீகனின் ஐந்து வயது மகள்
லட்சுமியிடம் முதலமைச்சர் பொது நிவாரண
நிதியிலிருந்து ரூ.4 இலட்சத்திற்கான
காசோலையை
மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள்
5–6–2003 அன்று
தலைமைச் செயலகத்தில் வழங்கினார்கள்.






மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 9–6–2003 அன்று, சென்னை கிரீன்வேஸ் சாலை, "பூம்பொழில்" வளாகத்திலுள்ள தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்தில் அமைந்துள்ள சிறப்பு சட்டப் பள்ளிக்கான அனைத்து வசதிகளுடன் கூடிய நூலகம், கருத்தரங்குக் கூடம், வகுப்பறைகள் முதலான பல்வேறு வசதிகளுடன் அமையவுள்ள புதிய கட்டடத்திற்கு அடிக்கல் நாட்டினார்கள்.

நவீன கட்டடக் கலை அழகிலும் மற்றும் சர்வதேச அளவில் கல்வித்துறையில் மரியாதையும் பெற்றுத்தரும் வகையில் அமையவுள்ள அண்ணா பல்கலைக்கழகத்தின் புதிய வெள்ளிவிழா நிருவாக வளாக கட்டடத்திற்கு 9-6-2003 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் அடிக்கல் நாட்டி சிறப்புரையாற்றினார்கள்.














மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் 5-6-2003 அன்று தலைமைச் செயலகத்தில், பல்வேறு கால கட்டங்களில் எடுக்கப்படும் செயற்கைக் கோள் வரைபடங்களைக் கொண்டு வனப்பரப்பில் ஏற்படும் மாற்றங்களை அவை எந்த இடத்தில் நிகழ்ந்துள்ளன என கண்டறியும் தரவு மையத்தையும் இணைய தளத்தையும் தொடங்கி வைத்தார்கள்.

# தமிழகத்தை முதன்மை மாநிலமாக்கும் இலட்சியத்தை அடைவேன்

– மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள்



"சீரும் சிறப்புமாக திண்டுக்கல் மாநகரில் நடைபெறும், இந்த இனிய விழாவில் கலந்து கொண்டு, எனது அன்பிற்கும் பாசத்திற்கும் உரிய, உங்கள் அனைவரையும் காண்பதிலும், உங்களுடன் எனது எண்ணங்களைப் பகிர்ந்து கொள்வதிலும், நிறைவேற்றப் பட்ட திட்டங்களைத் திறந்து வைத்து, புதிய பணிகளுக்கு அடிக்கற்கள் நாட்டி, நலத்திட்ட உதவிகளை வழங்குவதிலும், நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன். திண்டுக்கல் என்றதும், மலை வாழைப்பழமும், கொடைக்கானல் குளிர்ச்சியும், பழனி பஞ்சாமிர்தமும் நினைவுக்கு வரும். வாழைப் பழம் இனியது; குளிர்ந்த காற்று இனியது; பஞ்சாமிர்தம் இனியது. இப்படி எல்லாமே இனிமையாக விளங்கும் இடத்தில் வசிக்கும் நீங்கள், இனியவர்களாக இருப்பதில் எந்த வியப்பும் இல்லை.

*(திண்டுக்கல் மாவட்டத்தில் 7.3.2003 அன்று நடைபெற்ற வளர்ச்சித் திட்டப் பணிகள் திறப்பு விழா மற்றும் புதிய திட்டப் பணிகள் அடிக்கல் நாட்டுவிழா, அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஆற்றிய உரை)*

திண்டுக்கல் – இந்தப் பெயரே விசித்திரமானது. 'திண்டு' என்பது மென்மையாக இருக்கும். 'கல்' என்பது வன்மையாக இருக்கும். ஆகவே, மென்மையும், வன்மையும், சேர்ந்தது தான் திண்டுக்கல். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் கூட அப்படித்தான். அது, பாசத்தோடு பழகுவோர்க்கு பால் போன்றது. ஆனால், பகைவர்க்கு வேல் போன்றது. உங்கள் அன்புச் சகோதரியாகிய நான் கூட அப்படித்தான். என்னிடம் தண்ணீரின் தன்மையும் உண்டு; செந்தீயின் வெம்மையும் உண்டு.

இது முரண்பாடு அல்ல – யாரிடத்தில் எப்படி இருக்க வேண்டுமோ, அப்படி இருக்கக் கூடிய ஆற்றல்! அண்மையில் நடந்த அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகப் பொதுக்குழுவில் கூட நான் குறிப்பிட்டேன்: "நான் மிகவும் அமைதியானவள். என்னை கோபக்காரி என்று சொல்வது உண்டு. அது உண்மை அல்ல. உண்மையாகவே நான் மிகவும் அமைதியான சுபாவம் படைத்தவள்".

"ஆனால், என்னை அழிக்க ஒருவர் வருகின்ற போது, என்னை தாக்க ஒருவர் வருகின்ற போது, என் மீது ஒரு படையே, பழி வாங்கும் படலத்தையே கட்டவிழ்த்து விடும் போது என்னை தற்காத்துக் கொள்ள வேண்டாமா? அப்படி தற்காத்துக் கொள்ளும் முயற்சியில், அவர்கள் ஒரு அடி போட்டால், பதிலுக்கு பத்து அடி போடுவேன்" என்று நான் என்னைப் பற்றி கூறி உள்ளேன். திண்டுக்கல் என்ற பெயரைக் கேட்டவுடனேயே, இப்படி நமக்குள் எத்தனையோ சிந்தனைகள் தோன்றுகின்றன. 'திண்டு' போன்ற 'கல்' அமைப்பு உள்ளதால், "திண்டுக்கல்" என அழைக்கப்பட்டது என்று ஆவணங்கள் கூறுகின்றன. இன்னொரு வகையில் கூட, திண்டுக்கல்லுக்கும், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும், நெருங்கிய தொடர்பு உண்டு.

இதய தெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைத் தொடங்கிய பிறகு, முதன் முதலாக தனது வேட்பாளரை நிறுத்தியது இங்கு தான்.

அப்போது திண்டுக்கல் மக்களாகிய நீங்கள், என்ன செய்தீர்கள்? அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு 'திண்டை'த் தந்தீர்கள்! எதிர்த்து நின்ற தி.மு.க.விற்கு 'கல்' லைத் தந்தீர்கள்! எனவே, திண்டுக்கல் என்றைக்கும், எங்கள் அன்பிற்குரிய திண்டுக்கல் தான்!

திண்டுக்கல் மாவட்டம், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களால் உருவாக்கப்பட்ட மாவட்டம் என்பது, நமக்கெல்லாம் மகிழ்ச்சி அளிக்கும் மற்றொரு செய்தி.

### வீரத்தின் விளைநிலம்

**6,267** சதுர கிலோ மீட்டர் பரப்பில், ஏறத்தாழ **20** இலட்சம் மக்களைக் கொண்ட மாவட்டம், திண்டுக்கல் மாவட்டம். ஒரு மாவட்டத்தைச் சுற்றி, எட்டு மாவட்டங்களும், ஒரு மாநிலமும் எல்லையாக அமைந்திருக்கிறது என்று சொன்னால், நிச்சயம் அது திண்டுக்கல் மாவட்டம் மட்டுமாகவே இருக்கும்.

திண்டுக்கல்லின் வரலாறு என்பது, அதன் கோட்டையின் வரலாறு என்றே கூறிவிடலாம். திண்டுக்கல்லின் வரலாறு, அதன் கோட்டையைச் சுற்றியே அமைந்திருக்கிறது. திண்டுக்கல் வரலாற்றுடன் தொடர்புடைய ஒரு பெயரை, நாம் மறந்துவிட முடியாது. சிவகங்கைச் சீமையின் அரசர், முத்துவடுகநாதர் பெரிய உடையாத் தேவர் மறைந்த பிறகு, அவரது மனைவி வீரமங்கை வேலுநாச்சியார், திண்டுக்கல் வந்து, ஹைதர் அலியின் ஆதரவு பெற்று, திண்டுக்கல் கோட்டையிலும், விருப்பாச்சிக் கோட்டையிலும், எட்டு ஆண்டுகள் வாழ்ந்து வந்தார். திப்பு சுல்தான் அளித்த ஆயுத உதவியுடன், 1780–இல் படை நடத்தி, கோச்சடையில் நவாபின் படைகளையும், மானாமதுரையில் ஆங்கிலேயர்களின் படையையும் ஓட ஓட விரட்டி, தனது கணவர் இறந்த பொழுது எடுத்துக் கொண்ட சபதத்தின்படி, சிவகங்கைச் சீமையை மீட்டு, வீர சுதந்திரம் படைத்த வரலாறு, இன்று நினைத்தாலும், நமக்கெல்லாம் வீர உணர்வை ஊட்டுகின்றது.

ஜான்சி ராணி வடக்கே தோன்றி, வரலாறு படைப்பதற்கு முன்பே தெற்கே வரலாறு படைத்தவர் வேலு நாச்சியார் என்பதை அறிந்து, வீரத்தின் விளைநிலம் இந்த மண் என்று நாம் நெஞ்சம் பூரிக்கிறோம்.


**பள்ளி உதவி ஆசிரியர்கள் நியமனம் குறித்த தகவல்**



*அரசு உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகள் மற்றும் சென்னை மாநகராட்சி உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகளில் காலியாக உள்ள தெலுங்கு, மலையாளம், கன்னடம், உருது சிறுபான்மை மொழிகளுக்கான மொழி ஆசிரியர்கள் மற்றும் பள்ளி உதவி ஆசிரியர்கள் பணியிடங்களை நிரப்புவதற்கான போட்டி எழுத்துத் தேர்வு ஜூலை 2003இல் ஆசிரியர் தேர்வு வாரியத்தால் நடத்தப்பட உள்ளது.*

*காலிப் பணியிட விவரம் மற்றும் விண்ணப்பிக்கும் முறை சார்ந்த விவரங்கள் அறிய பள்ளிக் கல்வி இயக்குநர் வளாகம், கல்லூரி சாலை சென்னை–6இல் அமைந்துள்ள ஆசிரியர் தேர்வு வாரியத்தின் தகவல் பலகையிலும், ஆசிரியர் தேர்வு வாரியம் – இணையதளம் trb.tn.nic.in மூலமும் அறியலாம்.*

*மேலும் விவரங்களுக்கு நேரில் அணுகவும்.*

*தொலைபேசி எண்கள் : 28229688, 28272455 ஆகியவற்றில் தொடர்பு கொள்ளவும்.*

*மின் அஞ்சல் : trb @ tn.nic.in*

அந்தத் தியாக வரலாற்றின் பிற்காலப் பிரதிநிதி தான், வத்தலகுண்டு தந்த வீரர், சுப்பிரமணிய சிவா. இன்றைக்கு யார் யாரையோ தளபதி என்கிறார்கள். தமிழ் நாடெங்கும் சுற்றிச் சுழன்று, சுதந்திரப் போராட்டத்திற்கு இளைஞர்களைத் தயார் படுத்திய, சுதந்திர போராட்டத் தளபதி, வீரர் சுப்பிரமணிய சிவா அவர்கள். அவர் பிறந்த வத்தலகுண்டு நமது வணக்கத்துக்கு உரியது.

'பயிரை வளர்ப்பது கழனி – நம் உயிரை வளர்ப்பது பழநி' என்று கவிஞர்கள் பாடுகின்றபடி, அறுபடை வீடுகளில் ஒரு அற்புதப் படை வீடு பழநி! அந்தப் பழநியைத் தன்னகத்தே கொண்டதால், முருக பக்தர்களுக்கும் இனிய மாவட்டம், திண்டுக்கல் மாவட்டம்! முருகன் என்றதும் எனக்குத் திருப்புகழும், அருணகிரிநாதரும் நினைவுக்கு வருகிறார்கள்!

முருகன் அருள் பெற, மற்ற மொழிகளால் வாழ்த்த வேண்டும். ஆனால், தமிழ் மொழியில் திட்டினால் கூட, முருகப் பெருமான் அருள் புரிவாராம்.

அருணகிரி நாதர் கூறுகிறார் –

'மொய்தார் அணிகுழல்
வள்ளியை வேட்டவன்
முத்தமிழால் வைதாரையும்
அங்கு வாழ வைப்பான்'

இந்த அருமையான கந்தர் அலங்கார வரிகள், எந்த மொழியால் இறைவன் அருளை எளிதில் பெறலாம் என்பதை விளக்குகின்றன.

பழநி மலைப்பாதைக்கு மூன்று விஞ்ச் (winch)–கள் தற்போது இயக்கப்பட்டு வருகின்றன. இந்த விஞ்ச் மேலே செல்ல எட்டு நிமிடங்கள் எடுத்துக் கொள்கிறது. இதன் மூலம் மணிக்கு சுமார் 220 பக்தர்கள் வீதம், நாள் ஒன்றுக்கு 3,000 பக்தர்கள் மட்டும் மேலே செல்லவும், கீழே வரவும் முடியும். பண்டிகைக் காலங்களில், பக்தர்களுக்கு ஏற்படும் அசௌகரியங்களைத் தவிர்க்கும் வகையில், "கேபிள் கார்" திட்டத்தினை, உங்கள் அன்புச் சகோதரியின் அரசு, ஐந்து கோடி ரூபாய் மதிப்பில், செயல்படுத்த ஆணை வழங்கி, அதன் ஆரம்பகட்டப் பணிகள், இன்று என்னால் தொடங்கி வைக்கப்பட்டுள்ளன. இந்த கேபிள் காரில், 4 நபர்கள் அமரும் வசதியுடன் கூடிய, 20 பெட்டிகள் இருக்கும். இப்பெட்டி ஒவ்வொன்றும் கீழிருந்து மேல் செல்ல, சுமார் ஒன்றேகால் நிமிடங்களே ஆகும்.

மணிக்கு 800 பக்தர்கள் வீதம், நாளொன்றுக்கு 11,200 பக்தர்கள் மேலே மற்றும் கீழே சென்று வர இயலும். 2004–ம் ஆண்டு ஜனவரி மாதம், இத்திட்டம் முடிவடைந்து, பக்தர்களின் உபயோகத்திற்கு கொண்டு வரப்படும் என்பதை, மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

### மாசு அகற்றும் பணி

"ஏழைகளின் ஊட்டி" என அழைக்கப்படும் மலைவாழ் இடம், கொடைக்கானல். 33 ஆயிரம் மக்கள் தொகையைக் கொண்ட கொடைக்கானல் நகரில், 55 ஏக்கர் பரப்பளவில், அமைந்துள்ள கொடைக்கானல் ஏரி, சுற்றுலாப் பயணிகளை மிகவும் கவரும் ஒரு அம்சமாகும். கண்கவர் கொடைக் கானல் ஏரியின் நீர்ப்பிடிப்புப் பகுதி, கழிவுநீர் வந்து சேரும் இடமாக தற்போது உள்ளது. ஏரியில் மாசு அதிகரித்து, ஏரி நீர் மோசமான நிலையை அடைந்து உள்ளது. எனவே, ஏரியில் கழிவு கலக்காமல் இருக்கவும், மாசு அடைந்த ஏரியை, முன் போல் தெளிந்த நிலைக்கு கொண்டுவரவும் நடவடிக்கை எடுக்க, கொடைக்கானல் ஏரி பாதுகாப்புப் பணிக்கு, 10 கோடியே 33 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இதன் மூலம், மாசு தடுப்புப் பணி, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் சார்பிலும், ஏரியில் மாசு அகற்றும் பணி, பொதுப் பணித்துறையின் வாயிலாகவும், மேற்கொள்ளப்பட உள்ளது,

### முடிவுற்ற பணிகள்

அந்த வகையில், திண்டுக்கல் மாவட்டப் பெருமக்களாகிய, நீங்கள் அனைவரும் பயன்பெறும் வகையில், இன்றைய தினம், 254 கோடியே 20 இலட்சம் ரூபாய் மதிப்புடைய திட்டப் பணிகளை, உங்களுக்கு கொண்டு வந்துள்ளேன். முடிவுற்ற பணிகளைப் பொறுத்த வரையில், 83 கோடியே 14 இலட்சம் ரூபாய் மதிப்புடைய, நிறைவுற்ற பணிகளை திறந்து வைத்துள்ளேன். அவற்றில் குறிப்பாக, சில முக்கிய திட்டப் பணிகளை, இங்கே எடுத்துக் கூற விரும்புகிறேன்.

ஊரக வளர்ச்சி முகமை திட்டத்தின் கீழ், 22 கோடியே 88 இலட்சம் ரூபாய் மதிப்பில், தொகுப்பு வீடுகள், சாலைப் பணிகள், கிராம நிர்வாக அலுவலர்களுக்கான அலுவலகக் கட்டடங்கள், பள்ளிக் கட்டடங்கள் போன்ற கட்டுமானப் பணிகளை, இந்த இனிய விழாவில் நான் திறந்து வைத்துள்ளேன்.

பொதுப் பணித் துறையின் கட்டடப் பிரிவின் சார்பாக, கட்டி முடிக்கப்பட்டுள்ள, 2 கோடியே 91 இலட்சம் மதிப்பீட்டிலான, மாவட்டம் எங்கும் அமைந்துள்ள பல்வேறு கட்டடங்கள், இன்றைய தினம் என்னால் திறந்து வைக்கப்பட்டுள்ளன.

தமிழ் நாடு குடிநீர் வடிகால் வாரியத்தைப் பொறுத்த வரையில், நகரக் கோட்டத்தின் கீழ், 64 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், எரியோடு கிராம பேரூராட்சி குடிநீர் மேம்பாட்டுத் திட்டம், மற்றும் பழநி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் குடிநீர்த் திட்டம் – 4 கோடியே 61 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், 85 கிராமங்களில் மின் விசை

இறைப்பான்கள் – 2 கோடியே 40 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், 13 ஒன்றியங்களில் சிறு மின் விசை இறைப்பான்கள், போன்ற முக்கிய குடிநீர் திட்டப் பணிகளை, இன்று நான் திறந்து வைத்துள்ளேன்.

70 இலட்சம் ரூபாய் மதிப்பில், அருள்மிகு பழனியாண்டவர் பெண்கள் கல்லூரியில், புதிய விடுதி கட்டுதல், அருள்மிகு பழனியாண்டவர், ஆண்கள் தொழில்நுட்பக் கல்லூரியில், ஆய்வுக் கூடங்கள் அமைத்தல் – 1 கோடியே 88 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், வனத் துறையின் கீழ், தரம் குன்றிய காடுகளில் தோட்டம் அமைத்தல் – 6 கோடியே 48 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், தமிழ் நாடு மின்சார வாரியத்தின் கீழ், செங்குறிச்சி, செந்துறை ஆகிய இடங்களில், துணை மின் நிலையங்கள் அமைத்தல் – 5 கோடியே 57 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், நெடுஞ்சாலைத் துறையின் கீழ், பல்வேறு சாலைகள் மற்றும் உயர்மட்ட பாலங்கள் அமைத்தல், போன்ற பணிகளும், இன்றைய தினம் இங்கே என்னால் திறந்து வைக்கப்பட்டுள்ளன.

20 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், காவல் துறையின் கீழ், பெண் காவலர் ஓய்வு அறை, துப்பறியும் நாய் கூடம் அமைத்தல் – திண்டுக்கல் நகராட்சியில், 2 கோடியே 75 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், சாலைகள், வணிக வளாகம், சிமெண்ட் தளம் அமைத்தல் – பழநி நகராட்சியில், 56 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், ஒருங்கிணைந்த சுகாதார வளாகம், ஆழ்குழாய்கள் அமைத்தல்; – கொடைக்கானல் நகராட்சியில், 85 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், ஒருங்கிணைந்த சுகாதார வளாகக் கட்டடம், மற்றும் சாலைகள் அமைத்தல் – பல்வேறு பேரூராட்சிகளில், 70 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், கட்டி முடிக்கப்பட்டுள்ள பணிகள், ஆகியவை எல்லாம் இன்று என்னால் திறந்து வைக்கப்பட்டுள்ளன.

பல ஆண்டுகளுக்கு முன்பு, அமெரிக்காவில் பஸிஃபிக் (PACIFIC) கடற்கரை ஓரம், ஒரு நகரத்தில் ஒரு விழா நடைபெற்றது. அந்த விழாவை ஏற்பாடு செய்தவர்கள், ஒரு போட்டி நடத்தினார்கள். உலகப் புகழ் பெற்ற நகைச்சுவை நடிகர், "சார்லி சாப்லின்" போல, யார் சிறப்பாக நடிக்கிறார்களோ, அவர்களுக்கு பரிசுகள் கொடுக்கப்படும் என்று அறிவித்தார்கள்.

விழா நாள் வந்தது. போட்டி ஆரம்பம் ஆனது. சார்லி சாப்லின் போல வேடமிட்டவர்கள், பலர் அங்கு வந்து, சார்லி சாப்லின் போலவே நடித்துக் காட்டினார்கள். இதில், சுவாரஸ்யமான விஷயம் என்னவென்றால், நடிகர் சார்லி சாப்லின், தானே அந்தப் போட்டியில் கலந்து கொண்டு நடித்துக் காட்டினார். போட்டியில் சார்லி சாப்லின் மாதிரி நடித்தவர்களில், சிறந்த மூன்று பேர்களுக்கு பரிசு வழங்கப்பட்டது. நிஜமான சார்லி சாப்லினுக்கு, என்ன பரிசு கிடைத்தது என்று நினைக்கிறீர்கள்? இரண்டாவது பரிசு தான் கிடைத்தது.




இது தான் உலகம்! இங்கு உண்மைக்கு இரண்டாம் இடம் தான்!

இப்படி தமிழ்நாட்டில் சில பத்திரிகைகளும், சில தனியார் தொலைக்காட்சிகளும், பொய்யை, மெய்யாகக் காட்டி வருகின்றன. ஆனால் நம்முடைய மக்களை, யாரும் ஏமாற்ற முடியாது. அவர்களை எந்தக் கொம்பனாலும் ஏமாற்ற முடியாது!

தேர்தல் கணிப்புகள் என்று சொல்லப்படுபவை எல்லாம், 'மோசடி' என்னும் விஷயம் தமிழக மக்களுக்கு மிக நன்றாகவே தெரியும்.

இங்கே, பல தனியார் தொலைக்காட்சி நிறுவனங்களை, தன்னிடம் வைத்திருக்கும் ஒரு குடும்ப டி.வி நிறுவனம், நிறைய பொய் மூட்டைகளை அவிழ்த்து விடலாம், என்று நினைத்துக் கொண்டிருக்கிறது.

அந்த நினைப்பிலே மண் அள்ளிப் போட்டவர்கள், நமது தமிழ் நாட்டு மக்கள் என்பதை நினைத்து, நான் மிகவும் பெருமைப் படுகின்றேன்.

உண்மையையும், உண்மை மாதிரி மாய்மாலம் காட்டும் பொய்யையும், அடையாளம் காண்பது தான் அறிவு! நம் தமிழக மக்கள் அறிவாளிகள்! அவர்களுக்கு எது உண்மை என்று நன்கு தெரியும்.



இத்தகைய அன்பும், அறிவும், ஆற்றலும் படைத்த தமிழக மக்களுக்கு, ஏராளமான திட்டப் பணிகளை வழங்க வேண்டும், என்பதே எனது விருப்பம். குறிப்பாக, சமுதாயத்தின் அனைத்துத் தரப்பு மக்களுக்கும், மேலும் மேலும் என்னென்ன வசதிகளை எல்லாம், உருவாக்கித் தரலாம் என்று தான், எங்களது அரசு தொடர்ந்து சிந்தித்து, செயலாற்றி வருகிறது. அல்லவற்றை புறக்கணித்து, நல்லவற்றை தேர்ந்தெடுத்து, ஆதரிக்கின்ற தமிழக மக்களுக்கு, எனது நன்றியை காணிக்கை ஆக்குகின்ற வகையில் தான், இன்றைய தினம், இந்த மாவட்டத்து மக்கள், பயன் பெறுகின்ற வகையில், இந்த இனிய விழாவிலே, 164 கோடியே 49 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமையவுள்ள, பல்வேறு துறைகளைச் சார்ந்த 2,195 திட்டப் பணிகளுக்கு, அடிக்கற்கள் நாட்டியுள்ளேன் என்பதை, மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

## கேபிள்கார் அமைக்கும் திட்டம்

மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் கீழ், 20 கோடி ரூபாய் மதிப்பீட்டில், முழு சுகாதாரத் திட்டம் – 5 கோடியே 83 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், "கிராம சாலைகள் மேம்பாட்டுத் திட்டம்" – 5 கோடியே 25 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கிராம வேலை வாய்ப்புத் திட்டம் – ஆகிய திட்டங்களுக்கு இன்று அடிக்கல் நாட்டியதில், நான் மன நிறைவு அடைகிறேன்.

தமிழ் நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் கீழ், 10 கோடியே 33 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், கொடைக்கானல் ஏரியில் மாசு அகற்றி சீரமைக்கும் திட்டம் – 91 கோடியே 35 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் திண்டுக்கல் நகராட்சி, நத்தம் நகர பேரூராட்சி, 5 ஊரக பேரூராட்சிகள், மற்றும் 816 ஊரக குடியிருப்புகள், ஆகியவை அடங்கிய, கூட்டுக் குடிநீர் திட்டம் – 10 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், பழநி நகராட்சியில், பகுதி பாதாள வடிகால் திட்ட சீரமைப்புப் பணிகள் – 5 கோடி ரூபாய் மதிப்பீட்டில், பழநி அருள்மிகு தண்டாயுதபாணி திருக்கோயில் கேபிள் கார் அமைக்கும் திட்டம் – 1 கோடியே 73 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், பொதுப் பணித் துறையின் கீழ், மாணவர் விடுதிகள் கட்டுதல் – 9 கோடியே 65 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் தமிழ்நாடு மின் வாரியத்தின் கீழ், கொடைக்கானல் மற்றும் அய்யலூர் ஆகிய இடங்களில், துணை மின் நிலையங்கள் அமைத்தல் – 13 கோடியே 7 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், நெடுஞ்சாலைத் துறையின் கீழ் சாலைகள், நடை பாதைகள், மற்றும் பாலங்கள் அமைத்தல் – 2 கோடியே 77 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், திண்டுக்கல் நகராட்சியில் தினசரி அங்காடி, மற்றும் நவீன சுகாதார வளாகங்கள் கட்டுதல் – 1 கோடியே 9 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், பழநி நகராட்சியில், குடிசைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம், ஒருங்கிணைந்த சுகாதார வளாகம் அமைத்தல் – 1 கோடியே 60 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், கொடைக்கானல் நகராட்சியின் கீழ், கான்கிரீட் சாலைகள், நடைபாதைகள், மற்றும் தடுப்புச் சுவர்கள் அமைத்தல் – தமிழ்நாடு விளையாட்டு

மேம்பாட்டு ஆணையத்தின் கீழ், 72 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நீச்சல் குளம், உடற்பயிற்சி கூடம், மற்றும் தடகளம் அமைத்தல், போன்ற பல்வேறு திட்டங்களுக்கு அடிக்கற்கள் நாட்டியதில், நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

ஏழை எளியோர், ஆதரவற்றோர், முதியோர், விதவைகள், நலிவுற்றப் பிரிவினர், ஆகிய சமுதாயத்தின் அடித்தளத்து மக்களுக்கு கைகொடுத்து, அவர்களை உயர்த்த வேண்டும் என்பதில், நான் அளவற்ற அக்கறை கொண்டுள்ளேன்.

## ஒவ்வொரு துறையிலும் முன்னேற்றம்

அந்த வகையில், நலிந்தோருக்கும், ஆதரவற்றோருக்கும், மகளிருக்கும் என, சமுதாயத்தின் அடித்தளத்து பிரிவினர் அனைவருக்கும், தமது வாழ்க்கையில் முன்னேற உரிய உதவிகளை வழங்குவதில், எங்கள் அரசு என்றைக்கும் முன்னணியில் உள்ளது என்பதை, பெருமையோடு தெரிவித்துக் கொள்கிறேன். இந்த விழாவிலே, 26 அரசுத் துறைகள் மூலம், 21,007 பயனாளிகளுக்கு, மொத்தம், 6 கோடியே 58 இலட்சம் ரூபாய் மதிப்புடைய, பல்வேறு நலத்திட்ட உதவிகள் இன்று வழங்கப்படுகின்றன. அவை அனைத்தையும் உங்களுக்கு எடுத்துச் சொல்ல, நேரம் இல்லாத காரணத்தினால், வழங்கப்படுகின்ற உதவிகளில், முக்கியமான ஒரு சிலவற்றை மட்டும், எடுத்துக் கூற விரும்புகின்றேன்.

முதலில், 1 கோடியே 8 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், 9,730 பேர் பயனடையும் வகையில், நீர்வடிப் பகுதி வளர்ச்சித் திட்டம், மற்றும் தரிசு நில மேம்பாட்டுத் திட்டம் – 1 கோடியே 11 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், 185 பேர் பயனடையும் வகையில், தொழில் வணிகத் துறையின் கீழ், மகளிர் தொழில் முனைவோர் பயிற்சித் திட்டம் – மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் சார்பாக, 2,347 பயனாளிகளுக்கு, 69 இலட்சம் ரூபாய் அளவிற்கு குடியிருப்பு, மற்றும் சுய வேலைவாய்ப்புத் திட்டம் – வருவாய்த் துறையின் மூலமாக, 1,696 பேர்களுக்கு, 52 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், இலவச வீட்டுமனை பட்டாக்கள் – ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையின் கீழ், 34 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், 1,115 பேர் பயனடையும் வகையில், இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் – கூட்டுறவுத் துறையின் சார்பாக, 1,010 பயனாளிகளுக்கு, 1 கோடியே 96 இலட்சம் ரூபாய் அளவில், விவசாயம் சார்ந்த தொழில் அபிவிருத்திக்காக, கடன் உதவிகள், ஆகியவை வழங்கப்படுகின்றன. இவை மட்டுமின்றி, சமூக நலத்துறை, வனத்துறை, சுகாதாரத் துறை, மற்றும் ஊனமுற்றோர் மறுவாழ்வுத் துறை, ஆகிய பல்வேறு துறைகளின் சார்பாகவும், இந்த இனிய விழாவிலே, பல ஆயிரக்கணக்கான பயனாளிகளுக்கு, நலத்திட்ட உதவிகள் வழங்கப்படுகின்றன என்பதையும், மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த நலத்திட்ட உதவிகள் அனைத்தையும், பயனாளிகள் அனைவருக்கும், எனது கரங்களாலேயே வழங்க வேண்டும் என்ற பெருவிருப்பம் எனக்கு இருந்தாலும், போதுமான நேரமில்லாத காரணத்தினால், இந்த மேடையில் 15 பயனாளிகளுக்கு மட்டும், நலத்திட்ட உதவிகளை நானே வழங்க உள்ளேன். எஞ்சியுள்ள அனைவருக்கும், அமைச்சர் பெருமக்களும், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களும், அரசு அலுவலர்களும், இங்கேயே, இந்த விழாவிலேயே வழங்கி சிறப்பிப்பார்கள் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அரசு உதவிகள் பெறவுள்ள பயனாளிகள் அனைவரும், தாம் செய்து வருகின்ற தொழில்களில், மென்மேலும் உயர்வினை பெற வேண்டும் என்று வாழ்த்தி மகிழ்கிறேன்.

உங்களது அன்புச் சகோதரியின் அரசு தமிழகத்தை ஒவ்வொரு துறையிலும் முன்னேற்ற, பயனுள்ள திட்டங்களை உருவாக்கிச் செயல்படுத்தி வருகிறது. சாதிகள், மதங்கள், இவற்றால் மக்கள் பிரிந்து கிடக்கும் வரை, எத்தனை முன்னேற்றத் திட்டங்களைக் கொண்டு வந்தாலும், ஒரு நாடு முன்னேற இயலாது என்பதை நாம் அனைவரும் நினைவில் கொள்ள வேண்டும். நம்மிடையே நிலவுகின்ற செயற்கையான பிரிவுகளை, பேதங்களை, மூட்டை கட்டி வைத்து விட்டு, ஒன்று படுவோம், உயர்வோம் என்று, இந்த நல்ல நாளிலே சூளுரை ஏற்போம்!

எனது முழு கவனமும், தமிழகத்தை இந்தியாவின் முதன்மை மாநிலம் ஆக்குகின்ற, லட்சியத்தை அடைவதில் தான் இருக்கிறது என்று கூறி, எத்தனை இடர்பாடுகளை இவர்கள் கொடுத்து வந்தாலும், அவற்றை எல்லாம் வென்று, இந்த லட்சியத்தை அடைவேன் என்று, எனது அன்புக்குரிய தமிழக மக்களுக்கு, இந்த விழாவின் வாயிலாக தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

அரசு வழங்கும் உதவிகளை, முழுமையாகப் பயன்படுத்திக் கொண்டு, பயனாளிகள் அனைவரும், தங்களது பொருளாதார நிலையை உயர்த்திக்கொள்ள வேண்டும், என்பது தான் அரசின் குறிக்கோள் ஆகும். தங்களது தொழில் முயற்சிகளில், முழுமையாக தங்களை ஈடுபடுத்திக் கொண்டு, பயனாளிகள் வெற்றி பெற வேண்டும் என்பதே, எனது விருப்பமாகும். எந்தத் தொழிலை நாம் செய்தாலும், அதைச் செம்மையாகச் செய்ய வேண்டும் என்றும், வாழ்க்கையில் வெற்றி, நிச்சயமாக உங்களை வந்து சேரும் என்றும் கூறி, உங்கள் அனைவரையும் வாழ்த்தி மகிழ்கின்றேன்.

இந்த விழா, சீரோடும் சிறப்போடும் நடைபெறக், காரணமாக இருந்த அனைவருக்கும், குறிப்பாக மாவட்ட ஆட்சித் தலைவருக்கும், அரசு அலுவலர்களுக்கும், காவல் துறையினருக்கும், எனது மனமார்ந்த பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொண்டு, விடை பெறுகிறேன்''. •

# "குழந்தைத் தொழிலாளர்முறை எதிர்ப்பு நாள் - ஜூன் 12

குழந்தைத் தொழிலாளர் முறையை அடியோடு அகற்றும் பணியில் விரைவாக முன்னேறி வரும் தமிழகம், குழந்தைத் தொழிலாளர் முறை ஒழிப்பு செயலாக்கத் திட்டத்திற்கு தமிழக அரசு ஆணை எண்.எம்எஸ் 53 தொழிலாளர் மற்றும் பணியமர்த்தல் நாள் 12.5.2003 மூலம் ஒப்புதல் அளித்துள்ளது. இதன்படி ஆண்டுதோறும், பொது மக்களின் கவனத்தை ஈர்க்கும் வகையில், 'குழந்தைத் தொழிலாளர் முறை எதிர்ப்பு நாள்' ஒன்றினை மேற்கொள்ள





முன்மொழிந்துள்ளது. தொழிலாளர்துறை ஆணையர், 'பன்னாட்டுத் தொழிலாளர் நிறுவனம் ஆண்டுதோறும், ஜூன் திங்கள் 12-ஆம் நாளை "குழந்தைத் தொழிலாளர் முறை எதிர்ப்பு நாளாக" அனுசரிக்கிறது' என்று அறிவித்துள்ளார். அவ்வாறே நாமும் பன்னாட்டுத் தொழிலாளர் நிறுவனத்தின் பின் திட்டத்தைப் பற்றி ஆண்டுதோறும் ஜூன் 12-ஆம் நாளை 'குழந்தைத் தொழிலாளர்முறை எதிர்ப்பு நாளாக' மேற்கொள்ள, நம் தமிழக அரசு இசைவளித்து ஆணை பிறப்பித்துள்ளது.

மாண்புமிகு முதலமைச்சரின் 15 அம்சத்திட்டத்தில் குழந்தைத் தொழிலாளர் முறையை ஒழித்தல் முக்கிய அம்சமாக இடம் பெற்றுள்ளது. அபாயகரமான தொழில்களில் உள்ள குழந்தைகளை 2005-ஆம் ஆண்டிற்குள்ளும், அபாயமற்ற தொழில்களில் உள்ள குழந்தைகளை 2007-ஆம் ஆண்டிற்குள்ளும் அகற்றும் முக்கிய நோக்குடன் இச்செயல் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

☞ குழந்தைத் தொழிலாளர் முறை ஒழிப்பிற்கான செயல்திட்டம்

☞ குழந்தைத் தொழிலாளர்களை கணக்கெடுப்பின் மூலம் அடையாளம் காணுதல்

☞ குழந்தைத் தொழிலாளர்களுக்கு மறுவாழ்வு அளித்தல்

☞ ஐந்து வயது முதல் ஏழு வயது வரையிலான குழந்தைகளைப் பள்ளிகளில் சேர்த்தல்

☞ குழந்தைத் தொழிலாளர்களை மீட்டு முறையான பள்ளிகளில் சேர்த்தல்

☞ முறைசார்ந்த பள்ளிக்கல்வியை மேம்படுத்துதல்

☞ குழந்தைகளுக்குச் செயல்திறன் பயிற்சியளித்தல்

☞ குழந்தைத் தொழிலாளர் முறையை தடைப்படுத்தும் சட்டங்களை அமலாக்குதல்

☞ விழிப்புணர்வு ஏற்படுத்துதல்

☞ திட்டங்கள் மற்றும் செயல்பாடுகளை இலக்கை நோக்கி நடைமுறைப்படுத்துதல்

☞ குழந்தைத் தொழிலாளர் பிரச்சினை குறித்த மாநாடுகள் / கருத்தரங்குகள் / பயிலரங்குகள் / பயிற்சிகள் ஆகியவற்றை நடத்துதல்

☞ பல்வேறு துறைகளை ஒருங்கிணைத்தல்

☞ நிறுவன உரிமையாளர்களின் பங்கேற்பு

☞ குழந்தைத்தொழிலாளர் முறை ஒழிப்பில் சமுதாயத்தின் பங்கேற்பு ஆகியவை இச்செயல் திட்டத்தில் இடம் பெற்றுள்ளன.

## இளைஞர்கள்



வாலிபர்களுக்கு வெறும் உற்சாகமும், துணிவும், தியாகபுத்தியும் மாத்திரம் இருந்தால் போதாது. நன்மை தீமையை அறியும் குணமும், சாத்தியம் அசாத்தியம் அறியும் குணமும், ஆய்ந்து பார்க்கும் தன்மையும் இருந்தால்தான் வாலிபர்கள் பொதுவில் பயன்படக்கூடியவர்கள் ஆவார்கள்.

*- தந்தை பெரியார்*

# மக்களுக்கு எப்படி உதவலாம் என்பதே என் சிந்தனை

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள்

"தமிழ் மூதாட்டி ஔவையாரால் புகழ்ந்து பாடப்பட்ட கடையெழு வள்ளல்களில் ஒருவரான, அதியமான் மரபினர் ஆண்ட வீரமிக்க பூமியான தகடூராம் தருமபுரியில் நடைபெறுகின்ற அரசு விழாவில் கலந்து கொண்டு, 100 கோடி மதிப்பில் பல்வேறு திட்டப் பணிகளைத் திறந்து வைத்து, புதிய திட்டங்களுக்கு அடிக்கற்கள் நாட்டி, அரசு நலத் திட்ட உதவிகளை வழங்குவதில் நான் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.

அறம் பல பாடிய தமிழ் மூதாட்டி ஔவையாரும், கொடைத் தன்மைக்குச் சிகரமாக விளங்கிய வள்ளல் அதியமானும் வாழ்ந்த இந்த மண்ணிற்கு என்றும் மங்காப் பெருமை உண்டு.

தமிழ் மூதாட்டி ஔவைப் பாட்டியின் பாடல்கள் அகநானூறு, புறநானூறு, நற்றிணை, குறுந்தொகை ஆகியவற்றில் காணப்படுகின்றன. புறநானூற்றில் தான் ஔவையாரின் பாடல்கள் அதிக அளவில் காணப்படுகின்றன. அதாவது 33 பாடல்கள். அவைகளில் 23 பாடல்கள் அதியமான் நெடுமான் அஞ்சி பற்றியன. 3 பாடல்கள் அவனுடைய மகன் பொகுட்டெழினி பற்றியவை. இவர்கள் இருவருமே தகடூரை, அதாவது இன்றைய தருமபுரியை தலை நகராகக் கொண்டு கோலோச்சியவர்கள்.

அரிதாகக் கிடைத்த ஒரு நெல்லிக் கனியால் ஆயுள் பெருகும் என்று அறிந்தும் அந்த மூவாக் கனியை, ஔவைப் பாட்டிக்குப் பரிசாகக் கொடுத்தான் வள்ளல் அதியமான். தான் வாழ்வதை விட தமிழ் வாழ வேண்டும் என்று நினைத்தவன் வள்ளல் அதியமான்!

வடலூர் வள்ளல் பெருமான், சென்னை நகரை 'தருமமிகு' சென்னை என்று பாடியிருக்கிறார்.

'தருமமிகு சென்னையில் கந்த கோட்டத்துள் வளர் தலம் ஓங்கு கந்தவேளே'

என்பது அவர் கந்தக் கோட்ட முருகன் மீது பாடிய பாடல்.

ஆனால், தருமபுரி நகரமும், தருமபுரி மாவட்டமும், இயற்கையாகவே 'தருமம்' என்னும் அடைமொழியைப் பெற்றிருக்கின்றன. இதைக் காரணப் பெயராகவும் நாம் கொள்ளலாம்.



'நடந்தாய் வாழி காவேரி!' என்று பாடுவார் இளங்கோ அடிகள்.

காவேரி தமிழகத்தில் நடக்கத் தொடங்குவதே இங்கு தான்! காவேரி நதி, இம்மாவட்டத்தில் வலது காலை எடுத்து வைத்துப் புகுந்து தமிழ்நாட்டிற்கு வளம் தருகிறது. ஆனால், அக் காவேரியால் ஒரு ஏக்கர் நிலம் கூட இம்மாவட்டத்தில் பயன் பெறுவதில்லை. இப்படி அடுத்தவருக்கு தருமம் புரிகிற மாவட்டமாக இருப்பதால் தான், இம்மாவட்டம் தருமபுரி மாவட்டம் என்று பெயர் பெற்றதோ என எண்ணுகிறேன்.

தருமபுரி மாவட்டத்தில், கிழக்குத் தொடர்ச்சி மலை மற்றும்மேற்குத்தொடர்ச்சி மலை ஆகியவை உள்ளன. இரண்டும் இம்மாவட்டத்தில் தான் கூடுகின்றன. மாவட்டம் முழுவதிலுமே உயர்ந்த மலைகளும், தாழ்வான குன்றுகளும் உள்ளன.

## ராஜாஜியும் பெரியாரும்

தமிழக வரைபடத்தில், கடைக் கோடியிலுள்ள ஒரு குக்கிராமமான தொரப் பள்ளியில் பிறந்த மூதறிஞர் ராஜாஜி அவர்கள் இந்தியத் திருநாட்டின் தலைமைப் பதவி வரை உயர்ந்து இம்மண்ணிற்கு பெருமை சேர்த்தவர். ராஜாஜி அவர்கள், இந்திய கவர்னர் ஜெனரல் என்னும் உச்சபட்சமான பதவியிலே இருந்தார்.

மூதறிஞர் ராஜாஜியின் 91ஆவது பிறந்த நாளின் போது, தந்தை பெரியார் திருச்சியிலே வாழ்த்துத் தெரிவித்துப் பேசினார்:

"ராஜாஜிக்கு என் மனமார்ந்த பிறந்த நாள் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். அவர் தம் லட்சியங்களை உண்மையாகக் கடைபிடிப்பவர். லட்சியங்களுக்காகத் தியாகம் செய்ய தயங்காதவர்" என்று தந்தை பெரியார் குறிப்பிட்டார்.

மேலும் காங்கிரசில் தாம் இருந்த போது ராஜாஜியுடன் கழித்த மகிழ்ச்சியான நாட்களை நினைவு கூர்ந்து பெரியார் பேசினார்.

"நாங்கள் சேர்ந்திருந்த போது நான் அவரது சீடனைப் போலவே நடந்து கொண்டேன். இருப்பினும், அவர் என்னைத் தனது தலைவர் போல் நடத்தினார். அவர் எனக்கு மிக கௌரவமான ஸ்தானம் தந்த போதிலும், நான் அவரது உதவியாளனைப் போலவே நடந்து கொண்டேன். பிற்பாடு நாங்கள் அரசியலில் விலகினோம். எங்கள் கொள்கைகள் மாறுபட்டன. எனினும் தனிப்பட்ட முறையில் எங்களிடம் பேதமில்லை. எங்களது மகத்தான நட்பை, இருவரும் போற்றி வருகிறோம்."

தந்தை பெரியார் இவ்வாறு உள்ளார்ந்த அன்புடன் மூதறிஞர் ராஜாஜியைப் பற்றிக் கூறினார்.

மூதறிஞர் ராஜாஜியோ, "பெரியார் கூறியதைப் போல் வேறு எதுவும் என் கவனத்தை ஈர்த்து மனதைத் தொட முடியாது" என்றார்.

இவ்வாறு, தந்தை பெரியார் அவர்களது மனதைக் கவர்ந்த மாமனிதராகிய ராஜாஜி அவர்கள் பிறந்த தொரப் பள்ளியை தன்னகத்தே கொண்ட பெருமைக்குரிய மாவட்டமான தருமபுரியில் இருந்து, பேசிக் கொண்டிருக்கிறோம் என்று எண்ணும் போதே ஒரு தனி பெருமித உணர்வு என் நெஞ்சில் எழுகிறது!

## பழம் பெரும் சின்னங்கள்

இம்மாவட்டத்தைப் பற்றி நினைக்கும் போது சொல் வழக்கு ஒன்று என் நினைவிற்கு வருகின்றது. தருமபுரி என்றாலே, "தளி, களி, புளி, கம்பளி" என்று வேடிக்கையாகச் சொல்வார்கள். தருமபுரி மாவட்டத்திலுள்ள தளி பகுதி எப்போதும் குளிர்ந்த சீதோஷ்ண நிலையோடு இருக்கும். இதனால் அதை சர். தாமஸ் மன்றோ, "Little England" என்று குறிப்பிட்டிருக்கிறார். இம்மாவட்டத்தில் நெல் விளையும் பகுதி குறைவு. ஆகையால் பெரும்பாலான மக்கள், கேழ்வரகுக் களியையே உணவாகக் கொண்டு பழகியுள்ளார்கள். இப்பகுதியில் உரிகம் புளி, என்றொரு வகைப் புளி, அதிகம் விளைகிறது. இந்த வகைப் புளி அதிகச் சதைப் பிடிப்போடும், மிக நீளமாகவும் இருக்கும். வேறு எங்கும் இப்படி கிடைக்காது. குளிருக்கு கம்பளி உடை தயாரிக்க ஏற்ற அடர்த்தியான ரோமம் கொண்ட மேச்சேரி வகை செம்மறி ஆடுகள் இங்கே அதிகம். ஆகவே தான், தருமபுரி என்றால் "தளி, களி, புளி, கம்பளி" என்னும் சொல் வழக்கு வந்தது, என நினைக்கிறேன்.

அதியமான் கோட்டையில், சென்றாய பெருமாள் கோயிலும்; கிருஷ்ணகிரியில் சையது பாட்சா மலையும்; ராயக்கோட்டையில் மலைக் கோட்டையும் இந்த மாவட்டத்தின் பழம் பெருமை வாய்ந்த சின்னங்களாகும்.

ஒகேனக்கல்லில் நீர் வீழ்ச்சியும், கிருஷ்ணகிரியில் அணைக்கட்டும், தீர்த்தமலையில் நீர்வீழ்ச்சி மற்றும் கோயிலும் சுற்றுலாத் தலங்களாகும்.

தமிழகத்தின் சிறப்பு வாய்ந்த அருவியாக விளங்கும் ஒகேனக்கல், தனிச் சிறப்பு வாய்ந்த சுற்றுலாத் தலமாக, தினம் தினம் அனைவரையும் ஈர்த்து வருகிறது என்பது மாநிலத்துக்கே பெருமை தரும் செய்தியாகும்.

120 பெரிய தொழிற்சாலைகளையும், 13,858 சிறிய தொழிற்சாலைகளையும், 13,678 குடிசைத் தொழில்களையும், கொண்ட தருமபுரி மாவட்டம், தொழில் வளத்திலும் சிறந்து விளங்குவது கண்டு மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன்.

சேலம் மாவட்டத்திலிருந்து பிரிந்து 2.10.1965 முதல் தனி மாவட்டமாக உருப்பெற்று தருமபுரி மாவட்டம் முன்னேற்றப் பாதையில் பீடுநடை போட்டு வருவது நமக்கெல்லாம் பெருமை தருவதாகும்.

மிகவும் சிறப்புடன் நடைபெற்றுக் கொண்டிருக்கும் இந்த விழாவில் எந்தப் பக்கம் பார்த்தாலும், திரளாக பெண்கள் கூடியிருப்பதை நான் காணுகிறேன்.

அவர்களுடைய அன்புச் சகோதரியான என் மீது வைத்துள்ள பேரன்பாலும், பாசத்தாலும், என்னைக் காணவும், எனது கருத்துக்களைக் கேட்கவும் திரளாகக் கூடியுள்ள இவர்களைப் பார்க்கும் போது ஒரு புறம் எனக்குப் பெருமிதமாக இருக்கிறது; பெருமையாக இருக்கிறது. அதே நேரம், ஒரு தமிழ் அறிஞர் கூறியதும் எனது நினைவுக்கு வருகிறது.

## பாலின நேர்மை நெறி

ஒரு கூட்டத்தில், அந்த தமிழ் அறிஞர் கூறினார்:– "நான் ஏகப்பட்ட இடங்களுக்குப் போய் இருக்கிறேன்; எத்தனையோ கூட்டங்களில் பேசி இருக்கிறேன். கன்னியாகுமரியிலிருந்து டில்லி வரையும், மலையாளக் கரையிலிருந்து பினாங்கு வரையும் போயிருக்கிறேன்.

"ஏறக்குறைய 400 பெண்கள் கூடியிருக்கும் கூட்டத்தில் பார்த்தால் கூட, நாலைந்து இளம் பெண்கள் தான் வலிமையான உடற்கட்டோடு இருப்பார்கள். ஏனைய இளம் பெண்களோ, மெலிந்து ஒல்லியாகக் காட்சி தருவார்கள்".

"எனது பாட்டியின் தாயார் உலக்கையைப் பிடித்து நெற்குத்தி வந்தாள். என் பாட்டி ஆட்டுக் கல்லில் மாவு அரைப்பாள். என் தாயாருக்கோ அம்மியில் கூட்டு அரைக்கும் அளவு பலம் இருக்கிறது. என் மனைவி கையில் கரண்டி பிடித்ததோடு சரி. என் மகளோ ஊசியும், நூலும் வைத்திருக்கிறாள். என் பேத்தி என்ன வைத்திருப்பாளோ தெரியவில்லை" என்று வேடிக்கையாகக் கூறினார் அவர்!

பெண்கள் வலிமையற்று இருப்பதைப் பற்றி இப்படி வருத்தப்பட்டார், அந்தத் தமிழ் அறிஞர். இது உண்மை தான்!

இந்த நிலையை மாற்றத் தான் உங்கள் அன்புச் சகோதரியாகிய நான் பெரும் முயற்சி எடுத்து வருகிறேன்.

"பாலின நேர்மை நெறி", என்னும் கோட்பாட்டின் மூலம் பல வழிகளிலும் பெண்கள் ஏற்றம் பெற பல்வேறு திட்டங்களைத் தீட்டிச் செயல்படுத்தி வருகிறேன்.

அது மட்டுமல்லாமல், இன்றைக்கு பெண் கமாண்டோக்கள் பிரிவை இந்தியாவிலேயே முதல் முறையாக உங்கள் அன்புச் சகோதரியின் அரசு தான் ஏற்படுத்தியுள்ளது.

பெண்கள் காலம் காலமாக, பலவீனமானவர்கள் என்றே சித்தரிக்கப்பட்டு வந்துள்ளார்கள்.பெண்களை மலருக்கும், கொடிக்கும் ஒப்பிட்டு கவிஞர்கள் பேசி, எழுதி பெண்களின் மென்மையைப் போற்றிய அளவுக்கு, அவர்களுடைய மனத் திண்மையை, உறுதிப்பாட்டைப் போற்றிப் பாராட்டவில்லை. இந்தப் பத்தாம் பசலித் தனத்தைத் தவிடு பொடியாக்கி, பெண்கள் வலிமையின் வடிவங்கள் தான் என்பதை நிரூபிக்க வேண்டும். அவ்வாறு நிரூபிக்க வேண்டுமானால் – உடல் வலிமையும், உள்ள உறுதியும் கொண்டவர்கள் பெண்கள் என்பதை உறுதிப்படுத்த வேண்டுமென்றால் – அதற்கு பெண்கள் பொருளாதாரத்தில் பிறரைச் சார்ந்து நிற்காத நிலை வர வேண்டும் – தங்களது சொந்தக் காலிலேயே நிற்கின்ற நிலை வர வேண்டும். அதற்காகத் தான், 'மகளிர் சுய உதவிக் குழுக்கள்' திட்டத்தையே தமிழகத்தில் நான் தொடங்கினேன்.

## மகளிர் சுய உதவிக் குழுக்கள்

"மகளிர் சுய உதவிக் குழுக்கள்", என்ற மாபெரும் சமூகப் பொருளாதார இயக்கத்தை, தமிழ்நாட்டில் 1992–ஆம் ஆண்டு முதலமைச்சராக இருந்த போது நான் தான் ஆரம்பித்து வைத்தேன். இதற்கு முன், பெண்கள் முன்னேற்றத்திற்கான அமைப்புகள் பல இருந்திருக்கலாம். அமைப்புகள் என்கின்ற போதே, நிர்வாக தாமதம், போதிய அளவு விரைவாகச் செயல்படாமை, ஆகிய குறைகள் இருக்கும். இதனால், மகளிர் மத்தியில் மறுமலர்ச்சியையோ, புதிய எழுச்சியையோ அவற்றால் உண்டாக்க முடியவில்லை. ஆகவே, எங்கோ ஒரு இடத்தில், என்றோ ஒரு நாள் என்றில்லாமல், மாநிலம் தழுவிய இயக்கமாக, மகளிரின் செயல்பாடுகள், அவற்றின் மூலமாக மகளிர் முன்னேற்றம், பெருமளவில் ஏற்பட வேண்டுமென்று நான் ஆசைப்பட்டேன். எந்தவொரு புரட்சித் திட்டமும் யாரோ ஒருவர் மூளையில், ஒரு சிந்தனையாக உதித்தது தானே! அன்று நான் இட்ட சிறிய விதை, இன்று ஆலமரமாய் வளர்ந்துள்ளது. தற்போது, தமிழ்நாட்டில், 1 இலட்சத்து 18 ஆயிரத்து 413 மகளிர் சுய உதவிக் குழுக்கள் உருவாக்கப்பட்டுள்ளன. அவற்றில் மொத்தம், 20 இலட்சத்து 25 ஆயிரத்து 795 மகளிர் இணைந்து செயல்பட்டு வருகின்றனர். இவர்கள் அனைவரும் சேமித்து வைத்துள்ள தொகை, மொத்தம், 267 கோடியே 22 இலட்சம் ரூபாய் ஆகும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மகளிர் சுய உதவிக் குழுக்களில் உள்ள பெண்களுக்கெல்லாம் நான் ஒன்றைக் கூறிக் கொள்ள விரும்புகிறேன். கடனுதவி ஏதும் கிடைக்காதா என்று பெண்கள் வங்கிகளைத் தேடிச் சென்றது அந்தக் காலம்! மகளிர் சுய உதவிக் குழுக்களில் உள்ள பெண்களைத் தேடி வந்து, உங்களுடைய சேமிப்புத் தொகையை, எங்கள் வங்கிகளுக்கு கொடுங்கள் என்று வங்கிகள் மகளிரைத் தேடி வருவது இந்தக் காலம்! அந்த வகையில் தருமபுரி மாவட்டத்தில், 5,457 மகளிர் சுய உதவிக் குழுக்கள், மொத்தம் 1 லட்சத்து ஓர் ஆயிரம் பெண்களை உறுப்பினர்களாகக் கொண்டு மொத்தம் 35 கோடி ரூபாய் சேமிப்புத் தொகையுடன் வலிவோடும், பொலிவோடும் இயங்கி வருவதை நான் பாராட்டுகிறேன். இதுவரை மகளிர் சுய உதவிக் குழுக்களில் சேராத பெண்கள் அனைவரும் அவற்றில் சேர்ந்து பயன்பெற வேண்டும் என்று இங்குள்ள மகளிரை மட்டுமல்லாமல், தமிழகத்தில் உள்ள அனைத்து மகளிரையும் நான் கேட்டுக் கொள்கிறேன்.

## பாதுகாக்கப்பட்ட குடிநீர்

இன்றைய தினம் தருமபுரி மாவட்டத்தில் பல்வேறு துறைகளின் சார்பாக, 54 கோடியே 21 லட்சம் ரூபாய்




மதிப்பீட்டில் நிறைவேற்றப்பட்டு மக்கள் பயன்பாட்டிற்கு தயாராக உள்ள 822 வளர்ச்சித் திட்டப் பணிகளை இன்று திறந்து வைத்ததில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன். அவற்றில் ஒரு சில திட்டங்களைப் பற்றி இங்கே உங்களிடத்தில் எடுத்துக் கூற விரும்புகிறேன்.

தருமபுரி மாவட்ட மக்களின் அடிப்படை தேவைகளில், தலையாய தேவையாக இருப்பது குடிநீர்த் தேவையே. எனவே தான், தமிழக மக்கள் அனைவருக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீரை வழங்க வேண்டும் என்பதில் உங்கள் அன்புச் சகோதரியாகிய நான், மிகுந்த முனைப்புடன் செயல்பட்டு வருகிறேன். அந்த வகையில், தருமபுரி மாவட்டத்தில் 27 கோடியே 48 லட்சம் ரூபாய் மதிப்பில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் சார்பாக நிறைவேற்றப்பட்ட, 112 கிராம குடியிருப்புகளுக்கான குடிநீர் திட்டம், மற்றும் தனி மின் விசைத் திட்டப் பணிகள் மற்றும் ஊத்தங்கரை, அரூர், தருமபுரி, காரிமங்கலம், நாகோஜனஹள்ளி, பாலக்கோடு, பர்கூர், ஆகிய 7 நகர பேரூராட்சிகளுக்கான குடிநீர் மேம்பாட்டு திட்டப் பணிகள், என மொத்தம், 119 குடிநீர் அபிவிருத்தி திட்டப் பணிகளை இன்று இந்த விழாவில் திறந்து வைப்பதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன். இதன் மூலம் மொத்தம் 142 கிராமப்பகுதிகளும், 19 நகரப் பகுதிகளும் பயனடையும் என்பதையும், அந்தப் பகுதிகளில் வசித்து வரும் 2 லட்சத்து 24 ஆயிரம் மக்களின் குடிநீர்த் தேவை இதனால் நிறைவு அடையும் என்பதையும் எண்ணும் போது உண்மையிலேயே நான் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.

மாவட்டத்தில் உள்ள பல்வேறு பேரூராட்சிகளில் பேருந்து நிலையங்கள், அங்காடிகள், உணவு விடுதிகள், அலுவலகக் கட்டடங்கள் என 124 பணிகள் 1 கோடியே 42 லட்சம் ரூபாய் மதிப்பில் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. அவற்றை இந்த விழாவில் திறந்து வைத்துள்ளேன்.

தமிழ்நாடு மின்சார வாரியத்தின் சார்பாக அரூர் அருகே மாம்பட்டி கிராமத்தில், 1 கோடியே 15 இலட்சம் ரூபாய் மதிப்பில் அமைக்கப்பட்டுள்ள துணை மின் நிலையத்தை தொடங்கி வைத்துள்ளேன்.

மாணவ மாணவியருக்கான விடுதிக் கட்டடங்கள் மற்றும் கூடுதல் பள்ளிக் கட்டடங்கள், ஆகிய 7 பணிகள் என 1 கோடியே 54 இலட்சம் ரூபாய் மதிப்பில் கட்டி முடிக்கப்பட்டுள்ள இந்தப் பணிகளை இன்று திறந்து வைத்துள்ளேன்.

## ஆரோக்கியமான மக்கள் வாழ்வு

நெடுஞ்சாலைத் துறை சார்பாக, போக்குவரத்தை மேம்படுத்தும் நோக்குடன் தொப்பூர், பி. மல்லாபுரம், கல்லாவி, குருபரப்பள்ளி, சின்னம்பள்ளி, மாரண்டஹள்ளி, சந்திராபுரம், ஆகிய இடங்களில் 4 கோடியே 85 இலட்சம் ரூபாய் மதிப்பில் உருவாக்கப்பட்டுள்ள 7 பாலங்களையும் – பொதுப் பணித் துறை சார்பாக, நீர்வள ஆதார அமைப்புகளை உருவாக்க வேண்டுமென்ற நோக்கத்துடன் சின்னாறு, வாணியாறு, ஆகிய ஆறுகளில், 3 கோடியே 35 இலட்சம் ரூபாய் மதிப்பில் உருவாக்கப்பட்டுள்ள 3 தடுப்பணைகளையும் திறந்து வைத்ததில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

ஆரோக்கியமான மக்கள் வாழ்வை உறுதிப்படுத்தும் நோக்குடன், ஒருங்கிணைந்த சுகாதார வளாகங்கள் உருவாக்கும் திட்டத்தின் கீழ், தருமபுரி நகராட்சியில் 25 இலட்சம் ரூபாய் மதிப்பில் கட்டி முடிக்கப்பட்டுள்ள 3 வளாகங்களையும் – கிருஷ்ணகிரி நகராட்சியில், 20 இலட்சம் ரூபாய் மதிப்பில் உருவாக்கப் பட்டுள்ள 2 வளாகங்களையும் – ஒசூர் நகராட்சியில், 10 இலட்சம் ரூபாய் மதிப்பில் கட்டப்பட்டுள்ள ஒரு வளாகத்தையும் திறந்து வைத்துள்ளேன்.

கிராம சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், 3 கோடியே 39 இலட்சம் ரூபாய் மதிப்பில் மேம்படுத்தப்பட்ட 29 கிராமச் சாலைகளை மக்கள் பயன்பாட்டிற்கு இன்று திறந்து வைத்துள்ளேன்.

கிருஷ்ணகிரி வட்டம், மாதேபள்ளி கிராமத்திலுள்ள கிரானைட் ஓடுகள் தயாரிக்கும் தொழிற்சாலையில், தரமான கிரானைட் ஓடுகள் தயாரிக்க 2 கோடி ரூபாய் மதிப்பில் பொருத்தப்பட்டுள்ள நவீன இயந்திரத்தை, இன்று நான் தொடங்கி வைத்துள்ளேன்.

தருமபுரி மாவட்டத்தின் தளி, கெலமங்கலம், ஒசூர், மத்தூர், தருமபுரி, பர்கூர், பாலக்கோடு, காரிமங்கலம், கிருஷ்ணகிரி, மொரப்பூர், பெண்ணாகரம், நல்லம்பள்ளி, அரூர் ஆகிய ஊராட்சி ஒன்றியங்களில் 5 கோடியே 3 இலட்சம் ரூபாய் மதிப்பில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை மூலமாக கட்டி முடிக்கப்பட்டுள்ள மகளிர் சுய உதவிக் குழுக் கட்டடங்கள், சமுதாயக்

கூடக் கட்டடங்கள், கதிரடிக்கும் களங்கள், சமையல் அறைக் கூடங்கள், தொகுப்பு வீடுகள், பள்ளிக் கட்டடங்கள், கிராம நிர்வாக அலுவலகக் கட்டடங்கள், முதலான 461 பணிகளைத் திறந்து வைத்ததில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

தருமபுரி மாவட்டத்தின் மேம்பாட்டைக் கருத்தில் கொண்டு, அதன் முன்னேற்றத்தை உறுதி செய்யும் வகையில் இன்றைய தினம் என்னால் மொத்தம் 34 கோடியே 37 இலட்சம் ரூபாய் மதிப்பில் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் அமைக்கப்பட உள்ள 111 திட்டப் பணிகளுக்கு அடிக்கற்கள் நாட்டப்பட்டுள்ளன.

தமிழ்நாடு மின்சார வாரியத்தின் சார்பாக, அஞ்செட்டி, புலிக்கரை, கெலமங்கலம், ஆகிய கிராமங்களில் 3 கோடியே 62 இலட்சம் ரூபாய் மதிப்பிலான 3 துணை மின் நிலையங்களை அமைத்திட அடிக்கற்களை நாட்டியுள்ளேன்.

பொதுப்பணித் துறை நீர்வள ஆதார அமைப்பின் சார்பாக, கிருஷ்ணகிரி வட்டம், "படேதலாவ்" (Padedhalav) ஏரியிலிருந்து வெண்ணம்பள்ளி ஏரி, மற்றும் அதற்கு கீழ் உள்ள 10 ஏரிகளுக்கு 7 கோடி ரூபாய் மதிப்பில் ஒரு புதிய நீர் வரத்துக் கால்வாய் அமைக்கும் பணிக்கு இன்று நான் அடிக்கல் நாட்டியதில் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன். இதன் மூலம், 9 வருவாய்க் கிராமங்கள் பயனடையும் என்பதும், நேரடி ஆயக்கட்டுகள் என்ற வகையில், 1340 ஏக்கர் விளை நிலமும், மறைமுக ஆயக்கட்டுகள் என்ற வகையில் 1500 ஏக்கர் விளை நிலமும், ஆக மொத்தம், 2840 ஏக்கர் நிலம் பாசன வசதி பெறவுள்ளது என்ற தகவலால் எனக்கு கிடைக்கும் மகிழ்ச்சியை உங்களோடு பகிர்ந்து கொள்வதில் நான் மிகுந்த மன நிறைவு அடைகிறேன்.

அதே போல, ராம கொண்டஹள்ளி, மஞ்சார ஹள்ளி, பத்தரஹள்ளி, ஆகிய மூன்று வருவாய் கிராமங்களும், அதற்கு அடங்கிய 19 குக்கிராமங்களும் பயனடையும் வகையிலும் 1100 ஏக்கர் விளை நிலம் பாசன வசதி பெறும் வகையிலும், ராம கொண்டஹள்ளி கிராமத்தில், மத்தளப்பள்ளம் ஆற்றின் குறுக்கே 14 கோடியே 15 லட்சம் ரூபாய் மதிப்பில் ஒரு புதிய ஏரி அமைத்திட இந்த விழாவில் அடிக்கல் நாட்டி உள்ளேன் என்பதை உங்களுக்குத் தெரிவித்துக் கொள்வதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

மொரப்பூர், காரிமங்கலம், சூளகிரி கிராமங்களில் மருத்துவமனைக் கட்டடப் பணிகள் – ராமியம்பட்டி முதலான 14 கிராமங்களில், பள்ளிக் கட்டடப் பணிகள் என மொத்தம், 18 பணிகளை, 6 கோடியே 29 லட்சம் ரூபாய் மதிப்பில் மேற்கொள்ள அடிக்கற்கள் நாட்டியுள்ளேன்.

கல்வித் துறையின் சார்பாக, தருமபுரி மாவட்டத்திலுள்ள 18 ஊராட்சி ஒன்றியங்களிலும், 3 கோடியே 1 லட்சம் ரூபாய் மதிப்பில் ஊராட்சி ஒன்றியங்களின் துவக்கப் பள்ளி, நடுநிலைப் பள்ளி, மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் 81 வகுப்பு அறைகள் கட்ட, அடிக்கற்கள் நாட்டியுள்ளேன்.

பேரறிஞர் அண்ணா அவர்கள் ஒரு முறை, அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் உரையாற்றுவதற்கு அழைக்கப்பட்டிருந்தார். மாணவர் பேரவையின் சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த அந்த விழாவிற்கு, பேராசிரியர் சிதம்பரநாதன் செட்டியார் அவர்கள் தலைமை தாங்கினார். விழாத் தலைவர் ஆகிய அவர், பேரறிஞர் அண்ணா அவர்களை அறிமுகப்படுத்திப் பேசும் போது, அண்ணாவை "அறிவின் சிகரம்" என்று குறிப்பிட்டார். அடுத்துப் பேச வந்த பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்னாராம், "அறிவின் சிகரம்" என்று என்னை சிதம்பரநாதன் செட்டியார் அவர்கள் குறிப்பிட்டார்கள். "சிகரம்" என்னை மாதிரி குள்ளமாக இராது; பேராசிரியர் சிதம்பரநாதன் செட்டியாரைப் போல உயரமாக இருக்கும்" என்று நகைச்சுவையாக அண்ணா சொன்னாராம். (பேராசிரியர் சிதம்பரநாதன் செட்டியார் அவர்கள் உயரமாக இருப்பார்.)

எப்பேர்ப்பட்ட அண்ணா! எவ்வளவு பேரறிவு படைத்தவர்! அந்தப் பேரறிவால், பெரும் பொருளைச் சேர்த்திருக்கலாம். ஆனால், தமது அறிவு முழுவதையும் நாட்டு மக்களுக்காகவே குறிப்பாக, தமிழ்நாட்டு மக்களுக்காகவே அர்ப்பணித்தார். அதே போன்று, ஏழை எளிய மக்களுக்கு என்று தமது வாழ்நாள் முழுவதும் அர்ப்பணித்தார் நமது இதய தெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள்.

அந்தப் பெருமக்கள் காட்டிய வழியிலே தான் உங்கள் அன்புச் சகோதரியாகிய நானும், ஏழை எளிய மக்களுக்கு, அடித்தளத்து மக்களுக்கு, எப்படி எல்லாம் உதவலாம் என்று தொடர்ந்து சிந்தித்து, செயல்பட்டு வருகிறேன்.

## நலத் திட்ட உதவிகள்

பல்லாயிரக் கணக்கில் மக்கள் எழுச்சியோடு கூடி, உற்சாகத்துடன் பங்கேற்க, மிகுந்த சீரோடும், சிறப்போடும் நடைபெற்றுக் கொண்டிருக்கும் இந்த விழாவில் மொத்தம் 26,843 பேர் பயன் பெறும் வகையில் 16 அரசுத் துறைகள் சார்பாக ஏறத்தாழ 12 கோடி ரூபாய் மதிப்புடைய பல்வேறு நலத் திட்ட உதவிகள் இன்று இந்த விழாவில் வழங்கப்பட உள்ளன.

நலிவடைந்த மக்கள் நலம் பெற்றிடவும், அடித்தளத்து மக்கள் தங்களது உழைப்பைச் செலுத்தி படிப்படியாக முன்னேறிடவும், நலத் திட்ட உதவிகளை வழங்கி அத்தகைய மக்களுக்கு ஆதரவுக் கரம் நீட்டுகின்ற பணியில், எங்கள் அரசு எப்போதும், என்றைக்கும் முன்னணியில் இருக்கிறது என்பதை மிகவும் பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு வழங்கப்படுகின்ற இந்த நலத் திட்ட உதவிகள் பற்றி முழுமையாக உங்களிடம் எடுத்துச் சொல்ல நேரம் இல்லாத காரணத்தால், அவற்றுள் முக்கியமான ஒரு சிலவற்றை பற்றி மட்டும் எடுத்துக்கூற விரும்புகிறேன்.

முதலில், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் மூலமாக சுய உதவிக் குழுக்களுக்கு சுழல் நிதி, மற்றும் சுழல் நிதிக் கடன் உதவியாக 9987 பெண்களுக்கு, 1 கோடியே 41 லட்சம் ரூபாய் நிதி வழங்கப்படுகிறது. அதே போல, சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்களான 1575 பெண்களுக்கு அவர்கள் தொழில் நடத்த உதவியாக 2 கோடியே 30 லட்சம் ரூபாய் தொழிற் கடன் வழங்கப்படுகிறது. மேலும், 3277 பயனாளிகளுக்கு 44 லட்சத்து 75 ஆயிரம் ரூபாய் "தாட்கோ" சுழல் நிதியும் வழங்கப்படுகிறது.

பிற்படுத்தப்பட்டோர் நலத் துறையின் சார்பாக 467 பேர்களுக்கு, 7 லட்சத்து 38 ஆயிரம் ரூபாய் மதிப்பில் இலவச தொழிற் கருவிகளும், வீட்டுமனைப் பட்டாக்களும் வழங்கப்பட உள்ளன. சமூக நலத் துறையின் சார்பாக, பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டம் உள்ளிட்ட பல்வேறு திட்டங்களின் சார்பில் 149 பேர்களுக்கு, 23 லட்சம் ரூபாய் நிதி உதவி – 100 பேர்களுக்கு இலவச தையல் இயந்திரங்கள் – மாவட்டத் தொழில் மையத்தின் சார்பில், 473 பேர் தொழில் தொடங்க, 1 கோடியே 82 லட்சம் ரூபாய் கடன் உதவி – மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தின் சார்பில் 6416 உறுப்பினர்கள் பயனடையும் வகையில் வங்கி மூலம், 3 கோடியே 66 லட்சம் ரூபாய் நேரடிக் கடன் உதவி மற்றும் கூட்டுறவுத் துறை மூலமாக 29 உறுப்பினர்களுக்கு, 6 லட்சம் ரூபாய் கடனுதவி – தோட்டக் கலைத் துறை சார்பாக 194 பேர்களுக்கு 1 லட்சத்து 62 ஆயிரம் ரூபாய் மதிப்புடைய பழச் செடிகள் முதலான உதவிகள் இந்த விழாவிலே வழங்கப்பட உள்ளன. இவையன்றி, வருவாய்த் துறை, ஆதி திராவிடர் நலத் துறை, ஊனமுற்றோர் மறுவாழ்வுத் துறை, பால் வளத் துறை, தாட்கோ நிறுவனம், வனத் துறை, வேளாண்மைத் துறை, கூட்டுறவுத் துறை, முதலான பல்வேறு துறைகளின் சார்பாகவும், இந்த இனிய விழாவிலே பல ஆயிரக் கணக்கான பயனாளிகளுக்கு நலத் திட்ட உதவிகள் வழங்கப்படுகின்றன என்பதை மிகுந்த மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.




இந்த நலத் திட்ட உதவிகள் அனைத்தையும் பயனாளிகள் அனைவருக்கும் நானே எனது கரங்களாலேயே வழங்கிட வேண்டும் என்று எனக்கு விருப்பம் தான். ஆனால், அதற்கு போதுமான நேரம் இல்லை என்பதை நீங்களே அறிவீர்கள். ஆகவே, இந்த மேடையில் 15 பயனாளிகளுக்கு மட்டும் நலத்திட்ட உதவிகளை நான் வழங்க உள்ளேன். எஞ்சியுள்ள அனைவருக்கும், அமைச்சர் பெருமக்களும், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களும், அரசு அலுவலர்களும், இங்கேயே, இப்போதே, இந்த விழாவிலேயே வழங்கிச் சிறப்பிப்பார்கள் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அரசு வழங்கும் இந்த உதவிகளை பெற்றுக் கொள்கின்ற பயனாளிகள் தாங்கள் பெற்ற உதவிகளை முழுமையாகப் பயன்படுத்திக் கொண்டு, தங்களது பொருளாதார நிலையை மேலும் மேலும் உயர்த்திக் கொள்ள வேண்டும். அவ்வாறு பொருளாதார நிலையை உயர்த்துவது தான், அரசு நலத்திட்ட உதவிகளை வழங்குவதன் குறிக்கோள் ஆகும். அதற்காக, தங்களது தொழில் முயற்சிகளில் முழுமையாகத் தங்களை ஈடுபடுத்திக் கொண்டு பயனாளிகள் வாழ்க்கையில் வெற்றி பெற வேண்டும் என்பதே எனது விருப்பமாகும். எந்தத் தொழிலை நாம் செய்தாலும் அதைச் செம்மையாக செய்ய வேண்டும் என்றும்; அப்படிச் செய்தால், உங்கள் வாழ்க்கையில் வெற்றி நிச்சயமாக உங்களை வந்து சேரும் என்றும் கூறி உங்கள் அனைவரையும் வாழ்த்தி மகிழ்கின்றேன்.

அரசு உதவிகள் பலவும் பெற உள்ள பயனாளிகள், தாம் செய்து வருகின்ற தொழில்களில், மென்மேலும் வளர்ச்சி பெற வேண்டும் என்று மீண்டும் வாழ்த்தி மகிழ்கிறேன்.

இந்த விழா சீரோடும், சிறப்போடும் நடைபெறக் காரணமாக இருந்த அனைவருக்கும், குறிப்பாக மாவட்ட ஆட்சித் தலைவருக்கும், அரசு அலுவலர்களுக்கும், காவல் துறையினருக்கும் எனது மனமார்ந்த பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்".

*9.3.2003 அன்று தருமபுரியில் நடைபெற்ற*
*மாவட்ட அரசு விழாவில்*
*மாண்புமிகு தமிழக முதலமைச்சர்*
***செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்கள்*
*ஆற்றிய உரை*



# மத நல்லிணக்கத்தின் மறுபெயர் ஏர்வாடி தர்கா

வரலாற்றுச் சிறப்பும், சரித்திரப் பின்னணியும் ஒருங்கே அமையப்பெற்ற இராமநாதபுரம் மாவட்டத்தின் புகழ்கிரீடத்தில் விலைமதிப்பற்ற ஒரு வைரக்கல்லாய் ஜொலிப்பதுதான் ஏர்வாடி தர்கா. "மத நல்லிணக்கத்தின் மறுபெயர் ஏர்வாடி தர்கா'' என்று பாரோர் போற்றும் புகழுடைத்து இந்த மூதூர்.

இராமநாதபுரம் மாவட்டம் கீழக்கரையிலிருந்து 8 கி.மீ. தூரத்தில் உள்ளது ஏர்வாடி தர்கா. இங்குதான் சுல்தான் சையது இபுராகீம் ஷஹீது (ஒலி) என்ற பாதுஷா நாயகம் உட்பட பல மகான்கள் அடங்கியுள்ளனர்.

மதுரை மாநகரிலிருந்து இறைப்பணி ஆற்ற வந்த ஏர்வாடி பாதுஷா நாயகம் அவர்கள் கி.பி. 1200ஆம் ஆண்டில் இறைவன் திருவடியை அடைந்தார். அவர் இங்கு நல்லடக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள். இந்தியத் திருநாட்டின் முதல் முஸ்லீம் மன்னர் என்ற பெருமையைப் பெற்ற பாதுஷா நாயகம் அவர்கள் கி.பி.1189ஆம் ஆண்டு முதல் சரியாக 12 ஆண்டு 12 நாட்கள் அரசாட்சி செய்ததாக வரலாறு கூறுகிறது. பாதுஷா நாயகம் அவர்களின் வரலாற்றை ஷஹாதத் நாமா எனும் நூலிலிருந்து நாம் முழுமையாக அறிந்து கொள்ளலாம். துருக்கி நாட்டின் அரசவை எழுத்தாளர் பாரசீக மொழியில் எழுதியதன் தமிழாக்கம் கி.பி. 1782–இல் காதிப்புலவர் அவர்களால் அம்மானை வடிவில் ஆக்கப்பட்டது. 3,606 கண்ணிகளையும், 90 விருத்தங்களையும் கொண்ட பெருநூல் இது.

இந்த மண்ணின் மகத்துவம் குறித்து பெங்களூர் துவாரகா வித்யானந்தா தீர்த்த சுவாமிகள் இங்குள்ள குறிப்பேட்டில் "இந்த மண்ணில் பல மகான்கள் வாழ்ந்ததால், இப்பகுதி பூலோக சொர்க்கமாக இருந்து மக்களுக்கு அருள் பாலிக்கிறது'' என்று குறித்துள்ளார்.

இராமநாதபுரத்தை ஆண்ட முத்துக்குமார சுவாமி ரகுநாத சேதுபதியின் மாமனார் முத்துவிஜயன் என்பவருக்கு இருந்து வந்த தீராத நோய், ஏர்வாடி தர்காவிற்கு வந்து சென்றதால், பாதுஷா நாயகத்தின் மகிமையால் முத்துவிஜயன் நோய் முழுமையாக நீங்கி குணம் பெற்றுள்ளார். இதனையறிந்ததும், மன்னர் முத்துக்குமார சுவாமி ரகுநாத சேதுபதி தனது மனைவி பானுமதி நாச்சியாருடன் ஏர்வாடி தர்கா சென்று தனக்கு ஆண் வாரிசு இல்லை என்று முறையிட, அந்த ஆண்டே இறையருளால் அவர்களுக்கு ஆண்வாரிசு கிட்டியது. இதனால் மனமகிழ்ந்த மன்னர் கி.பி.1744ஆம் ஆண்டு அக்டோபர் முதல் தேதியன்று ஏர்வாடியைச் சுற்றியுள்ள 6,666 குறுக்கம் நஞ்சை, புஞ்சை நிலங்களைத் தானமாக வழங்கியதாகக் குறிப்பேடுகள் சான்று பகர்கின்றன. இங்கு ஆண்டுதோறும் பாதுஷா நாயகத்தின் மக்பராவிற்கு (நினைவிடத்தில் உள்ள சமாதிக்கு) சந்தனம் பூசும் புனித நிகழ்ச்சி நடைபெறும். இந்தத் திருவிழா தான் "சந்தனக்கூடு திருவிழா'' என்று அழைக்கப்படுகிறது.

சேதுபதி மன்னர் இணைந்து ஆரம்பித்து வைத்ததுதான் உரூஸ் எனும் சந்தனக் கூடு திருவிழா. ஒவ்வொரு ஆண்டும் துல்கஃதா பிறை1ல் புனித மௌலீது ஷரீப் ஆரம்பித்து, அடிமரம் ஏற்றுதல், கொடி ஏற்றம், சந்தனக் கூடு திருவிழா போன்ற நிகழ்ச்சிகள் நடைபெறும். சந்தனக் கூடு திருவிழா அன்று புனித மௌலீது நிறைவடைந்து சிறப்பு துஆ ஓதப்படுகிறது.

சந்தனக்கூடு ஊர்வலத்துடன் பாதுஷா நாயகத்தின் மக்பராவிற்கு (சமாதிக்கு) சந்தனம் பூசும் புனித நிகழ்ச்சி நடக்கின்றது. துல்காஃதா பிறை 30 அன்று புனித குர்ஆன் ஷரீப் ஓதி தமாம் (நிறைவு) செய்து கொடி இறக்கப்படுகிறது. அன்றிரவு பல்லாயிரக்கான மக்களுக்கு நெய்ச்சோறு என்றழைக்கப்படும் பிரசாதம் வழங்கப்படுகிறது.

இந்தச் சந்தனக்கூடு திருவிழாவில் பல்வேறு கட்டங்களில் பலதரப்பட்ட இந்து சமுதாயத்தவர்களுக்குப் பங்களிப்பு தரப்பட்டுள்ளது. சந்தனக்கூடு செய்யும் உரிமை ஆசாரி சமூகத்தினருக்கும், சந்தனக் கூட்டை அலங்கரிக்கும் உரிமை யாதவ சமூகத்தினருக்கும், ஆதிதிராவிடர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது. முத்தரையர் சமூகத்தினர் கொண்டுவரும் கடல் நீரால் தர்கா சுத்தம் செய்யப்படுகிறது. தீப்பந்தங்கள் சலவைத் தொழிலாளர்களால் கொண்டுவரப்படும் துணிகளில், ஆதிதிராவிட சமூகத்தினர் அந்தத் துணிகளில் நேர்ச்சை எண்ணெய் ஊற்றி, சந்தனக் கூடு கிளம்ப வழிகாட்டியாகச் செல்ல உதவுவார்கள். மதநல்லிணக்கத்தை விளக்கிடும் வண்ணம் இந்து மக்கள் முன்னே செல்ல, கொடி ஊர்வலம் தர்காவிற்குள் சென்றடைவது வழக்கம். இவ்வாறு ஏர்வாடி தர்காவில் நடைபெறும் சந்தனக்கூடு திருவிழா ஒரு மத நல்லிணக்கத்திற்குச் சிறந்த எடுத்துக்காட்டாக நம் தமிழ்த் திருநாட்டில் விளங்குகிறது.

"யார் வாடி நின்றாலும் ஏர்வாடி வாருங்கள்'' என்பது இங்கு பேசப்பட்டு வரும் ஒரு முதுமொழி. இது உண்மை; நீங்களும் ஒருமுறை இப்புண்ணியத் தலத்திற்கு வந்து இந்த மத நல்லிணக்கத்திற்கு வித்திட்ட மண்ணைத் தரிசித்துவிட்டுச் செல்லலாமே!

**ரெ. இராவணன்**
*செய்தி–மக்கள் தொடர்பு அலுவலர்*
*இராமநாதபுரம் மாவட்டம்*

# சாத்தான்குளத்தில் புதிய அரசு மகளிர் கல்லூரி

**14–3–2003 அன்று தூத்துக்குடி மாவட்டம் சாத்தான்குளத்தில் நடைபெற்ற அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஆற்றிய உரை.**

"தென்பாண்டி நாடு" என்று போற்றப்படும் தமிழகத்தின் தென்கோடி மாவட்டங்களில் ஒன்றான, தூத்துக்குடி மாவட்டத்தில் என் அன்பிற்குரிய சாத்தான்குளத்தில், இன்று நடைபெறும் தூத்துக்குடி மாவட்ட அரசு விழாவில் கலந்து கொண்டு உங்களை எல்லாம் காணவும், உங்களோடு ஒரு சில கருத்துக்களைப் பகிர்ந்து கொள்ளவும் எனக்குக் கிடைத்திருக்கும் இந்த நல்ல வாய்ப்புக் குறித்து நான் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன்.

16 நாட்களுக்கு முன் கடந்த 26–ஆம் தேதி நடைபெற்ற, சாத்தான்குளம் சட்டமன்றத் தொகுதிக்கான இடைத் தேர்தலில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு வாக்கு அளிக்குமாறு தொகுதி மக்களாகிய உங்களைக் கேட்டுக் கொள்வதற்காக நான் நேரில் வந்திருந்தேன். எனது வேண்டுகோளை ஏற்று, மகத்தான வெற்றியை நீங்கள் எனக்குத் தந்தீர்கள். அது என் மீது நீங்கள் வைத்த, அன்புக்கும் நம்பிக்கைக்கும் அடையாளம்.





தேர்தல் முடிவு தெரிந்தது மார்ச் 1–ஆம் தேதி அன்றுதான். அதன் பின்னர் சரியாக 13 நாட்கள் கழித்து இன்றைக்கு நான் தூத்துக்குடி மாவட்டத்தின் அரசு விழாவை இந்த சாத்தான்குளத்திலேயே நடத்தி, இன்றைக்கு 163 கோடியே 21 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள நிறைவேற்றப்பட்ட திட்டங்களையும், புதிதாகத் தொடங்க இருக்கின்ற திட்டங்களையும் நலத்திட்ட உதவிகளையும் வழங்குவதற்காக சாத்தான் குளத்திற்கு வந்திருக்கிறேன் என்றால் இது நான் உங்கள் மீது வைத்திருக்கும் அன்புக்கு அடையாளம்.

"அன்பிற்கும் உண்டோ அடைக்கும் தாழ்'', என்பார்கள். தேர்தல் முடிவு தெரிந்து 13 நாட்களுக்குள்ளேயே நடைபெறும், இந்த இரண்டாவது சந்திப்பு, ஒரு வரலாற்றுச் சந்திப்பு, என்றே நான் நினைக்கிறேன்.

ஒரு தேர்தல் நேரத்தில் வந்து விட்டு திரும்பவும், அடுத்த தேர்தல் நேரத்தில் மட்டுமே வருகின்ற, அரசியல் தலைவர்கள் உள்ள தமிழகத்தில் கொடுத்த வாக்கை நிறைவேற்றும் வகையில் உங்கள் அன்புச் சகோதரியாகிய நான் இரண்டு வாரங்களுக்கு உள்ளாகவே உங்களைக் காண மீண்டும் வந்திருக்கிறேன். உங்கள் அன்புச் சகோதரியாகிய என் மீது யார் நம்பிக்கை வைத்தாலும் அந்த நம்பிக்கை வீண் போகாது என்பதற்கு இன்று நடைபெறுகின்ற இந்த விழாவே, ஓர் இனிய உதாரணமாகும். "முத்துக் குளிப்பதொரு தென் கடலிலே'', என்று மகாகவி பாரதி பாடியபடி முத்தை வாங்குவதற்காக உலகின் பழம்பெரும் நாடுகள் வந்த இடம் தூத்துக்குடி. தற்போது, 'புன்னைக்காயல்' என்று அழைக்கப்படும் ஊர் தான் பாண்டிய மன்னர்களின் காலத்தில் தலைநகரமாகவும், துறைமுகமாகவும் விளங்கியது, என்று வரலாறு கூறுகிறது. பொருநையாறு, கடலிலே கலக்கும் இந்த இடம் அக்காலத்தில் சிறந்த, இயற்கைத் துறைமுகமாக விளங்கியது. 16–ஆம் நூற்றாண்டில் இந்தியாவிற்கு வந்த போர்ச்சுகீசியர்கள் புன்னைக்காயலைத்தான், கப்பல் கட்டும் தளமாகவும், வணிகப் போக்குவரத்துக்கு உரிய இடமாகவும் பயன்படுத்தி இருக்கிறார்கள். மேலும், தமிழகத்தில் புன்னைக்காயலில் தான், தமிழ்க் கல்லூரியும் தமிழ் அச்சகமும், முதலில் அமைக்கப்பட்டன என்பது எண்ணி மகிழத்தக்க ஒரு செய்தியாகும்.

தமிழர்கள் கடல் கடந்த நாடுகளுக்குச் சென்று, பண்டை காலத்திலிருந்தே வணிகம் செய்து வந்தவர்கள். 'செட்டி கப்பலுக்குச் செந்தூரான் துணை' என்பது பழமொழி. வணிகக் கப்பலுக்கு மட்டுமல்ல நமது வாழ்க்கைக் கப்பலுக்கும் செந்தூரான் தான் துணை என்பதால் உலக நாடுகளிலே உள்ள தமிழர்கள் நாடி வரும் ஊர் திருச்செந்தூர்! அறுபடை வீடுகளில் இரண்டாவது வீடாக விளங்கும் திருச்சீரலைவாய் என்னும் திருச்செந்தூர் பற்றிப் பாடாத பாவலரே இல்லை என்று சொல்லலாம்.

"வந்த வினையும் வருகின்ற வல்வினையும்
"கந்தனென்று சொல்லக் கலங்கிடுமே–செந்தில் நகர்ச்
சேவகா என்று திருநீறு அணிவார்க்கு
மேவ வாராதே வினை''

என்று கவிஞர்கள் போற்றும் கவிஞரான, கவியரசு குமரகுருபர சுவாமிகள், செந்தில் நகர், முருகப் பெருமானைப் பற்றிப் பாடுவார்.

திருச்செந்தூரை, 'சீர்கெழு செந்தில்' என்று, சிறப்பித்துப் பேசுகிறது, சிலப்பதிகாரம்.

இப்படி மிகப் பழங்காலத்திலிருந்து புகழ் படைத்த திருச்செந்தூரைத், தன்னிடத்தே கொண்டு விளங்குகின்ற மாவட்டம், தூத்துக்குடி மாவட்டம்.

## பாரதி பிறந்த மண்

அதைப் போலவே வைணவப் பெருமக்கள் மிக விரும்புகின்ற பகுதியாக ஸ்ரீவைகுண்டம் விளங்குகிறது. 'வேதம் தமிழ் செய்த மாறன்' என்று போற்றப்படுகிற, நம்மாழ்வார் அவதரித்த திருத்தலம் ஆழ்வார்திருநகரி. அங்குள்ள புளிய மரத்தடியில் அவர் ஞானம் பெற்றதால் 'திருப்புளியாழ்வார்' என்று அந்தப் புளியமரம், இன்றைக்கும் அழைக்கப்படுகின்ற, சிறப்புடையது. சைவ, வைணவத் தலங்களைப் போலவே தூத்துக்குடியில் உள்ள 'திவ்ய பனிமய நாயகித் தேவாலயம்', போன்ற பழம் பெருமை மிக்க, கிறிஸ்துவ தேவாலயங்கள், தூத்துக்குடி மாவட்டம் முழுவதும் சிறப்புற்று விளங்குகின்றன. உடன்குடி, குலசேகர ஆழ்வார்பட்டினம், காயல்பட்டினம், ஆகிய ஊர்களில் புகழ்மிக்க மசூதிகள் பல அமைந்திருக்கின்றன.

இவ்வாறு, மும்மத மக்கள் மட்டுமல்லாமல் எம்மத மக்களும் சேர்ந்து வாழும் மாவட்டமாக தூத்துக்குடி மாவட்டம் விளங்கிக் கொண்டிருப்பது நமக்கெல்லாம் பெருமை தரும் ஒன்றாகும். வீரர்களையும், ஞானிகளையும், இணையற்ற கவிஞர்களையும், மாசு மருவற்ற தியாகிகளையும், பெற்றுத் தந்த மண், இந்த மண்.

"வீர சுதந்திரம் வேண்டி
நின்றார் – பின்பு
வேறொன்று கொள்வாரோ!"

என்று பாடிய பாட்டுக்கொரு புலவன் பாரதி பிறந்த மண் இந்த மண். கப்பலோட்டிய தமிழன் என்றும் செக்கிழுத்த செம்மல் என்றும் போற்றப்படுகின்ற தியாகச் செம்மல் வ.உ. சிதம்பரனாரைத் தந்த மண் இந்த மண். வீரத்தின் விளை நிலங்களாகிய வீரபாண்டிய கட்டபொம்மன், வீரன் அழகு முத்துக்கோன், வீரன் சுந்தரலிங்கம், வீரன் வாஞ்சிநாதன், ஆகியோர் பிறந்த மண் இந்த மண்.

### கணினியின் தோற்றம்



"ஈனியாக்'' (ENIAC) என்னும் கணிப்பொறியை ஹார்வார்ட் பல்கலைக்கழகம் 1946இல் உருவாக்கியது. இதுவே உலகின் முதல் இலக்க மின்னணு கணிப்பொறி (First Digital Electronic Computer) அமெரிக்க இராணுவத்துக்காக உருவாக்கப்பட்டது.
ஈனியாக் என்ற பெயர் Electronic Numerica Integrator and Calculator என்ற நீண்ட பெயரின் சுருக்கமே ஆகும்.

சீறாப் புராணம் வழங்கிய உமறுப் புலவரும், சங்கீத மும்மூர்த்திகளில் ஒருவரான முத்துஸ்வாமி தீட்சிதரும், தோன்றிய மண் இந்த மண்.

டாக்டர் கால்டுவெல் டாக்டர் ஜி.யு. போப், ஆகிய அருந்தமிழ்ப் பணியாற்றிய, அயல்நாட்டு அறிஞர்கள் வாழ்ந்த மண் இந்த மண். நமது இதய் தெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களால், 1986 ஆம் ஆண்டு, அக்டோபர் மாதம் 20 ஆம் நாள் திருநெல்வேலி மாவட்டத்திலிருந்து பிரிக்கப்பட்டு புதியதாக உதயமான மாவட்டம் தூத்துக்குடி மாவட்டம் என்பதை நினைக்கும் போது நாம் பெருமிதம் அடைகிறோம்.

## தூத்துக்குடியின் பெருமை

4621 சதுர கிலோ மீட்டர் பரப்பளவில் ஏறத்தாழ 16 லட்சம் மக்களைக் கொண்டதாக விளங்குகின்ற இந்த தூத்துக்குடி மாவட்டத்தின் தலைநகரமாக, 'முத்து நகரம்' என்று அழைக்கப்படும் தூத்துக்குடி விளங்குகின்றது. உப்பு எடுத்தலும், மீன் பிடித்தலும், முக்கியத் தொழில்களாக உள்ள மாவட்டம் இந்த மாவட்டம். இந்தியாவின் மொத்த உப்பு உற்பத்தியில் 30 சதவீதம் இந்த மாவட்டத்தில் தான் உற்பத்தியாகிறது என்னும் செய்தி தமிழகமே பெருமைப்படத் தக்க செய்தியாகும். அதைப் போலவே கோவில்பட்டி நகரம், தீப்பெட்டிகள் மற்றும் பட்டாசுகள், தயாரிக்கும் முக்கிய நகரமாக விளங்கிக் கொண்டிருக்கின்றது. ஆசியாவிலேயே மிகப் பெரிய உரம் தயாரிக்கும் தொழிற்சாலையான, ஸ்பிக் (SPIC) நிறுவனம் – கோவில்பட்டி வட்டத்தின் நூற்பு ஆலைகள் – கனநீர் தொழிற்சாலை – அனல் மின் நிலையம் – சிப்காட் – ஸ்டெர்லைட் காப்பர் – தாரங்கதரா கெமிக்கல்ஸ் – தூத்துக்குடி ஆல்கலி கெமிக்கல்ஸ் (TAC), ஆகிய முக்கியத் தொழிற்சாலைகளால் தொழில் துறையில் தூத்துக்குடி மாவட்டம் சிறப்பிடம் பெறுகின்றது. இந்தியாவிலுள்ள 10 பெரிய துறைமுகங்களில் ஒன்றாக விளங்குவது, தூத்துக்குடி துறைமுகம் என்பதும்; இந்தியாவின் தென்கிழக்குக் கோடியில், பன்னாட்டுக் கப்பல் போக்குவரத்து வழிக்கு மிக அண்மையில் உள்ளது, இந்தத் துறைமுகம் என்பதும், தூத்துக்குடி மாவட்டத்திற்கு மட்டுமல்லாமல் தமிழகத்திற்கே பெருமை சேர்க்கும் செய்திகளாகும்.

இந்த இனிய விழாவிலே தூத்துக்குடி மாவட்டத்தின் ஒட்டு மொத்த வளர்ச்சியை கருத்தில் கொண்டு, இன்றைய தினம் மொத்தம் 163 கோடியே 21 இலட்சம் ரூபாய் மதிப்புடைய திட்டங்களோடு, தூத்துக்குடி மாவட்டத்திற்கு வந்திருக்கின்றேன் என்பதைப் பெருமையோடு கூறிக்கொள்ள விரும்புகின்றேன்.

## கிராமப் பகுதிகளுக்கு குடிநீர்

இவ்விழாவில், 106 கோடியே 61 இலட்சம் ரூபாய் மதிப்புடைய, பல்வேறு துறைகளைச் சார்ந்த, முடிவுற்ற பணிகளை இன்றைய தினம் நான் திறந்து வைத்துள்ளேன். திறந்து வைத்துள்ள அனைத்துப் பணிகளையும் பற்றி எடுத்துச் சொல்ல நேரம் இல்லாத காரணத்தால் அவற்றில் முக்கியமான சில திட்டப் பணிகளை பற்றி மட்டும் உங்களுக்கு எடுத்துக் கூற விரும்புகின்றேன்.

இன்றைய தினம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலமாக, 28 கோடியே 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், சாத்தான்குளம் முதல், உடன்குடி வரை, 308 கிராமப் பகுதிகளுக்கு, குடிநீர் வழங்குதல் – 27 கோடியே 47 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கடம்பூர் முதல், விளாத்திகுளம் வரை 180 கிராமப் பகுதிகளுக்கு குடிநீர் வழங்குதல் – 9 கோடியே 19 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கருங்குளம் முதல் தூத்துக்குடி வரை 76 கிராமப் பகுதிகளுக்கு குடிநீர் வழங்குதல் போன்ற கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள், இம்மாவட்டத்தின் கிராமப் பகுதிகளிலும் – 17 கோடியே 71 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் தூத்துக்குடி நகராட்சி மேம்பாட்டுக் குடிநீர்த் திட்டம் – 2 கோடியே 27 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நாசரேத் நகர பேரூராட்சி குடிநீர் மேம்பாட்டுத் திட்டம் போன்ற கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் இம்மாவட்டத்தின் நகரப் பகுதிகளிலும் செயல்படுத்தும் வகையில் அவற்றை இந்த விழாவிலே நான் திறந்து வைத்துள்ளேன். நெடுஞ்சாலைத் துறையின் கீழ் 4 கோடியே 38 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள தாமிரபரணி ஆற்றின் குறுக்கே உயர்மட்ட பாலம்; விட்டிலாபுரம் – மணக்கரை சாலையில் புதிய பாலம், நாகம்பட்டி– சில்லாங்குளம் சாலையில் பாலம், 95 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள பேட்மாநகரம் – வாகைக்குளம் சாலை, பாளையங்கோட்டை – அருப்புக்கோட்டை சாலை, ஆகிய இரண்டு இடங்களில் புதிய பாலங்களை நான் இந்த விழாவிலே திறந்து வைத்துள்ளேன். தமிழ்நாடு மின்சார வாரியத்தைப் பொறுத்த வரையில் 94 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் தூத்துக்குடி மேற்பார்வையாளர் அலுவலகத்திற்கு புதிய கட்டிடம் – 82 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கருங்கடல் ஊராட்சி பழனியப்பபுரத்தில் புதிய துணை மின் நிலையம் – 66 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஆறுமுகநேரி துணை மின் நிலையத்தில் மின்னேற்பிகள் அமைத்தல் – பொதுப் பணித் துறையின் கீழ், 1 கோடியே 4 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 14 இடங்களில் குளம் மேம்பாடு செய்தல் – 1 கோடியே 34 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 6 இடங்களில் வரத்துக் கால்வாய் மேம்பாடு, தூர்வாருதல், புதிய கண்மாய் அமைத்தல் போன்ற பணிகளை இந்த இனிய விழாவிலே திறந்து வைத்ததில் நான் மிக்க மன நிறைவு அடைகின்றேன்.

மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் கீழ் 1 கோடியே 42 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான சுகாதார வளாகம் – 1 கோடியே 60 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கதிரடிக்கும் களங்கள், சமுதாய நலக் கூடங்கள், கிராம நிர்வாக அலுவலர்களுக்கான கட்டடங்கள், ஊனமுற்றோருக்கான பணிக் கூடங்கள், குடிநீர்த் திட்டப் பணிகள், குளம் தூர் வாருதல், அறுவை சிகிச்சை அரங்கம் அமைத்தல், ஆகிய பணிகளையும் – 63 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஆதிதிராவிட மாணவ மாணவியர்களுக்கான விடுதிகள் கட்டுதல் – 16 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மீன் வளத் துறையின் கீழ் மீனவர் அங்காடி அமைத்தல் போன்ற பணிகளையும் இந்த விழாவிலே நான் திறந்து வைத்துள்ளேன்.

தூத்துக்குடி மாவட்டத்திற்கு உரிய புதுக்கோட்டையில் அமைக்கப்பட்டுள்ள "அனைத்து மகளிர் காவல் நிலையத்தையும்" இந்த இனிய விழாவிலே திறந்து வைத்துள்ளேன் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைய தினம் எழுச்சிமிகுந்த இந்த விழாவிலே, மொத்தம் 32 கோடியே 16 இலட்சம் ரூபாய் மதிப்பில் இந்த மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் அமையவுள்ள 508 திட்டப் பணிகளுக்கு, அடிக்கற்கள் நாட்டியதில் நான் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன். குறிப்பாக நெடுஞ்சாலைத் துறையின் கீழ், 12 கோடியே 95 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் தூத்துக்குடி – மதுரை சாலையில் ஒரு மேம்பாலம், பருவக்குடி – விளாத்திகுளம் சாலையில் ஒரு பாலம், மதுரை – கன்னியாகுமரி சாலையில் 2 மேம்பாலங்கள்

தமிழ்நாடு மின்சார வாரியத்தின் கீழ் 1 கோடியே 31 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் குரும்பூர் கிராமத்தில், துணை மின் நிலையம் அமைத்தல் – "தாட்கோ" நிறுவனத்தின் கீழ் 2 கோடியே 22 இலட்சம் ரூபாய் மதிப்பில் 7 இடங்களில் ஆதி திராவிடர் மாணவ, மாணவியர்களுக்கு விடுதிகள் – ஊரக வளர்ச்சித் துறையின் கீழ் 1 கோடியே 2 இலட்சம் ரூபாய் மதிப்பில் இம்மாவட்டத்தில் 55 இடங்களில் குடிநீர்த் திட்டப் பணிகள் – 88 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 39 இடங்களில் ஊரக மகளிர் சுகாதார வளாகங்கள் – 73 இலட்சம் ரூபாய் மதிப்பில் 104 இடங்களில் கிராம நிர்வாக அலுவலர்களுக்கான அலுவலகக் கட்டடங்கள் ஆகிய பணிகளுக்கு இன்று அடிக்கற்கள் நாட்டியுள்ளேன் என்பதை, மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த இனிய விழாவில், மொத்தம் 9 கோடியே 95 இலட்சம் ரூபாய் மதிப்பில் கயத்தாறு, கழுகுமலை மற்றும் எட்டயபுரம் ஆகிய மூன்று பேரூராட்சிகளைச் சேர்ந்த ஏறத்தாழ 60,000 மக்களின் குடிநீர்த் தேவையை நிறைவு செய்கின்ற கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கான அடிக்கல்லையும் நாட்டி உள்ளேன் என்பதைப் பெருமிதத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவை மட்டுமின்றி 87 இலட்சம் ரூபாய் மதிப்பில் மீன் வளத் துறையின் கீழ் 235 இடங்களில் மீனவர்களுக்கு இலவச வீடுகள் கட்டுதல் – மக்கள் நல்வாழ்வுத் துறையின் கீழ் 40 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஏரல் ஆரம்ப சுகாதார நிலையத்தில் 30 படுக்கைகள் அமைத்துத் தரம் உயர்த்துதல், அறுவை சிகிச்சை அரங்கம் அமைத்தல், X-ray பிரிவு கட்டுதல் போன்ற பணிகளுக்கும் இன்றைய தினம் இந்த விழாவிலே அடிக்கற்கள் நாட்டியுள்ளேன் என்பதில் நான் மிக்க மன நிறைவு அடைகின்றேன்.

### சாத்தான்குளம்

நான் சாத்தான்குளம் தொகுதி இடைத் தேர்தலுக்காக இந்தப் பகுதியில் கிராமம் கிராமமாக சுற்றி வந்தேன். நான் செல்லாத கிராமமே இல்லை என்கின்ற அளவுக்கு அனைத்துப் பகுதிகளுக்கும் சென்று இங்குள்ள உங்கள் அனைவரையும் சந்தித்து விட்டேன். வறட்சியும் வறுமையும் காலம் காலமாக நிலவி வருகின்ற இந்தத் தொகுதியில் ஒட்டு மொத்த வளர்ச்சியை ஏற்படுத்த வேண்டும் என்ற சூளுரையை நான் அப்போதே மேற்கொண்டேன். தற்போது, என் அன்பிற்குரிய சாத்தான்குளம் தொகுதி மக்களின் முன்னேற்றத்திற்காக மட்டும் முதற்கட்டமாக, மொத்தம் 15 கோடியே 30 இலட்சம் ரூபாய் செலவில் பல்வேறு துறைகளைச் சார்ந்த திட்டப் பணிகளை இன்று என்னுடன் கொண்டு வந்துள்ளேன் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இது மட்டுமன்றி, மேலும் பெரிய அளவிலே இந்தத் தொகுதியில் பொருளாதார மேம்பாட்டை ஏற்படுத்துகின்ற வகையில், அரசு மேற்கொள்ள உள்ள சில திட்டப் பணிகள் பற்றிய அறிவிப்புகளையும் நான்

## இலக்கியம்

புத்தகங்கள் அறிவுக்கே உணவை ஊட்டிப்
புதிதான காட்சிகளை மனத்தி லேற்றி
வித்தகனாய்ச் செய்யும்என இலக்கி யத்து
வேலிக்குள் அடியெடுத்து வைத்தி பாது
நத்துமனப் பசிதீரப் படித்துப் பார்த்து
நாலைந்து பேர்களுக்கு விளக்கிக் கூறின்
அத்தனையும் அறிவாகி மனத்தில் ஏறும்;
அறிவாளி எனும்பெயரை உலகம் நல்கும்!

வள்ளுவரின் குறள்மீது விழியை நாட்டி
வடித்தஇரண் டடிஎடுத்து மனத்துள் போட்டு
தெள்ளிதின்நற் பொருள்கண்டே உளம்பூ ரித்துச்
சித்திரித்துப் பார்க்குங்கால் வளரும் எண்ணம்!
அள்ளுசுவை ஐம்பெரிய காப்பி யங்கள்
அடுக்கிவரும் உவமைநயச் சுவையால் என்றும்
கள்ளமனம் கூடநய நிலையைக் காணும்
கவிதையிலே திருவிடத்துச் சோலை பாடும்.



– கவியரசர் கண்ணதாசன்

கவியரசர் கண்ணதாசன் பிறந்தநாள் ஜூன் 24 நினைவாக

இந்த விழாவிலே அறிவிக்க உள்ளேன் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

வேளாண்மைத் துறையைப் பொறுத்த வரையில் இங்குள்ள விவசாயிகள் 100 பேருக்கு 10 இலட்சம் ரூபாய் மதிப்பில், மேம்படுத்தப்பட்ட புதிய ரக வாழைப் பயிர், மா மற்றும் நெல்லி ஆகிய பயிர்கள் விளைவிப்பதற்கான விதைப் பயிர்கள் (Seedlings), விநியோகம் செய்யப்படும். 5 இலட்சம் ரூபாய் செலவில் இந்தப் பகுதியைச் சார்ந்த, 1400 பண்ணை மகளிருக்கு முந்திரிப் பயிர், பருப்பு வகைகள், மற்றும் காளான், ஆவாரம்பூ போன்ற மூலிகைப் பயிர்கள், எரி பொருளைத் தரக்கூடிய ஜட்ரோபா, பாரடைஸ் செடி போன்ற பயிர் வகைகள் ஆகியவற்றை பயிரிடுவதற்கு உரிய பயிற்சிகள் வழங்கப்படும்.

மேலும், தேசிய நீர்வடிப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், 9 இலட்சம் ரூபாய் செலவில் 5,000 ஏக்கர் நிலப்பரப்பில் நீர்ப்பிடிப்புப் பணிகளை 2000 விவசாயிகள் பயனடையும் வகையில் கருங்குளம் ஒன்றியத்திலும் – வறட்சிக்கு உட்பட்ட பகுதிகள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 33 லட்சம் ரூபாய் செலவில் 12,500 ஏக்கர் பரப்புள்ள நில மேம்பாட்டுப் பணிகள், சாத்தான்குளம் ஒன்றியத்திலும் – 23 இலட்சம் ரூபாய் செலவில், ஒருங்கிணைந்த வறட்சிக்கு உட்பட்ட பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், 6,250 ஏக்கர் நில மேம்பாட்டுப் பணிகள், ஆழ்வார்திருநகரி ஒன்றியத்திலும் இந்த ஆண்டு மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், விவசாயப் பொருட்களை ஏற்றுமதிக்காக பாதுகாத்து வைப்பதற்கு ஏதுவாக, "குளிர்ப்பதன கிடங்கு" ஒன்று, தனியார் துறையின் ஒத்துழைப்போடு, சாத்தான்குளம் தொகுதியில் நிறுவ வழி வகை செய்யப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

கால்நடைப் பராமரிப்புத் துறை சார்பாக மொத்தம் 37 இலட்சம் ரூபாய் செலவில், ஆழ்வார் திருநகரி, கருங்குளம், மற்றும் சாத்தான்குளம் ஒன்றியங்களில் ஆடு வளர்ப்புத் திட்டம் – இந்த ஒன்றியங்களிலேயே மேய்ச்சல் தரை அமைத்தல் மற்றும் ஆழ்வார்திருநகரி, கருங்குளம் ஆகிய இரண்டு இடங்களில், தற்போதுள்ள கால்நடை துணை மையங்களை கால்நடை மருத்துவ மனைகளாக உயர்த்துதல், பொத்தக்காலன்விளை, செட்டிக்குளம் மற்றும் கால்வாய் ஆகிய மூன்று இடங்களில் புதிதாக 3 பால் கூட்டுறவு சங்கங்கள் அமைத்தல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

## அரசு மகளிர் கல்லூரி

அடுத்து, ஆழ்வார்திருநகரி, சாத்தான்குளம் மற்றும் செய்துங்கநல்லூர் ஆகிய மூன்று இடங்களில் கதர் துறையின் சார்பாக பனை வெல்லம் தயாரிக்கும் மையம் ஒன்றும் – பனை ஓலை பொருட்கள் தயாரிப்பு மற்றும் பயிற்சி மையம் ஒன்றும் – பதனீர் தயாரிக்கும் மையம் ஒன்றும் – மொத்தம் 11 இலட்சம் ரூபாய் செலவில் நிறுவப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். மக்கள் நல்வாழ்வுத் துறையைப் பொறுத்த வரையில் சாத்தான்குளத்தில் உள்ள அரசு வட்ட தலைமை மருத்துவமனையில் 25 இலட்சம் ரூபாய் மதிப்பில் 18 படுக்கைகள் கொண்ட புதிய வார்டு அமைத்தல் – தற்போது ஆழ்வார்திருநகரி மற்றும் கருங்குளம் ஆகிய இடங்களில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களை, மொத்தம் 1 கோடியே 10 இலட்சம் ரூபாய் செலவில், 30 படுக்கைகள் கொண்ட மருத்துவ மனைகளாக நிலை உயர்த்துதல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். இது மட்டுமன்றி சாத்தான்குளம் பகுதியில் உள்ள 16 துணை சுகாதார நிலையங்கள் மற்றும் இரண்டு ஆரம்ப சுகாதார நிலையங்கள் ஆகியவற்றில் சுமார் 4 இலட்சம் ரூபாய் செலவில் பராமரிப்புப் பணிகளும் – 25 இலட்சம் ரூபாய் செலவில், 4 புதிய துணை சுகாதார மையங்களும் ஏற்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தப் புதிய மருத்துவ வசதிகள் இந்தப் பகுதியில் உள்ள 3 இலட்சத்து 25,000 மக்களுக்குப் பயன் அளிக்கும் என்பதை மகிழ்ச்சியுடன் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

சாத்தான்குளம் பகுதியில் பெண்களுக்கு என்று ஒரு மகளிர் கல்லூரி இல்லாதது பெரும் குறையாகவே இருந்து வருகிறது என்பதை நான் சென்ற முறை இங்கு வந்த போது தெரிந்து கொண்டேன். இங்கு ஒரு பெண்கள் கல்லூரி நிச்சயம் ஏற்படுத்த வேண்டும் என்று நான் அப்போதே முடிவு செய்தேன்.

அதன் அடிப்படையில் சாத்தான்குளம் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திற்கு பக்கத்தில் ஏற்கனவே மகளிர் கல்லூரி ஒன்று அமைக்க வேண்டும் என்று "Sattankulam Educational Society" என்ற அமைப்பு, இதற்காக வாங்கி தற்போது தானமாக வழங்குகின்ற 30 ஏக்கர் நிலத்தில் புதிதாக அரசு மகளிர் கல்லூரி ஒன்று அமைக்கப்படும் என்பதையும், இதற்காக 50 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்துள்ளேன் என்பதையும் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

நெடுஞ்சாலை துறையைப் பொறுத்தவரையில் அனவரத நல்லூரையும் ஆழிக்குடியையும் இணைக்கும் பாலம் வலுவிழந்த நிலையில் இருப்பதால், 40 இலட்சம் ரூபாய் மதிப்பில் அந்தப் பாலம் சரி செய்யப்படும்.

ஆழ்வார்திருநகரி, நாசரேத், கச்சனாவிளை ஆகிய பகுதிகளில் 420 ஏக்கர் விளை நிலம் பயன் பெறும் வகையில் 1 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் ஸ்ரீவைகுண்டம் ஏரிக்கரையின் உயரம் இரண்டு அடி உயர்த்தப்படும். மணிமுத்தாறு முக்கிய கால்வாயில் பனங்குளம் கிராமத்தின் அருகே, 12 கிலோ மீட்டரில், புதிய கால்வாயை ஏற்படுத்தி அதன் மூலம், கருங்குளம் ஒன்றியத்தைச் சேர்ந்த அய்யனார்குளம்பட்டி பகுதியில் சுமார் 4000 விவசாயிகளின் 850 ஏக்கர் நிலம் பயன்பெறும் வகையில் புதிய கால்வாய் அமைக்க அரசு தக்க நடவடிக்கை எடுக்கும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். சாத்தான்குளம் மற்றும் திசையன்விளை ஆகிய வறட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் தாமிரபரணி ஆற்றிலிருந்து, சுமார் 60 கிலோ மீட்டர் நீளம் கொண்ட, புதிய கால்வாய் அமைக்கும் பணியை, நீர்வள ஆதாரங்கள் மேம்பாட்டு திட்டம்–II–ன் கீழ் (WRCP-II - Water Resources Consolidated Programme-II) எடுத்துக் கொள்ள உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். இதன் வாயிலாக சுமார் 12,500 ஏக்கர் விளை நிலம் புதிய பாசன வசதிகளைப் பெறுவதோடு சுமார் 8,500 ஏக்கர் நிலப் பரப்பில்

நிலத்தடி நீரும் பெருகும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், புத்தன் தருவை மற்றும் சடையநேரி பகுதிகள், பயன் பெறும் வகையில் மருதூர் அணைக்கட்டிலிருந்து, கால்வாய் ஏரிக்கு செல்லும், மருதூர் மேலக்கால் கால்வாயின் கொள் அளவை 1,000 ஏக்கர் விளை நிலம் பயன் பெறும் வகையில் உயர்த்த நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

## இணைப்பு சாலைகள்

**9** கோடியே **14** இலட்சம் ரூபாய் செலவில் ஊரக வளர்ச்சித் துறையின் மூலம் தொகுப்பு வீடுகள் – ஒருங்கிணைந்த மகளிர் சுகாதார வளாகங்கள், தனி நபர் கழிப்பிடங்கள், பள்ளிகளில் கழிப்பிடங்கள் – சுமார் **620** குடும்பங்கள் பயன்பெறும் வகையில் மகளிர் சுய உதவிக் குழுக்கள் மூலம் மஸ்கோத் அல்வா தயாரித்தல், பனங்கல்கண்டு தயாரித்தல், நன்னீர் இரால் வளர்ப்பு, முருங்கைக் காய் பொடி தயாரித்தல், பனை ஒலையிலிருந்து பனை நார் பொருட்கள் தயாரித்தல் முதலிய சிறு தொழில்கள் தொடங்க திட்டங்கள் தீட்டப்படும். சென்னா, ஆவாரம்பூ, போன்ற மூலிகைப் பொருள்களை ஏற்றுமதி நோக்குடன் பயிர் செய்யும் திட்டம் – சாலை மேம்பாட்டுப் பணிகள் – ஏரி, குளம், தூர் வாரும் பணிகள், இந்தத் தொகுதியில் இணைப்பு சாலைகள் இல்லாத **4** கிராமங்களில், இணைப்பு சாலைகள் ஏற்படுத்தித் தருதல் ஆகிய பணிகள் விரைந்து மேற்கொள்ளப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

பள்ளிக் கல்வித் துறையைப் பொறுத்த வரையில் கருங்குளம் ஒன்றியத்தில் அனவரத நல்லூரில் உள்ள, ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, அரசு உயர் நிலைப் பள்ளியாக, தரம் உயர்த்தப்படும் என்பதை இந்த நல்ல நேரத்தில், மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். கொம்மடிக்கோட்டை, மாவடிபண்ணை ஆகிய இடங்களிலுள்ள அரசு உயர்நிலைப் பள்ளிகளில் மூன்று வகுப்பு அறைகள் கொண்ட கட்டடங்கள் கட்டப்படும். படுக்கப்பத்து கிராமத்திலுள்ள அரசு மேல்நிலைப் பள்ளியிலுள்ள சோதனைக் கூடத்திற்கு, புதிய கட்டடம் கட்டப்படும். கருங்குளம், படுக்கப்பத்து, கொம்மடிக்கோட்டை ஆகிய இடங்களிலுள்ள அரசு மேல் நிலைப் பள்ளிகளில், கணினி கல்வி கற்பிக்கும் வசதி செய்து தரப்படும். ராமானுஜம் புதூர், சுண்டங்கோட்டை, மாவடிபண்ணை ஆகிய இடங்களிலுள்ள அரசு உயர்நிலைப் பள்ளிகளிலும்; கருங்குளம், படுக்கப்பத்து, கொம்மடிக்கோட்டை ஆகிய இடங்களிலுள்ள அரசு மேல்நிலைப் பள்ளிகளிலும் ஆங்கில கல்வி ஆய்வகம் (English Language Laboratory) நிறுவப்படும். மொத்தம் **54** இலட்சம் ரூபாய் மதிப்பில் இந்தப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

சாத்தான்குளம் பகுதியில் உள்ள பெரியதாளை கிராமத்தைச் சேர்ந்த 600 கட்டு மரங்களைக் கொண்ட, 2000 மீனவர்கள் கடலுக்குள் சென்று மீன் பிடிக்கும் போது, அங்குள்ள பவழப் பாறைகளில் அடிக்கடி அவர்களுடைய படகுகள் மோதி விபத்துக்கு உள்ளாகி வருகின்றன என்பதை நான் அறிகிறேன். கடல் அரிப்பின் காரணமாக கடல் நீர் அடிக்கடி அவர்களுடைய குடியிருப்புகளில் புகுந்து விடுகிறது என்றும், அவர்கள் தெரிவித்துள்ளார்கள். அவர்கள் படுகின்ற இந்தத் துன்பங்களைத் தீர்ப்பதற்காக அவர்களுடைய பகுதியில் ஒரு தூண்டில் வளைவு - Groyne எனப்படும் தூண்டில் வளைவு அமைக்க வேண்டும் என்ற அவர்களுடைய நீண்ட நாள் கோரிக்கையை ஏற்று பெரியதாளை பகுதியில் 4 கோடி ரூபாய் மதிப்பில் ஒரு புதிய தூண்டில் வளைவு ஏற்படுத்துவது பற்றி, பரிசீலிக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

### WWW என்றால் என்ன ?

WWW என்று இணையதள முகவரி ஆரம்பிக்கும் இந்த WWW என்பதன் பொருள் என்ன தெரியுமா ? “World Wide Web” இதைத் தமிழில் உலகளாவிய வலைப்பின்னல் என அழைக்கிறார்கள்.

### மின்...மின்...மின்...

- 1831இல் “பாரடே” மின் சக்தியைக் கண்டறிந்தார்கள்.
- 1856இல் சீமன்ஸ் மின்சார உற்பத்தியை கண்டறிந்தார்கள்.
- 1879இல் “எடிசன்” மின்சார விளக்கைக் கண்டுபிடித்தார்.

## “ரெஜிநெட்” மையம்

தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள 27 சார்பதிவாளர் அலுவலகங்களில், 11 சார்பதிவாளர் அலுவலகங்களை இணைத்து, “ரெஜிநெட்” சேவை மையம் அதாவது கணினி மூலம் வில்லங்கச் சான்று உடனடியாக வழங்கும் அமைப்பு இன்று என்னால் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. குறிப்பாகத் தமிழகத்தின் தென்னக மாவட்டங்களிலேயே முதன் முறையாக எனது செல்லக்குட்டி தொகுதியான சாத்தான்குளத்தில் இதனைத் துவக்கி வைப்பதில் நான் பெரும் மகிழ்ச்சி அடைகிறேன். இத்திட்டத்தின்படி, சாத்தான்குளத்தில் வசிக்கும் ஒருவர் தூத்துக்குடி மேலூரில் உள்ள சொத்திற்கு வில்லங்கச் சான்று பெறுவதற்கு தூத்துக்குடி மேலூர் சார் பதிவாளர் அலுவலகத்திற்கு செல்லாமலேயே சாத்தான்குளம் சார்பதிவாளர் அலுவலகத்திலேயே வில்லங்கச் சான்று பெற்றுக் கொள்ளலாம். இந்த ரெஜிநெட் மையத்தில் கணினிமயம் ஆக்கப்பட்டுள்ள இதர 11 சார்பதிவாளர் அலுவலகங்களின், வில்லங்கச் சான்றுகளையும் பெற்றுக் கொள்ளலாம். மேலும், இந்த 11 அலுவலகங்களில், ஏதாவது ஓர் அலுவலகத்திலிருந்து மற்ற “ரெஜிநெட்” சேவை மையம் உள்ள சார்பதிவாளர் அலுவலகங்கள் அமைந்துள்ள பகுதிகளில் உள்ள சொத்துக்களுக்கான, வில்லங்கச் சான்றுகளையும் பெறலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இளைஞர் நலம் மற்றும், விளையாட்டுத் துறையின் சார்பாக, (athletics)–க்காக தடகளம், வாலிபால், கால் பந்து, கூடைப் பந்து, கொகொ (Kho-Kho) ஆகிய

விளையாட்டுகளை இளைஞர்கள் விளையாடுகின்ற வசதியுடன் கூடிய, விளையாட்டு வளாகம் 20 இலட்சம் ரூபாய் செலவில் சாத்தான்குளத்தில் நிறுவப்படும் என்பதை மெத்த மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். அதே போல, சாத்தான்குளத்தில் உள்ள பல்வேறு கிராமங்களில் வாலிபால் விளையாட்டு மைதானம், 10 இலட்சம் ரூபாய் செலவில் 10 இடங்களில் உருவாக்கப்படும். இந்த அடிப்படை வசதிகளை எல்லாம் விரைவில் ஏற்படுத்தித் தந்து அவற்றை நானே மீண்டும் வந்து திறந்து வைப்பேன் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

## துணை நிற்கும் உதவிகள்

இந்த இனிய விழாவிலே நலிந்தோருக்கும், ஆதரவற்றோருக்கும், மகளிருக்கும், சமுதாயத்தின் அடித்தளத்துப் பிரிவினர் அனைவருக்கும் பயன் அளிக்கும் வகையில் பல்வேறு துறைகளின் சார்பாக நலத் திட்ட உதவிகளை நான் வழங்க இருக்கின்றேன். மொத்தம் 11,619 பயனாளிகளுக்கு 9 கோடியே 14 இலட்சம் ரூபாய் செலவில் பல்வேறு நலத் திட்ட உதவிகளை வழங்குவதில் நான் உண்மையிலேயே மகிழ்ச்சி அடைகிறேன். ஏனென்றால், இந்த உதவிகள் அனைத்தும் சமுதாயத்தின் அடித்தளத்து மக்கள் பொருளாதார ரீதியாக வாழ்வில் உயர்ந்திட ஏதுவாக இருக்கும். இவை ஏழை எளியோரின் வாழ்வில் ஏற்றத்தையும், வறுமையில் வாடுவோரின் வாழ்வில் வசந்தத்தையும் கொண்டு வர பெரிதும் துணை நிற்கும் என்று நான் நம்புகிறேன்.

இம்மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் கீழ் 2 கோடியே 93 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 1145 பேர் பயன் பெறும் வகையில் குடியிருப்புத் திட்டங்கள் – 1 கோடியே 79 இலட்சம் ரூபாய் மதிப்பில் 7059 பேர் பயன் பெறும் வகையில் சுய வேலை வாய்ப்புத் திட்டம் – கூட்டுறவுத் துறையின் கீழ் 1 கோடியே 50 இலட்சம் ரூபாய் மதிப்பில் 193 பேர் பயன் அடையும் வகையில் தொழில் கடன் வழங்குதல் – 18 இலட்சம் ரூபாய் மதிப்பில் சமூக நலத் துறையின் கீழ், 121 பேர் பயன் பெறும் வகையில் பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டம் – 52 இலட்சம் ரூபாய் மதிப்பில், தாட்கோ நிறுவனத்தின் கீழ் 146 பேர்களுக்கு கடன் வழங்குதல் – 70 இலட்சம் ரூபாய் மதிப்பில் மின்வளத் துறையின் கீழ் 190 பேர்களுக்கு இலவச வீடுகள் கட்டிக் கொடுத்தல் போன்ற நலத் திட்ட உதவிகள் இந்த விழாவிலே வழங்கப்படுகின்றன.

இவை மட்டுமின்றி 43 இலட்சம் ரூபாய் மதிப்பில் மாவட்ட தொழில் மையத்தின் கீழ் 73 பேர் பயன் பெறும் வகையில் கடன் உதவி வழங்குதல், மற்றும் வேளாண்மைத் துறை, ஆதி திராவிடர் நலத் துறை, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுத் திட்டம், வருவாய்த் துறை, ஆகிய பல்வேறு துறைகளின் சார்பாகவும் இந்த இனிய விழாவிலே, பல்லாயிரக்கணக்கான பயனாளிகளுக்கு நலத் திட்ட உதவிகள் வழங்கப்படுகின்றன என்பதையும் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த நலத் திட்ட உதவிகள் அனைத்தையும் பயனாளிகள் அனைவருக்கும் நானே வழங்க வேண்டும் என்றுதான் விருப்பம். இருந்தாலும் அதற்கு நேரம் போதாது என்பதை நீங்கள் அறிவீர்கள். எனவே, 15 பயனாளிகளுக்கு மட்டும் நலத் திட்ட உதவிகளை எனது கரங்களாலே வழங்க உள்ளேன். எஞ்சியுள்ள அனைவருக்கும் அமைச்சர் பெருமக்களும் நாடாளுமன்ற, சட்ட மன்ற உறுப்பினர்களும், அரசு அலுவலர்களும், இங்கேயே, இப்போதே வழங்கி சிறப்பிப்பார்கள் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அரசு உதவிகள் பெறவுள்ள பயனாளிகள் அனைவரும் தாம் செய்து வருகின்ற தொழில்களில் மென்மேலும் உயர்வினைப் பெற வேண்டும் என்று வாழ்த்தி மகிழ்கிறேன்.

உலகப் புகழ் பெற்ற ஓவியர் "மைக்கேல் ஏஞ்சலோ", (Michaelangelo) ஏசு பெருமானின் "கடைசி இரவுச் சாப்பாடு" – The Last Supper – என்னும் ஓவியத்தை, வரையத் திட்டமிட்டு இருந்தார். ரோமாபுரி ஆலயம் ஒன்றில், அந்த ஓவியம் வரையப்பட வேண்டும். ஏசு பெருமான், தன் 12 சீடர்களுடன் இருக்கின்ற காட்சியை, ஓவியர் வரைய ஆரம்பித்தார். ஏசு பெருமான் எப்படி இருப்பார் ? அவருடைய முகப் பொலிவு எப்படி இருந்திருக்கும் என்பதைக் கற்பனை செய்து, எழுதுவதை விட பாலொழுகும் ஒரு பச்சைக் குழந்தையின் முகத்தை மாதிரியாக வைத்து எழுதினால் சிறப்பாக இருக்கும் என்று கருதிய மைக்கேல் ஏஞ்சலோ அப்படி ஒரு சிறுவனைத் தேடினார். ஒரு சாந்த சொரூபனாக அழகிய முகத்தோடு, ஒரு சிறுவன் கிடைத்தான். அந்தக் குழந்தையின் முகத்தை மாதிரியாக வைத்து ஏசு பெருமானின் திருமுகம் வரையப்பட்டது. அதே போல, சீடர்களுடைய முகங்களை வரைய வேண்டும். 11 சீடர்களுடைய முகங்களை ஒரு வழியாக வரைந்து விட்டார். ஆனால், ஏசு பெருமானை 30 வெள்ளிக் காசுகளுக்காக காட்டிக் கொடுத்த சீடனாகிய ஜூடாஸின் முகம் எப்படி இருக்கும் என்பதை அவரால் கற்பனை செய்ய முடியவில்லை. ஆகவே அப்படிப்பட்ட ஒரு முகத்தைத் தேடினார். நாட்கள் உருண்டு, மாதங்கள் கழிந்தன. மாதங்கள் உருண்டு, ஆண்டுகள் கழிந்தன. அப்போதும் ஜூடாஸின் முகத்துக்கான, மாதிரி கிடைக்காததால், ஓவியம் முற்றுப் பெறாமலே இருந்தது. சில ஆண்டுகளுக்குப் பிறகு, ஒரு நாள், ஓவியர் மைக்கேல் ஏஞ்சலோவின் வீட்டு வாயில்படியில் ஒருவன் வந்து விழுந்தான். மைக்கேல் ஏஞ்சலோ அவனைப் பார்த்தார்.

---

★ ஓராயிரம் முறை நீ உனது இலட்சியத்தைக் கைக்கொள். **முயற்சி...**

★ துன்பம் விளைவதற்கு அறியாமையைத் தவிர வேறு எதுவும் காரணமில்லை. **அறியாமை...**

**பகை...**



★ பகை, பொறாமை ஆகியவற்றை நீ வெளியிட்டால் அவை வட்டியும் முதலுமாக மீண்டும் உன்னிடமே திரும்பி வந்து சேர்ந்துவிடும்.

*– சுவாமி விவேகானந்தர்*

---

அந்த முகத்தில் ஒரு வஞ்சகம் இருந்தது. வந்தவன் பசியாலும், தாகத்தாலும், களைப்பாலும், சவம் போல விழுந்து கிடந்தான். அவனைத் தொட்டுத் தூக்கி உள்ளே அழைத்துச் சென்று, பருகுவதற்குப் பழரசம் தந்து உண்பதற்கு உணவும் தந்தார் ஓவியர். அவன் உண்ணும் போதும் அவனையே உற்று நோக்கிக் கொண்டிருந்தார். அவர் மனதுக்குள் ஒரு முடிவு எடுத்தார். "இவனது முகம், ஜூடாஸின் முகத்திற்குச் சரியாக இருக்குமே" என்று நினைத்தார். அவன் பசி தீர்ந்து கொஞ்சம் தெளிவான நிலைக்கு வந்த பிறகு, "உன்னை வைத்து, ஓர் ஓவியம் வரையப் போகிறேன்" என்று சொன்னார். அவனும் சரி என்றான். அவனை அவர் ஓவியம் வரைந்து கொண்டிருந்த ஆலயத்திற்கு அழைத்துச் சென்று ஓரிடத்தில் அமர வைத்தார். "உன் முகத்தை வைத்து, ஏசு பெருமானைக் காட்டி கொடுத்த ஜூடாஸின் முகத்தை வரையப் போகிறேன்" என்று சொல்லிவிட்டு, வண்ணங்களையும், தூரிகைகளையும் சேகரிக்கத் தொடங்கினார். அங்கு வரையப்பட்டிருந்த ஓவியங்களை அந்த இளைஞன் பார்த்துக் கொண்டிருந்தான். திடீரென்று அவன் கதறி அழத் தொடங்கினான். ஓவியரால் அவனை சமாதானப்படுத்த இயலவில்லை. ஒரு வழியாக, அவன் கதறலை நிறுத்தியதும், "ஏன் இப்படிக் கதறி அழுகிறாய்? உனக்கு என்ன நேர்ந்தது?" என்று அவனிடம் கேட்டார். "நான் சிறு பையனாக இருந்த போதே, இந்த இடத்திற்கு நான் வந்தது நினைவிருக்கிறது. அதோ வரைந்திருக்கிறீர்களே, ஏசு பெருமான் ஓவியம் அந்த முகம் என்னுடைய முகம் தான். இன்று நான் வளர்ந்த பிறகு ஜூடாஸின் முகத்திற்கும், என்னுடைய முகமே பயன்படப் போகிறது என்று நினைத்துப் பார்த்தேன். அழுகை வந்தது. எப்படி இருந்த நான் எப்படி மாறிவிட்டேன்! அமைதி தவழும் அந்த அழகிய முகம் எங்கே போனது? இன்று என் முகத்தை என்னாலேயே பார்க்க சகிக்க முடியவில்லை. எத்தனை வஞ்சகம் ததும்பும் விழிகள் என் விழிகள்! கூடா நட்பால் இந்த நிலைமைக்கு நான் ஆளாகி இருக்கிறேன்", என்று அவன் சொன்னானாம். மைக்கேல் ஏஞ்சலோ விக்கித்து நின்று விட்டார். பால் வழியும், பச்சைக் குழந்தையின் முகம் இன்று ஒரு துரோகியின் முகமாக மாறியதற்கு என்ன காரணம்? சமூகச் சூழல் தான் காரணம். அவன் சேர்ந்த சேர்க்கை தான் காரணம் என்று அவர் நினைத்தார்.

மைக்கேல் ஏஞ்சலோ அன்று என்ன நினைத்தாரோ அதைத் தான் நாமும் இன்று நினைக்க வேண்டியிருக்கிறது.

"எந்தக் குழந்தையும் நல்ல குழந்தைதான்
மண்ணில் பிறக்கையிலே – பின்

நல்லவர் ஆவதும், தீயவர் ஆவதும் அன்னை
வளர்ப்பதிலே"

என்ற புரட்சி தலைவர் எம்.ஜி.ஆருடைய திரைப்படப் பாடல் தான் என் நினைவுக்கு வருகிறது. நீங்கள் எல்லோரும் அந்தப் பாடலை கேட்டிருப்பீர்கள்.

இளைஞர்களுக்கு நல்ல கல்வியும், நல்ல பழக்க வழக்கங்களும் கிடைக்கும்படி பார்த்துக் கொள்ள வேண்டியது பெற்றோர்களது கடமை. அதைப் போலவே, நல்ல சமூகச் சூழலை ஏற்படுத்தித் தர வேண்டியது, அரசின் கடமை. இளமைப் பருவம் என்பது வாழ்க்கைக்கான ஆயத்தப் பருவம். அந்தப் பருவத்தில் இளைஞர்களுடைய கவனம் சிதறாதபடி, கல்வியிலும் உடல் நல மேம்பாட்டிலும் சிறந்தவர்களாக, அவர்களை உருவாக்க வேண்டும். அதற்கு கல்வி வாய்ப்புகளும் உடல் நலம் பேணும் விளையாட்டு வசதிகளும் வேண்டும். இந்த லட்சியத்தோடு தான், உங்கள் அன்புச் சகோதரியின் அரசு ஒரு வலிமை மிக்க இளைய தமிழகத்தை உருவாக்க முனைப்போடு செயல்பட்டு வருகிறது.

இந்த லட்சியத்தை மனதில் வைத்துத் தான் பிற்பட்ட பகுதியாகிய சாத்தான்குளத்திற்கு ஒரு நவீன விளையாட்டு வளாகத்தை தந்துள்ளேன். இந்தப் பகுதியிலுள்ள பெண்கள் மேல்கல்வி கற்று சிறக்க அரசு மகளிர் கல்லூரி ஒன்றையும் கொடுத்துள்ளேன். இன்னும் இவற்றைப் போல ஏராளமான நன்மைகளை எனது செல்லக்குட்டியாகிய சாத்தான்குளம் தொகுதிக்கும், தூத்துக்குடி மாவட்டத்திற்கும் தொடர்ந்து தர உள்ளேன் என்ற மகிழ்ச்சியான செய்தியை உங்கள் அனைவர்க்கும் கூறிக் கொண்டு,

இந்த விழா சீரோடும் சிறப்போடும் நடைபெற காரணமாக இருந்த அனைவருக்கும் குறிப்பாக மாவட்ட ஆட்சித் தலைவருக்கும் அரசு அலுவலர்களுக்கும் காவல் துறையினருக்கும் எனது மனமார்ந்த பாராட்டுதல்களைத் தெரிவித்து, இந்த தூத்துக்குடி மாவட்ட அரசு விழா முதலில் மாவட்டத் தலைநகரமாகிய தூத்துக்குடியில்தான் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அதன் பிறகு திடீரென்று சாத்தான்குளம் இடைத்தேர்தல் வந்தது. நீங்களும் மகத்தான வெற்றியை எங்களுக்கு அளித்தீர்கள். அதன் பின்னர், இந்த விழா நடத்துவதற்கான தேதி நெருங்கிவிட்டது. அப்போது திடீரென்று எனக்கு ஒரு எண்ணம் தோன்றியது. சாத்தான்குளம் மக்கள் இவ்வளவு நம்பிக்கை வைத்து வெற்றிக் கனியை அளித்துள்ளார்கள். இந்த தூத்துக்குடி மாவட்ட விழாவை சாத்தான்குளத்திலேயே நடத்தினால் நன்றாக இருக்குமே என்று கருதி அரசு அதிகாரிகளை அழைத்து இதைப் பற்றி எல்லாம் விவாதித்தேன். அப்போது மூத்த அரசு அதிகாரிகள் அனைவருமே இது எப்படி சாத்தியமாகும். இன்னும் சில நாட்களே இருக்கின்றன. தூத்துக்குடி என்றால் அது மாவட்டத் தலைநகரம். இப்படிப்பட்ட பெரிய விழாவை நடத்துவதற்கு தேவையான எல்லா வசதிகளும், கட்டமைப்புகளும் அங்கேதான் இருக்கிறது. திடீரென்று சாத்தான்குளத்தில் நடத்தச் சொன்னால் எப்படி முடியும். அதை நடத்த இயலாது என்றார்கள். அப்போது புதிய கலெக்டராக அன்றைக்குத்தான் இந்த மாவட்ட ஆட்சித் தலைவராக திரு. ராஜாராமன் அவர்களை நியமிக்க முடிவு செய்து அவரை நியமித்தேன். அன்றைய தினம் அவரை அழைத்துக் கேட்ட போது, அவர் உடனேயே இதை ஒரு சவாலாக ஏற்றுக் கொண்டு இதற்கு சம்மதித்தார். மாவட்ட ஆட்சித் தலைவராக பொறுப்பேற்றுக் கொண்ட ஒன்பது நாட்களுக்குள்ளேயே இந்த பிரமாண்டமான விழாவை வெற்றிகரமாக ஏற்பாடு செய்து நடத்திக்காட்டிய மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. ராஜாராமன் அவர்களை நான் பாராட்ட கடமைப்பட்டிருக்கிறேன். அவருக்கு ஒத்துழைப்பு நல்கிய அரசு அலுவலர்கள், காவல் துறையினர் அனைவருக்கும் எனது நன்றியையும், பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறேன். •

# பெரம்பலூர் மாவட்ட மகளிரின் புரட்சி

பெரம்பலூர் மாவட்டத்தில் பல பகுதிகளில் கள்ளச் சாராயம் அதிக அளவு காய்ச்சி விற்கப்படுவதாக மகளிர் சுய உதவி குழுவினர் தாங்கள் பங்கேற்கும் கூட்டங்களில் தெரிவித்து வந்தனர். இதனைத் தொடர்ந்து மாவட்ட நிர்வாகம் மற்றும் காவல்துறை இணைந்து கள்ளச் சாராயம் அதிக அளவு காய்ச்சப்படுவதாக புகார் வந்த அனைத்து கிராமங்களிலும், மதுஒழிப்புக்குழு அமைத்து குழு உறுப்பினர்களுக்கு அடையாள அட்டைகள் வழங்கப்பட்டன.

பின்னர் அக்கிராமத்தில் கள்ளச்சாராயம் காய்ச்சும் தொழிலில் ஈடுபட்டு வந்த மகளிரை உடனடியாக மகளிர் சுயஉதவிக்குழு உறுப்பினர் களாக்கி அவர்களின் மறுவாழ்விற்காக தொழில் பயிற்சி அளிக்கப்பட்டு சுயத்தொழில் தொடங்கிட வங்கிகள் மூலம் கடனுதவிகள் வழங்கிட ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

தமிழகத்தில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் கள்ளச்சாராயத்தை ஒழித்து அத்தொழில் செய்துவந்த வர்களுக்கு மறுவாழ்வு அளித்திட சுய உதவி குழுக்கள் மூலம் சிறுதொழில் தொடங்கிட பயிற்சி அளிக்கப்பட்டு வங்கிகள் மூலம் கடனுதவிகள் வழங்கிட அரசு உத்தரவிட்டுள்ளது. இத்திட்டத்தினை தமிழகத்திலேயே முதன்முதலாக பெரம்பலூர் மாவட்டத்தில் புதுக்கோட்டை கிராமத்தில் முதல் கட்டமாக கள்ளச் சாராயம் காய்ச்சி வந்த பெண்களின் மறுவாழ்விற்காக இதுவரை 35 பெண்களுக்கு ரூ.7.50 இலட்சம் கடனுதவி வழங்கப்பட்டுள்ளது.

கள்ளச்சாராயம் காய்ச்சியவர்களின் மறுவாழ்விற்கு குலமாணிக்கம் இந்தியன் ஓவர்சீஸ் வங்கியும், திருமழபாடி தொடக்க கூட்டுறவு வங்கியும் தலா 15 நபர்களுக்கும் சுய தொழில் கடன் வழங்கியுள்ளது, இதுபோல் தமிழக அரசின் மதுவிலக்கு அமலாக்க பிரிவின் சேமிப்பு நிதியிலிருந்தும் 5 நபர்களுக்கு சுய தொழில் கடனுதவி வழங்கப்பட்டுள்ளது.

பொதுமக்கள் ஒத்துழைப்புடன் கள்ளச்சாராயம் முற்றிலும் ஒழிக்கப்பட்டுள்ள புதுக்கோட்டை ஊராட்சியில் தமிழக அரசின் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களில் சாலை மேம்பாடு, பாலம் கட்டுதல், சிமெண்ட் சாலை, மயான பாதை, தூர் வாரும் பணிகள், குடிநீர் குழாய் நீட்டிப்பு, மகளிர் சுய உதவிக்குழு கூட்ட கட்டம், இந்திரா நினைவு குடியிருப்பு வீடுகள் என்று ரூ. 10 இலட்சம் மதிப்பில் இரண்டு ஆண்டுகளில் வளர்ச்சிப் பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன.



, கள்ளச்சாராய ஒழிப்பு நடவடிக்கைகளுக்கு மாவட்ட நிர்வாகம் முன்னுரிமை கொடுத்து மக்களின் ஒத்துழைப்புடன் பெரம்பலூர் மாவட்டத்தை கள்ளச்சாராயம் இல்லாத மாவட்டமாக்கிட நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

இதன் மூலம் கள்ளச்சாராயம் காய்ச்சியப் பெண்கள் தற்போது கறவை மாடுகள் வளர்த்து பால் விற்பனை செய்து வருகிறார்கள். மேலும் சிலர் பெட்டிக்கடை வைத்து சமூக அந்தஸ்துடன் சிறுதொழில் செய்துவருகிறார்கள்.

கள்ளச்சாராயம் காய்ச்சும் தொழில் செய்வதிலிருந்து விடுபட்டு தற்போது வங்கி கடனுதவியால் கறவை மாடு வளர்த்து பால் விற்பனை செய்து வரும் ஜோஸ்பின், கள்ளச்சாராயம் காய்ச்சி போலீசுக்கும் பொது மக்களுக்கும் பயந்து, பயந்து முன்பு தொழில் செய்துவந்தோம். தற்போது தமிழக அரசின் உதவியுடன் வங்கிகளில் கடன் பெற்று பால் விற்பனை செய்தும், சிறுதொழில் செய்தும் தலைநிமிர்ந்து நிற்கிறோம் என்றும், கள்ளச்சாராயத் தொழில் செய்வதிலிருந்து மறுவாழ்வு பெற்றுள்ள லலிதா, சுசிலா, சுகந்தி ஆகியோர் தமிழக அரசு வழங்கியுள்ள கடனுதவியால் சிறுதொழில் செய்து மனநிம்மதியுடன் குழந்தைகளுடன் மகிழ்ச்சியாக இருக்கிறோம் என்று தெரிவித்தார்கள். ஆரோன் மனைவி சுகந்தி என்பவர் அரசின் கடனுதவியால் தற்போதைய கோடை பருவத்தில் உளுந்து சாகுபடி செய்து நல்ல மகசூலுடன் அறுவடை செய்துள்ளேன் என்று தெரிவித்தார்.

ஆரோக்கியமேரி-சகாயராஜ் தம்பதிகளின் மகள் தேவிபிரசிலா நான் குலமாணிக்கம் தூய இன்னாசியர் உயர்நிலைப்பள்ளியில் 7-ஆம் வகுப்பு படித்து வருகிறேன், முன்பு பள்ளியில் எல்லோரும் என்னை நீ மதுக்கோட்டையிலிருந்து வருகிறாய் என்று கேலி பேசுவார்கள். எங்கள் ஊரில் கள்ளச்சாராயம் முற்றிலும் ஒழிக்கப்பட்டுள்ளதால், இப்பொழுது என்னை யாரும் கிண்டல் செய்வதில்லை நிம்மதியாக பள்ளிக்கு சென்று வருகிறேன் என்று மகிழ்ச்சியாக தெரிவித்தார்.

புதுக்கோட்டை கிராமத்தில் உள்ள அன்னை, மாதா மகளிர் சுய உதவி குழுக்கள் சுழற்சி நிதியாக தலா ரூ. 25 ஆயிரம் பெற்று நன்றாக செயல்பட்டுள்ளதால் தற்போது பொருளாதார வளர்ச்சி கடனாக காளான் வளர்ப்பிற்கு ரூ. 1.20 இலட்சம் வங்கி கடனுதவி பெற்று காளான் வளர்ப்பு விரைவில் தொடங்கவுள்ளார்கள்.

**எம்.ஏ. லாரன்ஸ்,**
செய்தி–மக்கள் தொடர்பு அலுவலர்.



# சமத்துவ சமுதாயத்தை உருவாக்குவதே எனது இலட்சியம்

– மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள்
13–3–2003 அன்று
திருநெல்வேலி மாவட்ட அரசு விழாவில்
ஆற்றிய உரை

திக்கெல்லாம் போற்றும் திருநெல்வேலியில் நடைபெறும் இந்தத் திருநெல்வேலி மாவட்ட அரசு விழாவில் என் அன்புக்குரிய உங்களையெல்லாம் காணவும், என் எண்ணங்களை உங்களோடு பகிர்ந்து கொள்ளவும் மொத்தம் 438.73 கோடி ரூபாய் மதிப்பில், நிறைவேற்றப்பட்டிருக்கும் திட்டங்களைத் திறந்து வைக்கவும், புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டவும், நலத் திட்ட உதவிகளை வழங்கவும், நல்லதொரு வாய்ப்பு கிடைத்தது குறித்து நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

"தென்பாண்டி நகர்" என்னும் திருப்பெயரைப் பெற்றது திருநெல்வேலி. பாண்டி நாட்டின் பழம் பெரும் பகுதியாகிய திருநெல்வேலி மாவட்டத்தில் ரோமாபுரி நாட்டின் நாணயங்கள் கண்டு எடுக்கப்பட்டு இருப்பது திருநெல்வேலியின் பழம்பெருமையை நமக்கு உணர்த்துவதாக உள்ளது.

சங்க காலத்தைச் சேர்ந்த "இறையனார் அகப்பொருள்" என்னும் நூலில் இம்மாவட்டம் குறித்துப் பேசப்படுகிறது. இப்பகுதியை ஆண்ட "நெடியோன்" என்று அழைக்கப்படும் வடிம்பலம்ப நின்ற பாண்டியன் மற்றும் மாகீர்த்தி ஆகியோரைப் பற்றித் திருவிளையாடல் புராணத்தில் பேசப்படுகிறது. சங்க காலத்தில் இம்மாவட்டத்தில் ஆட்சி செய்த முதுகுடுமிப் பெருவழுதி மன்னனைப் பற்றிய செய்தி இம்மாவட்டத்தைச் சேர்ந்த புலவர், மாங்குடி மருதனாரின் "மதுரைக் காஞ்சி" என்ற நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது. இளம் பெருவழுதி மற்றும் பெருவழுதி ஆகிய மன்னர்கள் சங்க இலக்கியத்திற்கு ஆற்றிய பங்கு மகத்தானது. முதல் பாண்டிய அரசை, கி.பி. 575–ஆம் ஆண்டில் கடுங்கோன் என்ற அரசன் நிறுவியதாகவும்; நெடுஞ்சடையன், பராந்தகன் ஆகிய அரசர்கள், தற்போதைய உக்கிரன் கோட்டையில் கி.பி. 768 முதல் கி.பி. 815–ஆம் ஆண்டு வரை வலுவான கோட்டையை அமைத்து அரசாட்சி செய்ததாகவும், வரலாற்றுச் சான்றுகள் தெரிவிக்கின்றன. இத்தகைய தொன்மையான வரலாற்றுச் சிறப்பு வாய்ந்தது திருநெல்வேலி மாவட்டம். பின்னர், கி.பி. 1801–ஆம்

ஆண்டு முதல் தமிழகம் முழுவதும் ஆங்கிலேய கிழக்கிந்தியக் கம்பெனியின் ஆட்சியின் கீழ் வந்ததை நாம் வரலாற்றில் காண்கிறோம்.

பொருநை நதிக்கரையில் அமைந்த ஆதிச்சநல்லூரில், 3000 ஆண்டுகளுக்கு முன்பாகவே நெற்பயிர் வளர்த்து செழித்த வரலாற்றை ஆராய்ச்சிகள் எடுத்துக் காட்டுகின்றன.

முற்காலத்தில், தற்போதைய திருநெல்வேலி நகரம் அமைந்துள்ள பகுதி மூங்கில் காடாக இருந்தது. வேதசர்மா என்ற பக்தர் இருந்ததாகவும்; அச்சமயம் பெரும் பஞ்சம் நிலவியதால் மிகவும் சிரமப்பட்டுச் சேகரித்த நெல்லை வீட்டிற்கு முன் உலர வைத்து விட்டு குளிக்க ஆற்றுக்குச் சென்றதாகவும்; குளித்துக் கொண்டு இருக்கும் போது பஞ்சம் தீர மழைக்காக இறைவனை வேண்டியதாகவும்; உடன் திடீர் என மேகம் மழை பொழிந்தது எனவும்; நெல்லைக் காக்க வேண்டுமே என்று விரைவாக வீட்டுக்கு வந்ததாகவும்; இறைவன் அருளால் அந்த நெற்பகுதியில் மட்டும் மழை படாமல், நெல்லுக்கு வேலி அமைத்து இறைவன் காத்ததாகவும்; அது முதல் திரு+நெல்+வேலி, அதாவது, திருநெல்வேலி என இந்நகர் அழைக்கப்படுவதாகவும் புராண வரலாறு கூறுகிறது.

"தென்னிந்தியாவின் மிகப் பழமையான நாகரிகம், நனி சிறந்து விளங்கியது, பொருநைக் கரையிலே" என்று 'திருநெல்வேலிச் சீமை வரலாறு' எழுதிய ராபர்ட் கால்டுவெல் (ROBERT CALDWELL) புகழ்ந்து மகிழ்ந்துள்ளார்.

தேவாரம் பாடிய, திருஞான சம்பந்தப் பெருமானோ, 'திக்கெல்லாம் புகழும் திருநெல்வேலி' என்று பாராட்டியுள்ளார்.

## பஞ்ச சபைகள்

நடராஜப் பெருமானின் திருநடனம் நடைபெறும் இடங்களை, 'சபை' என்று அழைக்கிறோம்.

"பஞ்ச சபைகள்" என்று அழைக்கப்படுகின்ற 5 சபைகளில் 2 சபைகளை திருநெல்வேலி மாவட்டம் தன்னகத்தே கொண்டிருக்கிறது என்பது சைவம் தழைக்கும் பூமி இது என்பதற்குச் சான்றாக விளங்குகின்றது..

திருநெல்வேலியில் நெல்லையப்பர் திருக்கோயிலில் நடராஜப் பெருமான் திருநடனம் நடைபெறும் சபை தாமிரத் தகடுகளால் வேயப்பட்டிருப்பதால், "தாமிர சபை" என்று அழைக்கப்படுகிறது. அது ஒரு சபை.

திருக்குற்றாலத்தில், நடராஜப் பெருமானின் நடனம் மற்றும் நமது பண்பாடுகள் பற்றி ஓவியங்கள் அமைக்கப்பட்டிருப்பதால், அது 'சித்திர சபை' என்று அழைக்கப்படுகின்றது. அது மற்றொரு சபை. ஆக நடராஜப் பெருமானின் திருச்சபைகளில், இரண்டு சபைகள், இந்த மாவட்டத்திற்குள்ளே அமைந்திருக்கின்றன என்பதை இந்தச் சபையில் கூறிக் கொள்வதில் நான் மெத்த மகிழ்ச்சி அடைகிறேன்.

இறைவனை வழிபடுவதற்கு நாதோபாசனையும், அதாவது நாத உபாசனையும், ஒரு சிறந்த வழி என்று கண்டவர்கள் நமது தமிழர்கள்.

இறைவன் "ஏழிசையாய், இசைப்பயனாய்" இருப்பவன் என்று சுந்தரமூர்த்தி நாயனார், அழகாகத் தமது தேவாரப் பாடலிலே குறிப்பிடுவார்.



திருநெல்வேலி நெல்லையப்பர் கோயிலின் மணிமண்டபத்தில் இசைத் தூண்கள் உள்ளன. இவை தமிழ்நாட்டுச் சிற்பிகளின் திறனை உலகிற்கு எடுத்து இயம்புகின்றன. நடுவில் ஒரு பெரிய தூண். இதைச் சுற்றி 48 கல் தண்டுகள் கொண்ட ஒற்றைக் கல்லினால் ஆன இசைத் தூண்கள் மணிமண்டபத்தின் இருபுறங்களிலும் உள்ளன. இனிய ஒலி தரும் இந்த இசைத் தூண்கள், தமிழ்நாட்டிலே மிகப் பழமையானதாகக் கருதப்படுகின்றன.

திருநெல்வேலி மாவட்டத்தில் கிருஷ்ணாபுரத்தில் அமைந்துள்ள, கிருஷ்ணாபுரம் கோயில் சிற்பங்கள் சிற்பக் கலைக்கு சிறந்ததொரு சாட்சியாக விளங்குகின்றன. இவை மட்டுமன்றி, அனைத்து மதங்களின் புகழ் மிகுந்த வழிபாட்டுத் தலங்களையும், உள்ளடக்கிய மாவட்டமாகத் திருநெல்வேலி திகழ்வது நமக்கெல்லாம் பெருமை அளிக்கின்றது.

## நெல்லைத்தமிழ்

திருநெல்வேலி மாவட்டத்தில், மேற்குத் தொடர்ச்சி மலையின் அடிவாரத்தில் அமைந்துள்ள திருக்குற்றால நகரம், 2000 ஆண்டுகளுக்கு முன்னரே தோன்றியதாக வரலாறு கூறுகின்றது. அருவிகள் பெருகி ஓடும் இம்மலைப் பகுதிக்கு, அகத்திய மாமுனிவர் வந்ததாக இதிகாசங்களில் கூறப்படுகின்றது.

தமிழ் பிறந்தது பொதிகை மலையில் என்பார்கள். தென்றல் பிறப்பதும் அங்கு தான். ஆகவே தான் தமிழ் தென்றலைப் போல் மென்மையாகவும், இனிமையாகவும் இருக்கிறது என்று நான் எண்ணுகிறேன்.

பொதிகை மலையில் வாழ்ந்த தமிழ் முனிவர் அகத்தியர் தொல்காப்பியத்திற்கு விளக்கம் வழங்கிய சேனாவரையர், பழந்தமிழ் புலவர் நப்பசலையார், கடையத்தில் பிறந்த பரிமேலழகர், வ.உ. சிதம்பரனார், டாக்டர் ரா.பி. சேதுபிள்ளை, சிறுகதைத் தந்தை என்று போற்றப்படும் புதுமைப்பித்தன், முதன் முதல் எம்.எல். பட்டம் பெற்ற தமிழறிஞர் கா. சுப்பிரமணியப் பிள்ளை, மொழி ஞாயிறு தேவநேயப் பாவாணர், தென்காசி ரசிக மணி டி.கே.சி., பேராசிரியர் மனோன்மணியம் சுந்தரனார், திராவிட மகா முனிவரான மாதவ சிவஞான முனிவர், திராவிட மொழிகளில் ஒப்பிலக்கணம் வரைந்த கால்டுவெல், திருவாசகத்தையும், திருக்குறளையும் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்த ஜி.யு. போப், ரேனியஸ் ஐயர், ஆகிய தமிழ் முனிவர்களாலும், தமிழ் அறிஞர்களாலும், நெல்லைத் தமிழ் ஓர் இன்பத் தமிழாய் வலம் வந்து கொண்டிருக்கிறது.

இலக்கிய உலகில் உன்னத இடம் என்றுமே நெல்லைக்கு உண்டு. அன்றும், இன்றும், என்றுமே தமிழ் வளர்ச்சியில் நெல்லை மாவட்டம் அரிய பல பணிகளை ஆற்றி வருகிறது. அருமையான நூல்களை வழங்கும் தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் அமைந்து, அயராது பணியாற்றி வருவது நெல்லையில் தான்.

திருநெல்வேலி மாவட்டத்தின் இன்னும் ஒரு பெருமை, குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை, என்னும் ஐந்து வகை நிலங்களையும் தன்னகத்தே அடக்கிய மாவட்டமாக திகழ்கிறது என்பதே.

மூலிகைகளும், சித்தர்களும் வாழும் பொதிகை மலையும் கட்டபொம்மனும், ஜாக்ஸன் துரையும் பேச்சு நடத்திய பாளையங்கோட்டையின் பழைய கோட்டையும் - பாய் நெசவுக்குப் புகழ் பெற்றதும், சுவாமி சிவானந்தர் அவதரித்த புண்ணிய பூமியுமான, பத்தமடையும் – பைந்தமிழ் பாரதி படித்த நெல்லை ம.தி.தா. இந்து மேல்நிலைப் பள்ளியும்,பலகாலம் வாழ்ந்த கடையம் பகுதியும் – தென்னகத்தின் ஆக்ஸ்போர்டு (OXFORD) என்று பாராட்டப்படும் படித்தவர்களும், பண்பாளர்களும், அருமையான கல்வி நிறுவனங்களும் உள்ள பழமையான பாளையங்கோட்டையும் – தின்னத் தின்னத் திகட்டாத திருநெல்வேலி அல்வாவும் – கல்லிடைக்குறிச்சி அப்பளமும் – பெண்களுக்குப் பெருமை தரும் திருவிளக்கு தொழில் நுட்பத்தில் சிறந்து விளங்கும் வாகைக்குளமும் – தென்னகத்திற்கே ஒளி தர இருக்கும் கூடன்குளம் அணுமின் நிலையமும் – உள்ளடக்கிய உன்னத பூமி நெல்லைச் சீமையே ஆகும்.

இந்திய அரசியல் அமைப்பின் 8வது அட்டவணையில் தமிழ் உட்பட 18 தேசிய மொழிகளும் ஏற்கெனவே சேர்க்கப்பட்டுள்ளன. தமிழை ஒரு Classical Language ஆக அறிவிக்க வேண்டுமென்று மத்திய அரசுக்கு கோரிக்கை விடுத்திருக்கிறோம். அது மட்டுமின்றி இந்திய அரசியலமைப்பு சட்டத்தின் 8ஆவது அட்டவணையில் ஏற்கெனவே சேர்க்கப்பட்டுள்ள தமிழ் உள்ளிட்ட 18 தேசிய மொழிகளையும் மத்திய அரசின் ஆட்சி மொழியாக அறிவிக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்திருக்கிறோம். இதற்கு மத்திய அரசு செவி சாய்க்க வேண்டும் என்று இந்த கூட்டத்தின் வாயிலாக மீண்டும் வலியுறுத்த விரும்புகிறேன்.

## வலுவான நிலையில் மகளிர் சுய உதவிக்குழுக்கள்

திருநெல்வேலி மாவட்டத்தைப் பொறுத்தமட்டில் 5391 மகளிர் சுய உதவிக் குழுக்கள் இந்த மாவட்டத்தில் அமைந்துள்ளன என்பதையும்; இந்த குழுக்களில் மொத்தம்

### புகை நமக்குப் பகை



ஒருவர் புகைப் பிடிக்கும் போது நிகோட்டின், கார்பன்மோனாக்சைடு, அமோனியா, ஆர்சனிக், மெத்தனால், காரீயம் , வினைல் குளோரைடு உள்ளிட்ட விஷங்களை உள்ளே இழுக்கிறார். இந்த நச்சுக்கள் மனித உடலில் ஒவ்வொரு அணுவையும் தாக்குகின்றன.



98 ஆயிரத்து 346 பெண்கள் உறுப்பினர்களாக உள்ளனர் என்பதையும்; இவர்களுடைய சேமிப்புத் தொகை 10 கோடியே 89 லட்சம் ரூபாய் என்ற நிலையில் மகளிர் சுய உதவிக் குழுக்கள் இயக்கம், திருநெல்வேலி மாவட்டத்தில் நல்ல வலுவான நிலையில் உள்ளது என்பதையும் அறிந்து நான் பாராட்டுகிறேன். மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன்.

## மழைநீர் சேகரிப்பு அவசியம்

தமிழ்நாட்டில் அவ்வப்போது பருவமழை தவறுவதால் குடிநீர் தேவைக்கு நாம் அல்லல் படுகின்றோம். இந்த அவல நிலையை மாற்றி வான் தந்த மழை நீரை முறையோடு சேமித்து நாம் வாழ்வதோடு நமது சந்ததியினரும், மழை நீரின் அவசியம் பற்றி உணர்ந்து வாழ நாம் இப்போதே அதற்கு அடித்தளம் போட்டாக வேண்டும். மழை பெய்யும் போது அந்நீர் கடலில் சென்று வீணாக கலப்பதைத் தடுத்து முறையாக சேமித்து பூமியில் செலுத்தினால் நிலத்தடி நீர் வளம் அதிகரிக்கும். கடல் நீர் உள்ளே புகாமல் நிலத்தடி நீரின் தரமும் உயரும். குடிநீர் ஆதாரமும் பெருகும்.

கால்நடைகள் ஆனாலும் சரி, மனிதர்கள் ஆனாலும் சரி, அனைவருக்கும் அன்றாடம் தேவைப்படுகின்ற தண்ணீரை நாம் வீணாக்கக் கூடாது. இதற்காக, தொலை நோக்கு சிந்தனையுடன் உங்கள் சகோதரியின் தலைமையிலான இந்த அரசால் அறிமுகப்படுத்தப்பட்ட உன்னதத் திட்டம் தான் "மழை நீர் சேகரிப்புத் திட்டம்".

நீர் வளம் பெருகினால், நில வளம் பெருகும், நில வளம் பெருகினால், உலகம் செழிக்கும், என்ற அடிப்படையில் தான் இதனை மக்கள் இயக்கமாக ஆக்க நான் நடவடிக்கை மேற்கொண்டு வருகிறேன். அனைத்து கட்டடங்களிலும் குடிசைகள் என்றாலும், அடுக்குமாடி குடியிருப்புகள் என்றாலும், அரசு கட்டிடங்கள் என்றாலும், அங்கெல்லாம் மழை நீர் சேகரிப்பு அமைப்பு ஏற்படுத்த அரசு வலியுறுத்தி வருகிறது.

இந்தத் திட்டத்தை அறிமுகப்படுத்திய நானே அதை செயல்படுத்துவதில் முன் உதாரணமாக முன்னின்று எனது வீட்டிலேயே இதனைத் தொடங்கியுள்ளேன் என்பதைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். அதைப் போலவே, நீங்களும் உங்கள் இல்லங்களில் இந்த திட்டத்தை செயல்படுத்த முன் வர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

## கூட்டுக் குடிநீர் திட்டங்கள்

திருநெல்வேலி மாவட்ட பெருமக்களாகிய நீங்கள் அனைவரும் பயன் பெறும் வகையில் இன்றைய தினம் 438 கோடியே 73 லட்சம் ரூபாய் மதிப்புடைய திட்டப் பணிகளை உங்களுக்காகக் கொண்டு வந்துள்ளேன். முடிவுற்ற பணிகளைப் பொறுத்தவரையில் 267 கோடியே 33 லட்சம் ரூபாய் மதிப்புடைய நிறைவுற்ற பணிகளை திறந்து வைத்துள்ளேன். அவற்றில் குறிப்பாக, சில முக்கிய திட்டப் பணிகளை மட்டும் இங்கே எடுத்துக் கூற விரும்புகிறேன்.

தமிழ் நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் கீழ் திருநெல்வேலி மாவட்டத்தில், 29 கோடியே 4 லட்சம் ரூபாய் மதிப்பில், கடையநல்லூர் - புளியங்குடி கூட்டுக் குடிநீர்த்

திட்டம், 20 கோடியே 36 இலட்சம் ரூபாய் மதிப்பில், செங்கோட்டை - குற்றாலம் கூட்டுக் குடி நீர்த் திட்டம், 43 கோடி ரூபாய் மதிப்பில், நாங்குநேரி - திசையன்விளை கூட்டுக் குடிநீர்த் திட்டம், 12 கோடியே 88 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், சேந்தமங்கலம் கூட்டுக் குடிநீர்த் திட்டம், 7 கோடியே 6 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், 102 தனி மின் விசை குடிநீர்த் திட்டப் பணிகள் – 3 கோடியே 45 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், பாப்பாக்குடி கூட்டுக் குடிநீர்த் திட்டம், போன்ற பணிகளை, நான் இன்று திறந்து வைத்ததில், மிக்க மகிழ்ச்சி அடைகிறேன். ஆக, இந்த விழாவிலே மட்டும் திருநெல்வேலி மாவட்ட மக்களுடைய குடிநீர் தேவையை நிறைவு செய்வதற்காக, மொத்தம் 115 கோடியே 78 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் பல்வேறு கூட்டுக் குடிநீர்த் திட்டங்களை திறந்து வைத்துள்ளது எனக்கு மிக்க மகிழ்ச்சியை அளிக்கின்றது.

இவை மட்டுமின்றி, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் கீழ் 5 கோடியே 38 இலட்சம் ரூபாய் மதிப்பில் வணிக வளாகங்கள், நெசவாளர் கூடம், பணிக் கூடம், கால்நடை மருந்தகங்கள், தொழிலாளர் நல பள்ளிக் கட்டடம், பயணியர் விடுதிக் கட்டடம், கிராம நிர்வாக அலுவலருக்கான அலுவலகக் கட்டடங்கள், போன்ற கட்டுமானப் பணிகள் 7 கோடி ரூபாய் மதிப்பில் திருநெல்வேலி மாநகராட்சி, வேய்ந்தான் குளத்தில், புதிய பேருந்து நிலையம் – 65 இலட்சம் ரூபாய் மதிப்பில், மாநகராட்சி பகுதியில் 7 இடங்களில், சுகாதார வளாகங்கள் கட்டுதல் மாவட்டத்தின் பல்வேறு பேரூராட்சிகளிலும், நகராட்சிகளிலும் 61 இலட்சத்து 20 ஆயிரம் ரூபாய் மதிப்பில் மகளிருக்கான 15 சுகாதார வளாகங்கள் ஆகியவற்றை இந்த இனிய விழாவில் நான் திறந்து வைத்துள்ளேன்.

## பல்வேறு கட்டடங்கள்

பொதுப் பணித் துறை கட்டடப் பிரிவின் சார்பாக கட்டி முடிக்கப்பட்டுள்ள 3 கோடியே 9 இலட்சம் ரூபாய் மதிப்புடைய 3 சுகாதார நிலையங்கள், மாவட்ட தகவல் தொடர்பு மையம், 4 பிற்படுத்தப்பட்டோர் இன மாணவ, மாணவியருக்கான விடுதிக் கட்டடங்கள், கடையம் ஆரம்ப சுகாதார நிலையத்தில், 30 படுக்கைகள் கொண்ட வார்டு, அறுவை அரங்கம் மற்றும் X–ray பிரிவு கட்டடம், 3 தீயணைப்பு நிலையக் கட்டடங்கள், சட்டக் கல்லூரியில் விளையாட்டு மைதானம் 1 கோடியே 59 இலட்சம் ரூபாய் மதிப்பில், 5 ஆதிதிராவிடர் இன மாணவ மாணவியர்களுக்கான விடுதிக் கட்டடங்கள் 13 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் தமிழ் நாடு மின்சார வாரியத்தின் கீழ் துணை மின் நிலைய அலுவலகக் கட்டடம் போன்ற பல்வேறு கட்டடங்கள் இன்றைய தினம் என்னால் திறந்து வைக்கப்பட்டுள்ளன.

நெடுஞ்சாலை துறையின் கீழ் 12 கோடியே 6 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அத்தியூத்து – சுரண்டை சாலை, பாளையங்கோட்டை – அம்பாசமுத்திரம் சாலை, முக்கூடல் – வீரவநல்லூர் சாலை ஆகிய இடங்களில் 3 பாலங்கள் – 1 கோடியே 24 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மாவட்டத்தின் பல்வேறு இடங்களில் 7 சிறு பாலங்கள் ஆகிய பணிகளை இன்றைய தினம் இங்கே திறந்து வைத்ததில் நான் மன நிறைவு அடைகின்றேன்.

**புகை பிடிப்பதால்...**

புற்றுநோய், உறக்கமின்மை, மார்புச்சளி, வாய் துர்நாற்றம், ஆண்மைக் குறைவு, மூளை பாதிப்பு, மஞ்சள் நகம் போன்ற நோய்கள் புகைபிடிப்பதால் ஏற்படுகின்றன.



புகை பிடிப்பதால் மனித ஆயுள் குறையும் வாய்ப்பும் உள்ளது.

பொதுப்பணித் துறை பாசனப் பிரிவின் கீழ், 64 கோடியே 28 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 12 கிராமங்களில் உள்ள 6,507 ஏக்கர் விளை நிலம் பாசன வசதி பெறும் வகையில் செங்கோட்டை தாலுகா மேக்கரை – அனுமன் நதியின் குறுக்கே அணை 45 கோடியே 38 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 17 கிராமங்களில் உள்ள 9,595 ஏக்கர் நிலம், பாசன வசதி பெறும் வகையில் நாங்குநேரி தாலுகா, மஞ்சுவிளை – வடக்குப் பச்சையாறு நதியின் குறுக்கே அணை போன்ற இந்த மாவட்டத்திற்குத் தேவையான மிகவும் முக்கியமான பணிகளும் இன்றைய தினம் என்னால் இங்கே திறந்து வைக்கப்பட்டுள்ளன.

## துணை மின் நிலையங்கள்

இன்றைய தினம், இந்த மாவட்டத்து மக்கள் பயன்பெறுகின்ற வகையில் இந்த இனிய விழாவிலே 165 கோடியே 92 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமையவுள்ள பல்வேறு துறைகளைச் சார்ந்த திட்டப் பணிகளுக்கு அடிக்கற்கள் நாட்டியுள்ளேன் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் கீழ் 107 கோடியே 60 இலட்சம் ரூபாய் மதிப்பில் இந்த மாவட்டத்தின் மக்கள் அனைவரும் பயன் பெறும் வகையில், பல்வேறு கூட்டுக் குடிநீர்த் திட்டங்களுக்கு அடிக்கற்கள் நாட்டியதில் நான் மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன். இவற்றில் குறிப்பாக, 16 கோடியே 70 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், பனகுடி – வடக்கு வள்ளியூர் கூட்டுக் குடிநீர்த் திட்டம்; 5 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமையவிருக்கும் கீழப்பாவூர் – ஐந்தாம் கட்டளை கூட்டுக் குடிநீர் திட்டம், 78 கோடியே 70 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமையவுள்ள மானூர் கூட்டுக் குடிநீர்த் திட்டம், ஆகியவற்றிற்கும் இன்றைய தினம், நான் அடிக்கற்கள் நாட்டியுள்ளேன்.

இந்த மானூர் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் வாயிலாக திருநெல்வேலி மாவட்டத்தில், சங்கரன்கோயில் நகராட்சி, திருவேங்கடம் பேரூராட்சி மற்றும் 395 கிராமங்களுக்கும் விருதுநகர் மாவட்டத்தில் உள்ள சில பகுதிகளுக்கும் சேர்த்து மொத்தம் ஏறத்தாழ நான்கரை லட்சம் மக்கள் பயன்பெறுவார்கள் என்ற செய்தி எனக்கு

மிக்க மகிழ்ச்சியை அளிக்கின்றது.

மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் கீழ் 1 கோடியே 22 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 54 ஒருங்கிணைந்த சுகாதார வளாகங்கள் 69 இலட்சம் ரூபாய் செலவில், 99 கிராம நிர்வாக அலுவலர்களுக்கான, அலுவலக கட்டடங்கள் 3 கோடியே 80 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் திருநெல்வேலி மாநகராட்சியின் கீழ் வணிக வளாகங்கள்; நேரு குழந்தைகள் பூங்காவில் பல்நோக்கு கலை அரங்கம் 1 கோடியே 7 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் பேரூராட்சியின் கீழ், களக்காடு பேருந்து நிலையம் மற்றும் வணிக வளாக கட்டடம் 3 கோடியே 47 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், 11 இடங்களில், ஆதிதிராவிட மாணவ மாணவியர்களுக்கான விடுதிகள் போன்ற பல்வேறு திட்டங்களுக்கு அடிக்கற்கள் நாட்டியதில் நான் மன நிறைவு அடைகிறேன்.

தமிழ்நாடு மின்சார வாரியத்தின் சார்பில், கொடிக்குறிச்சியில் 36 கோடி ரூபாய் மதிப்பில் துணை மின் நிலையம் அமைக்க இன்று அடிக்கல் நாட்டியுள்ளேன். இது மட்டுமின்றி, திருநெல்வேலி பொருட்காட்சி திடல் மற்றும் மேலப்பாளையம் ஆகிய 2 இடங்களில் 2 கோடியே 75 இலட்சம் ரூபாய் மதிப்பில் துணை மின் நிலையங்கள் அமைக்கவும் அடிக்கற்கள் நாட்டப்பட்டுள்ளன.

பொதுப் பணித் துறை கட்டடப் பிரிவின் கீழ் 2 கோடியே 25 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 3 சட்டமன்ற உறுப்பினர் அலுவலகக் கட்டடங்கள்; 3 பள்ளிகளில் கூடுதல் வகுப்பறை கட்டடங்கள்; உக்கிரன்கோட்டை, முக்கூடல் மற்றும் குருவிகுளம் ஆகிய இடங்களில் 30 படுக்கை. வசதிகள் கொண்ட சிறு மருத்துவமனைகள் அமைத்தல் 96 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் திருநெல்வேலி மாநகராட்சி பகுதியிலும், களக்காடு பேரூராட்சி பகுதியிலும், 25 தார் சாலைகள் அமைத்தல் 3 கோடியே 65 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் பொதுப் பணித் துறை பாசனப் பிரிவின் கீழ் பாலம் கட்டுதல், சாலை சீரமைக்கும் பணி, வரத்துக் கால்வாய் மேம்பாடு செய்யும் பணி, போன்ற பல்வேறு பணிகளுக்கு இன்று அடிக்கற்கள் நாட்டியதில் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

இது மட்டுமின்றி, சுதந்திரப் போராட்ட தியாகியும், செக்கிழுத்த செம்மலும் ஆன, விடுதலைப் போராட்ட வீரர் வ.உ.சிதம்பரனார் அவர்களின் நினைவைப் போற்றும் வகையில் திருநெல்வேலியில், 75 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மணிமண்டபம் அமைக்க இந்த விழாவிலே அடிக்கல் நாட்டியதில் நான் பெருமிதம் அடைகின்றேன்.

## முன்னணியில் அரசு

நலிந்தோருக்கும், ஆதரவற்றோருக்கும், மகளிருக்கும் என சமுதாயத்தின் அடித்தளத்து பிரிவினர் அனைவரும் தமது வாழ்க்கையில் முன்னேற உரிய உதவிகளை வழங்குவதில் எங்கள் அரசு என்றைக்கும் முன்னணியில் இருக்கிறது என்பதை பெருமையோடு தெரிவித்துக் கொள்கிறேன். இந்த விழாவிலே 18 அரசுத் துறைகள் மூலம், 13,518 பயனாளிகளுக்கு மொத்தம் 5 கோடியே 49 லட்சம் ரூபாய் மதிப்புடைய பல்வேறு நலத் திட்ட உதவிகள் இன்று வழங்கப்பட உள்ளன. அவை அனைத்தையும் உங்களுக்கு எடுத்துச் சொல்ல நேரம் இல்லாத காரணத்தினால் வழங்கப்படுகின்ற உதவிகளில் முக்கியமான சிலவற்றை மட்டும் இங்கே எடுத்துக் கூற விரும்புகின்றேன்.

முதலில், 3 கோடியே 20 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 6,264 பெண்களுக்கு சுய உதவிக் குழுக்களின் கீழ் நிதியுதவி – 39 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் வருவாய்த் துறை, ஆதிதிராவிடர் நலத் துறை, மற்றும் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறைகளின் கீழ் இலவச வீட்டு மனைப்பட்டாக்கள் , தையல் இயந்திரங்கள், முதியோர் உதவித் தொகை – 7 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 3,854 பேர் பயனடையும் வகையில் வேளாண்மைத் துறையின் கீழ், விவசாயிகளுக்கான மானியம் – 7 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 417 பேர் பயன் பெறும் வகையில் ஊனமுற்றோர் மறுவாழ்வுத் துறையின் கீழ் சக்கர நாற்காலி, மூக்குக் கண்ணாடி, 3 சக்கர வண்டி – ஆகிய உதவிகள் இந்த விழாவிலே வழங்கப்பட உள்ளன. மேலும், 43 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மாவட்ட தொழில் மையத்தின் கீழ் 70 பேருக்கு தொழில் தொடங்க கடன் உதவி – 9 லட்சம் ரூபாய் மதிப்பில் 271 பேர் பயனடையும் வகையில் கால்நடை பராமரிப்புத் துறையின் கீழ் பல்வேறு உதவிகள்– 45 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 390 பேர் பயனடையும் வகையில் சமூக நலத் துறையின் கீழ் பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டம், கலப்புத் திருமணத் திட்டம், முதலான பல்வேறு திட்டங்களின் கீழ் உதவிகள் இங்கே வழங்கப்பட உள்ளன.

இவை மட்டுமின்றி, கூட்டுறவுத் துறை, வனத்துறை, தாட்கோ, கதர் கிராமத் தொழில் வாரியம், ஆகிய பல்வேறு துறைகளின் சார்பாகவும், இந்த இனிய விழாவிலே பல்லாயிரக்கணக்கான பயனாளிகளுக்கு நலத் திட்ட உதவிகள் வழங்கப்பட உள்ளன என்பதையும் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

அரசு உதவிகள் பெறவுள்ள பயனாளிகள் அனைவரும் தாம் செய்து வருகின்ற தொழில்களில் மென்மேலும் உயர்வினைப் பெறவேண்டும் என்று வாழ்த்தி மகிழ்கிறேன்.

அடுத்தவர்களுக்காக வாழும்போதுதான் நமது வாழ்க்கையின் அர்த்தம் நமக்குப் புரிகிறது.

உங்கள் அன்பு சகோதரியாகிய நான் இந்த உயர்ந்த லட்சியத்தோடு தான் எனது பொது வாழ்வுப் பயணத்தை நடத்தி வருகிறேன் என்பதையும் – உங்களுக்காகவே வாழ்ந்து வருகிறேன் என்பதையும் என் அன்புக்குரிய நெல்லை வாழ் மக்களாகிய உங்கள் அனைவருக்கும் தெரிவித்து – இந்த விழா சீரோடும், சிறப்போடும் நடைபெறக் காரணமாக இருந்த அனைவருக்கும் குறிப்பாக மாவட்ட ஆட்சித் தலைவருக்கும், அரசு அலுவலர்களுக்கும், காவல் துறையினருக்கும், எனது மனமார்ந்த பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொண்டு விடை பெறுகிறேன். வணக்கம். ●

# மூலிகை சாகுபடியில் ஈரோடு மாவட்டம்

ஈரோடு மாவட்டத்தில் தோட்டக்கலைத் துறையில் குறைவாகத் தண்ணீர் தேவைப்படும் பயிர்களை குறிப்பாக மூலிகைப் பயிர்களை மாவட்டம் முழுவதும் விவசாயிகளிடம் அறிமுகப்படுத்துவதில் முனைப்பாக செயல்படுத்துகின்றனர்.

இம்மாவட்டத்தில் தாராபுரம், மூலனூர் பகுதிகளில் 315 எக்டர் பரப்பில் மூலிகைச் செடிகள் பயிர் செய்யப் பட்டுள்ளன. குறிப்பாக கண்வள்ளிக்கிழங்கு என்ற மூலிகைப்பயிர் தாராபுரம் பகுதியில் அதிக அளவு சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இந்த மூலிகை தொன்றுதொட்டே இந்திய மருத்துவத்தில் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இதற்கு ஏற்ற நல்ல செம்மண் தாராபுரம் பகுதியில் இருப்பதால் இங்கு அதிக அளவு பயிரிடப்படுகிறது. அதேபோன்று பரம்ரோசா என்ற மூலிகைப் பயிர் பவானி, அரச்சலூர், காங்கேயம் பகுதிகளில் 20 எக்டர் பரப்பளவில் பயிர் செய்யப்பட்டுள்ளது. அம்மாபேட்டை, பாசூர் பகுதிகளில் அஸ்வகிந்தா, கீழாநல்லி போன்ற பயிர்கள் சாகுபடி செய்யப்பட்டுள்ளது.

25 எக்டர் பரப்பில் ஜாதிக்காய் பயிர் செய்யப்பட்டுள்ளது. இம்மாவட்டத்தில் 534 எக்டர் பரப்பில் முருங்கை சாகுபடி செய்யப்பட்டுள்ளது. மேலும் தாராபுரம் மூலனூர் பகுதியில் மூலிகைப் பயிர் செய்வதற்குரிய சூழ்நிலை உள்ளதால், அப்பகுதி விவசாயிகள் அதிக அளவில் மூலிகைப் பயிர் சாகுபடியில் ஈடுபட்டுள்ளனர்.

இம்மாவட்டத்தில் மூலிகைத் தாவரங்களான தூதுவளை, செம்பருத்தி, நெல்லி போன்ற நூற்றுக்கணக்கான தாவரங்கள் தற்போது விவசாயிகளுக்கு இலாபகரமான விவசாயமாக அமைந்துள்ளது. குறிப்பாக குறைவான தண்ணீர் வசதிக்கு இவை ஏற்றவை என்பதால், விவசாயிகள் அதிக அளவில் மூலிகைப் பயிர் சாகுபடியில் ஈடுபட்டுள்ளனர்.

மூலிகைச் சாகுபடி விவசாயிகளுக்கு பல்வேறு தொழில்நுட்ப உதவிகளையும், வேளாண் ஆலோசனைகளையும் வேளாண்மைத்துறை செய்துவருகிறது. மூலிகை மருத்துவ நிறுவனங்கள் இந்த விவசாயிகளின் விளைபொருட்களுக்கு சிறந்த விலையைப் பெற்றுத் தருவதும் ஈரோடு மாவட்டத்தில் விவசாயம் செழிப்படைய ஒரு வழிகாட்டுதலாக அமைந்துள்ளது என்றால் அது மிகையாகாது.

**– எம்.ஆர். லிங்கம்**
*செய்தி–மக்கள் தொடர்பு அலுவலர், ஈரோடு மாவட்டம்.*

நாகப்பட்டினம் மாவட்டத்தில்

# நன்னீர் நவீன உறை கிணறு

*நாகப்பட்டினம் மாவட்டம், பிரதாபராமபுரம் ஊராட்சியில் தேசிய வேளாண்மை தொழில்நுட்பக் கழகத்தினர், ஆடுதுறை நெல் ஆராய்ச்சி நிலையத்துடன் இணைந்து ரூ.40 ஆயிரம் செலவில் பரீட்சார்த்த அடிப்படையில் நன்னீர் நவீன உறை கிணறு அமைக்கப்பட்டுள்ளது, இதன் துவக்கவிழாவில் மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் திரு. இரா. ஜீவானந்தம் அவர்கள் பேசும்போது,*

*"தற்போது துவக்கப்பட்டுள்ள இத்திட்டத்தின் மூலம் கடலோர வயல்களில் உள்ள நிலத்தடி நீரில் உப்பு நீருக்கு மேலாக உள்ள நன்னீரை மட்டும் பிரித்தெடுத்து நவீன உறை கிணற்றின் மூலம் தண்ணீரை பாசனத்திற்குப் பயன்படுத்திட இயலும். இத்தொழில்நுட்பத்தின் மூலம் கடலோரப் பகுதிகளில் பாசன நீர்த் தேவையினை சமாளித்திட இயலும். வேளாண்மை பெருமக்கள் வேளாண் உற்பத்தியில் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி, தெளிப்பு நீர்ப் பாசனம் மற்றும் சொட்டு நீர்ப் பாசன முறையைப் பின்பற்றினாலே பாதியளவு தண்ணீரை சேமித்திட முடியும்.*

*குறைந்த முதலீடு, நிறைவான இலாபம், அதிக வேலைவாய்ப்பு ஆகியவற்றின் மூலம், வறுமையினை ஒழித்து, தமிழகத்தை முதன்மை மாநிலமாக உருவாக்கிட முடியும்' என கூறினார்.*

*கடலோரப் பகுதிகளில் 15 அடி ஆழத்தில் நன்னீர் உள்ளது. இத் தண்ணீரை நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி பாசனத்திற்கு பயன்படுத்துவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இதன்படி உறை கிணற்றின் இருபுறங்களிலும் 40 அடி நீளத்திற்கு ஓட்டைகளுடன் கூடிய குழாயினை நிலத்தில் பதித்து அதன் மூலம் பெறப்படும் நீரை உறை கிணற்றில் சேகரித்து பாசனத்திற்கு எளிதாக மோட்டார் மூலம் நீரை இறைத்து பயன்படுத்தலாம். இத்தொழில் நுட்பத்தைக் கொண்டு அமைக்கப்படும் உறை கிணறுகளின் வாயிலாக விவசாயிகள் வருடம் முழுவதும் சாகுபடி செய்யலாம். காய்கறிகள், மலர்ச் செடிகள், பயிறு வகைகள் ஆகியவற்றையும் பயிரிடலாம்.*

**– க. பேரின்பநாயகம்**
*செய்தி–மக்கள் தொடர்பு அலுவலர், நாகப்பட்டினம்*

# உதவிகளை வழங்குவதில் என்றைக்கும் முன்னணியில் உள்ளது எங்கள் அரசு

தமிழகத்தின் கடைக்கோடியாகவும், இந்தியத் துணைக் கண்டத்தின் கடைக்கோடியாகவும், ஒருங்கே விளங்குகின்ற கன்னியாகுமரி மாவட்டத்தில் இன்று என் அன்புக்குரிய உங்களை எல்லாம் கண்டு எனது கருத்துக்கள் சிலவற்றை உங்களோடு பகிர்ந்து கொள்ளவும், 154 கோடியே 18 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள, திட்டப் பணிகளைத் திறந்து வைத்து, அடிக்கற்கள் நாட்டி நலத் திட்ட உதவிகளை வழங்கவும், ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும் இந்த அருமையான வாய்ப்பு எனக்கு மட்டற்ற மகிழ்ச்சியைத் தருகிறது.

முக்கடலும் சங்கமிக்கும் புண்ணிய பூமி, கன்னியாகுமரி. சங்கம் அமைத்து தமிழ் வளர்த்த குமரிக் கண்டத்தை கடல் கொண்டது என்று ஆராய்ச்சியாளர்கள் கூறுவார்கள். எஞ்சியுள்ள குமரிப் பகுதியை கடல் கொள்ளாதிருக்க குமரி அன்னை தவக்கோலத்தில் இருக்கிறாள் என்பதை ''நீலத்திரைக் கடல் ஓரத்திலே நித்தம் தவம் செய்யும் குமரி'' என அழகுறப் பாடினார் மகாகவி பாரதியார். அந்த அன்னையின் திருப்பெயரால் அழைக்கப்படுகின்ற மாவட்டம் குமரி மாவட்டம். இந்த மாவட்டம், பாண்டியர், சோழர், வேணாடு அரசுகளின் ஆளுகைக்கு உட்பட்டிருந்தது என்பதும் பின்னர் திருவிதாங்கூர் அரசின் கீழ் கல்குளம், விளவங்கோடு, அகஸ்தீஸ்வரம், தோவாளை, ஆகிய நான்கு



தாலுக்காக்களும் தென் திருவிதாங்கூர் பகுதியாகத் திகழ்ந்தன என்பதும் வரலாறு. நாஞ்சில் நாடு, எட நாடு என்ற பெயர்களும் இப்பகுதிகளுக்கு உண்டு என்று நாம் அறிகிறோம்.

மொழியால், பண்பாட்டால், தமிழர்களாக வாழ்ந்து வந்த நாஞ்சில் நாடு மற்றும் எடநாட்டு மக்கள் தாய்த் தமிழகத்தோடு இணையப் போராடினர். மார்ஷல் நேசமணி, நத்தேனியல் போன்ற தியாகச் செம்மல்களின் அரும் போராட்டத்தால் 1956 நவம்பர் 1–ஆம் நாள் நாஞ்சில் நாடு ''கன்னியாகுமரி மாவட்டம்'' என்ற பெயருடன் தாய்த் தமிழகத்துடன் இணைந்தது என்பதை இன்று நினைத்துப் பார்க்கிறோம்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள்
15–3–2003 அன்று
கன்னியாகுமரி மாவட்ட
அரசு விழாவில் ஆற்றிய உரை

குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் ஆகிய நான்கு வகை நிலங்களையும் தன்னகத்தே கொண்ட இயற்கை அன்னையின் எழில்மிகு மாவட்டம் குமரி மாவட்டம்! மக்களோ உழைப்பால் உயர்ந்தவர்கள்!

சதாவதானி செய்குத்தம்பி பாவலர், கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை, பொதுவுடைமை வீரர் ஜீவா, கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணன் ஆகியோர் இம்மாவட்டம் ஈன்றெடுத்த தவப் புதல்வர்கள்.

இங்கு மூன்று கடல்கள் மட்டுமல்ல மூன்று மதங்களும் சங்கமிக்கின்றன. மும்மதங்களைச் சார்ந்த புராதன மிக்க வழிபாட்டுத் தலங்களும் இங்கு சிறப்புடன் விளங்குகின்றன. கன்னியாகுமரி பகவதி அம்மன் கோவில், மண்டைக்காடு பகவதி அம்மன் கோவில், கொல்லங்கோடு பகவதி அம்மன் கோவில், சுசீந்திரம் தாணுமாலயப் பெருமாள் கோவில், கேரளபுரம் அதிசய விநாயகர் கோவில், புகழ் பெற்ற 12 சிவாலயங்கள், பறக்கை மதுசூதனப் பெருமாள் கோவில், பத்மநாபபுரம் ராமசுவாமி குமாரகோவில், மருங்கூர், தோவாளை, வெள்ளிமலை முருகன் கோவில்கள் என எண்ணற்ற திருத்தலங்களால் ஆன்மீக பூமியாக விளங்குவது குமரி மாவட்டம்.

கோட்டாறு புனித சவேரியாரின் வருகை நினைவாக கட்டப்பட்ட சவேரியார் கோவில், கன்னியாகுமரி அலங்கார உபகார அன்னை கோவில் கிரேக்க கட்டடக் கலையில் உருவான கற்கோயில், ராஜாவூர் அதிதூதர் புனித மைக்கல் ஆலயம், முட்டம் சகல புனிதர்கள் ஆலயம் ஆகிய பழமை வாய்ந்த கிறிஸ்துவ வழிப்பாட்டுத் தலங்களும் இம்மாவட்டத்துக்குச் சிறப்பு அளிக்கின்றன.

இளங்கடையில் உள்ள பெருநாள் தொழுகை நடத்தும் இடம், மிகப் பழமை வாய்ந்தது என்றும் சித்தர்களில் ஒருவராகக் கருதப்படும் தக்கலை பீர் முகம்மது சமாதி அடைந்த தர்கா, திருவிதாங்கோடு முகமது சாகிப் தர்கா, ஆகிய இஸ்லாமிய வழிபாட்டுத் தலங்கள் மிகவும் பிரபலமானவை என்பதை அறிகிறோம்.

சர்வதேச சுற்றுலாத் தலமான கன்னியாகுமரி முக்கடல் சங்கமம், சுவாமி விவேகானந்தர் மண்டபம், திற்பரப்பு அருவி, உலக்கை அருவி, பத்மனாபபுரம் அரண்மனை, மாத்தூர் தொட்டிபாலம் என மாவட்டமே சிறந்த சுற்றுலாத் தலமாகத் திகழ்கிறது. 1684 சதுர கிலோ மீட்டர் பரப்பு அளவைக் கொண்ட இம்மாவட்டத்தில் மருந்து வாழ் மலை, வேளிமலை, காத்தாடி மலை, கல் மலை, தாடகை மலை, மகேந்திரகிரி மலை என பல மலைகளும் உண்டு. சீதையை மீட்க இலங்கைக்குச் சென்ற அனுமான், மகேந்திரகிரி மலையிலிருந்து புறப்பட்டுச் சென்றதாக நமது இதிகாச புராண வரலாறு கூறுகிறது.

## கல்வியில் முதலிடம்

68 கிலோ மீட்டர் நீளமான அழகிய கடற்கரை அமையப் பெற்றுள்ள இம்மாவட்டத்தில் தேங்காய்பட்டினம், குளச்சல், முட்டம், சங்குத் துறை, சொத்தவிளை, கோவளம், சின்னமுட்டம் ஆகியவை இயற்கை எழில் நிறைந்த கடற்கரைகளாக விளங்குகின்றன.

16,69,763 மக்கள் தொகை கொண்ட இம்மாவட்டத்தில் 13,20,564 பேர் கற்றவர்கள் என்பதும் பெண்கள் கல்விக்கும், முன்னேற்றத்திற்கும் முதலிடம் வழங்குவது இம்மாவட்டத்தின் இயல்பு என்பதும் பெருமிதம் தரும் செய்திகள் ஆகும்.

குமரி மாவட்டம், கல்வி, மகளிர் மேம்பாடு ஆகியவற்றில் முதல் இடத்தில் விளங்குவதைப் போல சுகாதாரத்தைப் பேணுவதிலும் குறிப்பாக, குழந்தைகள், பெண்கள் சுகாதார மேம்பாட்டு பணிகளிலும் முதல் இடம் வகிக்கிறது. ஏற்கனவே மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்தது போல் இந்தியாவிலேயே முதல் முறையாக இரு ஊராட்சி ஒன்றியங்கள் – தக்கலை மற்றும் மேல்புரம் – முழு சுகாதாரம் பெற்ற ஊராட்சி ஒன்றியங்களாக அறிவிக்கப்பட்டது குமரி மாவட்டத்தில் தான் என்பது பெருமைக்குரியது.

மகளிருக்கு என 65 ஒருங்கிணைந்த சுகாதார வளாகங்கள், கட்டி முடிக்கப்பட்டு, அவற்றைப் பராமரிக்கும் பணி மகளிர் குழுக்களிடமே ஒப்படைக்கப்பட்டு சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. குழந்தைகளின் இறப்பு விகிதம் குமரி மாவட்டத்தில் தான் மிகக் குறைவு என்பது பாராட்டத்தக்கது. மாவட்ட ஆட்சித் தலைவர்களின் மாநாட்டின் போது மாவட்ட ஆட்சித் தலைவரின் கோரிக்கையை ஏற்று, மகளிருக்குத் தேவையான சுகாதார வளாகங்களைக் கட்டி முடித்துவிட்டதால் ஆடவர்களுக்கான சுகாதார வளாகம் கட்டும் திட்டத்தினை செயல்படுத்த நான் சிறப்பு ஒப்புதல் அளித்து அந்த வகையில் இந்த மாவட்டத்தை முன்னோடி மாவட்டமாக அறிவித்தேன் என்பதையும் இந்த நேரத்தில் மகிழ்ச்சியோடு சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

## முழு சுகாதாரம்

மாவட்ட ஆட்சித்தலைவர்கள் மாநாடு சென்னையில் நடைபெற்ற போது ஒவ்வொரு மாவட்டத்திலும் பெண்களுக்கான சுகாதார வளாகங்கள் கட்டுவதை முடுக்கிவிட வேண்டும். விரைந்து அந்த திட்டத்தை செயல்படுத்தி முடிக்க வேண்டும் என்று மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு நான் அறிவுரை வழங்கிக் கொண்டிருந்தேன். அப்போது கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவர் ஒரு வித்தியாசமான கோரிக்கையை வைத்தார். ஆண்களுக்கான சுகாதார வளாகங்களை கட்ட வேண்டுமென்று கேட்டார். நாங்கள் பெண்களுக்காகத் தானே இந்தத் திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறோம். நீங்கள் என்ன புதிதாக ஒரு கோரிக்கையை வைக்கிறீர்களே என்று கேட்டேன். அப்போது அவர் சொன்னார், எங்கள் மாவட்டத்தில் மகளிருக்கு கட்ட வேண்டிய சுகாதார வளாகங்களைக் கட்டி முடித்துவிட்டோம். இனிமேல் கட்டுவதற்கு வாய்ப்பு இல்லை. தேவையைப் பூர்த்தி செய்து

விட்டோம். இதைப் பார்த்து, இந்த மாவட்டத்தில் இருக்கின்ற ஆடவர் எல்லாம், ஆண்கள் எல்லாம், எங்களுக்கும் இந்த மாதிரி கட்டித் தாருங்கள் என்று கேட்கிறார்கள். எனவே, செய்யலாமா ? என்றார். இந்தக் கோரிக்கை எனக்கு மகிழ்ச்சி அளித்தது. ஆகவே, வினோதமான இந்தக் கோரிக்கையை ஏற்று, முழு சுகாதாரம் பெற்ற மாவட்டமாக கன்னியாகுமரி மாவட்டத்தை அறிவித்து, முதன்முதலாக இந்தியாவிலேயே ஆண்களுக்கான சுகாதார வளாகங்கள் இங்கே கட்டலாம் என்று அனுமதி அளித்திருக்கிறேன் என்பதைப் பெருமையோடும், மகிழ்ச்சியோடும் தெரிவித்துக் கொள்கிறேன்.

வேளாண்மையே இம்மாவட்டத்தின் பிரதானத் தொழில். நெற்பயிரே முக்கியமான உணவுப் பயிர். 28,584 ஏக்கரில் நெல் பயிரும், 8,179 ஏக்கரில் மரவள்ளிக் கிழங்கும் பயிரிடப்படுகின்றன. வாசனைப் பயிரான கிராம்பு 518 ஏக்கரிலும், ரப்பர் 18,442 ஏக்கரிலும் சாகுபடி செய்யப்பட்டு, கிராம்பு, ரப்பர் உற்பத்தியில், இம்மாவட்டம் தமிழ் நாட்டிலேயே முதல் இடத்தில் உள்ளது என்பதும் மகிழ்ச்சியுடன் குறிப்பிடப்பட வேண்டிய செய்தி ஆகும்.

சீரோடும், சிறப்போடும் கன்னியாகுமரி மாவட்டத்தில் நடைபெறும் இந்த இனிய விழாவில் கலந்து கொண்டு எனது அன்பிற்கும் பாசத்திற்கும் உரிய உங்கள் அனைவரையும் காண்பதிலும் உங்களுடன் எனது எண்ணங்களை பகிர்ந்து கொள்வதிலும் 154 கோடியே 18 இலட்சம் ரூபாய் மதிப்பில் நிறைவேற்றப்பட்ட திட்டங்களை திறந்து வைத்து புதிய பணிகளுக்கு அடிக்கற்கள் நாட்டி, நலத் திட்ட உதவிகளை வழங்குவதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

பெண்கள் சொந்தக் கால்களில் நிற்க வேண்டும் என்றால், அதற்கு இரண்டு தேவை. ஒன்று கல்வி, அடுத்தது பொருளாதார ரீதியாக நீங்கள் சுதந்திரமாக இருக்க வேண்டும். பொருளாதார ரீதியாக நீங்கள் சக்தி பெற வேண்டும். தனித்து நிற்க வேண்டும். அதை, கன்னியாகுமரி மாவட்டத்தில் மகளிர் சுயஉதவிக்குழுக்கள் வெற்றிகரமாகச் செயல்படுத்தி வருவதைக் கண்டு நான் பாராட்டுகிறேன். எனது மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்கிறேன். தமிழ்நாட்டில் இருக்கின்ற அத்தனை மகளிரும், சுய உதவிக் குழுக்களில் உறுப்பினர்களாகச் சேர வேண்டும் என்று இந்தக் கூட்டத்தின் வாயிலாக எனது அன்புக்குரிய தாய்மார்கள் அனைவரையும் நான் கேட்டுக் கொள்கிறேன். இதுவரை தமிழ்நாட்டில் இருக்கின்ற பெண்கள் சுய உதவிக் குழுக்களில் சேரவில்லை என்றால், உடனே சேர வேண்டும் என்று அவர்களை இந்த நேரத்தில் அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

## நீர்த்தேக்கத் தொட்டிகள்

கன்னியாகுமரி மாவட்ட பெருமக்களாகிய நீங்கள் அனைவரும் பயன்பெறும் வகையில் இன்றைய தினம் 154 கோடியே 18 இலட்சம் ரூபாய் மதிப்புடைய திட்டப் பணிகளை உங்களுக்காக கொண்டு வந்துள்ளேன். முடிவுற்ற பணிகளைப் பொறுத்தவரையில் 72 கோடியே 38 இலட்சம் ரூபாய் மதிப்பில் 3,249 பணிகளைத் திறந்துவைத்துள்ளேன். அவற்றில் குறிப்பாக சில முக்கியத் திட்டப் பணிகளை மட்டும் எடுத்துக் கூற விரும்புகிறேன்.

தமிழ் நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் கீழ் 6 கோடியே 71 இலட்சம் ரூபாய் மதிப்பில் தனி மின்விசை இறைப்பான் திட்டத்தின் மூலம் 160 குடியிருப்புகளுக்கு குடிநீர் வசதி – ஒரு கோடியே 20 இலட்சம் ரூபாய் மதிப்பில் சிறு மின் விசை இறைப்பான் திட்டத்தின் கீழ் 200 குடியிருப்புகளுக்கு குடிநீர் வசதி – 90 இலட்சம் ரூபாய் மதிப்பில் சிறு மின் விசை இறைப்பான் திட்டத்தின் கீழ் 150 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் குடியிருப்புகளுக்கு, குடிநீர் வசதி, போன்ற கிராம குடிநீர் திட்டப் பணிகளையும், 2 கோடியே 52 இலட்சம் ரூபாய் மதிப்பில், தாழக்குடி, புதுக்கடை, ஆரல்வாய்மொழி ஆகிய பேரூராட்சிகளில் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகளையும் இன்று நான் திறந்து வைத்துள்ளேன்.



பொதுப்பணித்துறை நீர் ஆதாரக் கோட்டத்தின் கீழ் 15 கோடியே 45 இலட்சம் ரூபாய் மதிப்பில் "ஹட்கோ" நிறுவன நிதி உதவியுடன் வள்ள விளை, ரவிபுத்தன் துறை, சின்னத் துறை, புத்தன் துறை, பெரிய விளை, பள்ளம் துறை, வட்டக்கோட்டை, மேல்மிடாலம், கீழ்மிடாலம், இனயம், முள்ளூர் துறை, தூத்தூர், பூத்துறை, கீழ்மணக்குடி, சின்னமுட்டம் ஆகிய 15 கடலோர கிராமங்களில், தடுப்புச் சுவர் கட்டுதல், 96 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், பழையாற்றின் குறுக்கே, செட்டித் தோப்பு அணைக்கட்டு, திருவிதாங்கோடு மற்றும் பத்மனாபபுரம் கால்வாயில் மறு புனரமைப்பு செய்தல், பொதுப்பணித் துறை, கட்டடப்

பிரிவின் கீழ், 47 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், கன்னியாகுமரியில் ஓய்வு விடுதி கட்டுதல், தோவாளையில் ஆய்வு மாளிகை கட்டுதல், ஆரல்வாய்மொழி மற்றும் குறும்பனையில், நூலகக் கட்டடம் கட்டுதல், போன்ற பணிகள் இன்று என்னால் திறந்து வைக்கப்பட்டுள்ளன. இது மட்டுமின்றி, தீயணைப்புத் துறையின் கீழ், 18 இலட்சம் ரூபாய் மதிப்பில் கன்னியாகுமரியில் தீயணைப்பு நிலையம் கட்டுதல், பதிவுத் துறையின் கீழ், 20 இலட்சம் ரூபாய் மதிப்பில் அருமனையில் சார்பதிவாளர் அலுவலகம் கட்டுதல், நெடுஞ்சாலைத் துறையின் கீழ், 13 இலட்சம் ரூபாய் செலவில், ஆரல்வாய்மொழி – நாகர்கோவில், ராஜாக்கமங்கலம் – குளச்சல் சாலைகளில் சிறு பாலங்களை அகலப்படுத்துதல், 30 இலட்சம் ரூபாய் மதிப்பில், களியல் – ஆலஞ்சோலை சாலையில், உள்ள பாலத்தை அகலப்படுத்துதல், 15 இலட்சம் ரூபாய் மதிப்பில், மகாராஜபுரம் சாலையில் உள்ள சிறு பாலத்தை புதுப்பித்தல், கிராமச் சாலைகள் துறையின் கீழ், 5 கோடியே 91 இலட்சம் ரூபாய் மதிப்பில், இம்மாவட்டத்தில் உள்ள 21 இடங்களில் சாலை மேம்பாட்டுப் பணிகள் ஆகியவற்றை திறந்து வைத்ததில் நான் மிக்க மன நிறைவு அடைகிறேன்.

## புதிய பாலங்கள்

நெடுஞ்சாலை திட்டக் கோட்டம் II–ன் சார்பில் 8 கோடியே 98 இலட்சம் ரூபாய் மதிப்பில் பழைய ஆற்றின் குறுக்கே கீழ் மணக்குடி மற்றும் மேல மணக்குடியை இணைக்கும் புதிய பாலம் கட்டுதல், 2 கோடி ரூபாய் மதிப்பில், இரணியல், ராஜமங்கலம் சாலையில், புதிய பாலம் கட்டுதல், தேசிய நெடுஞ்சாலை கோட்டத்தின் கீழ் 1 கோடியே 90 இலட்சம் ரூபாய் மதிப்பில், பழுதடைந்த சாலைகளை சீரமைத்தல், மருத்துவத் துறையின் கீழ், 20 இலட்சம் ரூபாய் மதிப்பில் குளச்சல் அரசு மருத்துவமனையில் மகப்பேறு அறை கட்டுதல், அருமனை மருத்துவமனையில், அறுவை சிகிச்சை அறை கட்டுதல், கருங்கல் அரசு மருத்துவமனையில், 12 படுக்கைகள் கொண்ட புதிய வார்டு கட்டுதல், பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்புத் துறையின் கீழ், 40 இலட்சம் ரூபாய் மதிப்பில் அகஸ்தீஸ்வரம் ஆரம்ப சுகாதார நிலையத்தில் 30 படுக்கைகள் கொண்ட வார்டு மற்றும் X-ray பிரிவு கட்டடம் கட்டுதல் – 1 கோடியே 55 இலட்சம் ரூபாய் மதிப்பில் இம்மாவட்டத்தில் 25 இடங்களில் துணை சுகாதார நிலையங்களுக்கு புதிய கட்டடம் கட்டுதல், போன்ற பணிகளை இந்த இனிய விழாவிலே திறந்து வைத்ததில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

கல்வித் துறையின் கீழ் 15 இலட்சம் ரூபாய் மதிப்பில் 6 பள்ளிகளில் வகுப்பறை, சத்துணவு மையம் மற்றும் விளையாட்டு மைதானம் அமைத்தல், 61 இலட்சம் ரூபாய் மதிப்பில் மீன் வளத் துறையின் கீழ் 100 வீடுகள் கட்டுதல், தன்னிறைவுத் திட்டத்தின் கீழ், சாலைப் பணிகள் மேற்கொள்ளுதல், 95 இலட்சம் ரூபாய் மதிப்பில் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறையின் கீழ் பூதப்பாண்டி, தக்கலை மற்றும் கொல்லங்கோட்டில் பிற்படுத்தப்பட்ட மாணவியருக்கான விடுதிக் கட்டடம் கட்டுதல், ஊரக வளர்ச்சித் துறையின் கீழ் 6 கோடியே 11 இலட்சம் ரூபாய் மதிப்பில் 1,183 பணிகளை மேற்கொள்ளுதல் போன்றவற்றை இந்த விழாவிலே திறந்து வைத்ததில் நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

## ஆட்சிமொழியாக - தமிழ்

மாண்புமிகு மத்திய இணை அமைச்சர் அன்புச் சகோதரர் திரு. பொன். ராதாகிருஷ்ணன் பேசுகின்ற போது இந்த மாவட்டத்தின் சார்பாக பல கோரிக்கைகளை இங்கே தெரிவித்தார். அவற்றையெல்லாம் கனிவுடன் பரிசீலிக்கிறேன் என்பதை தெரிவிக்கும் அதே நேரத்தில், நானும் அவருக்கு ஒரு கோரிக்கையை வைக்க விரும்புகிறேன். மத்திய அமைச்சர் அவர்கள் பேசுகின்ற போது இந்த மாவட்டத்தில் உள்ள மாணவர்கள் எல்லாம், இந்த மாவட்டம் மட்டும் அல்ல, ஏன், தமிழகத்தில் இருக்கின்ற மாணவர்கள் எல்லாம் இந்தி மொழியை விருப்பு மொழியாக படிக்க விரும்புகிறார்கள். அதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள். இந்த நேரத்தில் மத்திய அமைச்சர் அவர்களுக்கு ஒன்றை நினைவுப்படுத்த விரும்புகின்றேன். 1998ஆம் ஆண்டில் பிஜேபி தலைமையில், எங்கள் ஆதரவோடு மத்தியில் கூட்டணி அரசு அமைந்த போது அதில் நாங்களும் அங்கத்தினர்களாக இருந்தோம். எங்களுக்கும் மத்தியிலே அமைச்சர்கள் இருந்தார்கள். அப்போது மத்திய அமைச்சரவை பதவி ஏற்பதற்கு முன்பாக தேசிய செயல் திட்டம் – National Agenda for Governance என்று ஒன்று டில்லியிலே வகுக்கப்பட்டது. முக்கியத் தலைவர்க ளெல்லாம், அந்தக் கூட்டணியில் இடம்பெற்றிருந்த தலைவர்கள் எல்லாம், அதில் பங்கேற்றார்கள். நானும் அந்தக் கூட்டத்தில் பங்கேற்றேன். அப்போது அந்த தேசிய செயல் கூட்டத்திலேயே, இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின், 8ஆவது அட்டவணையில் சேர்க்கப்பட்டுள்ள தமிழ் உள்ளிட்ட 18 தேசிய மொழிகளையும் மத்திய அரசின் ஆட்சி மொழிகளாக ஆக்குவதின் சாத்திய கூறுகளை ஆராய்வதற்கு ஒரு குழு அமைக்கப்பட வேண்டும் என்பதை நான்தான் வலியுறுத்தி சேர்க்கச் செய்தேன். மாண்புமிகு பாரதப் பிரதமர் அதை ஏற்றுக் கொண்டு தமிழ் உள்ளிட்ட 18 தேசிய மொழிகளையும், இந்திய நாட்டின் – மத்திய அரசின் ஆட்சி மொழிகளாக ஆக்குவதன் சாத்தியக் கூறுகளை ஆராய்வதற்காக ஒரு குழு அமைக்கப்படும் என்பதை அந்த திட்டத்தில் சேர்த்தார்கள். அந்தக் குழு இன்று வரை அமைக்கப்படவில்லை. ஆகவே, மத்திய அமைச்சர் அவர்கள் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர், தமிழின் பெருமையை நன்றாக அறிந்தவர். தமிழுக்காக இரண்டு கோரிக்கைகளை மத்திய அரசுக்கு வைத்திருக்கிறோம். ஒன்று, தமிழ் மொழியை உயர் தனிச்செம்மொழியாக அறிவிக்க வேண்டும் – Classical Language என்று அறிவிக்க வேண்டும். இரண்டாவது கோரிக்கை, இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் எட்டாவது அட்டவணையில் இடம்பெற்றுள்ள தமிழ் உள்ளிட்ட 18 தேசிய மொழிகளையும் மத்திய அரசின் ஆட்சி மொழிகளாக ஆக்க வேண்டும் என்ற கோரிக்கை இரண்டாவது கோரிக்கை. மலேசிய நாட்டில் கூட தமிழ் ஆட்சி மொழியாக இருக்கிறது. இந்தியாவில் இருக்கக் கூடாதா? வேறுஅயல்நாடுகளில் தமிழ் ஆட்சிமொழியாக இருக்கின்ற போது, இந்தியாவில்

இருக்கக் கூடாதா? ஆகவே, மத்திய அமைச்சருக்கு நான் பணிவோடு தெரிவித்துக் கொள்வது என்னவென்றால், மத்தியிலே நீங்கள் தமிழை ஆட்சி மொழியாக அறிவியுங்கள். தமிழ்நாட்டில் இந்தியை விருப்பு மொழியாக பயிற்சி செய்வதற்கு, கற்றுக் கொடுப்பதற்கு, நான் பரிசீலனை செய்கிறேன் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். மீண்டும் சொல்கிறேன். மத்திய அரசின் ஆட்சி மொழியாக தமிழை நீங்கள் அறிவிக்க வேண்டும், அப்படி நீங்கள் அறிவித்தால் தமிழகத்தில் இந்தியை விருப்பு மொழியாக பள்ளிக்கூடங்களில் கற்றுத் தருவதை பற்றி நான் பரிசீலிக்கிறேன் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

## உழைப்பின் உயர்வு

நாம் உழைத்து அந்த உழைப்பிலே கிடைத்த பணத்தைக் கொண்டு ஒரு பொருளை வாங்கினால்தான் அதனுடைய அருமை நமக்கு நன்றாகத் தெரியும். முன்னோர் சொத்து என்கிற போது நாம் அவ்வளவாக அதற்கு மரியாதை தருவதில்லை.

நம்முடைய உழைப்பால் நாம் உருவாக்கும் எந்தச் சொத்துக்கும் உரிய மதிப்பை நாம் அளிக்கத் தவறுவதே இல்லை. எனவே, நம்முடைய முன்னோருடைய சொத்து நமக்கு எவ்வளவு கிடைத்தாலும் நம்முடைய சொந்த உழைப்பின் பயனாக நாம் உருவாக்கும் சொத்தின் மதிப்பு நமக்கு மிக அதிகமானதாகவே தெரியும். எனவே, நமது வெற்றி, வியர்வையைச் சிந்தி உழைப்பதில்தான் இருக்கிறது.

ஆகவே, உழைப்புக்கு என்றும் உயர்வு உண்டு என்பதைச் சொல்லி பிறர் உழைப்பில் கிடைக்கும் பொருளை அனுபவிப்பதில் உள்ள இன்பத்தை விட சொந்த உழைப்பின் உயர்வில்தான் உண்மையான மன நிறைவு கிடைக்கும் என்பதை உணர்ந்து நம்பிக்கையோடு கடமைகளை நிறைவேற்றுங்கள்.

வெற்றி உங்களுக்கே !

## நீர் சுத்திகரிப்பு நிலையம்

இன்றைய தினம் எழுச்சி மிகுந்த இவ்விழாவிலே மொத்தம் 76 கோடியே 49 இலட்சம் ரூபாய் மதிப்பில் இந்த மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் அமைய உள்ள 1,503 திட்டப் பணிகளுக்கு அடிக்கற்களை நாட்டியதில் நான் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.

தமிழ் நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் 8 கோடியே 65 இலட்சம் ரூபாய் மதிப்பில் கன்னியாகுமரி மற்றும் சுசீந்திரம் பகுதிகளுக்கு நீர் சுத்திகரிப்பு நிலையம் அமைத்தல், 2 கோடியே 32 இலட்சம் ரூபாய் மதிப்பில் திருவிதாங்கோடு பேரூராட்சி பகுதியில், மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மற்றும் தரை மட்ட நீர்த்தேக்க தொட்டி கட்டுதல், 1 கோடியே 82 இலட்சம் ரூபாய் மதிப்பில் திருவட்டார் பேரூராட்சி பகுதிக்கு, மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டுதல், 4 கோடியே 26 இலட்சம் ரூபாய் மதிப்பில் பூதப்பாண்டி பேரூராட்சி பகுதி மற்றும் மண்டைக்காடு, வெள்ளிமலை, தேரூர், ஆற்றூர் பேரூராட்சிகளில் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகள் அமைத்தல் போன்ற பணிகளுக்கு அடிக்கற்கள் நாட்டியதில் நான் மிக்க மன நிறைவு அடைகின்றேன்.

பொதுப்பணித் துறை நீர் ஆதாரக் கோட்டத்தின் கீழ் 21 கோடியே 10 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் பெரியகாடு, குறும்பனை, சைமன் காலனி, இனையம், வாணியக்குடி, கோவளம், ஆரோக்கியபுரம் ஆகிய 7 கடலோர கிராமங்களில் தூண்டில் வளைவு, அதாவது, மரத்தாலான கடலரிப்பு தடுப்பு அரண் (Groyne – a break water built to check land erosion) அமைத்தல் – நெடுஞ்சாலைத் துறையின் கீழ் 5 கோடி ரூபாய் மதிப்பில், நாகர்கோவில் நெடுஞ்சாலை கோட்டத்திற்கு உட்பட்ட "சாலை நிதி உதவி திட்டத்தில்" திங்கள் சந்தை, புதுக்கடை சாலை ஆகியவற்றை பழுது பார்த்தல் – 56 இலட்சம் ரூபாய் மதிப்பில் தேவக்குளம், செட்டிக்குளம் சாலை – குலசேகரபுரம், மருங்கூர் சாலை மற்றும் சுசீந்திரம், வெள்ளமடம் சாலை ஆகிய இடங்களில் பாலங்களை புதுப்பித்தல் – நெடுஞ்சாலை கிராமச் சாலை கோட்டத்தின் கீழ் 9 கோடியே 60 இலட்சம் ரூபாய் மதிப்பில் 23 இடங்களில் சாலைகள் மற்றும் பாலங்களை மேம்பாடு செய்தல் – 5 கோடியே 15 இலட்சம் ரூபாய் மதிப்பில்




### வேலைவாய்ப்பு அலுவலக பதிவு புதுப்பித்தல் குறித்து சிறப்புச் சலுகை

வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்து 1–1–2001 முதல் 31–12–2001 வரையுள்ள காலத்தில் பதிவைப் புதுப்பிக்கத் தவறியவர்களுக்கு அரசாணை நிலை எண்.51, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை (எஃ2) துறை, நாள் : 28–4–2003இன் படி சிறப்பு புதுப்பித்தல் சலுகை வழங்கப்பட்டுள்ளது.

இதன்படி மேற்படி காலத்திற்குள் புதுப்பிக்கத் தவறியவர்கள் 27–7–2003க்குள் சம்பந்தப்பட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்துக்கு வேலைவாய்ப்பு அலுவலக அடையாள அட்டையின் நகலுடன் நேரிலோ அல்லது பதிவஞ்சல் மூலமோ மனு செய்து தங்களது பதிவினை புதுப்பித்துக் கொள்ளலாம்.

தேங்கம்புதூரில் புதிய துணை மின் நிலையம் அமைத்தல் – மருத்துவத் துறையின் கீழ் நாகர்கோவில், ஆசாரிப்பள்ளம், மருத்துவக் கல்லூரியில், 5 கோடி ரூபாய் மதிப்பில், 300 படுக்கைகள் கொண்ட மருத்துவமனைக் கட்டடம் கட்டுதல், 46 இலட்சம் ரூபாய் மதிப்பில், பத்மநாபபுரம் அரசு மருத்துவமனையில், விபத்து அவசர சிகிச்சைப் பிரிவு கட்டடம் கட்டுதல், போன்ற பணிகளுக்கு, இன்று என்னால் அடிக்கற்கள் நாட்டப்பட்டுள்ளன.

3 கோடியே 60 இலட்சம் ரூபாய் மதிப்பில் கல்வித் துறையின் கீழ் 12 அரசு மேல்நிலைப் பள்ளிகளில் கூடுதல் கட்டடம் கட்டுதல் – 72 இலட்சம் ரூபாய் மதிப்பில் மீன் வளத் துறையின் கீழ், 16 இடங்களில் மீனவர்களுக்கு வீடுகள் கட்டுதல் கிணறுகள் அமைத்தல் – 1கோடி ரூபாய் மதிப்பில் சுற்றுலாத் துறையின் கீழ், வரவேற்பு மையம் கட்டுதல், குடிநீர் வசதி செய்தல் மற்றும் திருவள்ளுவர் சிலையில் உள் கட்டமைப்பு பணிகள் செய்தல் – 63 இலட்சம் ரூபாய் மதிப்பில் ஆதிதிராவிடர் மாணவ மாணவியர்களுக்கு தக்கலை மற்றும் பூதப்பாண்டியில், தங்கும் விடுதிகள் கட்டுதல் போன்ற பணிகளுக்கு அடிக்கற்கள் நாட்டியதில் நான் மிக்க மனநிறைவு அடைகின்றேன்.

## பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டம்

அந்த வகையில், சமுதாயத்தில் நலிந்தோருக்கும் ஆதரவற்றோருக்கும், மகளிருக்கும், அடித்தளத்து பிரிவினர்களுக்கும், தமது வாழ்க்கையில் முன்னேற உரிய உதவிகளை வழங்குவதில் எங்கள் அரசு என்றைக்கும் முன்னணியில் உள்ளது என்பதை பெருமையோடு தெரிவித்துக் கொள்கிறேன். இந்த விழாவிலே 18 அரசுத் துறைகள் மூலம் 11,313 பயனாளிகளுக்கு மொத்தம் 5 கோடியே 32 இலட்சம் ரூபாய் மதிப்புடைய பல்வேறு நலத்திட்ட உதவிகள் இன்று வழங்கப்படுகின்றன. அவை அனைத்தையும் உங்களுக்கு எடுத்துச் சொல்ல நேரம் இல்லாத காரணத்தினால் வழங்கப்படுகின்ற உதவிகளில் முக்கியமான ஒரு சிலவற்றை மட்டும் இங்கே எடுத்துக் கூற விரும்புகிறேன்.

முதலில், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் கீழ் 4 கோடியே 3 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கிராம சுய வேலை வாய்ப்புத் திட்டம் குடியிருப்பு கழிவறை கட்டுதல் கடன் மற்றும் மானியத் திட்டம் – சமூக நலத் துறையின் கீழ், 20 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டம், கலப்புத் திருமணத்திற்கு நிதி உதவி, இலவச தையல் இயந்திரம் வழங்குதல், கதர் கிராமத் தொழில் வாரியத்தின் கீழ் 10 இலட்சம் ரூபாய் மதிப்பில் உதவித் திட்டம், 5 இலட்சம் ரூபாய் மதிப்பில் ஆதிதிராவிடர் நலத் துறையின் கீழ் இலவச வீட்டுமனைப் பட்டா வழங்குதல் மற்றும் மாணவிகளுக்கு இலவச சைக்கிள் வழங்குதல் தாட்கோ நிறுவனத்தின் கீழ், 9 இலட்சம் ரூபாய் மதிப்பில் நெற் கதிர் அடிக்கும் இயந்திரம், உழவு மாடு மற்றும் கறவை மாடு வழங்குதல், வருவாய்த் துறையின் கீழ் 18 இலட்சம் ரூபாய் மதிப்பில், இலவச வீட்டு மனை பட்டா, முதியோர் ஒய்வு ஊதியம், விதவைகளுக்கு உதவித் தொகை, வேளாண்மை துறையின் கீழ் 10 இலட்சம் ரூபாய் மதிப்பில், விவசாயிகளுக்கு Power Tiller, தெளிப்பு நீர்ப்பாசன உபகரணங்கள் ஆகியவைகள் வழங்கப்படுகின்றன. இவை மட்டுமின்றி கல்வித் துறை, ஊனமுற்றோர் மறுவாழ்வுத் துறை, தொழில் வணிகத் துறை, வனத் துறை, மீன் வளத் துறை, ஆகிய பல்வேறு துறைகளின் சார்பாகவும் இந்த இனிய விழாவிலே பல்லாயிரக் கணக்கான பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப்படுகின்றன என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த நலத்திட்ட உதவிகள் அனைத்தையும் பயனாளிகள் அனைவருக்கும் நானே எனது கரங்களாலேயே வழங்க விரும்பினாலும் அதற்கு நேரம் போதாது என்பதை நீங்கள் அறிவீர்கள். ஆகவே, இந்த மேடையில் 15 பயனாளிகளுக்கு மட்டும் நலத்திட்ட உதவிகளை நானே வழங்க உள்ளேன். எஞ்சியுள்ள அனைவருக்கும் அமைச்சர் பெருமக்களும், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களும், அரசு அலுவலர்களும், இங்கேயே இப்போதே வழங்கி சிறப்பிப்பார்கள், என்பதை அன்போடு தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த உதவிகளை நீங்கள் உங்கள் வாழ்க்கைக்கு ஆதாரமாக பயன்படுத்திக் கொண்டு நீங்கள் செய்கின்ற தொழில்களில் மென்மேலும் உயர வேண்டும் என்று வாழ்த்தி மகிழ்கிறேன்.

இந்த விழா, சீரோடும் சிறப்போடும் நடைபெறக் காரணமாக இருந்த அனைவருக்கும், குறிப்பாக மாவட்ட ஆட்சித் தலைவருக்கும், அரசு அலுவலர்களுக்கும், காவல் துறையினருக்கும் எனது பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

• • •

### புற்றுநோய் சில தகவல்கள்

மனித உடல்களில் செல்களின் தவறான வளர்ச்சிக்கு புற்றுநோய் (Cancer) என்று அறிவியல் கூறுகிறது.
கேன்சர் என்ற லத்தீன் மொழி சொல்லுக்கு "நண்டு" என்று பொருள்.
பிளாஸ்டிக் பொருட்களை எரிப்பதால் வெளியாகும் "டைஆக்சின்" என்ற நச்சு வாயுவினாலும் புற்றுநோய் உண்டாகிறது.

உங்களின்
நீண்ட நாள்
கனவை
நனவாக்கும்
புதிய திட்டம்

மொத்த சந்தா செலுத்துவீர்!

# 10வது மாத சந்தா இலவசம்

மேலும்

## அரசு தள்ளுபடி 20% பெற்றிடுவீர்!

கோ-ஆப்டெக்ஸ்
தமிழ்நாடு கைத்தறி

ரூ. 12,500/- மதிப்புள்ள
பட்டுப்புடவையை ரூ. 9,000/- க்கு பெறலாம்.
அதுவும் தவணை முறையில்.
இன்றே சேர்ந்து உங்கள் கனவை நனவாக்கிடுவீர்.
தவறவிடாதீர் இந்த அரியவாய்ப்பை!

| மாதச் சந்தா ரூ. | அங்கத்தினர்கள் 9 மாதங்களில் செலுத்தும் மொத்த தொகை ரூ. | கோ-ஆப்டெக்ஸ் வழங்கும் 10-வது மாத சந்தா ரூ. | கூடுதல் தொகை (2+3) ரூ. | அரசு தள்ளுபடி ரூ. | அங்கத்தினர் களுக்கு வழங்கப்படும் புடவையின் மதிப்பு ரூ. |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 300 | 2,700 | 300 | 3,000 | 750 | 3,750 |
| 400 | 3,600 | 400 | 4,000 | 1,000 | 5,000 |
| 500 | 4,500 | 500 | 5,000 | 1,250 | 6,250 |
| 600 | 5,400 | 600 | 6,000 | 1,500 | 7,500 |
| 700 | 6,300 | 700 | 7,000 | 1,750 | 8,750 |
| 1,000 | 9,000 | 1,000 | 10,000 | 2,500 | 12,500 |

இந்த வசதி அனைத்து கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையங்களிலும் கிடைக்கும்.

| | | | |
|---|---|---|---|
| 01. | தில்லையாடி வள்ளியம்மை பட்டு மாளிகை, | எழும்பூர் | ✆ : 28260775 |
| 02. | வானவில், | தேனாம்பேட்டை | ✆ : 24336346 |
| 03. | அங்கயற்கன்னி, | மதுரை | ✆ : 2621754 |
| 04. | தங்கம் பட்டு மாளிகை, | சேலம் | ✆ : 2260651 |
| 05. | அமுத சுரபி, | திருச்சி | ✆ : 2705034 |
| 06. | இராஜ ராஜன் வணிகமையம், | தஞ்சாவூர் | ✆ : 231929 |
| 07. | காந்திமதி, | திருநெல்வேலி | ✆ : 2334360 |
| 08. | மங்கை, | கடலூர் | ✆ : 234474 |
| 09. | தீபம், | வேலூர் | ✆ : 2220730 |
| 10. | மருதம், | கோயம்புத்தூர் | ✆ : 2380591 |

வாடிக்கையாளர்கள் கோ-ஆப்டெக்ஸ் தலைமை அலுவலகத்தில் உள்ள டிசைன் சென்டருக்கு வருகை தந்து தங்களுக்கு பிடித்த வடிவத்தில் பட்டுச் சேலையை வடிவமைத்துக் கொள்ளலாம்.

Visit us at: www.cooptex.com

Visit us at: www.tn.gov.com



பாரம்பரியத்தின் பெருமை காலத்திற்கேற்ற ரசனை

R.N.I.NO.21446/70
RGN.NO.TN/PMG/(CCR)836/03-05 WPP-5

